

# வாழும் கவிஞர்கள்

டாக்டர் ந. சுப்புரெட்டியார்

மெய்யம்மை
பதிப்பகம்

# வாழும் கவிஞர்கள்

தமிழ்ச்செம்மல், பேராசிரியர்
டாக்டர் ந. சுப்புரெட்டியார்



மெய்யம்மை பதிப்பகம்
காரைக்குடி - 1 - சென்னை - 14
1998

# BIBLIOGRAPHICAL DATA



| | | |
|---|---|---|
| Title of the Book | - | VAZHUM KAVIGNAR KAL |
| Author | - | Prof. N. SUBBUREDDIAR, M.A.,L.T., Ph.D. |
| Publisher | - | MEYYAMMAI PATHIPPAGAM<br>THIRU VI. KA. ILLAM<br>49, AR.A.RM. Street<br>Karaikudi - 630 001<br>(Phone : 38311)<br>&<br>41, Masila Mani Street,<br>Balaji Nagar,<br>Rayapettai - CHENNAI - 14<br>(Phone: 8267972) |
| Language | - | TAMIL |
| Edition | - | FIRST |
| Date of Publication | - | December 1998 |
| Paper Used | - | 56 GSM Cream Wove |
| Size of the Book | - | D 1 X 8 = (14 X 22 CM) |
| Printing Types used | - | 12 Pt |
| Number of Copies | - | 1000 (Thousand) |
| Number of Pages | - | 280 |
| Price | - | 85 Rs. |
| Printer | - | Madras Ripon Press, Pudukkottai. |
| Binding | - | Card Board |
| Call No | - | 031, 1:g |
| Subject | - | Tamil Poets Criticism. |

# பதிப்புரை

எங்கள் தந்தையார் செந்தமிழ்ச்செல்வர் இராம. பெரி. பெரியகருப்பன் செட்டியார் அவர்கள், எங்கள் தாயார் பெயரில் தொடங்கிய மெய்யம்மை பதிப்பகத்தின் தமிழ்த் தொண்டு தொடரும் வகையில் "வாழும் கவிஞர்கள் " என்ற இந்நூல் பதினோராவது வெளியீடாக வருகிறது.

தந்தையாருக்குப் பிறகு சற்று தேக்கமுற்றிருந்த பதிப்பகச் செயல்பாட்டிற்குப் புத்துயிர்ப்பளிக்கும் வகையில் சமகாலக் கவிஞர்களைக் கண்டுகாட்டும் இப்பதினோராம் வெளியீட்டு நூலைத் தமிழ்கூறு நல்லுலகிற்கு அளிக்கின்றோம்.

எங்கள் சேந்தணியார் குடும்பத்தைச் சேர்ந்த நல்ல தமிழ்ப்பற்றாளர், கவிச்செம்மல் டாக்டர் ரெ. முத்துக்கணேசனார் அவர்கள் எங்கள் இராமசாமி தமிழ்க் கல்லூரியில் 1995ஆம் ஆண்டில் தம்பெயரில் தமிழ் அறக்கட்டளை ஒன்றை நிறுவினார்கள். ஆண்டுதோறும் ஒரு தமிழறிஞரின் சொற்பொழிவு நடைபெறவும் அதனை நூலாக்கம் செய்து கொள்ளவும் ஏற்பாடு செய்தார்கள். 1996 ஆம் ஆண்டு தொடங்கி மூன்று அறக்கட்டளைச் சொற்பொழிவுகள் நடைபெற்றன.

நாடறிந்த நல்ல தமிழறிஞர் டாக்டர் ந. சுப்பு ரெட்டியார் அவர்கள் " திறனாய்வு நோக்கில் வாழும் கவிஞர்களின் கவிதைகள்" என்ற பொருளில் மரபுக்கவிதை, புதுக்கவிதை என்ற இரு தலைப்பில் 27. 2.98ல் எங்கள் கல்லூரியில் சொற்பொழிவு நிகழ்த்தினார்கள்.

அப்பொழிவினை " வாழும் கவிஞர்கள்" என்ற தலைப்பில் நூலாக எழுதித் தந்தார்கள். இதில் மரபுக்கவிதைக்கவிஞர்கள் பற்றி எழுதியதை மட்டும் நூலாக வெளியிட்டுள்ளோம். புதுக்கவிதைக் கவிஞர்கள் பற்றிய நூல் பின்னர் வெளியிடப் பெறும்.

எங்கள் தந்தையார் ஏற்படுத்திய மீனாட்சி ஆச்சி நினைவுச் சொற்பொழிவு நூல்களையும் பிறவற்றையும் வெளியிடும் எங்கள் பதிப்பகத்தில் கவிச்செம்மல் டாக்டர் ரெ. முத்துக்கணேசனாரின் தமிழ் அறக்கட்டளை வாயிலாகத் தமிழ்ச் செம்மல் டாக்டர் ந. சுப்புரெட்டியாரின் இந்நூலும் வெளிவருவதன் மூலம் பதிப்பகப் பணியை ஊக்கமூட்டிய கவிச் செம்மல் அவர்கட்கும் தமிழ்ச் செம்மல் அவர்கட்கும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம்.

குன்றக்குடி - திருவண்ணாமலை ஆதீனம் தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் அவர்கள் இந்நூலுக்குத் தம் வாழ்த்தோடு அணிந்துரை வழங்கியருளியுள்ளார்கள். தமிழ்மாமுனிவராய் விளங்கிய அருள்நெறித்தந்தை தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்களைப் போலவே எங்கள் இராமசாமி தமிழ்க் கல்லூரி மீதும் எங்கள் திரு. வி.க. இல்லத்தாரிடத்தும் தாயினும் சாலப்பரிந்து அன்பு பாராட்டும் அடிகளார் அவர்கட்கு எங்கள் நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

எங்கள் பெற்றோரின் அன்புக்கும் பாராட்டுக்கும் உரிய காப்பியக் கவிஞர், நா. மீனவன் அவர்கள் எங்கள் தமிழ்த் தொண்டு தொடரத் துணை செய்யும் வகையில் நூலாசிரியரின் கைப் பிரதியை முயற்சியுடன் தட்டச்சு செய்து உதவினார்கள். காலத்தினால் செய்த

அவ்உதவியை ஞாலத்தின் மாணப் பெரிதாய் எண்ணி அன்னார்க்கு எங்கள் நன்றியை உரித்தாக்குகின்றோம்.

இந்நூல் அச்சேறப் பல்லாற்றானும் துணைபுரிந்த எம் க்ல்லூரி முதல்வர் மற்றும் பேராசிரியர்களுக்கும் இந்நூலையும் வழக்கம்போல் செம்மையாக அச்சியற்றித் தந்த புதுக்கோட்டை மதராஸ் ரிப்பன் அச்சகத்தார்க்கும் எங்கள் நன்றி உரியதாகுக.

நாளும் தமிழ்த் தொண்டு செய்யும் பற்றுள்ளத்தை ஏற்படுத்தி, வழிகாட்டும் ஒளிவிளக்காக எங்கள் நெஞ்சங்களில் நிறைந்திருக்கும் பெற்றோர் இராம. பெரி. பெரியகருப்பன் செட்டியார், மெய்யம்மை ஆச்சி திருவடிகளை வணங்குகின்றோம்.

நல்ல தமிழ் நூல்களைப் பதிப்பித்தளிக்கும் எங்கள் முயற்சிக்குத் தமிழ்ப் பெருமக்கள் வாழ்த்தும் பேராதரவும் வழங்குவார்களாக.

இங்ஙனம்
பெரி. பெரியகருப்பன். எம்.இ.

காரைக்குடி
18.12.1998.

உ

சிவ சிவ

திருவருள் திரு
தெய்வசிகாமணி பொன்னம்பல
தேசிக பரமாசாரிய சுவாமிகள்
(ஆதீனகர்த்தர்)

திருவண்ணாமலை ஆதீனம்
குன்றக்குடி – 630 206
சிவகங்கை மாவட்டம்
தமிழ்நாடு

☎ குன்றக்குடி – 04577 – 64267
காரைக்குடி – 04565 – 23215

நாள் 22–11–98

# அணிந்துரை

செட்டி நாட்டில் சைவமும் தமிழும் சேர்ந்தே வளர்ந்தது. வாழும் கலையும் பிறரை வாழ வைக்கும் கலையும் நன்கறிந்த நகரத்தார் மரபில் தமிழ்ச் செம்மல் ரெ. முத்துக்கணேசனார் அறக்கட்டளைச் சொற்பொழிவு அமைத்து, அயராது தமிழ் வளர்க்கின்றார். அந்த அறக்கட்டளைச் சொற்பொழிவாக, நமது ஆதீனத்தின் அருங்கலைக்கோ பேராசிரியர் டாக்டர் ந. சுப்புரெட்டியார் "வாழும் கவிஞர்" பதினாறு பேரின் கவிதைகளைச் சிறப்பாக ஆய்வு செய்துள்ளார். தமிழ், என்றும் பதினாறாய், இளமையாய் இருக்கின்ற காரணத்தால் பதினாறு கவிஞர்கள் நூலாசிரியர் தேர்வு செய்துள்ளார் போலும்.

ந. சுப்புரெட்டியார் சுந்தரத் தமிழுக்குச் சொந்தக்காரர்; இன்று வாழும் தமிழறிஞர்களில் போற்றிப் பாதுகாக்க வேண்டிய பெட்டகம்.

தமிழைக் கற்பவர் சிலர் ; கற்றவழி நிற்பவர் சிலரில் சிலர்! கற்றவழி நின்றதோடு, நானிலத்தை நல்வழிப்படுத்த சமூகம் மேம்பாடடைய வழிகாட்டுவோர் வெகுசிலர்! தமிழால் தரணியில் உயர்பீடத்தில் நிற்பவர் பலர்! தமக்காய் தமிழை விற்பவர் பலர் ! தமக்கெனத் தமிழைப் பயன்படுத்தி, மலரின் மகரந்தத்தில் தேனை நுகர்ந்து, மரப்பொதியில் மனித சமுகத்திற்குச் சேர்த்து வைக்கின்ற

தேனீயைப் போலத் தமிழ் கூறும் நல்லுலகிற்கு உழைக்கும் நற்றமிழறிஞர் ந. சுப்புரெட்டியார்.

கவிஞர் முடியரசன் தொடங்கி, மரபில் உருவாகி புதுமையில் பூத்த வைரமுத்துவரை சிறந்த கவிஞர்களை, தமிழ் கூறும் நல்லுலகின் மணிமுடியாய் திகழும் மாபெரும் கவிஞர்களின் புதையலை ஆய்வு செய்திருப்பது பாராட்டுக்குரியது.

தோண்ட, தோண்டப் புதையல் கிடைப்பதைப்போல, அரிய இந்த படைப்பாளிகளின் படைப்பை ஆய்வு செய்யச் செய்ய, புதிய புதிய செய்திகள் கிடைக்கின்றன. நல்ல முயற்சி! பாராட்டுக்குரியது.

அறக்கட்டளைச் சொற்பொழிவின் நிகழ்விடமாகிய இராமசாமி தமிழ்க் கல்லூரியும் நூல்வெளியிடும் மெய்யம்மை பதிப்பகத்தாரும் நம் பாராட்டுக்குரியவர்கள்.

தமிழ்க் கல்லூரி முதல்வர் நமது தமிழாகரர் தெ. முருகசாமி அவர்கள் காலத்தில், நல்ல பணியைச் செய்திருக்கின்றார். தமிழ் கூறும் நல்லுலகிற்கு வளம் சேர்க்க உழைத்திருக்கின்றார்.

உணவிற்கு உப்பு போல, தமிழ் கூறும் நல்லுலகிற்கு சுப்புரெட்டியார் படைப்புகள் தவிர்க்க முடியாதவை! தமிழ், தழைக்கும் பணியில் தளராது பாடுபடும் சுப்புரெட்டியாருக்கு இனிய நெஞ்சுநிறை பாராட்டுக்கள்!

என்றும் வேண்டும் இன்ப அன்பு.

பொன்னம்பல அடிகளார்.

---

# நூலாசிரியர் உரை

காரைக்குடி இராமசாமி தமிழ்க் கல்லூரியில் கவிச்செம்மல் டாக்டர். ரெ. முத்துக்கணேசனார் தம் பெயரில் அமைத்துள்ள தமிழ் அறக்கட்டளைச் சொற்பொழிவை 1998 பிப்பிரவரியில் நிகழ்த்த வேண்டுமென அக்கல்லூரியினர் என்னை விரும்பிக் கேட்டபோது மகிழ்ந்தேன், இசைவும் தந்தேன்.

வாழும் கவிஞர்களின் கவிதைகளைத் திறனாய்வு செய்யவேண்டுமென்ற என் நெடுநாளைய உணர்வுக்கு இவ்வாய்ப்பைச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டேன். அதனால் திறனாய்வு நோக்கில் வாழும் கவிஞர்களின் கவிதைகள் என்ற பொருளில் மரபுக்கவிதை, புதுக்கவிதை என்பதாகப் பிரித்துக் கொண்டு கவிஞர்களின் படைப்புக்களைத் திரட்டினேன்.

அவைகளில் அள்ள அள்ளக் குறையா அற்புதங்களைக் கண்டு களித்தேன். நான் இன்புற்றதை உலகின்புறச் செய்யவிரும்பி அறக்கட்டளைச் சொற்பொழிவாக உரையாற்றியதோடு அவ்வறக்கட்டளை விதிப்படி "வாழும் கவிஞர்கள்" என்ற தலைப்பில் நூலாக எழுதியும் தந்தேன். நூலின் ஒருபகுதி (மரபுக்கவிஞர்கள்) இராமசாமி தமிழ்க்கல்லூரியினரின் மெய்யம்மை பதிப்பகத்தாரால் அச்சாகி வெளிவருவது கண்டு மகிழ்கின்றேன்.

இந்நூல் வெளிவரக் காரணமாயிருந்த என் அரியநண்பர் கவிஞர் ரெ. முத்துக்கணேசருக்கும் தமிழ்க்கல்லூரித் தலைவர் பெரி. பெரியகருப்பன், செயலர் பெரி. வீரப்பன் ஆகியோர்க்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடியேன்பால் பெரிதும் கருணை கூர்ந்து அன்பு பாராட்டும்

தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல தேசிக சுவாமிகள் அவர்கள் என்னை வாழ்த்தி இந்நூலுக்கு அருளார்ந்த அணிந்துரை நல்கியருளியமைக்குப் பெரிதும் நன்றியுடையேன்.

நூலாக்கத்திற்கு நூல்கள் தந்து உதவிய அனைவர்க்கும் என் நன்றி. இந்நூலை எழுதுவதற்கேற்ற ஆற்றலையும் நீண்ட ஆயுளையும் நல்ல உடல் நிலையுடன் (கண்ணொளி உள்பட) மனவளத்தையும் தந்து என்னைக் காத்துவரும் "பைந்தமிழ்ப் பின் சென்ற பச்சைப்பசுங்கொண்டல்" ஏழுமலையானைப் பணிந்து வாழ்த்தி வணங்கி இந்நூலினை ரெ. மு. அவர்களின் அருமைத் தந்தையார் முத்தர் வெ. பெரி. சா. ரெங்கநாதன் செட்டியார் அவர்கட்குக் கீழ்க்கண்டவாறு அன்புப் படையலாக்குகின்றேன்.

சேந்தணி யார்வீட் டொருபுகழ் பெரும!
செம்மையே ஆணியே அன்னான்
ஏந்தெழில் முத்துக் கணேசநா யகனை
இயற்றமிழ்க் கௌப்படைத் தளித்தாய்;
ஆழ்ந்தநின் படைப்புத் திறனை வியந்தேன்
ஆக்கிய இச்சிறு நூலைத்
தாழ்ந்துநின் றிறைஞ்சிப் படைத்தனன் நினக்கே
தகுதிசால் அரங்கநா தய்யா!

இங்ஙனம்
ந. சுப்புரெட்டியார்.

"வேங்கடம்"
ஏ.டி:13. மனை 3354
அண்ணாநகர் – சென்னை.40.

## நூலாசிரியரைப்பற்றி........

எண்பத்திரண்டாண்டு அகவையிலும் அங்கங்கே கலைகள் தேரும் அறிவன்போல் சுறுசுறுப்பாக விளங்கும் பேராசிரியர் ந. சுப்பு ரெட்டியார் அவர்கள் நாடறிந்த சிறந்த தமிழறிஞர். வீறு தமிழ் வித்தகர். பல நூல்கள் எழுதி எழுதித் தமிழன்னையை அலங்கரிக்கும் அருங்கலைக்கோன். நம்மாழ்வாராம் சடகோபர் பொன்னடியே சரணம் என எண்ணும் நற்றமிழ்ச் சான்றோர். எளிமையும் இனிமை கொண்ட ஏந்தல்.

திருச்சி மாவட்டம் துறையூரில் உயர்நிலைப்பள்ளித் தலைமை ஆசிரியராகத் தம் ஆசிரியப்பணியைத் தொடங்கியவர் (1941 – 50). காரைக்குடி அழகப்பா ஆசிரியப் பயிற்சிக் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியராகப் (50 – 60) பணியாற்றிப் பின்னர் திருப்பதித் திருவேங்கடவன் பல்கலைக் கழகத் தமிழ்த்துறைத் தலைவராய்ப் (60 – 77) பணிபுரிந்து ஓய்வு பெற்றவர்.

பழம்பெரும் தமிழ்ப்பெருமக்களின் தமிழ்க் கூட்டுறவும் நட்பும் தோயப் பெற்றவர். ஆங்கிலத்திலும் நல்ல புலமையாளர். இவர்தம் அறிவியல் பணியைப் பாராட்டிக் குன்றக்குடித்திருவண்ணாமலை ஆதீனம் அருங்கலைக்கோன் என்ற விருதை வழங்கியது.

இவர்தம் தமிழ்ப்பணியைப் பாராட்டும் வகையில் மதுரை காமராசர் பல்கலைக் கழகம் இவருக்குத் “தமிழ்ப் பேரவைச் செம்மல்” என்ற பட்டத்தை வழங்கிச் சிறப்பித்தது.

நம்மாழ்வார் தத்துவத்தை ஆய்ந்தவர். குறிப்பாகத் தஞ்சைத்தமிழ்ப் பல்கலைக் கழகக் காஞ்சிபுரத் தத்துவ மையத்தில் எழுதியளித்த “வைணவச் செல்வம்” என்ற ஆய்வு நூல் பெருஞ்சிறப்பிற்குரியதாகும். இவர்கள் எழுதிய பல நூல்கள் தமிழ் வளர்ச்சிக் கழகப் பரிசு பெற்றவை.

தற்போது சென்னைப் பல்கலைக் கழகத் தென்கிழக்கு ஆசிய மரபுவழிப் பண்பாட்டு நிறுவன இயக்குநராகத் தமிழ்த் தொண்டாற்றி வருகிறார்.

# பொருளடக்கம்

| | | |
|---|---|---|
| 1. | பதிப்புரை | III |
| 2. | அணிந்துரை | VII |
| 3. | நூலாசிரியர் உரை | IX |
| 4. | நூலாசிரியரைப் பற்றி........ | XI |
| 5. | கவிஞர் முடியரசன் | 15 |
| 6. | கவிஞர் எஸ்.கே. இராமராசன் | 36 |
| 7. | கவிஞர் நாரா. நச்சியப்பன் | 49 |
| 8. | திருமதி சௌந்திரா கைலாசம் | 65 |
| 9. | டாக்டர் ரெ. முத்துக் கணேசன் | 82 |
| 10. | டாக்டர் வா.செ. குழந்தைசாமி | 101 |
| 11. | டாக்டர் இரா. திருமுருகன் | 131 |
| 12. | கவிஞர் ஆ. பழநி | 149 |
| 13. | பன்மொழிப் புலவர் மு.கு. ஜகந்நாதராஜா | 166 |
| 14. | டாக்டர் ச. சவகர்லால் | 179 |
| 15. | கவிவேந்தர் கா. வேழவேந்தன் | 192 |
| 16. | டாக்டர் அர. சிங்காரவடிவேலன் | 209 |
| 17. | டாக்டர் பு.மு. சாந்தமூர்த்தி | 221 |
| 18. | கவிஞர் (டாக்டர்) தா. ஜெயபுன்னிஸா | 234 |
| 19. | கவிஞர் குழ. கதிரேசன் | 243 |
| 20. | கவியரசு இரா. வைரமுத்து | 249 |
| 21. | பின்னிணைப்பு | 262 |

# திறனாய்வு நோக்கில்
# வாழும் கவிஞர்களின் கவிதைகள்

மதுரை காமராசர் பல்கலைக் கழகக் கல்விப் பேரவைக் கூட்டத்திற்கு 1997 மார்ச்சு திங்களில் மதுரைக்கு வந்த போது காரைக்குடி இராமசாமி தமிழ்க் கல்லூரி முதல்வர், பேராசிரியர் தெ. முருகசாமி அவர்கள், " எங்கள் கல்லூரி நிருவாகம் டாக்டர். ரெ. முத்துக் கணேசனாரின் தமிழ் அறக்கட்டளைச் சொற்பொழிவுகள் (1998) நிகழ்த்துவதற்குத் தங்கள் பெயரைத் தேர்ந்தெடுத்துள்ளது. விரைவில் அழைப்புவரும் " என்ற செய்தியைத் தெரிவித்தார். மகிழ்ந்தேன் . டாக்டர் .ரெ. மு. அறக்கட்டளைச் சொற்பொழிவு என்பதால் என் மகிழ்ச்சி இரண்டு மடங்கு பெருகியது. காரணம், காரைக்குடி அழகப்பர் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் பேராசிரியர் பணியை ஏற்றுக் கொண்ட பிறகு (ஜூலை 5,1950,) காரைக்குடி வந்ததும் முதலில் பணியில் சேர்ந்தேன். அதன் பிறகு ஒரு வார காலத்தில் கம்பன் அடிப்பொடி சா. கணேசன் போன்ற சிலரைச் சந்தித்து அறிமுகம் செய்து கொண்டேன். அச்சிலருள் ஒருவர் டாக்டர் .ரெ. முத்துக் கணேசனார் ஆவார். அன்று முதல் இன்று வரை சுமார் 48 ஆண்டுகளாக எங்கள் நட்பு தொடர்ந்து நிலைபெற்ற வண்ணம் உள்ளது.

பேராசிரியர், தெ, முருகசாமிக்கு உடனே திறனாய்வு நோக்கில் வாழும் கவிஞர்களின் கவிதைகள் என்ற பொருளில் "வாழும் கவிஞர்கள்" என்ற தலைப்பைக் குறித்து எழுதினேன். என்னுடன் பழகி இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கும் சில கவிஞர்களின் கவிதைகளைப் பற்றிச் சிந்திக்கலாமே என்று கருதி இத் தலைப்பைத் தேர்ந்தெடுத்தேன். இதில் மரபுக் கவிஞர்கள் பதினாறு பேரும், புதுக் கவிஞர்கள் எண்மரும் அடங்குவர்.

இவர்கள் செட்டி நாட்டிலும் பிற இடங்களிலும் என்னால் அறியப்பட்டவர்கள் ஆவர் . இன்னும் நானறியாதவர்கள் ஏராளமாக உள்ளனர். இவர்களை நான் என்ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளவில்லை. நான் அறிந்தவர்கள் என்னால் எளிதில் தொடர்பு கொண்டும் நூல்களைப் பெறவும் முடிந்தவர்கள் மட்டிலும் தான் என் ஆய்வுக்கு உட்படுத்தப் பெற்றுள்ளனர். இவர்களை அல்லாது பிறரை என்னைப்போல் வேறு சிலர் ஆயலாம் , எனக்கும் வாய்ப்புக் கிடைக்குங்கால் நூல்களை ஆய்வேன். எனவே வாழும் கவிஞர்களைப்

பற்றி ஆராயவேண்டும் என்ற எனது நெடுநாளைய விருப்பத்தை நிறைவேற்றிக் கொள்வதற்காகவே இங்ஙனம் தலைப்பைத் தேர்ந்தெடுத்தேன். இந்தவகையில் முதலில் மரபுக் கவிஞர்களின் படைப்புக்களை எடுத்துக் கொண்டு ஒவ்வொருவராக அறிமுகம் செய்து படைப்புக்களை நோக்குவோமாக.

## மரபுக் கவிதை

கவிதை என்றால் என்ன? வினா மிகவும் எளிதானதுதான். ஆனால் அதற்கான விடையிறுப்பதோ எளிதானதல்ல. கவிதையின் இலக்கணத்தை மேற்புல அறிஞர்கள் கூற முயன்றுள்ளனர். ஆனால் அவர்கள் வெற்றியடையவில்லை. கவிதை, "ஒலிநயம் அமைந்த சொற்களின் கட்டுக் கோப்பு, அஃது இன்பத்தை உண்மையுடன் இணைப்பது, அறிவுக்குத் துணையாகக் கற்பனையைக் கொண்டிருப்பது" என்பது ஜான்சன் என்பாரின் கூற்று. கார்லைல் என்பார் "இசை தழுவிய எண்ணமே கவிதை " என்று வரையறுப்பர். இங்ஙனம் மேற்புல அறிஞர்கள் கூறியவை கவிதையின் இலக்கணத்தைத் திட்டமாக வரையறுக்க முடியவில்லை.

இனி, நம் நாட்டு அறிஞர்கள் கூறுவதையும் காண்போம். சீதாப் பிராட்டியின் அழகை வருணிக்கப் புகுந்த கம்ப நாடன், ' பொன்னின் சோதி போதின் நாற்றம், தேனின் தீஞ்சுவை ' என்று ஒவ்வொன்றாகச் சொல்லிச் சொல்லிப் பார்க்கின்றான். ஒன்று கூடப் பிராட்டியின் அழகு பற்றிக் கொண்டிருந்த கருத்தை வெளியிடும் ஆற்றல் பெற்றிருப்பதாகத் தோன்றவில்லை. இறுதியில் "செஞ்சொற் கவி இன்பம் " என்று சொல்லி மனநிறைவு பெறுகின்றான். உள்ளத்திலுள்ளவற்றை உணர்ச்சி பொங்கத் தெள்ளத் தெளிந்த சொற்களால் எடுத்துரைப்பதுதான் கவிதையாகும். கவிமணி அவர்களும்,

*உள்ளத் துள்ளது கவிதை — இன்பம்*
*உருவெ டுப்பது கவிதை*
*தெள்ளத் தெளிந்த தமிழில் — உண்மை*
*தெளிந்து ரைப்பது கவிதை*

என்று கவிதைக்கு இலக்கணம் கூறுவர்.

கவிஞர் கண்ணதாசன் "கவிதை என்பது உணர்ச்சியின் பிரவாகம், கட்டவிழ்ந்து துள்ளிவரும் சிந்தனைகள், சொற்கோலமாக வருவதே கவிதை" என்று ஒரு சொற்பொழிவில் கூறியதாக நினைவு.

*பல்வகைத் தாதுவின் உயிர்க்கு உடல்போல் பல*
*சொல்லால் பொருட்கு இடனாக உணர்வினின்*
*வல்லோர் அணிபெறச் செய்வன செய்யுள்*

எனக் கவிதை இன்னதென்று நன்னூலாசிரியர் பவணந்தியார், வரையறுத்துள்ளார். இதில் யாக்கைக்கும் கவிதைக்கும் ஓர் ஒப்புமை கூறப் பெற்றுள்ளது. தோல்,குருதி,தசை, எலும்பு முதலிய தாதுக்களால் ஆன உடல் உயிர்க்கு உடலாக இருப்பது போல, பலவகைச் சொற்களால் பொருளுக்கு இடனாகக் கல்வியறிவியல் வல்லோரால் அணிபெறச் செய்யப் பெறுவதே கவிதையாகும்.

இங்ஙனம் கூறியுள்ள மேனாட்டு அறிஞர்களின் கூற்றுகளிலும் நம் நாட்டு அறிஞர்களின் கூற்றுகளிலும் கவிதையின் முழுவடிவம் தோன்றவில்லை. இன்னும் நாம் காணாத பல கூறுகள் கவிதையினுள் உள்ளன என்றே நம் மனம் எண்ணத் தோன்றுகின்றது. உயிருள்ள, வளரும் இயல்புடைய கவிதையைச் சொற்கோட்டைக்குள் கிட்டியில் மாட்டிவிடலாம் என்று நினைப்பது தவறு, அஃது இயலாத ஒன்று. இது மேலிருந்து விழும் அருவி நீரைப் பற்ற முயல்வதுபோலாகும்.

**கவிதைக்குரியபொருள்:** கவிதைக்குரிய பொருளில் வரையறையே இல்லை. எந்தப் பொருளைப் பற்றி வேண்டுமானாலும் கவிதை தோன்றும். கவிமணி தேசிக விநாயகம் பிள்ளையவர்களும்

*அலகில் சோதி யான – ஈசன்*
*அருளி னாலே அமையும்*
*உலகில் எந்தப் பொருளும் – கவிக்கு*
*உரிய பொருளா மையா*

என்று கூறியிருப்பது ஈண்டு சிந்தித்தற்குரியது. பாடுவோரின் அநுபவத்திற்கேற்ப எல்லாம் கவிதைக்குரிய பொருளாக அமையலாம். உலகம் தோன்றிய நாள்தொட்டு இன்று வரையிலுமுள்ள பழம் பொருளான இருசுடர், விண்மீன், கருமுகில், மலை, காடு, ஆறு, கடல், மான், முயல், கிளி, மயில், குழந்தை முதலியவை கவிதைப் பொருள்களாக அமைந்துள்ளன. அங்ஙனமே காதல், வீரம், இன்பம், துன்பம் போன்றவையும் பாட்டில் அமைகின்றன. இவை பழம் பாடல்களிலும் இடம்பெற்றுள்ளன. புதுமையான பாட்டுகளும் இடம் பெற்றுள்ளன. இவற்றிற்கு உணர்ச்சிவூட்டிப், புதுப் பொருள் பற்றிப் படைக்கும் திறன் கவிஞர்களிடமே உள்ளது.

ஒரே பொருள் பற்றிச் சிறந்த கவிதையும் தோன்றலாம், மிக மட்டமான செய்யுளும் தோன்றலாம். தாழ்ந்த பொருள் பற்றி உயர்ந்த கவிதையும் தோன்றக் கூடும், உயர்ந்த பொருள் பற்றித் தாழ்ந்த கவிதையும் தோன்றக்கூடும். எனவே பொருளின் பெருமைக்கும் சிறுமைக்கும் ஏற்பக் கவிதையின் பெருமையும் சிறுமையும் அமையும் என்று கூறுதல் முற்றும் பொருந்தாது. கவிதை சிறப்பது அதனைப் படைக்கும் கவிஞனின் அநுபவத்தினைப் பொறுத்து வருவது. அவன் அநுபவத்தைக் கூறும் முறையையும் பொறுத்தது.

*கவிதை மனநிலை:-* கவிதை என்பது காணும் பொருள்களை வருணிப்பதில் இல்லை, அப்பொருள்களைக் காணுங்கால் அவனிடம் எழும் மனநிலையில் அது உள்ளது. அதே மனநிலைக்கு ஒரு வடிவம் கொடுத்து அழகிய சொற்களால் ஓவியமாக அமைப்பதே கவிதை யாகும். கவிதையைப் படிக்கும் நம்மிடத்திலும் அதே மனநிலையை உண்டாக்க வல்லது கவிதை. திருக்குற்றால மலைக்கு நாம் எத்தனையோ முறை போயிருக்கின்றோம், பல இயற்கைக் காட்சிகளில் ஈடுபட்டுத் திளைத்திருக்கின்றோம் . ஒருவகை அநுபவத்தையும் பெற்றிருக்கின்றோம். குமரகுருபர அடிகள் பெற்ற அநுபவம் இதோ:

*சிங்கமும்வெங் களிறுமுடன் விளையாடும் ஒருபால்*
*சினப்புலியும் மடப்பிணையும் திளைத்திருக்கும் ஒருபால்*
*வெங்கரடி மரையினொடும் விளையாடும் ஒருபால்*
*விடஅரவும் மடமயிலும் விருந்தயரும் ஒருபால்*

இதில் இருப்பதை விட இருக்க வேண்டியவற்றைக் கூறுகிறார் கவிஞர். கற்பனையில் அவர் காணும் காட்சியை நாம் காணும் பொழுது நாம் எல்லையற்ற இன்பத்தில் ஈடுபடுகின்றோம்.

உண்மையான கவிதையில் உயிர் இருக்கும் உயிர்க்களையும் இருக்கும். மட்ட ரகமான செய்யுளில் உயிர் இருக்காது, சவம் போல் கிடக்கும். உறங்கும் மனிதனையும் சவத்தையும் கண்டு பிடிப்பதைப் போலத்தான் கவிதையின் மூச்சை நாம் உணர வேண்டும். ஓர் ஆங்கிலத் திறனாய்வாளர் "கவிதைக்கும் செய்யுளுக்கும் உள்ள வேற்றுமை மின்னேற்றம் பெற்ற மின் கலத்திற்கும் மின்னேற்றம் எரிந்து போன மின்கலத்திற்கும் உள்ள வேற்றுமையாகும் " என்று கூறியிருப்பதை ஈண்டுச் சிந்தித்துப் பார்க்கலாம். புட்ப ராகத்திற்கும் அசல் வைரத்திற்கும் தரம் கண்டு சொல்லும் வல்லுநர்களைப் போன்ற கவிதைத்

திறனாய்வாளர்கட்குத்தான் கவிதையின் தரம் தெளிவாகப் புலனாகும். காலஞ் சென்ற இரசிகமணி டி.கே.சியிடம் இத்தகைய திறன் அமைந்திருந்ததை அவர் பேச்சை நேரில் கேட்டவர்கள் அறிவார்கள்.

மேற்கூறியவற்றால் கவிதை அல்லது பாட்டு இன்னதென்பது தெளிவாகும். பாட்டு இன்னதென்பதை இலக்கண விதிபோல் ஒரு வரையறைக்குள் அடக்கிக் கூற இயலாது போயினும் பாட்டு இன்னதென்பதை ஓரளவு மனத்தால் உணர முடிகின்றது. "உணர்ச்சி, கற்பனை, ஒலிநயம், அணி நலன்கள், தொடைநயம், சுவைகள் முதலியவை அமையச் செந்தமிழ்ச் சொற்களால் நல்ல வடிவத்துடன் அமைவதே கவிதை அல்லது பாட்டு ஆகும்" என்று சொல்லி வைக்கலாம். அணி நலன்கள் பாட்டில் அமையினும் அமையலாம், அமையாதும் போகலாம்,. அவை அமையவேண்டும் என்ற நிபந்தனையொன்றும் இல்லை. ஆனால் கவிதை வாழ்க்கையின் உண்மைகளை மன்பதைக்கு என்றும் தோன்றத் துணையாக நிற்கும் உண்மைகளை உட்கிடக்கையாகக் கொண்டு நிற்க வேண்டும். அப்படியாயின் அவை முந்திரிக் கொட்டைபோல் நீட்டிக் கொண்டு இருக்க வேண்டும் என்பது பொருளன்று. அவை பாவிகமாக கவிஞனுடைய மனோபாவனையாக அமைதல் சாலச் சிறப்புடைத்து என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகின்றேன்.

*கற்பனை:-* கற்பனை என்பது புலன்களை நேரே ஒரு பொருளை அநுபவியாத காலத்திலும் அந்தப் பொருள்களை நினைவிற்குக் கொண்டு வந்து அப்பொருளினிடத்து மீண்டும் அனுபவத்தை ஏற்ற வல்ல ஒருவகை ஆற்றல். கற்பனையைப் பற்றி முடிந்த முடிபாக ஒருவரும் இதுவரை வரையறுத்துக் கூறவில்லை, கூற முடியும் என்று நமக்குத் தோன்றவில்லை. இரஸ்கின் என்ற மேனாட்டுத் திறனாய்வாளர், " கற்பனையின் தத்துவம் அறிவுக்கு எட்டாதது, சொற்களால் உணர்த்த முடியாதது, சொற் கோட்டைக்குள் அடங்காதது, அதன் பலன்களைக் கொண்டே அஃது அறியப் படுவதொன்றாகும்" என்று குறிப்பிடுவர். எடுத்துக்காட்டு ஒன்றால் இதனை விளக்கலாம்.

*தங்கம் உருக்கித் தழல்குறைத்துத் தேனாக்கி*
*எங்கும் பரப்பியதோர் இங்கிதமோ*

என்பது பாரதியாரின் குயிற்பாட்டடிகள். இவை காலைக் கதிரவனை வருணிக்கும் அற்புதச் சொல்லோவியம். இளஞ்சூரியனின்

கதிர்கள்உருக்கிவிட்ட தங்கம் போலப் பரவி வருகின்றனவாம். உருக்கிய தங்கமாயிருப்பினும் என்ன மாயத்தினாலோ சூடு குறைந்திருக்கின்றதாம். இத்தகைய ஒளியுடன் அக்காட்சியில் இனிமையும் கலந்து கொஞ்சுதலைக் கண்டு மகிழலாம். இதைத் தான் கவிஞன் 'தழல்குறைத்துத் தேனாக்கி' என மிகவும் இங்கிதமாக வெளியிடுகின்றான். நாமும் அக் காட்சி இன்பத்தில் மூழ்கி அதனை அநுபவிக்கின்றோம். கவிஞன்தான் அநுபவித்தவற்றை நம்மையும் அநுபவிக்கச் செய்கின்றான்.

*சொல்வளம்:* கருத்துகளை உணர்த்தவும், கற்பனைத் திறனை வளர்க்கவும் பயன்படுவன சொற்களே. இவையே அடிப்படைக் கூறு. சொல்வளம் சிறந்தால்தான் கவிதைகள் சிறக்கும். நன்னூலார்

*பஞ்சிதன் சொல்லாப் பனுவல் இழையாகச்*
*செஞ்சொற் புலவனே சேயிழையா — எஞ்சாத*
*கையேவா யாகக் கதிரே மதியாக*
*மையிலா நூல்முடியு மாறு*

என்று கூறியிருத்தலைக் காணலாம். உரைநடையில் ஆளப்பெறும் சொற்களுக்கும் கவிதையில் ஆளப்பெறும் சொற்களுக்கும் வேற்றுமை இல்லை. கவிஞன் அந்தச் சொற்களைக் கையாளும் முறையில்தான் அந்த வேற்றுமை உள்ளது. ஒவ்வொரு சொல்லுக்கும் உரிய நேரான பொருளைத் தவிர வழிவழியாக அந்தச் சொற்கள் ஆளப் பெறும் இடங்களின் தொடர்பால் அவற்றுடன் சேர்ந்தமைந்த கருத்துக்களும் உள்ளன. அன்றியும் சொற்கள் தமக்கென்று அமைந்த ஒலித் தன்மையும் வல்லின மெல்லின எழுத்துக்களுக்கு ஏற்ப உணர்ச்சியுடன் சேர்ந்து ஒலிக்கும் தன்மையும் பெற்றுள்ளன. எனவே கவிதையில் சொற்கள் அமையும் பொழுது இடத்திற்கேற்றவாறும் சந்தர்ப்பத்திற்கேற்றவாறும் சுவைக்கு ஏற்றவாறும் அவை அமைந்து கவிதையைப் பொலிவுடையதாக்குகின்றன. இச் சொற்கள் மேற்கூறியவாறு கையாளுவது கவிஞனின் திறனைப் பொறுத்தது, அவனது மேதைத் தன்மையையும் பொறுத்தது. கம்பன் போன்ற கவிஞர்கள் சொற்களைக் கையாளும் முறைக்கும் சாதாரணக் கவிஞர்கள் சொற்களைக் கையாளும் முறைக்கும் மலையனைய வேறுபாடு உண்டு.

திரிசிரபுரம் மீனாட்சி சுந்தரம்பிள்ளையவர்களின் கவிதை இயற்றும் திறனைக் குறித்து ஒருபாடல்.

*எனைவைத்தி எனைவைத்தி எனப்பதங்கள்*

*இடையிடைநின் றிரந்து வேண்ட*
*இனிவைப்பாம் இனிவைப்பாம் பொறுத்திடுமின்*
*பொறுத்திடுமின் என்று கூறி*
*நினைவுற்ற ஒருகடிகைக் களவில்கவித்*
*தொடைதொடுத்து நிமலர் பூணப்*
*புனைவுற்ற மீனாட்சி சுந்தரவள்*
*ளலைப்போல்வார் புவியில் யாரே.*

இது மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்கள் திருநாடு அலங்கரித்ததனை நினைந்து பாடிய இரங்கற்பா. சொற்கள் யாவும் அகராதியினின்றும் புறப்பட்டு நம்மூர் கிருஷ்ணன் கோவிலில் சுண்டல் வாங்கும் சிறுவர்கள் பல்வேறு வரிசையில் நிற்பது போல, தேன்கூட்டில் தேனீக்கள் பல வரிசைகளில் நிற்றல் போல பல்வேறு வரிசைகளில் நின்று ' என்னை வையுங்கள், என்னை வையுங்கள், என்று கெஞ்சி வேண்டுகின்றனவாம். பிள்ளையவர்கள், ' இதோ வைக்கிறேன், இதோ வைக்கிறேன், பொறுங்கள் என்று அமைதி கூறுகின்றாராம். இந்தக் காட்சியை நம் மனத்திரையில் கண்டு அமைத்து மகிழ்வோம்.

சதுரங்க ஆட்டத்தில் காய்கள்தாம் இருக்கும் இடத்திற்கேற்ப ஆற்றல் பெறுவன போலவும் துப்பாக்கியில் தோட்டாக்கள் அமையும் போது ஆற்றல் பெறுவன போலவும் கவிதையில் சொற்கள் தாம் இருக்கும் இடத்திற்கேற்பப் புதிய பொருள்களைப் பெறுகின்றன. இலக்கிய வழக்கிலும், உலக வழக்கிலும் உள்ள எல்லாச் சொற்களுக்கும் உயிர் உண்டு, வாழ்க்கை உண்டு, வாழ்க்கை வரலாறும் உண்டு. பண்டைய இலக்கியங்களில் நிரம்பப் பயிற்சியும், தன் காலத்து வழங்கும் மொழி பற்றிய மிக ஆழ்ந்த அநுபவமும், தன் ஆன்மாவுடன் ஒன்றிக் கலந்துவிட்ட தமிழுணர்ச்சியும் உள்ள கவிஞனுக்குத்தான் சொற்களின் உயிர்த் தத்துவம் நன்கு புலப்படும். இத்தகைய கவிஞனிடம் தான் அவன் நினைத்தவுடன் வேண்டும் பொழுது சொற்கள் அவனது மனக்கண்முன் தோன்றி தம்மைத் தாமே அளித்து ஏவல் கேட்டு நிற்கும். ஓர் எடுத்துக் காட்டால் இதனை விளக்கலாம்.

*பிள்ளைக் கனியமுதே – கண்ணம்மா*
*பேசும்பொற் சித்திரமே*
*அள்ளிய ணைத்திடவே – என்முன்னே*
*ஆடிவரும் தேனே.*

இதில் ' பிள்ளைக் கனி யமுது' , ' பேசும் பொற்சித்திரம்', ஆடிவருந்தேன்'

என்ற உருவகங்கள் அருமைக் குழந்தையை நம் கண் முன்னே கொண்டுவந்து நிறுத்துகின்றன. சொல்வளத்தின் அருமையை எவ்வளவு வேண்டுமானாலும் விரித்துப் பேசலாம்.

*ஒலி நயம்:-* இயற்கையில் நடைபெறும் அத்தனை இயக்கங்களும் ஒழுங்காகவே நடைபெறுகின்றன. சில நிலையான விதிகளுக்குக் கட்டுப்பட்டே நடைபெறுகின்றன. நம்முடைய குருதியோட்டம், நாடித் துடிப்பு இவற்றை நோக்கினாலே இந்த உண்மை தெளிவாகும். இவ்வாறு ஒழுங்காக நடைபெறும் இயக்கத்தைத்தான் ஒலி நயம் (Rhythm) என்கின்றோம். நம்முடைய பேச்சும் இவ்வாறே ஒழுங்கு படுத்தப் பெறுகின்றது. நம்முடைய தொண்டையின் அமைப்பு ஒரு சொல்லின் ஓர் அசைவிலேயே உச்சரிப்பழுத்தம் (Accent) கொடுக்குமாறு செய்கின்றது. எ.டு . இருக்கின்றான், இச்சொல்லின் எல்லா அசைகளுக்கும் சமமான அழுத்தம் கொடுத்து இருக்-கின்-றான் என்று உச்சரிப்பது சாத்தியப் படக் கூடியதே. ஆனால் இத்தகைய தெளிவான முயற்சியைத் தொடர்ந்து மேற்கொள்ள இயலாது.

ஆழ்ந்த உணர்ச்சியை வெளியிடுவதற்கு உரைநடை ஒலிநயம் போதுமானதன்று அதற்குச் செய்யுள் (verse) வடிவமே மிகவும் ஏற்றது. அணுவிலிருந்து அண்டம்வரை இவ்வுண்மையைக் காணலாம். கற்பனையும் ஒலிநயமும் ஒரு பாட்டில் அற்புதமாக இணைந்து செயல்படுகின்றன. திருச்சி தேவர் மன்றத்தில் நவாப்பு இராச 'மாணிக்கத்தின்' பக்த ராமதாஸ்' நடைபெறுகின்றது. நுழைவுச் சீட்டுப் பெற்றுநாம் நாடக மண்டபத்தினுள் நுழைகின்றோம். நாடக அரங்கில் காண்பது எல்லாம் கற்பனை என்ற எண்ணம் மெல்ல அரும்பி உள்ளத்தை மயக்கத் தொடங்குகின்றது. அரங்கில் காணப் பெறும் பகல், நிலவு பல நிகழ்ச்சிகள் உண்மை அல்ல என்பதை நாம் அறிவோம், நாடக மாந்தரும் கதை மாந்தர் அல்லர் என்பதும் நமக்குத் தெரியும். ஆயினும் நம் உள்ளம் அவற்றை உண்மை உலகிலிருப்பவையே என்று நம்பி உணர்ச்சிவயப்படுகின்றது. நாமும் கதை நடந்த காலத்தில் இருப்பவர்கள் போல் எண்ணிக் கதையில்தொடர்பு கொள்கின்றோம். அங்ஙனமே பாட்டின் ஒலி நயமும் நம் உள்ளத்தை மயக்கி நம்மைக் கற்பனை உலகிற்கு ஈர்த்துச் செல்கின்றது.

*கொல்லணைவேல் வரிநெடுங்கண் கௌசலைதன்*

குலமதலாய், குனிவில் ஏந்தும்
மல்லணைந்த வரைத்தோளா, வல்வினையேன்
மனம்உருக்கும் வகையே கற்றாய்
மெல்லணைமேல் முன்துயின்றாய் இன்றுஇனிப்போய்
வியன்கான மரத்தின் நீழல்
கல்லணைமேல் கண்துயிலக் கற்றனையோ
காகுத்தா கரிய கோவே!

என்ற குலசேகர ஆழ்வாரின் பாசுரத்தை உள்ளங் கனிந்து ஓதுங்கால் ஆழ்வார் தான் தசரதனாக இருந்து புலம்பும் முறையில் பாடியதைப் போலவே நாமும் தசரதனாகி விடுகின்றோம். இதையே உளவியலார் ஒட்ட உணர்தல் (sympathy) என்று குறிப்பிடுவர். செவி ஒலி நயத்தை உணரத் தொடங்கியதும் நம் கற்பனையை உணர்ந்து பாசுரத்தின் உணர்ச்சியைப் பெறத் தொடங்கி விடுகின்றது.

**ஒலிநயம் விளக்கம்:-** பாட்டை உரக்கப் படிக்கும் பொழுது பாட்டிலுள்ள ஒலிகள் இயங்குகின்றன. அந்த இயக்கத்தில் ஏற்படும் ஒழுங்கே ஒலிநயம் எனப்படுவது. வண்ணம், சந்தம் என்பனவும் ஒரு வகையில் ஒலி நயத்தைத்தான் குறிப்பிடுகின்றன. "இழுமென் மொழியால் விழுமியது நுவலல்" என்று தொல்காப்பியர் கூறுவதும் இதுவேயாகும். 'இழும் ' என்பது ஓசையளவில் நின்று பொருளுணர்த்தும் ஓர் ஒலிக்குறிப்புச் சொல் போலாகும். இந்த அழகிய ஒலிக்குறிப்பு கவிதைக்கு இன்றியமையாது வேண்டப் பெறும் ஓர் உறுப்பாகும். ஒலிகளுக்கு மூன்று தன்மைகள் உண்டு. ஒன்று - ஒலியின் கால அளவு. அதனால் அமையும் நீட்டல் குறுக்கல் வேறுபாடு. இரண்டு - ஒலியின் தன்மை. வன்மையாகவும், மென்மையாகவும் ஒலிக்கும் வேறுபாடு. மூன்று - ஒலிக்கும் முறை. எடுத்தும் படுத்தும் நலிந்தும் ஒலிக்கும் பொழுது உண்டாகும் அழுத்த வேறுபாடு. இந்த மூன்று கூறுகளும் பல்வேறு அளவிலும் வகையிலும் சேர்ந்து உண்டாகும் ஒலி விகற்பங்களையே நாம் ஒலிநயம் என்று வழங்குகின்றோம். இசைக்கலையில் இது அமையும் நிலை வேறு. முன்னதில் அஃதுஅடிப்படையாக உள்ளது. பின்னதில் தேவையான அளவிற்கு நுட்பமாக விளங்குகின்றது. இங்குக் கூறியவற்றால் ஒலிநயம் என்பது சொற்களால் விளக்கக் கூடியதன்று என்பதும் அது புலன்களால் உணரக் கூடியதொன்று என்பதும் தெளிவாகும்.

*யாப்பு முறை* :- ஒலிநயம் இயற்கையானது, பொதுவானது. அந்த ஒலி நயத்திலிருந்துதான் கவிதையின் யாப்பு முறை செயற்கை முறையாக அமைந்தது. உணர்ச்சிக்கு வடிவமாக ஒலிநயமும், ஒலிநயத்திற்கு வடிவமாக உணர்ச்சியும் விளங்குவது கவிதைக்கலை. இத்தகைய ஒலிநயம் அமைந்த பாட்டின் அடியைச் சீர்கள் என்றும் அசைகள் என்றும் இன்னும் பலவிதமாவும் பாகுபாடு செய்துள்ளனர். இவற்றை நினைவில் வைத்துக் கொள்ளவும் வாய்பாடுகள் அமைத்துள்ளனர். இவ்வாறு வரையறுத்த வாய்பாடுகளே 'யாப்பு முறை' எனப்படும். தொல்காப்பியர் மாத்திரை எழுத்து, அசை, சீர், அடி, தூக்கு, தொடை, நோக்கு, பா, அளவியல் முதலிய முப்பத்து நான்கைத் தொகுத்துச் செய்யுளுறுப்புக்களாகக் கூறுவர். " இவற்றுள் சில, யாப்புக்கு இன்றியமையாதவையாக அமைகின்றன.

நாம் ஓர்உரை நடையைப் படிக்கும் பொழுது நம் மனம் ஒலிகளைப் பற்றிக் கவலை கொள்வதில்லை. அறிவுக்கு மட்டிலும் ஏதோ செய்தி எட்டுகின்றது. இதனால்தான் நெடுந்தொலைவுப் பயணத்தில் இருப்பூர்த்தியில் - கவிதையாலான ஓர் இலக்கியத்தைப் படித்து முடிக்க முடிவதில்லை. அப்படி முடித்தாலும் கவிதையிலுள்ள உணர்ச்சியைப் பெறுதல் இயலாது.

பாட்டிலுள்ள ஓர் அடியைப் படித்து முடித்ததும்., மனம் அதன் ஒலி நயத்தில் ஈடுபடுகின்றது. அடுத்த அடியைப் படிக்கத் தொடங்கும் பொழுது மீண்டும் அதே ஒலிநயத்தை எதிர்பார்க்கின்றது. எதிர்பார்த்தபடி அவ்வொலி திரும்ப வரின், அதில் மகிழ்ந்து திளைக்கின்றது.

*கைப்பழம் இழந்த மந்தி*
*கட்டியங் காரன் ஒத்தது*
*இப்பழம் துரந்து கொண்ட*
*சிலதனும் என்னை யொத்தான்*
*இப்பழம் இன்று போகத்து*
*இன்பமே போதும் என்று*
*மெய்ப்பட உணர்வு தோன்றி*
*மீட்டிது கூறி னானே.*

என்ற சிந்தாமணி முத்தியிலம்பகச் செய்யுளில் காணும் ஒரே ஒலியமைப்பு திரும்பத் திரும்ப வரும்பொழுது அதைப் படிக்கும் நம்

மனத்திற்கு மகிழ்ச்சி ஏற்படுகின்றது. பாட்டில் ஏற்பட்ட 'நிலையாமை' உணர்ச்சி சிதறாமல் காக்கவும் பெறுகின்றது. இதைத் தொடர்ந்து இன்னும் சில பாடல்களில் இத்தகைய ஒலியமைப்பே திரும்பத் திரும்ப அமைந்து வருங்கால் நிலையாமை உணர்ச்சி நிலைபெறப் பதிந்து உருவாகி விடுகின்றது. சீவகன் மனமும் துறவு நெறியில் சென்று விடுகின்றது.

*கூத்து இசையுடன் தொடர்பு:* நம்முடைய இன்பத் தமிழ் இயல், இசை, கூத்து என்று மூவகையாகப் பகுக்கப் பெற்றுள்ளது என்பதை நாம் அறிவோம். இம்மூன்றனுள் கூத்தே முதலில் தோன்றியது நாளடைவில்அதனுடன் கலந்திருந்த இசையும் தனியே பிரிந்தது. நெடுங்காலம் கழிந்தபிறகு இசையிலிருந்து இயலும் தனியாகப் பிரிந்தது. இது வியப்பாக இருப்பினும் மொழி வரலாறு காட்டும் உண்மை . அசை, சீர், தளை, அடி, தொடை என்னும் யாப்புறுப்புக்களின் பெயர்கள் பாட்டு, .கூத்து, இசையுடன் தொடர்புற்றிருந்தமையைத் தெரிவிக்கும். அடி என்பது ஆடற் கலையில் அடி எடுத்து வைத்து ஆடும் 'பதம்' என்பதைக் குறிக்கின்றது. தொடை என்பது அந்த அடிக்கியையக் கை முதலிவற்றைத் தொகுத்து இயக்குவதைப் புலப்படுத்துகின்றது. ஆங்கிலத்தில்கவிதை வகைகளுள் ஒன்றாகிய "பாலட்" தொடக்கத்தில் நடனத்தோடு தொடர்புடையது. பண்டைக் காலத்தில்வெற்றிவிழா போன்றவற்றைக் கொண்டாடும் பொழுது ஆடலும் பாடலும் மேற்கொள்ளப் பெற்றன. இந்தப் பாடல் ஆடலே (Ballad - Dance) "பாலட்" என்ற கவிதை வகைக்குத் தோற்றுவாயாகும். ' நடனம்' என்ற ஃபிரெஞ்சு மொழிச் சொல்லினின்றே 'பாலட்' என்ற கவிதையின் பெயர் அமைந்தது என்று மேனாட்டுத் திறனாய்வாளர்கள் கூறுவர்.

இங்ஙனமே சீர், தளை என்னும் சொற்கள் பாட்டிற்கும் இசைக் கலைக்கும் இருந்த பழைய தொடர்பினைக் காட்டுகின்றன. இன்றும் அந்த உறவு ஓரளவு இருப்பதால்தான் பாட்டினை இசையுடன் படிக்கும் பழக்கம் இருந்து வருகின்றது. 'சீர் ' என்ற சொல் ' இன்ப ஒலி' என்னும் பொருளுடையது. தாளப் பொருத்தத்தைக் குறிப்பது. இசைக்கு மிகத் தொடர்புடைய தாளத்தை மிக நுட்பமான முறையில் செவிக்குப் புலனாகும் முறையில் சொற்களில் அமைவதே தளையாகும்.

*யாப்பின் வளர்ச்சி:* பழைய பாக்களான வெண்பா, அகவற்பா, கலிப்பா, வஞ்சிப்பா என்ற பா வகைகளைக் கொண்டு பல்வேறு உணர்ச்சிகட்கேற்பப் பல்வேறு ஓசை வேறுபாடுகளைக்

காட்டுவதற்கு இடந்தரவில்லை. ஒவ்வோர் உணர்ச்சியிலுமுள்ள பல்வேறு வகைகளையும் இவற்றைக் கொண்டு காட்டுதல் இயலாது. ஆதலால் தாழிசை, துறை, விருத்தம் என்னும் பல்வேறு பாவினங்கள் தோன்றின. இவை ஒவ்வொரு பாவுடனும் சேர்ந்து பல்வேறு பாவிகற்பங்களைத் தோற்றுவிக்கின்றன. இவற்றுள் விருத்தமே மிகச் செல்வாக்குப் பெற்றுத் திகழ்கின்றது. இன்று வாழும் மிகப் பெரும்பாலான கவிஞர்கள் அனைவருக்கும் இதுவே கை வந்த கலையாகி விட்டது. இதையே பொது மக்களும் கேட்க விரும்புகின்றனர்.

பிற்காலத்தில் கும்மி, சிந்து போன்ற யாப்பு வகைகளை, இராமலிங்க சுவாமிகள், பாரதியார், பாரதி தாசன், கவிமணி போன்ற கவிஞர்களும் மேற்கொண்டு பல அரிய பாடல்களை எழுதிப் பெரும்புகழ் பெற்றனர். இதற்கு முன்னர் இவை சித்தர் பாடல்களில் இடம் பெற்றிருந்தன. ஒலி நயம் போலன்றி யாப்பு, செயற்கையாகப் புனையப் பெற்ற ஒரு சாதனமே. ஆனால் அதன் அடிப்படையில் ஒலிநயம் இருப்பதால் அஃது உணர்ச்சி நிலையைப் புலப்படுத்தும் நல்ல கருவியாகவும் அமைகின்றது. உரை நடையில் அமையும் சொற்களுக்கும் பாட்டில் அமையும் சொற்களுக்கும் வேற்றுமையுண்டு. முன்னவை உணர்ச்சிச் சிறப்பு வேண்டாதவை. யாப்பின் தொடர்பு இல்லாதவை. பின்னவற்றிற்கு உணர்ச்சி வளம் வேண்டும். யாப்பு அமைதியும் வேண்டும். எவ்வளவு எளிய சொற்களால் பாடப்பெற்ற பாட்டேயாயினும் உரைநடைக்கும் பாட்டிற்கும் மலையனைய வேறுபாடுண்டு.

*யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல்*
*இனிதாவ தெங்கும் காணோம்*
*பாமரராய் விலங்குகளாய் உலகனைத்தும்*
*இகழ்ச்சிசொலப் பான்மை கெட்டு*
*நாமமது தமிழரெனக் கொண்டிங்கு*
*வாழ்ந்திடுதல் நன்றோ சொல்வீர்*
*தேமதுரத் தமிழோசை உலகமெலாம்*
*பரவும்வகை செய்தல் வேண்டும்*

என்ற பாரதியாரின் பாடலில் எளிய சொற்களே உள்ளன. எனினும் அவை உணர்ச்சிக்கும் யாப்புக்கும் ஏற்றவாறு அமைந்து விளங்குவதைக் காணலாம்.

**அணிநலன்கள்:** கவிதைக்கு அழகு செய்வன அதில் அமையும் அணிகள். உவமையும் உருவகமுமே பெரும்பாலும் கையாளப் பெற்று வருகின்றன. 'தாமரை முகம்' என்ற தொடரை முகத்தாமரை' என்று மாற்றியமைத்தால் உருவகமாகி விடுகின்றது. பால் செறிந்து பாலாடையாவது போல அடங்கிச் செறிந்த உவமையே (condensed simile) உருவகம் ஆகிறது. உவமையே பிற்காலத்தில் தோன்றிய நூற்றுக் கணக்கான அணிகட்கும் தாய். இதனை அப்பைய தீட்சிதர் என்ற வடமொழிப் புலவர் தமது சித்திர மீமாம்சையில்,

*உவமை என்னும் தவலருங் கூத்தி*
*பல்வகைக் கோலம் பாங்குறப் புனைந்து*
*காப்பிய அரங்கில் கவினுறத் தோன்றி*
*யாப்பறி புலவர் இதயம்*
*நீப்பறு மகிழ்ச்சி பூப்ப நடிக்குமே.*

என்று அற்புதமாகக் கூறுவர். கவிதைகளில் உவமை முதலிய அணிகளைச் சிறந்த புலவர்கள் முயன்று சேர்ப்பதில்லை. அவர்கள் கற்பனையில் ஒரு தன்மையாகத் தோன்றி இயையும் பொருள்கள் தாமே வந்து பொருந்தி உவமை முதலிய அணிகளாக அமைந்து விடுகின்றன.

**உணர்த்தும் உண்மை:** கவிதையின் தலைமைப் பண்பு, அஃது உணர்த்தும் உண்மையில்தான் உள்ளது. செய்தி கூறாத கவிதை வெற்றெனத் தொடுத்தலாகும். உயிரில்லாத சடம் போன்றது.

*நல்லது செய்தல் ஆற்றீர் ஆயினும்*
*அல்லது செய்தல் ஓம்புமின்*

என்பது போன்ற, அனைவருக்கும் இன்றியமையாத உண்மை போன்றவை கவிதையில் அமைதல் வேண்டும். மரபுக் கவிதையாயினும் இன்றையக் கவிஞர்கள் ஏதோ ஒரு கருத்தைக் கவிதைகள் மூலம் மக்களுக்கு உணர்த்துகின்றனர். இந்த நோக்கத்தை முக்கியமானதாகக் கொண்டே கவிதைகளைப் படைக்கின்றனர்.

இவ்வாறு கூறிய கருத்துக்களின் அடிப்படையில் மரபுக் கவிதைகளைப் படைத்துவரும் வாழும் கவிஞர்களில் சிலர்தம் கவிதைகளை ஆராய்வோம்.

நான் எடுத்துக்கொண்ட வாழும் மரபுக் கவிஞர்களை அவர்கள் பிறந்த ஆண்டை அடிப்படையாகக் கொண்டு அவர்களின் படைப்புகளை ஆராய விரும்புகிறேன். அவர்கள் வருமாறு.

1. கவிஞர் முடியரசன் (1920)
2. கவிஞர் எஸ்.கே. இராமராசன் (1922)
3.கவிஞர் நாரா. நாச்சியப்பன் (1922)
4. திருமதி சௌந்தரா கைலாசம் (1927)
5. டாக்டர். ரெ. முத்துக் கணேசன் (1927)
6. டாக்டர் வா. செ. குழந்தைசாமி (1929)
7. டாக்டர் இரா. திருமுருகன் (1929)
8. கவிஞர். ஆ. பழனி (1931)
9. பன்மொழிப் புலவர் மு.கு. ஜகந்நாத ராஜா (1933)
10. டாக்டர் சவகர்லால் (1936)
11. கவி வேந்தர். கா. வேழவேந்தன் (1936)
12. டாக்டர். அர. சிங்கார வடிவேலன் (1937)
13. டாக்டர் பு.மு. சாந்த மூர்த்தி (1939)
14. கவிஞர் (டாக்டர்)தா. ஜெயபுன்னிஸா (1944)
15. கவிஞர் குழ. கதிரேசன் (1949)
16. கவியரசு. ஏ. வைரமுத்து (1953)

மார்க்கண்டன் வயது போல் அமைந்த இந்தப் பதினாறு கவிஞர்களின் படைப்புகள் பதினாறு பேறுகளுக்குச் சமமானவையாகும்.

# 1. கவிஞர் முடியரசன்

செட்டி நாட்டுக் கவிஞர்களுள் தலையாயவர், மதுரை மாவட்டம் பெரிய குளத்தில் பிறந்தவர் (1920). அடியேனைப் போலத் தெலுங்கு பேசும் குடும்பத்தைச் சேர்ந்தவர். துரைராஜ் என்பது பெற்றோரால் இடப்பெற்ற பெயர். அழுத்தமான தமிழ்ப் பற்றின் காரணமாக அப்பெயரை முடியரசன் எனத் தமிழாக்கிக் கொண்டார்.

மேலைச் சிவபுரிக் கணேசர் செந் தமிழ்க் கல்லூரியில் தமிழை மிக்க ஆர்வத்துடன் கற்று அழுத்தமான புலமை அடையப் பெற்றவர் அடியேன் காரைக்குடியில் பணியாற்றிய காலத்தில் (1950 - 66) இவருடன் பழகியுள்ளேன். இவர்தம் கவிதையுள்ளத்தை நேரில் கண்டுள்ளேன். இவர்தம் பாடல்களை இவரே உணர்ச்சியுடன் பாடக் கேட்டு மகிழ்ந்ததும் உண்டு. நகரச் சிவன் கோவிலுக்கு அருகிலுள்ள மீனாட்சி சுந்தரேசுவரர் உயர்நிலைப் பள்ளியில் தமிழாசிரியராகப் பணியாற்றி ஓய்வு பெற்று, காரைக்குடியிலேயே இல்லம் அமைத்துக் கொண்டு வாழ்ந்து கொண்டிருப்பவர்.

இளமையிலேயே கவிதை ஊற்று இவர் உள்ளத்தில் தோன்றியிருத்தல் வேண்டும். கருவிலேயே திருவுடையவராதலால், படிப்பும் அநுபவமும் அந்த ஊற்றை வெள்ளமாகப் பெருக்கெடுத்து ஓடச் செய்திருக்க வேண்டும். தம் வாழ்நாளில் பாரதிதாசனைத் தந்தையென்றும் பாரதியாரைப் பாட்டன் என்றும் உரிமையோடு குலமுறை கிளத்தும் கொள்கையுடையவராகத் திகழ்பவர். அவர்களைப் போல் பரம்பரை உணர்வுடன் திகழ்பவர். பழைய இலக்கிய மரபுகளைக் கற்றுப் போற்றி அந்த மரபுகள் வழி நின்று கவிதைகளைப் படைத்து 'வாழையடி வாழை' எனப் போற்றிடும் கவிஞர் கூட்டத்தில் முன்னணியில் நிற்பவர்களில் ஒருவராகத் திகழ்பவர்.

இலக்கண வரம்பை மீறி இவர்தம் கவிதைப் படைப்புகள் தோன்றா. பாரதிதாசனைப் போலவே இவர் பாடிய கவிதைகளின் தலைப்பில் "நிலை மண்டில ஆசிரியப்பா, எண் சீர் விருத்தம், அறு சீர் விருத்தம், நேரிசை ஆசிரியப்பா, நேரிசை வெண்பா, கலி வெண்பா, தாழிசைகள், பதினாறு சீர்ச் சந்த விருத்தம், வெண் கலிப்பா, பஃறொடை வெண்பா " என்று யாப்புகளின் தலைப்புகளைக் குறிப்பிடுவதை

முறையாகக் குறிப்பிடும் வழக்கமுடைய கவிஞராகத் திகழ்கின்றார். பாரி நிலையம் (184, பிராட்வே, சென்னை 108) வெளியிட்ட பதிப்பில் (1961) இவை காணப் பெறுகின்றன. இலக்கண வரம்பை மீறாத பண்பைத் தமது அதிராத கொள்கையாகக் கொண்டுள்ளவர் கவிஞர் முடியரசன்.

இயற்கை உலகம் என்ற தலைப்பில் காணப்பெறும் 'ஆறு' பற்றிய கவிதையொன்றில்

*அவளுடன்நான் கற்பனையில் மிதந்து சென்றேன்*
*அத்தான்ஓர் ஐயமுண்டு, செய்யுள் யாக்கக்*
*கவலைதரும் இலக்கணம்ஏன் வேண்டும் என்றாள்*
*'காரிகையே' ஆற்றுக்குக் கரையேன் வேண்டும்?*
*சுவர்போலும் கரையிலையேல் ஆற்றின் தன்மை*
*என்னாகும் சொல்லிடுக ஊர்பாழ் அன்றோ?*
*அவமின்றி மொழிவிளங்கக் கவிதை என்னும்*
*ஆற்றுக்கும் இலக்கணமோர் கரையே யாகும்.*

இலக்கணத்தை வற்புறுத்தும் பாங்கில் காட்டப் பெறும் கருத்து இவர் கொள்கைக்கு அரணாக அமைகின்றது.

இவருடைய கவிதைகள் வெவ்வேறு காலங்களில் வெவ்வேறு சந்தர்ப்பங்களில் எழுதப் பெற்றவை. இது பற்றிக் கவிஞரே "என் கவிதைகளை நூல் வடிவில் கொணர வேண்டும் என்ற எண்ணம் தொடக்கத்தில் எனக்கு இருந்ததில்லை. உணர்ச்சியின் தூண்டுதலால் எழுதப் பெற்றவையே இக்கவிதைகள். அவ்வப்பொழுது பல இதழ்களில் வெளியிடப் பெற்றன." என்று கூறியுள்ளார். அவைகள் தமிழண்ணல் (டாக்டர் இராம. பெரிய கருப்பன்) முயற்சியால் 1954-55 ஆம் ஆண்டுகளில் இரு தொகுதிகளாக வெளிவந்தன. அதே இரு தொகுதிகளையும் பின்னர்ப் பாடப் பெற்ற கவிதைகளையும் ஒன்று சேர்த்துப் பாரி நிலைய வெளியீடாக வெளிவந்தது. இத் தொகுதியில் ஆசிரியர் பற்றிய குறிப்புக்கள் இல்லாமை ஒரு பெருங்குறை. அவர் பிறந்த நாள், பிறந்த இடம், கல்வித் தகுதி, மேற்கொண்டுள்ள பணி இவை படிப்பவர்க்குத் தெரிய வேண்டியவை. அப்பொழுதுதான் அவற்றை நன்கு சுவைக்க முடியும் மதிப்பிடவும் முடியும். 'கவியரங்கில் முடியரசன்' என்ற நூலில் புலவர், ஆ.பழனி, 'கவிஞரைப் பற்றி' என்ற தலைப்பில் எழுதிய கட்டுரை இக்குறையைப் போக்கியது.

***கவிதைகளின் மதிப்பீடு:*** ஒருவரின் கவிதைகளை மதிப்பிட வேண்டுமானால் இரு நோக்கில் ஆய்ந்து மதிப்பிடலாம். அவை, உருவம் உள்ளடக்கம் என்பனவாம்.

1. உருவம்: – இதில் கற்பனை, சொல்லாட்சி, ஒலிநயம், உருவகம், யாப்பமைதி, அணிநலம், சுவை முதலியன அடங்கும்.
2. உள்ளடக்கம்: – கவிதைகள் நுவலும் கருத்து. இதில் கவிஞரின் பல்வேறு கொள்கைகள், வாழும் சமுதாயம் பற்றிய குறிப்புகள், அரசியல் முதலியவை அடங்கும்.

இந்த அம்சங்கள் அனைத்தையுமே கொண்டு எல்லாக் கவிதைகளும் விளங்கும் என்று நினைத்தல் தவறு. இவற்றுள் ஒருசில அமைந்திருப்பினும் சாலும், ஒன்றிரண்டு நலன்கள் சிறப்புடன் அமைந்திருந்தாலும் கவிதை உணர்த்தும் செய்தி மிகவும் முக்கியம். அதுவின்றேல் கவிதைகள் 'வெற்றெனத் தொடுத்தல்' என்ற குற்றத்திற்கு ஏதுவாகிவிடும். இவர் கவிதைகளில் ஒரு கற்பனையைக் காட்டுவேன்.

கட்சிக் கூட்டங்கள் நடைபெறும் போது எதிர்க் கட்சிகளைச் சார்ந்த ஒரு சிலர் பல்வேறு யுக்திகளைக் கையாண்டு குழப்பம் விளைவித்துக் கூட்டத்தைக் கெடுப்பதற்கு வழியமைத்தலை இன்றைய உலகில் நடைமுறையில் காண்கின்றோம். இதனால் மதியுடையார்கள் அஞ்சி மேடை ஏறாதிருப்பார்களா? எப்படியும் கூட்டம் நடத்தத்தான் செய்வார்கள். இத்தகைய குழப்பம் விண்ணுலகத்திலும் நடைபெறுகின்றது என்று தம்கற்பனையை விரிக்கின்றார். இதை இயற்கை உலகம்' என்ற தலைப்பின் கீழ் 'நிலவு' பற்றிய ஒரு பாடலில் காணலாம்.

*மதியுடையார் பேசுவதைக் கேட்டல் நன்று*
*மாண்புவரும் எனக்குழுமும் விண்மீன் கூட்டம்*
*அதுமகிழ வானத்து மேடை ஏறி*
*அம்புலியார் சொற்பொழிய முகிலன் ஓடி*
*எதிரியெனக் கூட்டத்துள் ஒளிம றைத்தான்*
*இடியிடித்தான் குழப்பத்தை ஆக்கி விட்டான்*
*இதிலென்ன கண்டனரோ மதியர் நாளை*
*ஏறாமல் இருப்பாரோ மேடை மீது*

விண்மீன்களின் பெருங்கூட்டம் ஒன்றில் மதியர் என்னும் அம்புலியார்

மேடை ஏறிச் சொற்பொழிவு நிகழ்த்துகின்றார். இதனைப் பொறுக்காத எதிர்க்கட்சி முகிலன் விளக்கை அணைத்து ஒளியை மறைக்கின்றான். இடியிடித்தும் குழப்பத்தை உண்டாக்குகின்றான். முடிவில் மீண்டும் அமைதி நிலவுகின்றது. கூட்டம் கலையவில்லை. மதியார் - அம்புலியார் மீண்டும் விண்மேடையில் ஏறிச் சொற்பொழிவு நடத்துகின்றார். விடியும் வரை சொற்பொழிவு அற்புதமாக நடைபெறுகின்றது.

'முகிலிடை நிலா' என்ற தலைப்பில் உள்ள மற்றொரு கவிதை இதனைத் தொடர்கின்றது.

*ஆரியத்தால் ஒளியிழந்த தமிழர் போல*
*அழகிழந்தாய் உனையடைந்த மேகத் தாலே*
*நாரியரின் முகங்கண்டு நாணி யுள்ளே*
*நண்ணினைநீ எனஎண்ணி நகைத்தாள் முல்லை*
*வேறினத்தார் நாடாள வீணன் அல்லேன்*
*வேலெடுத்துப் போர்தொடுப்பேன் வெற்றி கொள்வேன்*
*சீரழிப்பேன் எனக்கிளம்பும் வீரன் போலச்*
*சிரித்தெழுந்தாய் மேகத்தைப் பிளந்து மேலே*

நிலவைப் பார்த்துக் கவிஞர் பேசுவது இக்கவிதை. நிலவு எழுந்ததை இரண்டு உவமைகளால் அற்புதமாக எடுத்துரைத்துக் காட்சியை நம் மனத்திரையில் பதிய வைத்து விடுகின்றார். வடமொழியால் தமிழ் கெடுவதைக் குறிப்பால் புலப்படுத்தித் தம் தூயதமிழ்க் கொள்கையையும் புலப்படுத்தி விடுகின்றார். நிலவைப் பற்றிய வேறு இரண்டு உவமைகளைக் கவிஞர் புதுமையாகக் காட்டுகிறார்.

*கண்கவர் சிறுவர் சேர்ந்து*
*கடுமழைப் புனலில் ஓடப்*
*பண்ணிய கப்பல் போலப்*
*படர்பிறை நிலவு*

இது கவிஞரின் அன்றாட வாழ்க்கை நிகழ்ச்சிகளைக் கூர்ந்து நோக்கும் திறனைக் காட்டுகின்றது.

*அகத்தியின் குவிபூத் தோற்றம்*
*அன்னதோர் பிறைநிலா*

இஃது இயற்கையை நுணித்து நோக்கும் கவிஞரின் திறனைக் காட்டுகின்றது.

*புதியவகை உவமைகள் :* பாவேந்தர் புதிய உவமைகளை அமைப்பதில் தனித்திறமை பெற்றவர். அவர் வழி வந்தவராதலால் இவருக்கும் அத்திறமை இயல்பாகவே வந்தமைந்தது. கோழியின் பின்னே செல்லும் குஞ்சுகளை,

*கால்முளைத்த தாமரையின் மொக்குள் போலக்*
*காட்சிதரும் குஞ்சுகள்*

என்று காட்டுவார். இங்குக் குஞ்சுகளின் உருவத்திற்குத் தாமரை மொக்குகள் அற்புதப் பொருத்தம் ஆகும். ஈண்டுக் கவிதையிலும் தெளிவு, உவமையிலும் புதுமை காண்கின்றோம். மற்றோர் அற்புதமான உவமை அமைந்த பாடல் வருமாறு.

*சுடர்விட்டுக் காட்டுகின்ற கதிரோன் தோன்றச்*
*சுருக்கவிழ்ந்து சிரிக்குமுகத் தாம ரைக்குள்*
*கடன்பட்ட மாந்தரிடம் வட்டி கேட்கக்*
*கடைதோறும் புகுந்துவரும் கணக்க னைப்போல்*
*இடம்விட்டு மலர்தோறும் சென்று தேனை*
*இனிதுறிஞ்சி இசைபாடிச் செல்லும் தும்பி*
*அடைபட்டுக் கிடக்கவெனக் குவித்துக் கொண்ட*
*அல்லிமலர்க் கூட்டத்துள் அழகு கண்டேன்*

இங்கு வண்டு இசை பாடித் தேனை உறிஞ்சுகின்றது. மலர்தோறும் சென்று உறிஞ்சும் வண்டுக்குக் கடைதோறும் வட்டி வாங்கும் கணக்கப் பிள்ளை உவமையாக அமைகின்றார். இவரும் ஒருவகையில் உறிஞ்சுபவர்தாம். வண்டு இசை பாடித் தேனை உறிஞ்சுகின்றது. கணக்கப் பிள்ளை வசை பாடி வட்டி பெறுகின்றார். காரைக்குடியில் வாழ்ந்த அடியேனுக்கு இது நன்கு தெரியும்.

'எழில்' என்ற தலைப்பில் உள்ள பாடல்களும் , 'அழகின் சிரிப்பு' என்ற பாடல்களும் பாரதிதாசனின் ' அழகின் சிரிப்பு ' என்ற நூலில் உள்ள பாடல்களின் பாணியில் அமைந்து படிப்போரை மகிழ்விக்கின்றன.

குழந்தைச் செல்வத்தைப் பாடாத கவிஞர்களே இல்லை எனலாம். பாரதியார் குழந்தைகளைப் பிள்ளைக்கனியமுது, பேசும் பொற் சித்திரம், அள்ளி அணைத்திட ஆடிவரும் தேன் என்று உருவகித்து மகிழ்வார். முடியரசனும் இத்தகைய தலைப்பில் பாடியுள்ளார். இதில் தனித்தன்மையைக் காண முடிகின்றது. அனைத்தும் அற்புதமான

பாடல்கள்.

வெண்முகில்சூழ் கலைமுகடும் முகட்டி னின்று
　　வீழ்ந்ததிரும் அருவிகளும் வண்ணப் பூவால்
கண்கவரும் செடிகொடியும் கொடிகள் தாவிக்
　　காட்டுகின்ற மரத்தொகையும் தென்றற் காவில்
பண்சொல்லும் வண்டுகளும் மாலை வானில்
　　படர்கின்ற செந்நிறமும் காதல் நங்காய்!
விண்மதியும் தரும்இன்பம் என்றன் பிள்ளை
　　விளையாடும் காட்சிதரும் இன்பம் ஆமோ!

ஆய்ந்தெடுத்த இசைவல்லார் செய்த வீணை
　　ஆர்த்தெழுப்பும் இன்னொலியும் கானில் நன்கு
ஏய்ந்திருக்கும் வேய்ங்குழலில் தோன்றும் பண்ணும்
　　கரும்பாம்பும் மெய்ம்மறந்து நிற்க இன்பம்
தோய்ந்திருக்கும் படியூதும் குழலும் இன்னும்
　　துன்பமெலாம் துடைக்கும்இசைக் கருவி யாவும்
பாய்ந்தளிக்கும் இன்பமெலாம் என்றன் பிள்ளை
　　பரிந்துளறும் மழலைதரும் இன்பம் ஆமோ!

நரம்பேறும் யாழ்மீட்டிக் காதல் கூட்டி
　　நல்லிசையால் மகிழ்வூட்டி இருக்கும் போதும்
மரஞ்சேர்ந்த மாதுளைபோல் தோன்றும் உன்றன்
　　மார்பகத்தால் பேரின்பம் தந்த போதும்
சுரந்தூறும் உன்னிதழைச் சுவைக்கும் போதும்
　　சொல்லரிய இன்பத்தைக் காணு கின்றேன்
இருந்தாலும் என்குழந்தை மெய்யில் தாவி
　　இளங்கையால் தொடுக்கின்ற இன்பம் ஆமோ!

இந்த மூன்றையும் திரும்பத் திரும்பப் படித்துச் சுவைப்பதிலேயே இன்பத்தின் கொடுமுடியைக் காணலாம். 'தோற்று விட்டேன்' என்ற தலைப்பில் காணப் பெறும் தாழிசைக் கவிதைகள் தனித் தன்மையுடன் திகழ்கின்றன.

போர்க்களத்தில் எதிர்நிற்க எவரும் காணேன்
　　பூரித்தேன் வீரத்தால் செருக்கும் கொண்டேன்
தார்க்கழுத்தில் வண்புயத்தில் முகத்தில் எங்கும்
　　தளிரடியால் எனைமிதித்தாய் தோற்று விட்டேன்

போரில் புறங்கண்டேன், பொன்னழகி என்னை வென்றாள்' என்று காதல் பூரிப்பில் காளை கூறுவதாகக் கவிஞர்கள் பாடுவதை நாம் மரபாகக் கேட்டுள்ளோம். முடியரசனோ, 'போரில் வீரத்தைக் காட்டிய என் புயத்திலும், தளிர் போன்ற மெல்லிய அடிகளால் மிதித்து என்னைத் தோற்கடித்து விட்டாயே' என்று குழந்தையைப் பார்த்து பேசுகின்றார். கவிஞர் எப்போதும் குழந்தைகட்குத் தோற்றுவிடும் இயல்புடையவர்தான், அவர் மட்டுமா தோற்றார். மனித சமுதாய வளர்ச்சிக்கே இத்தோல்வி துணைநிற்குமாதலால் ஆயிரம் முறை – ஏன் – பத்தாயிரம் முறை தோற்பதற்கு நாமும் ஆயத்தமாக இருக்கின்றோம். பிள்ளைப் பேறு இல்லாதவர்களையும் தந்தையாக மாற்றி மகிழச் செய்யும் இந்தப் பாமலர்கள் என்பதை அநுபவந்தான் காட்டும்.

இயற்கைபற்றி : கவிஞர் இயற்கை பற்றி ' இயற்கைத் தாய் ' என்று பாடிய பாடல் அற்புதமானது. எவரும் கற்பனை செய்யாத கவிதை, தம்மைப் பெற்றெடுத்தவள் இயற்கைத்தாய் என்றும் தம் படிப்பிற்கும் வளர்ச்சிக்கும் என்னென்ன நல்கினாள் என்றும் கவிஞர் பதினொரு கவிதைகளில் கூறுகின்றார். தம் அன்னையின் பெயர் முருகு என்றும் (அழகு) கூறுவார். அவற்றில் மூன்று பாடல்கள் வருமாறு.

தென்றலெனும் தொட்டிலிலே எனைக்கிடத்தித்
    தேன்நுகர மலர்கள் தோறும்
சென்றிருந்து தமிழ்பாடும் வண்டொலியால்
    செவிகுளிரத் தாலே தாலோ
என்றினிய தாலாட்டில் துயிற்றிடுவாள்
    எழுந்தழுதால் ஆறு காட்டிக்
குன்றிருந்து வீழருவி கடல்காட்டிக்
    கொஞ்சிடுவாள் மலர்கள் காட்டி.

இளங்காளை இருட்கதவம் திறந்துநோக்கி
    இன்னும்எழ வில்லை யோஎன்(று)
உளஞ்சிவந்து முகஞ்சிவந்து கதிர்க்கரத்தால்
    உறக்கத்தில் எழும்பு வாள்தாய்
குளறிஎழுந் தன்னவளை வைதிடுவேன்
    கோணாமல் அன்பு கூர்ந்து
முளரிமுகம் காட்டிடுவாள் முத்தமிழால்
    வைதார்க்கும் வாழ்வு தந்தாள்.

இந்தப் பாடலில் உள்ள 'வைதார்க்கும் வாழ்வு தந்தாள்' என்ற இறுதியடியின் முடிவு

"மொய்தார் அணிகுழல் வள்ளியை வேட்டவன் முத்தமிழால்
வைதாரையும் அங்குவாழ வைப்போன்.

என்ற அருணகிரியின் கந்தரலங்கார அடிகளை நினைவு கூரச் செய்கின்றது.

விண்ணரங்கில் கருமுகிலாம் திரைநீக்கி
விதவிதமாய் வானம் பாடி
பண்ணிசைக்க ஒளிவீசிப் புடைசூழும்
பல்வகையாம் மீனப் பெண்கள்
கண்சிமிட்டி உடனாட முழுநிலவுக்
காரிகையும் நடனம் ஆட
மண்ணகத்து மகவெல்லாம் களிகொள்ள
மனம்வைத்தாள் என்றன் அன்னை.

மலையுறைவாள் அகஞ்சிவந்து நிலவுலகில்
மக்கள்பசித் திருப்ப ரென்று
நிலைகலங்கிக் கீழிறங்கி ஆறென்று
நெடுகநடந் தெவ்வி டத்தும்
கலைகுலுங்கக் கால்களினால் ஓடிமலர்க்
கண்மலர வயலில் பாய்ந்து
நிலைகுலுங்கும் கதிர்க்கையால் உணவூட்டிக்
குறைநீக்கி மகிழ்வாள் அன்னை.

இந்த அழகின் சிரிப்பில் ஆறு என்ற தலைப்பில் உள்ள பதினாறு பாடல்கட்கும் ஈடும் எடுப்பும் சொல்ல முடியாது.

'கடல்' என்னும் தலைப்பில் உள்ள பாடலொன்றில் கடலுக்கு 'ஆழி' என்றும், 'பரவை' என்றும் பெயர்வந்த காரணத்தைக் காட்டுவது அற்புதம்.

கற்றுணர்ந்த சான்றோரின் உள்ளம்போலக்
கடலேநீ ஆழங் கொண்ட
பெற்றிஉணர்ந்(து) ஆழிஎன்றார், யாதும்ஊர்
பிறரெல்லாம் கேளிர் என்ற
பற்றுடைய தமிழினத்தார் பரந்தமனப்
பான்மையெனப் பரந்து நிற்கும்

ஒற்றுமையைக் கண்டன்றோ என்முன்னோர்
உனைப்பரவை என்று சொன்னார்.

தொழிலாளர்கள் பற்றி: இந்த உலகில் கைபுனைந்தியற்றாக் கவின்பெறு வனப்பாக இயற்கையில் அமைந்திருப்பவை இறைவனால் படைக்கப் பெற்றவை. கைபுனைந்தியற்றிய கவின்பெறு வனப்பு செயற்கையாக அமைந்தவை. இச்செயற்கை தொழிலாளர்களின் கைவண்ணத்தால் ஏற்பட்டவை. ' படைத்தோன் வாழ்க' என்ற கவிதை மைசூர்ப் பகுதியிலுள்ள (கர்நாடக மாநிலம்) ' கிருட்டிண ராஜ சாகர்' என்ற நீர்த் தேக்கத்திற்கருகிலுள்ள, 'பிருந்தாவனம்' பற்றிய கவிதையாகும். இதில் செயற்கைபற்றிய செய்தியைக் காணலாம்.

பிருந்தா வனத்தின் பேரெழில் கண்டேன்
அப்பெரும் எழில்நாம் அவனியில் காணத்
தப்பியோர் விழிப்பயன் தப்பியோர் ஆவர்
எண்ண இயலா வண்ண மலர்கள்
கண்கவர் வனப்பொடு கற்பனை பெருக்கும்
நிலமிசைப் படுபுல் நிமிர்தரு செடிகள்
வலைநிகர் கொடிகள் வகைவகை யாகக்
கைபுனைந் தியற்றிய காட்சியே காட்சி

இருவிழி எதுவரை எட்டுமோ அதுவரை
பரவிய எல்லை படைத்ததப் பூங்கா
பசுமையும் தன்மையும் பாங்குடன் குழைத்துப்
பூசிய தென்னப் பொலிபூங் காமிசை
வீசிய விழியோர் வியப்புற் றாங்கே
இனயா நாட்டத் திமையோர் ஆவர்
விண்ணுல குண்டென விளம்புவோர் கண்டிலேன்
கண்ணெதிர் கண்டேன்அக் கற்பனை உலகம்.

அப் பூங்காவில் ஊற்றுக் குழல்நீர் அமைப்பினைக் கவிஞர் காட்டுகிறார் .

ஊற்றுக் குழல்நீர் காட்டும் வித்தை
வேறோர் இடத்தும் கண்டேன் அல்லேன்
விரிகுடை யோவென ஒருபாற் காணும்
வரிசிலை யோவென ஒருபால் வளையும்

இனிமேல் தனிமை ஏலேன் என்றே
அணிமைத் தொட்டி யகத்துள் வீழ்ந்து
மாயும் ஒருபால், மற்றொரு பாங்கர்ப்
பிரிந்தவர் கூடும் பெற்றிமை போலப்
பொருந்தும் இருபுறத் திருந்து வருநீர்
இருபுலப் பகைவர் எதிரெதிர் நின்று
பொருது வீழும் பான்மையே போல
அணிஅணி யாக அவ்விடை மோதும்
எண்பே ராயமும் ஐம்பெருங் குழுவும்
தன்புடை சூழத் தனிவீற் றிருக்கும்
மன்னவன் போல மற்றவை சூழ்தர
மதர்த்து நிற்கும் மற்றொன் றொருபால்
நிரல்பட அரிவையர் நின்று நடம்புரி
செயலெனப் பெரியவும் சிறியவும் ஆகி
ஆடி அசைதரும் அழகினை ஒருபால்
நாடி விழியால் நலம்நுகர்த் திருந்தேன்.

அடுத்து இந்தக் காட்சிகளைப் படைத்த தொழிலாளர்களை வாழ்த்துகின்றார் முடியரசன். உழைப்பைப் போற்றும் அந்த உத்தமக் கவிஞர் ' தொழிலாளி' என்ற தலைப்பில் கண்ட நான்கு கவிதைகளில் ஒன்று இது.

ஆடையிலே அழுக்ககற்றித் தூய்மை ஆக்கி
அழகுசெய்து தருகின்றான், பொலிவு குன்றத்
தாடையிலே வளருமதை வழித்தெ றிந்து
தளிர்க்கின்ற முடிவெட்டி அழகு செய்வோன்,
கோடையிலே வருந்தாமல் முள்ளால் கல்லால்
கொடுமையொன்றும் நேராமல் தடுப்ப தற்குச்
சோடையின்றிச் செருப்பளிப்போன் இவர்க ளெல்லாம்
தொடக்கூடாச் சாதியென்றால் தொலைக வையம்.

இதில் தொழிலாளர்கள் மீது இரக்கம் காட்டி முதலாளி சமூகத்தின் மீது சீற்றம் காட்டுகின்றார். தொழிலாளர்களைக் 'கிழங்கென்றும், கீரையென்றும்' எண்ணிக் கீழாக்கிவிட்ட நிலையை ஒழிக்க, 'வீரம் மிக்க இளைஞர்களைக் களங்காண வருமாறு தட்டி எழுப்பிகின்றார். இவர்

பொதுவுடைமைக் கொள்கையிலும் அழுத்தமான பற்றுடையவர். இதனை, 'நிலவு' பற்றிப்பாடிய பாட்டொன்றில் காணலாம்.

*பொதுவுடைமை ஆட்சியினை இரவுப் போதில்*
*புரிகின்ற முழுமதியே உன்னைக் கண்டு*
*மதுவுண்ட வண்டானேன்,*

இப்படிப் பொதுவாக இவர் கவிதையில் ஆழ்ந்த தமிழ்ப் பற்று, ஏழைகளின் மீது இரக்கம், துன்பத்திலும் இன்பத்தைக் காட்டும் நகைச்சுவை, நாட்டன்பு முதலிய அரிய பண்புகளைக் கண்டு மகிழலாம்.

*சான்றோர்கள்:* திருத்தொண்டத் தொகையைப் பாடி அடியார் வழிபாட்டைத் தொடங்கி வைத்தவர் சுந்தர மூர்த்தி அடிகள். “தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்” என்று இறைவனாலேயே அடியெடுத்துக் கொடுக்கப் பெற்ற திருத்தொண்டத் தொகை இவ்வாறு தொடங்குகின்றது. இதனைத் தொடர்ந்து நம்பியாண்டார் நம்பி பாடிய 100 பாடல்கள் அடங்கிய, ' திருத்தொண்டர் அந்தாதி'யை விரித்துப் பாட வழியாக அமைகின்றது. பின்னர் சேக்கிழார் பெருமான் அவர்களால்' பக்திச்சுவை நனிசொட்டும்' திருத்தொண்டர் புராணம் (பெரிய புராணம்) மேலும் விரிந்தது.

இந்தத் தம்பிரான் தோழரின் அடிச்சுவட்டைப் பின்பற்றிய பாரதியார்; காந்தியடிகள், தாதாபாய் நவுரோஜி, திலகர், லாலா லஜபதிராய், வ.உ.சிதம்பரம் பிள்ளை போன்ற விடுதலைத் தொண்டர்களைப் போற்றினார். தொடர்ந்து, கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை வாழ்த்துப் பாடல்களாகவும் இரங்கற் பாக்களாகவும் பல தொண்டர்களைப் பாடியுள்ளார். இவரது பாடல்களில் தேசத்தொண்டர்கள், கவிஞர்கள், வள்ளல்கள், இசையரசர்கள் போன்ற பல பெரியோர்கள் இடம் பெற்றுள்ளனர். இவர்கள் யாவரும் பாவேந்தர், உலகப் பெரியோர்கள், நாட்டுப் பற்றாளர்கள், அறிஞர்கள், வள்ளல்கள், துணைவேந்தர்கள், புலவர்கள்,நூல்வெளியீட்டாளர்கள், நடிகர்கள் முதலியோர்களைப் பாட வழிகாட்டிகளாய் அமைந்தனர்.

இவர்கள் அனைவரும் இம்முறையில் தொண்டாற்றக் கவிஞர் முடியரசனுக்கு வழிகாட்டிகளாக அமைந்து அவர் மொழித் தொண்டர்களான கவிமணி, பாரதிதாசன் , திரு.வி.க, கா.அப்பாத்துரை, மயிலை சிவமுத்து, சொ. முருகப்பா என்பவர்களைப் பாட

இடந்தந்திருக்கக் கூடும் எனக் கருதலாம்.

ஒன்றிரண்டு கற்றவுடன்
ஒப்புண்டோ இங்கெமக்கு
என்றலைவோர் மிக்குவரும்
இந்நாளில் துன்றியநல்
நூலுணர்வும் நுண்மாண்
நுழைபுலமும் வாய்த்தும் எப்
பாலும் பணி வதவர் பண்பு.

என்பது கவிமணி அவர்களைக் காட்டும் பாடல்.

பாண்டியனை நினைப்பூட்டும் பார்வையினன்
பாழான பழமை வேண்டான்
மாண்டநல்ல சங்கத்தார் தமைப்போல்வார்
மனத்தில்எழும் புதுக்க ருத்தை
வேண்டியமட் டுங்கொடுப்பான் வீரத்தை
ஊட்டிடுவான் ஊழிக் காலம்
தாண்டியநல் தமிழ்மொழிமேல் மீசையின்மேல்
தணியாத காதல் கொண்டான்.

என்பது பாவேந்தர் பற்றிய அறிமுகப் பாடல்.

பெண்ணினத்தை அச்சுறுத்தி விதவை என்ற
பெருங்கொடுமை வழக்கத்தைப் பழக்க மாக்கிக்
கண்விழித்துப் பாராமல் தாழ்த்தி வந்தோம்
கண்சிவக்க மனம்பதறத் துடித்தெ ழுந்தான்
எண்ணியிவன் மறுமணத்துக் கழகம் கண்டான்
எத்தனையோ மகளிர்க்கு வாழ்வு தந்து
கண்ணிறங்கும் நீர்துடைத்தான் ஆத லாலே
காரிகையார் வாழ்த்துகிறார் வாழ்க என்றே.

இது சீர்திருத்தச் செம்மல் சொ. முருகப்பா பற்றிய பாடல். இவர் செட்டி நாட்டில் ஒரு விநோதமான மனிதர்.

நுண்ணறி திறமுடையாய் நீயும் இங்கு
நுனித்துணர்ந்தாய் பன்மொழியும் ஆயி னும் நம்
பண்ணுயர்ந்த தமிழ்மொழிக்கே நின்றன் நெஞ்சைப்
பரிசளித்தாய் தமிழ்ப்பற்றே மிக்கு நின்றாய்

அண்ணலுன்போல் பன்மொழியில் புலவர் என்போர்
ஆருள்ளார் தமிழ்காக்க அதனா லன்றோ
கண்ணியத்தால் உயர்தமிழ்த்தாய் தீங்கு வந்தால்
கா அப்பா துரைமகனே என்று சொன்னாள்.

பன்மொழிப் புலவர் கா. அப்பாத்துரை பற்றிய பதினொரு பாடல்களில் இதுவும் ஒன்று.

மதுரை எழுத்தாளர் மன்றச் சார்பில் நடைபெற்ற கவியரங்கத்தில் 'உரிமை' என்ற தலைப்பில் பாடிய கவிதைகள் மிகச் சிறப்புடையவை. இவற்றுள் காஞ்சித் தென்றலாக அறிஞர் அண்ணா குறிப்பிடப் பெறுகின்றார்.

தென்பொதிய மலைஒன்றே தமிழர்க் காகத்
தென்றலெனும் மென்காற்றை நல்கிற் றென்பார்
அன்புடையீர் காஞ்சிபுரப் பேரூர் தானும்
அறிஞரென்ற தென்றலொன்றை நல்கக் கண்டோம்
வன்புடைய வாடைவரின் பொதியத் தென்றல்
வாயடங்கும் இத்தென்றல் வாடை காணில்
தென்புடைய புயலாகிப் பகையை மாய்க்கும்
தெருவெல்லாம் மணம்பரப்பும் வாழ்க தென்றல்

இதில் தென்றல் புயலாவதைக் காண்கின்றோம். அக்காலத்தில் இருந்தவர்கள் நேரில் இதனைக் கண்டிருப்பர். அடுத்து

கட்டிவந்த பொருள்விற்க ஆங்கி லத்தார்
கடல்கடந்து நுழைந்திங்கு தம்மைத் தாமே
முட்டவிட்டுத் தந்திரமாய்க் கவர்ந்து நாட்டின்
முழுஉரிமை கைக்கொண்டார் அடிமை யாகிக்
கெட்டிருக்கும் மாந்தரிலே காந்தி தோன்றிக்
கிளர்ந்தெழுந்தார் அயலவர்கள் நாட்டை யாள
விட்டிருந்த நிலைபோலும் எனக்க னன்று
வீரப்போர் தொடுத்துமேன் உரிமை வேட்கை?

என்ற பாட்டு காந்தியடிகளைக் காட்டுவதாகும். தொடர்ந்து,

முத்திருக்கும் தண்கடலில் முத்தெ டுத்து
முகில்முட்டும் மலையகத்துச் சந்த னத்தின்

எத்திசையும் மணக்கின்ற மரமெ டுத்து
மிளகெடுத்து மயில்தோகை இறகெ டுத்துப்
பத்திபத்தி யாய்க்கலங்கள் விற்கச் சென்ற
பழங்கடலில் சிதம்பரனார் கப்பல் ஓட்டி
எத்துயர்க்கும் அஞ்சாமற் செக்கி ழுத்தும்
வன்சிறையில் வாடியதேன் உரிமை வேட்கை.

என்று கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி. காட்டப் பெறுகின்றார்.

நமக்கென்று நாடுண்டு மொழியும் உண்டு
நாகரிகத் தொன்மைமிகும் இனமும் உண்டு
சுமக்கின்ற அடிமைமனம் போதும் போதும்
சுரண்டுகின்ற வடவரொடு தொடர்பு போதும்
நமக்கென்று தனியாட்சித் திருநா டிங்கே
எழுப்பிடுவோம் எனக்கிளர்ந்து போர்தொ டுக்கத்
தமக்குநிகர் பெரியாரும் அறிஞர் தாமும்
தனிமுழக்கம் புரிவதுமேன் உரிமை வேட்கை.

என்ற பாடலில் தந்தை பெரியார் காட்டப் பெறுகின்றார்.

போர்வாளும் விடுதலையும் விகடன் கல்கி
பொதிந்துள்ள பையொன்று கையில் உண்டு
சேர்வாரும் சேராரும் வேறு கொள்கை
செல்வோரும் உம்சொல்லில் அடங்கி நின்று
நேர்வருவார் எனும்உண்மை காட்டும் அப்பை;
நெடுஞ்சூழ்ச்சி நம்மொழிமேல் போர்தொ டுத்தால்
நேர்நிற்க உரமுண்டென் மற்றோர் கையில்
நிலத்தூன்றாத் தடியுண்டு மற்றோர் கையில்

என்பது மயிலை சிவமுத்து அவர்களின் மணிவிழா வாழ்த்தாக அமைந்த ஏழு பாடல்களில் ஒன்றாகும்.

காரைக்குடி அழகப்பா கல்லூரியில் பாவேந்தர் தலைமையில் நாகரிகம் என்ற பொதுத் தலைப்பில் நடைபெற்ற கவியரங்கில், 'எண்ணம்' என்ற பொருளில் பழைய எண்ணங்கள், உயர் எண்ணங்கள் வேண்டிய எண்ணங்கள், வேண்டா எண்ணங்கள் என்ற நான்கு தலைப்புகளில் தம் பாடல்களை அமைக்கின்றார் முடியரசன்.

பழைய எண்ணங்களில் காட்டுபவை . பிறர்மனையை நோக்கா எண்ணம், செல்வத்துப் பயனீதல் காட்டும் எண்ணம். இனப்பற்றைக்

காட்டும் எண்ணம், தமிழறிந்து மதிக்கும் எண்ணம், என்பவையாகும்.

புலவர்பெருஞ் சித்திரனார் வறுமை போக்கப்
    புரவலர்பால் பலபரிசில் பெற்று வந்து
குலமனையாள் கைக்கொடுத்து நயந்தோர் யார்க்கும்
    கடிமகிழ் உறவினர்க்கும் பிறர்க்கும் நல்கி
நலம்நுகர நாளைக்குத் தேவை என்ற
    நயவாமை என்னொடும்கூ றாமல் நல்கிச்
செலவழித்து மகிழ்வோம்நாம் எனப்பு கன்றார்
    செல்வத்துப் பயனீதல் காட்டும் எண்ணம்.

சங்கப் பாடலை இளக்கி மென்மையாக்கி இக்கால மக்களின் மனத்திற்கேற்றவாறு தந்த இப்பாடல் செல்வத்துப் பயனீ தலை உணர்த்துகிறது.

உயர் எண்ணங்களிலே நான்கினைக் காட்டுகின்றார்.அவை- செயற்கரிய தியாக எண்ணம், மக்களைக் காக்கும் எண்ணம், உரிமை எண்ணம், நாடு தழைக்கும் எண்ணம்.

புந்திக்குப் பொருந்தாத கொள்கை மாய்க்கப்
    புரட்சிசெயும் நல்லறிஞர் தீய சொற்கள்
தந்தவர்க்கும் நாணும்வகை நன்மை செய்வார்
    தண்டாத சொல்லருவி கலையின் தேக்கம்
செந்தமிழர் நாட்டுக்கு வாழ்நாளெல்லாம்
    சேவைசெய்வார் காஞ்சிநகர் தந்த செம்மல்
பந்தமுடன் அண்ணாஎன் றழைக்கப் பெற்றார்
    படும்பாடு நம்நாடு தழைக்கும் எண்ணம்.

இது அண்ணாவின் உயர் எண்ணத்தைக் காட்டுவது. ஏனைய மூன்றும், காந்தி, காமராசர், பெரியார் என்ற மூவரின் எண்ணங்களாகும்.

வேண்டாத எண்ணங்களில் விளையாடித் திரியும் எண்ணம், வால் பிடிக்கும் எண்ணம், ஆகிய இரண்டு, காட்டப்பெறுகின்றன. இரண்டாவதில் பல எண்ணக் கோவைகளைக் காட்டுவார் முடியரசன்.

ஒருகுலமே உண்டெனஇவ் வுலகுக் கோதும்
    உயர்நாட்டில் சாதிமுறை வேண்டா எண்ணம்
தெருவோடு போவாரைக் கேலி செய்யும்
    சிறுபுத்தி நல்லவர்க்கு வேண்டா எண்ணம்

திருவுயர அறிவுயர வாழ்தல் கண்டு
தேய்ந்து மனம் புழுங்குதலும் வேண்டா எண்ணம்
சிறுவயிறு கழுவுதற்கு மானம் விட்டுச்
சீரிழந்து வால்பிடித்தல் வேண்டா எண்ணம்

இவை மக்களுக்கு அற்புதமான அறவுரை-அறிவுரை. வேண்டிய எண்ணங்களைப் பற்றி ஐந்து பாடல்கள் உள்ளன. அவற்றில் ஒன்று.

நாளைக்கு மாணவரே நாட்டை ஆள்வோர்
நம்கையில் எதிர்காலம் உளதே என்று
நாளுக்கு நாளுணர்ந்து கடமை யாற்றும்
நல்லுணர்வே ஆசாற்கு வேண்டும் எண்ணம்
வேளைக்கு வந்திருந்து காலம் பேணி
வினையின் மேற் கருத்தூன்றி ஆசாற் போற்றிக்
கேளிக்கை விடுத்தொழித்து மாண்பை ஆக்கக்
கிளர்ந்தெழுதல் மாணவர்க்கு வேண்டும் எண்ணம்.

இது ஆசிரிய - மாணவர்கள் மேற்கொள்ள வேண்டிய அறவுரையை அறிவிப்பது. இவ்வெண்ணங்கள் யாவும் உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல் என்ற வள்ளுவர் வாக்கை ஒட்டியன.

இத்தொகுப்பில் வள்ளல் அழகப்பர் பற்றிக் காரைக்குடி அழகப்பர் கல்லூரியில் நடைபெற்ற கவியரங்கில் பாடியவை உள்ளன.

எக்குலத்துப் பாவலர்தம் பனுவல் எல்லாம்
எழுவள்ளல் செவிகுளிரக் கேட்டார் அந்நாள்
என்கவிக்குச் செவிகொடுக்க அழகன் இல்லை
ஏங்குகின்றேன்....

என்று தொடங்குகின்றார். அவர் மறைந்த பின்னர் நடைபெற்ற கவியரங்க மாதலால் இவ்வாறு சொன்னார்.

அன்றிருந்த கொடையாளர் எழுவர் தாமோ
ஆயிரவர் இருந்தமைக்கு நூல்கள் சான்றாம்
என்றாலும் வள்ளலெனும் பெயரைப் போற்றும்
எழுவர்க்கு மேலில்லை இவற்றை நாளும்
துன்றியதம் பொருளீவார் பலர்தா மேனும்
துணிந்துரைக்கின் வள்ளலெனும் புகழைத் தாங்கி
நின்றிருக்க அழகப்பன் ஒருவ னேதான்
நெஞ்சிருப்போர் கைவைத்தால் இதயம் சொல்லும்.

அன்று எழுவர் வள்ளல்கள் ; இன்று ஒரே ஒரு வள்ளல் - என்ற நயம் இக்கவிதையில் அறிந்து மகிழலாம்.

இந்நாட்டுப் பரம்பரையில் இருவர் தோன்ற
இருநிதியம் கல்விக்கே வாரித் தந்தார்
முன்கூட்டிச் செய்தவர்தாம் செட்டி நாட்டு
முதல்மன்னர் அழகப்பர் மற்றோர் வள்ளல்
என்பாட்டுக் கடங்காது வள்ளல் உள்ளம்
கொடைமடமென் றிருந்தசொல்லே சொல்லத் தோன்றும்

என்ற இன்னொரு பாடலில் இரண்டு வள்ளல்களைக் காட்டுவார்.

பண்டிருந்த வள்ளல்கள் காடு கொன்று, குளம் தொட்டு, நகர் உண்டாக்கியது போல் வள்ளல் அழகப்பரும் செய்தார்.

நடப்பவர்தம் கால்வருந்த முட்கள் தைக்கும்
நச்சரவம் பலநெளியும் கொடிய காட்டைக்
கெடுத்தொழித்து நகராக்கிக் கல்விக் கூடம்
கிளைத்தெழும்பத் தானுறையும் இல்லும் சேர்த்துக்
கொடுத்திருக்கும் இயல்புடையான் ஈட்டும் செல்வம்
அத்தனையும் ஈத்துவக்கும் குமணன் போல்வான்
படித்துவரும் பன்னூறு மக்கள் உள்ளம்
பைந்தமிழால் அள்ளூறிப் பாடும் உள்ளம்.

மழலையர் பள்ளி முதல் முதுகலை வரையிலும் உடற் கல்வி, விஞ்ஞானத் தொழில் நுணுக்கம் பொறியியல் வரை கல்வி கற்கும் நிலையங்களை நிறுவிப் பிற்காலத்தில் பல்கலைக் கழகம் அமைக்கும் வாய்ப்புக்கு அடித்தளம் அமைத்த வள்ளலுமானான் என்கின்றார் கவிஞர்

வணிகத்தில் பெரியதொரு இலாபம் என்றால்
வருமுன்னே அத்தொகையைக் கொடுத்தேன் என்பான்.

என்று கூறத்தகும் அற்புதமான நாகரிகப் பண்பை உடையவர் அழகப்பர். மேலும் பல பண்புகளைக் கவிஞர்

இறையன்பு நிறைமனத்தன் எனினும் தந்தை
எனும்தேவே தொழுதெழுவான் உற்ற போது
நிறையன்பு கொண்டவரை ஊக்கம் தந்து
நிலைநிற்கச் செய்தவரை மறவா நன்றி

*யறிவுடையன் என்பதனை விடுதி காட்டும்*
*அரசியலில் பிறதுறையில் ஆன்ற சான்றோர்*
*செறிநன்பு கொண்டமையைப் படங்கள் காட்டும்*
*சிரித்தமுகம் அவர்மனத்துத் தூய்மை காட்டும்.*

என்ற பாடலில் காட்டுவார். முத்தாய்ப்பாக

*அள்ளியள்ளி வழங்குதற்குக் கையை ஈந்தான்*
*அழகாகப் பேசுதற்கு வாயை ஈந்தான்*
*உள்ளமெனும் ஒருபொருளை உரத்துக் கீந்தான்*
*உடம்பினையும் கொடுநோய்க்கே ஈந்தான் அந்தோ*
*வெள்ளமென வருநிதியம் வாழும் வீடு*
*விளைமுயற்சி அத்தனையும் கல்விக் கீந்தான்*
*உள்ளதென ஒன்றில்லை அந்தப் போதும்*
*உயிருளதே கொள்கவெனச் சாவுக் கீந்தான்.*

என்ற பாடலில் அனைத்தும் ஈந்த செய்தியைக் கூறுவார். "உள்ளதென ஒன்றில்லை அந்தப் போதும், உயிருளதே கொள்கவெனச் சாவுக் கீந்தான் "என்ற இறுதியடி வள்ளல் குணத்தைக் கூறும் போக்கில் அவலச் சுவையின் கொடுமுடியையும் காட்டுவார்.

*வள்ளலுக்கு முடியரசர் விளைத்த தீமை*
*வடுவாக அமைந்தவே உலக மக்கள்*
*எள்ளலுக்கும் பொருந்தியதே என்று நெஞ்சில்*
*எழுகின்ற பரிவால்அம் மாசு நீங்க*
*வள்ளல்புகழ் முடியரசன் பாடு கின்றேன்*
*வண்டமிழால் பாத்தொடுத்துச் சூட்டு கின்றேன்*
*மள்ளர்மிகு படைபலத்தாற் படைத்தார் மாசு*
*மகிழ்ந்தளிக்கும் தொடைநலத்தால் துடைத்தேன் மாசு*

என்பதும் முத்தாய்ப்பான பாடல். முடியரசர்கள் (பாரி) வள்ளலுக்கு வடுவாக அமையுமாறு விளைத்த தீமையின் காரணமாக முடியரசனின் நெஞ்சில் பரிவு எழுகின்றது. காரணம் சாதி ஒற்றுமை. முடியரசர்கள் முடியரசன் : இந்தப் பரிவின் காரணமாக அதற்குக் கழுவாயாக அம்மாசினை நீக்க இவ்வள்ளல் புகழை முடியரசனாகிய தாம் பாடுவதாகக் குறிப்பிடும் நயம் போற்றத் தக்கது. மூவேந்தருடன் இணைந்து மள்ளர்கள் (வேளிர்கள்) படை பலத்தால் விளைத்த மாசினைத் தாம் தமிழின் தொடை நலத்தால் துடைப்பதாகக் கூறுவது

அற்புதம். படை பலம்-தொடை நலம் என்ற தொடர்களின் நயம் எண்ணி மகிழத் தக்கது.

எனக்கும் ஓர் அதியன் 'என்ற தலைப்பில் பாடிய கவிதைகள் கவிஞர் முடியரசனாரின் செய்ந்நன்றியறிதல் பண்பை உயர்த்திக் காட்டுகின்றன. குருதியுமிழ் கொடுநோய்க்கு ஆளான போது, புதுக்கோட்டை அண்ணல் பு.அ.சுப்பிரமணியனார் முன்வந்து சிகிச்சை பெறச் செய்து உயிர்காத்த உத்தமனாகின்றார். இராம காதையில் தமயனுக்காக உயிர் கொடுத்துச் செய்ந்நன்றியறிதல் உணர்வைக் காட்டினான் கும்பகருணன். இங்கு உயிரைக் காவாது மறுபிறப்பு எய்தச் செய்த சுப்பிரமணியனாருக்குக் காட்டும் செய்ந்நன்றி உணர்வைக் காட்டும் பாடல்கள் அற்புதமானவை.

குருதியுமிழ் கொடுநோய்க்கே ஆளாய் நின்றேன்
குறுநகையும் பெருநகையும் இழந்து நின்றேன்
செறுபகையும் எனைக்காணின் இரங்கி நிற்கும்
செயலற்றேன் நடைதளர்ந்தேன் உடல்மெ லிந்தேன்
மறுபடியும் உயிர்வாழ்வேன் என்ற எண்ணம்
மாய்ந்துவிட மாயாத கவலை கொண்டேன்
'உறுதிஉனைக் காக்கின்றேன்' என்று வந்தென்
உயிர் காத்தாய் உன்னருளால் வாழ்கின் றேன்நான்.

உயிர்காத்த உத்தமனே என்பாற் கண்ட
உயர்வென்ன தமிழன்றி வேறொன் றில்லை
செயிரில்லாச் செந்தமிழைப் பாடும் வாயில்
செங்குருதி சிந்துவதா எனநி னைத்தோ
உயிர்பிழைத்தால் இன்னும்போய்த் தமிழைக் காப்பான்
உயர்கவிதை பலதருவான் எனுங்க ருத்தோ
அயர்வின்றி அருகிருந்து காத்த தாயே
ஆலயமாய் என்னுளத்தில் அமருந் தேவே.

தாய்தந்தை நல்லன்பைக் கண்டேன் அல்லேன்
தகுபொழுதில் உதவுவதற் குறவு மில்லேன்
நோய்வந்து மனத்துயரால் மாழ்கும் காலை
நுவலரிய தனித்துணையாய் இராமச் சந்திரச்
சேய்கொண்டு மனநோயைத் தீர்த்து வைத்துச்
சிறியேனை நின்குடும்பத் தொருவ னாக்கிச்

சேய்போல ஆட்கொண்டாய் அன்பு செய்தாய்
செம்மனத்தோய் கைம்மாறு யாது செய்வேன்.

எந்நாளும் உன்பெயரைச் சொல்லிச் சொல்லி
ஏத்துவதே தொழிலானேன் என்றன் சேய்க்கும்
பொன்னான நின்பெயரைச் சூட்டி நெஞ்சில்
பூசித்து மகிழ்கின்றேன் போற்று கின்றேன்
நின்பேரன் என்மகனாம் காரணத்தால்
நீஎனக்குத் தந்தைமுறை ஆகி விட்டாய்
என்னபிழை நான்செயினும் பொறுத்தல் வேண்டும்
என்தந்தாய் பொன்தந்தாய் புகழும் தந்தாய்.

என்னுயிரைக் காத்தமையால் தன்க ழுத்தில்
எழிற்றாலி மின்னுவதைக் கண்டு நெஞ்சால்
என்மனையாள் வாழ்த்துகின்றாள் என்றன் சேய்கள்
எம்தந்தை தந்தாய்என் றேத்து கின்றார்
தன்மழலைச் செல்வர்களைக் காதல் வாழ்வின்
நற்றுணையை நான்மீண்டும் காணச் செய்த
உன்னுதவி நாடோறும் ஏத்து கின்றேன்
உயிரனையார் திருவடியை வாழ்த்து கின்றேன்.

என்ற பாடல்கள் அற்புதமானவை. கல் நெஞ்சத்தையும் நெகிழச் செய்பவை. முடியரசனுக்கு நோய் வந்ததால் இத்தகைய பாடல்களை நாம் பெற்றோம். இத்தகைய பாடல்களை நாம் பெறுவதற்கு அண்ணல் சுப்பிரமணியனார் முதற் காரணமாகின்றார். முடியரனார் துணைக் காரணமாகின்றார். நம்மையெல்லாம் ஆட்டிப் படைத்து வேடிக்கை பார்க்கும் இறைவன் நிமித்த காரணமாகின்றான். கவிதையில் குறிப்பிடும் இராமச்சந்திரச்சேய் என்பவர் சிறந்த மருத்துவர். அண்ணல் சுப்பிரமணியாரின் அருமருந்தனைய அபிமான புத்திரர். அந்தக் காலத்தில் MD படித்தவர். நோயாளிகளிடம் உழுவலன்புடன் பழகும் இனிய மருத்துவர் என்ற புகழும் பெற்றவர்.

முடியரசனுடைய "பூங்கொடி" என்ற காவியம் ஈடும் எடுப்பும் அற்ற ஓர் அற்புதப் படைப்பு. இவர் சொற்களில் இது

கன்னனைய மொழிகாக்கக் கடிமணத்தைத் துறந்தஒரு
பெண்ணணங்கின் வரலாறு பேசும் ஒரு காப்பியமாம்

என்று கூறப்படுகின்றது. நம்முடைய பண்டையோர் மொழி, செல்வம், ஆறு,பூமி முதலியவற்றைப் பெண்ணாகவும் மலை, கடல் போன்றவற்றை ஆணாகவும் உருவகித்துப் போற்றியுள்ளனர். மொழியைக் காக்க, பெண்ணணங்காகிய 'பூங்கொடி'என்ற பெண் கவி மாந்தரைப்படைத்து அவளைச் செந்தமிழைக் காப்பதற்கு உயிர் கொடுக்கச் செய்து தியாகச் சுடராக்கிய பெருமை கவிஞர் முடியரசனுக்கு உரியது. இக் காவியம் நாட்டின் நிலைக் கண்ணாடியாக, காலம் உள்ள வரை ஓர் இலக்கியப் பேழையாக நின்று நிலவும் என்பதற்கு ஐயம் இல்லை. மேலும் இளங்கோவின் சிலம்பு போலவும் சாத்தனாரின் மேகலை போலவும், நிலைத்து வாழும் என்பதும் ஒருதலை.

"பாரதியார்" என்ற வித்திலிருந்து முளைத்து வந்தது "பாரதிதாசன்" என்ற செடி..அச்செடியிலிருந்து தழைத்து எழுந்தது முடியரசன் என்ற கொடி..அக்கொடி பூங்கொடியாகி எட்டுத் திக்கும் படர்ந்து (தமிழ்) மணம் பரப்புகின்றது என்ற பேராசிரியர் அன்பழகனாரின் கூற்று நான்கு மறைத் தீர்ப்பு . இதற்குமேல் இதனுள் புகுந்து பார்த்து விளக்கம் தரத் தேவையில்லை. எனவே இவண் குறிப்பிட்ட பாடல்களால் செட்டி நாட்டில் வாழ்ந்துவரும் கவிஞர்களுள் முதற் கவிஞராக முதன்மைக் கவிஞராகத் திகழ்கின்றார் என்றும் இவர் புலமையால் சங்கப் புலவர்களின் அருகில் அமரும் தகுதி பெறுகின்றார் என்றும் கூறி முடியரசன் கவிதை பற்றிய சிறப்பை இத்துடன் நிறைவு செய்கின்றேன்.

# 2. கவிஞர் எஸ். கே. இராமராசன்

கம்பராமன் என்றழைக்கப்படும் இவர் சேலம் மாவட்டம் நாமக்கல் வட்டம் வரகூர் என்ற சிற்றூரில் 1922 ல் பிறந்தவர். சொந்த ஊரில் நம்பெருமாள் ரெட்டியார் என்ற பெரும்புலவரிடம் கல்வி பயின்றார். இளமையிலேயே கவிதை எழுதும் ஆற்றல்இவரிடம் முகிழ்த்தது. பின்னர் திருவையாற்று அரசர் கல்லூரியில் பயின்று (1941-45) வித்துவான்பட்டம் பெற்றார். வித்துவான் பட்டம் பெற்ற பிறகு கவிதை இயற்றும் ஆற்றல் வேகமாக வளர்ந்தது. 1947 ல் சேலம் மாவட்டம் வேலூர் கண்டர் உயர்நிலைப் பள்ளியில் தமிழாசிரியர் பணியேற்று 1981ல் ஓய்வு பெற்றார். பின்னர் தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் அகராதித் துறையில் ஆறு ஆண்டுகள் துணைப் பதிப்பாசிரியராகப் பணியாற்றி நிரந்தரமாக ஓய்வு பெற்று வேலூரில் வாழ்ந்து வருகிறார்.

இவர் மாபு வழியில் கவிதை இயற்றுபவர். பாவினங்களாகிய தாழிசை, துறை, விருத்தம் ஆகிய யாப்புகளில்தான் இவர் கவிதைகள் அமைகின்றன. புதியவகைப் பாடல்கள் கூட இவர் இயற்றுவதில்லை. இவர் பாடல்கள் யாவும் சொற்சுவை, பொருட்சுவை மிகுந்து புலவர்களின் கவனத்தையும், கருத்தையும் கவருவனவாக அமைகின்றன.

வைணவக் குடும்பத்தைச் சார்ந்தவர். வைணவச் செம்மல் திரு. பு.ரா. புருடோத்தம நாயுடு அவர்கள் இவருடைய ஆசிரியர். பன்மொழிப் புலவர் வே. வேங்கடராசுலு ரெட்டியார் அவர்களிடம் நெருங்கிய தொடர்புடையவராக இருந்தார். இவர் இயற்றிய நூல்களில் பெரும்பாலும் வைணவ சமயக் கருத்துகளும், பக்திச் சுவையும் எடுப்பாக அமைந்திருக்கும். எண்ணற்ற கவியரங்குகளில் பங்கு பெற்றவர். அரங்குகளில் இவர்தம் பாடல்கள் தனித்தன்மை வாய்ந்தனவாக இருப்பதை அவையோர் அறிவார்கள். நம்பெருமாள் ரெட்டியார் காட்டிய வழியில் இவர் இயற்றிய நூல்கள் இரண்டு. அவை; (1) மேகநாதம் (இந்திர சித்தைப் பற்றியது) (2) வரோதயம் என்பன. வேலூரில் பணியேற்ற பிறகு காட்டுப் புத்தூரில் கோயில் கொண்டுள்ள ஆந்திர நாட்டு அடிகள்வரலாறு, பிரம்மேந்திர கீதம் என்ற பெயரால் இயற்றப் பெற்றது.

தண்டபாணி சுவாமிகள், திருவரங்கப் பெருமான் மீது திரவரங்கத் திருவாயிரம் இயற்றியுள்ளார். அதுபோல் திருவேங்கடமுடையான் மீது ஒரு பக்திப் பனுவல் இயற்றவேண்டும் என்ற ஆர்வத்தால் தூண்டப் பெற்று, திருவேங்கடமுடையான் திருவாயிரம் என்ற நூல் உருவாயிற்று. இதில் அடங்கிய சிற்றிலக்கியங்கள் (1) திருப்பல்லாண்டு (2) திருப்பள்ளி எழுச்சி (3) திருப்பாவை (4) கலி வெண்பா (5) பிள்ளைத் தமிழ் (6) கலம்பகம் (7) அலங்காரம் (8) பதிகங்கள் (9) ஒருபா ஒருபஃது (10) இரட்டை மணிமாலை (11) மும்மணிக் கோவை (12) நான்மணிமாலை அனைத்திற்கும் பாடல் நாயகன் திருவேங்கடமுடையானே... இவை வெளி வந்தால் குமரகுருபர அடிகள், சிவப் பிரகாச அடிகள்போல் இராமராசன் திகழ்வார் என்பதற்கு ஐயமில்லை.

திருவேங்கடமுடையான் மீது எழுதிய பாடல்களில் முதலில் திருப்பல்லாண்டில் இரண்டு பாடல்களைப் பார்ப்போம்

*பல்லாண்டு பல்லாண்டு வேங்கடக் குன்றின்*
*பயின்றோர்க்கு நீல முகிலே*
*பல்லாண்டு பல்லாண்டு நின்கொற்ற மார்பிற்*
*படிந்தோங்கு கருணை வடிவே.*

இதில் வேங்கடவனுக்கும் அவன் திருமார்பில் 'அகலகில்லேன் இறையும்' என்று அகலாதிருக்கும் அலர்மேல் மங்கைக்கும் பால்லாண்டு பாடுகிறார் ஆசிரியர்.

அடுத்த பாடலிலும் ஏழுமலையான் திருமார்பில் இருக்கும் பெரிய பிராட்டியாருக்கும் பல்லாண்டு பாடுவதைக்காண்கின்றோம்.

*சீலம் இன்றி நோன்பின்றிச்*
*செறிவும் இன்றி உயிர்க்கூட்டம்*
*ஞாலம் வருந்தப் புரிகின்ற*
*கலியை நினைந்து நின்னுள்ளத்துச்*
*சால முளைக்கும் சீற்றமெனும்*
*தழலை யவிக்க நின்மார்பில்*
*கோலம் பொலிய வீற்றிருப்பாள்*
*கொற்றம் வளர்க்க பல்லாண்டு*

இதில் எம்பிராட்டியின்' புருஷகாரம்' ( தகவுரை) குறிப்பிடப் பெற்றிருத்தலைக் காணலாம். "நீரிலே நெருப்புக் கிளருமாப் போலே,

குளிர்ந்த திருவுள்ளத்திலே அபராதத்தால் சீற்றம் பிறந்தால் பொறுப்பது இவளுக்காக" என்ற மூமுட்சப் படியின் வாக்கியத்தை நினைந்தவாறு இப்பாடல் கவிஞரின் திருவுள்ளத்தில் அரும்பி இருக்க வேண்டும்.

ஆண்டாள் திருப்பாவையின் பாணியில் எழுந்த வேங்கடவன் திருப்பாவையில் இரண்டு பாடல்களைக் காண்போம்.

*வேங்கடத்து மேவும் விமலன் அருச்சுனர்க்குப்*
*பாங்குடைய கீதை பகரும் பரஞ்சோதி*
*தேங்கமழும் தண்டுளபத் தேவன் வடிவாகி*
*ஓங்குபுகழ்க் கோதை உவக்கும் தமிழ்புனைந்து*
*தீங்கவிஞர் நெஞ்சில் சிறக்கும் நலம்வழங்கி*
*ஏங்கும்சீர் மார்கழி வந்ததுகாண் நேரிழையீர்*
*தீங்ககல ஞாலத் திருமலையின் பேர்பாடி*
*சங்குயர்த்தும் நோன்பை இயற்றுவோம் எம்பாவாய்*

ஆண்டாள் திருப்பாவையில் பாவை நோன்பு இயற்றுவதற்காக' நீராடப் போதுவீர்' என்று குறிப்பாக அழைக்கின்றனர் ஆய மங்கையர். இந்த ஆசிரியரின் பாடலில்நோன்பு இயற்றுவோம் என்று வெளிப் படையாகவே கூறி அழைக்கின்றனர் ஆயர் குலச் சிறுமியர்.

*சிந்தை இருளைத் தினமும் அகற்றுதற்கா*
*வந்த விளக்கே வளமார் தவக்கொடியே*
*நந்தலிலா மாறன் நவிற்றுதிரு வாய்மொழிபோல்*
*முந்தயவா னந்தம் முகிழ்க்கும் நிலையத்துச்*
*சுந்தரனைப் போற்றித் துயர்க்கு விடைவழங்கி*
*அந்தமிலா இன்பம் அடையா துறங்குதியோ*
*சந்தமுறு நோன்பில் தகவார் சுவையேற்றப்*
*பைந்தொடி மெல்லப் பரிந்தெழுவாய் எம்பாவாய்*

இப்பாடலில் குறிப்பிடப் பெறுகின்றவள் அடியார்கள் மார்பில் தோன்றிய வளமார் தவக்கொடி. நாடோறும் சிந்தையில் திரளும் அறியாமை என்ற இருளைப் போக்கி அருள்வதற்கெனத் தோன்றிய விளக்குப் போன்றவள். இவளைக் குழுவாக வந்து எழுப்புகின்றனர் ஆய மங்கையர்.

திருவேங்கடமுடையான் திருப்பள்ளி எழுச்சியில் ஒரு பாடலைக் காட்டுவேன். தொண்டரடிப் பொடியாழ்வார், மணிவாசகப் பெருமான்போன்றோர். அவரவர் போற்றும் எம்பெருமான்களை

எழுப்புவதாகத் திருப்பள்ளி எழுச்சிகளைப் பாடியுள்ளதை நாம் அறிவோம். அந்நிய ஆட்சியின் கீழ் அடிமைப்பட்டு வந்த அடிமைத் தன்மையை அறியாது உறங்கிய நிலையில் கிடந்த நம் நாட்டு மக்களை எழுப்புவது போல் அமைந்த பாரதியாரின்' பாரதமாதா திருப்பள்ளி எழுச்சியும் நாம் அறிந்ததே. அதே பாணியில் இராமராசன் வேங்கடவனைத் துயிலெழச் செய்கிறார்.

*'திங்களின் வெண்கதிர் அடைந்த வீட்ட கத்தே*
*சேர்தரு இருள்தனிற் சார்தரு சுரும்பர்*
*மங்கலச் சுடரவன் திருவரு ளாலே*
*மகிழ்வொடு விடுதலை பெற்றுநின் துன்பம்*
*தங்கிய தேனினை நுகர்தர வந்து*
*தகவொடு செவ்வழி பாடிடும் அரசே*
*துங்கநல் அலமருள் வேங்கடச் செல்வா*
*சுந்தரனே பள்ளி எழுந்தரு ளாயே*

இப்பாடலில் தொண்டரடிப்பொடி ஆழ்வாரின் திருப்பள்ளி எழுச்சியிலுள்ள முதற்பாடலின் சாயல் தென்படுகின்றது.

'அலங்காரம்' என்பது ஒருவகைச் சிற்றிலக்கியம் தொண்ணூற்றாறு என்ற தொகையில் இதையும் அடக்கலாம். காலவெள்ளத்தில். 'தொண்ணூற்றாறையும் கடந்து போக வாய்ப்பு உண்டு. இங்ஙனம் தோன்றும் சிற்றிலக்கியங்களை,

*'விருந்தே தானும்*
*புதுவது கிளந்த யாப்பின் மேற்றே'*

என்று தொல்காப்பியர் கூறும்' விருந்து என்ற வகையில் அடக்கலாம் என்பது தமிழிலக்கிய வரலாறு. இது கற்றார் அறிந்த ஒரு செய்தியாகும். அருணகிரியார் இயற்றிய' கந்தரலங்காரம்' இவ்வகையைச் சார்ந்தது. இராமராசனின் அலங்காரத்தில் ஒரு பாடல்.

*உள்ளத்தி லுள்ளும் தொறுங்களிப்*
*போங்கி யுறுதுயர்செய்*
*கள்ளத்தை நீக்கிடும் தேன்கூடு*
*கண்டனம் காதலொடு*
*தெள்ளத் தெளிந்த நலமரு*
*ளாழ்வார் செழுந்தமிழில்*
*மெள்ளச் செழித்துப் பொலிவுறு*
*வேங்கட வெற்பிடத்தே.*

வேங்கட மலையில் ஒரு தேன்கூடு தென்படுகின்றது. அது பக்தர்கள் பாடும் நம்மாழ்வாரின் செழுந் தமிழில் மெல்லச் செழித்துச் சுவையும் பொலிவும் பெற்றுத் திகழ்கின்றது. அத்தேனிறால் நம் உள்ளத்தில் எழும் களிப்பின் காரணமாக விளையும் துயராகிய கள்ளத்தையும் போக்கும் என்கின்றார் பேராசிரியர்.

*உனக்கும் எனக்கும் இடையே*
*மறைக்கும் உளத்திரையைக்*
*கனக்கும் கருணைக் கரத்தால்*
*விலக்கிக் கனிந்தருள்க*
*சினக்கும் இரணியன் மார்பைப்*
*பிளந்து தெளிந்தமறை*
*தனக்கும் புவிக்கும் உயிர்ப்பருள்*
*வேங்கடத் தற்பரனே.*

இதில் எம்பெருமானுக்கும் உயிருக்கும் இடையில் வினைவயத்தால் தோன்றி மறைக்கும் மனத்திரையை, கனக்கும் கருணைக் கரத்தால் (அபயகரம்) கனிந்து நீக்கியருளுமாறு வேண்டுகின்றார் ஆசிரியர்.

*மன்னிய வேங்கடக் குன்றினில்*
*மேவும் மழைமுகிலே*
*நின்னருள் யாண்டும் ததும்பிக்*
*கிடந்தும் நெறியறியேன்;*
*பன்னருந் துன்பினிற் சாலவும்*
*நொந்தேன் படர்தடத்துத்*
*துன்னிய மீனின் சிறுநா*
*வறண்டுவ துள்வுறுமே*

மேகம் எங்கும் பரவிக்கிடப்பது போல் திருவேங்கட முடையானின் கருணை வெள்ளம் கோத்து யாண்டும் நிரம்பிக் கிடக்கின்றது. இந்நிலையிலும் உய்யும் நெறியறியாது துன்பத்தில் உழலும் தம்நிலையை நினைந்து நைகின்றார் ஆசிரியர். நீரினின்று வெளிப்பட்டுத் தரையிற் கிடக்கும் சிறுமீனின் சிறுநாவறண்டு கிடந்து துவள்வுறும் நிலையுடன் தம் நிலையை ஒப்பிட்டுக் கிலேசப்படுகிறார்.

அருணகிரியாரின் வாக்கில் காணப் பெறும் குழைவும், சிந்தைக்கினிய கனிந்த அன்பும் செவிக்கினிய ஓசை நயமும், உள்ளத்தைக் கவர்ந்து தேக்கிடும் திருவருட்டன்மையும் போன்ற பற்பல

நலங்களும் இந்த ஆசிரியரின் அலங்காரத்தில் கண்டு களிக்கலாம் உள்ளமும் உருகலாம். திருவேங்கடத்துக் கோவில் காவலராகத் தோன்றா நிலையில் திகழும் முருகப் பெருமானைப் பாடும் பணியினையே பணியாக் கொண்ட அருணகிரியார் கந்தன் மேல் பல நூல்களைப் பாடிப் பரவசப்பட்டார். அங்ஙனமே சிறந்த திருமாலடியாராகிய நம் இராமராசனும் திருவேங்கட மலையில் எழுந்தருளியிருக்கும் சீநிவாசன் மீது ஆயிரம் பாடல்களைப் பாடிக் களிப்பெய்துகின்றார்.

திருவேங்கடமுடையான் அலங்காரத்திற்கு உரைகல்போல் சிறப்புப் பாயிரப் பாமாலை வழங்கிச் சிறப்பித்தவர் நம்மிடையே வாழும் மற்றொரு பெருங்கவிஞர் இளந்தேவன். இவர் இந்த அலங்காரத்தின் மாற்றைக் காட்டும் பத்துப் பாடல்களில்

*உயிருக்குள் ஒளிந்து கொள்ளும்*
*ஒருபெருங் கள்வன் தன்னை*
*உயிருக்குக் காட்டச் செய்த*
*ஒருதமிழ் முயற்சி இந்நூல்*
*தயிருக்குள் திரள்வெண் ணெய்க்கும்*
*தமிழுக்கும் ஆசை வைக்கும்*
*வயிரத்தோள் நாத னுக்கு*
*வழங்கிய திரட்டுப் பாலாம்.*

என்ற பாடல் ஒன்று போதும் இந்த நூலின் பெருமையை உணர்த்த என்பதை நூலைப் படிப்போர்அறியலாம்.

திருவேங்கடமுடையானின் பிள்ளைத் தமிழில் இரண்டே இரண்டு பாடல்களைக் காட்டி மேற்செல்வேன். 'பன்னிரு பாட்டியல்' என்ற நூலில் இது பிள்ளைப் பாட்டு எனவும், வேறு பாட்டியல் நூல்களில் பிள்ளைக் கவி என்றும் குறிப்பிடப்படுகிறது. இது குழந்தையின் பிள்ளைப் பருவத்தைப் பத்துப் பகுதிகளாகப் பிரித்து, பகுதிக்குப் பத்தாக நூறு பாடல்களில் பாடப் பெறும் சிற்றிலக்கியம்.

*உருகாக் கல்லும் பனிபோல*
*வுடைந்து நெகிழ நாரதனார்*
*உவந்து பாடும் தனியிசையை*
*ஒப்பி லாத நான்மறையைப்*
*பெருகார் வங்கொள் முத்தருளம்*
*பேணி வழங்கும் தனித்துதியைப்*

பிரச மலரில் வீற்றிருக்கும்
பிராட்டி யிசைக்கும் நன்மொழியை
அருகே பாடும் தரங்கத்தை
அமைந்த கரத்தில் நன்கடக்கி
அரிய மோன வடிவாகி
அருள்சேர் வழியில் புனல்பெருக்கிக்
குருகா புரியார் மறைகேட்கும்
கோவே தாலோ தாலேலோ
குலவு திருவேங் கடமேவு
குரிசில் தாலோ தாலேலோ

இத்தாலப் பருவப் பாடலைப் பன்முறை பாடிப் பாடித் திருவாய் மொழியின் பேசப் படுவதைப் உணர்ந்து மகிழ்வோமாக.

நறைசேர் கமல மாளிகையில்
நவையில் வேத மணிமுடியை
நயவா தரக்கர் புரிகொடுமை
நாச மாக இலங்கையிலே
சிறைசேர் பிராட்டி ஏற்றத்தைச்
சீரார் கம்பன் வால்மீகி
செப்பிச் செப்பி உளங்கரையும்
செம்மை நோக்கி அப்புகழை

மறைசேர் ஞானப் பெருமக்கள்
மகிழ்வால் சூட்டும் பேறெய்தி
மாண்பை உடைய உளத்தெண்ணி
மதியில் கஞ்சன் வெஞ்சிறையில்
முறைசேர் கனிவோ டவதரித்த
முதல்வா தருக முத்தமே
முகில்சேர் தெய்வத் திருமலையாய்
முத்தம் தருக முத்தமே

இம் முத்தப் பருவப் பாடலையும் பன்முறை படித்துப் பாட்டின்பத்தின் கொடுமுடியை எட்டிப் பிடிக்க முயலலாம். ஆசிரியரின் இராமாவதார அனுபவத்தை இதில் கண்டு மகிழலாம்.

"இதிகாச சிரேஷ்டமான இராமாயணத்தால் சிறையிருந்தவள் ஏற்றம் சொல்லுகிறது'' என்ற ஸ்ரீவசன பூஷண வாக்கியம்

இவ்வாசிரியரின் உள்ளத்தில் இப்பாடல் முகிழ்த்த போது குமிழியிட்டிருந்திருக்க வேண்டும் என்று நினைக்கத் தோன்றுகிறது.

அட்டப் பிரபந்தம் பாடிய திவ்ய கவி பிள்ளைப் பெருமாள் அய்யங்கார் திருவேங்கடத்தின் மீது திருக்கலம்பகம் பாட வரவில்லை. முத்தமிழ்க் கவி வீரராகவ முதலியார் திருவேங்கடக் கலம்பகம் பாடி இக் குறையை நீக்கினார். நம் இராமராசன் ஏழுமலையான் மீது திருக் கலம்பகம் பாடி இக்குறையை மேலும் நிவர்த்தி செய்துள்ளார்.

திருமகளும் நிலமகளும்
சிறந்திருபால் பொலிந்திருப்பப்
பெருமைதரும் அருள் மடந்தை
பிறங்குமுளத் திடையொளிர
வண்ணமுறும் அடையாகி
வளங்குலவு குடையாகிப்
புண்ணியங்கொள் தெய்வநலம்
புயங்கவர சின்பமுற
வயங்குபெருங் கருணைநிறை
மலர்க்கண்கள் அமுதூற்றக்
கலங்குலவு மணிமகுடம்
நற்றலைமைப் பொருள்பகரப்
புறவிருளும் அகவிருளும்
புகாப் புனித நிலையத்தே
அருளுருவாய்ப் பொலிந்தோங்கும்
அற்புதனார் பரஞ்சோதி

என்பது திருவேடங்கடமுடையானை வருணிக்கும் கொச்சகம் தலைவியின் கூற்றாக வந்தது. திருவேங்கடமுடையானின் பெருமையைத் தலைவி இதில் எடுத்துக் கூறுகின்றாள். இப்பாடலில் வரும் புயங்க அரசு பாம்பரசாம் ஆதிசேடனைக்குறிக்கும்.

இனி ஒரு பொருள்மேல் மூன்றடுக்கி வரும் தாழிசைகளைக் காட்டுவேன்.

குலவுபுகழ் அண்டமெலாம்
கோவே! நின் சந்நிதியில்
இலகுதனிச் சிற்றணுவா?
இலைகோணின் கோணையா!

அரிவென்றும் செருக்குடையார்
அகிலமெலாம் திரிந்திடினும்
செறிவுறுநின் றனைக் காணார்
திகைத்தயர்வார் பிறர் பகர்வார் !

குன்றாத பேரன்பால்
குழைவார்தம் இதயத்து
நின்றாயை அரியையென
நிகழ்த்துவரோ அந்தணர்கள் !

(கோண் – அனுவின் சதகூறு)

இம்மூன்று தாழிசைகளும் படிப்போரை மனோன்மணீய நாடகத்தில் தமிழ்த்தாய் வணக்கமாக வரும் தாழிசைகளை நினைக்கச் செய்கின்றன. எம்பெருமானின் செருக்கையும், மிடுக்கையும் மிடுக்கான நடையிலமைந்த தாழிசைகள் நினைப்பூட்டுவதை இங்குக் கண்டு மகிழலாம்.

கலம்பகத்தின் உறுப்புகளில் ஒன்று 'அம்மானை' என்பது மூன்று மங்கையர் பந்துகளைக் கொண்டு ஆடும் விளையாட்டு இது. அங்ஙனம் ஆடுங்கால் பாட்டுடைத் தலைவனது இயல்பினைச் சொல்லிக் கொண்டே ஆடுவார்கள்,

"சேரலர்கோன் போற்றும் திருவேங் கடமுடையான்
பாரினிடை யாண்டும் பரந்துள்ளான் அம்மானை
பாரினிடை யாண்டும் பரந்துள்ளான் ஆமாயின்
நாரியே எவ்விடத்தும் நாங்காணேன் அம்மானை
நான்போனால் காணலாம் நங்கையே அம்மானை.

(சேரல்ர்கோன் – குலசேகர ஆழ்வார்)

என்ற பாடல் மிக அருமையாக அமைந்துள்ளது. இறைவன் எங்கும் பரந்துள்ளான் என்ற கருத்து இதில் நுட்பமாக அமைந்துள்ளதை நோக்கி இன்புறலாம்.

'வைணவ உரைவளம்' என்ற அடியேனின் நூலுக்கு இராமராசன் பதினைந்து பாடல்களில் ஒரு சிறப்புப் பாயிரம் அளித்துள்ளார். அவற்றில் இரண்டு பாடல்களை ஈண்டுக் காட்டுவேன்.

பொன்னியின் நடுவண் எம்பிரான் மேவிப்
பொலிவுறு கோவிலை விளக்கும்

மன்னிய விமானம் எட்டெழுத் தின்கண்
மருவுமோங் காரமே என்றும்
பன்னரும் ஏழு மதில்களும் மற்றைப்
பண்புறும் ஏழெழுத் தென்றும்
நன்னய மாக விளங்குதல் கண்டு
நான்மறை பூரித்து வாழ்த்தும்.

கடலினுள் ஆழ்ந்து விருப்புடன் சென்று
கையினால் பன்முறை அரித்துச்
சுடர்விடு மணிகள் கொணர்ந்துல குவப்பத்
துறையினிற் குவிப்பவர் போலத்
திடமுடன் புகுந்து வைணவ உரைக்குள்
திகழ்தர நுண்பொருள் வழங்கும்
அடலினை வியந்தேன் புலமையாம் செல்விக்
கமைந்தநற் றிலகம்இப் பனுவல்.

இவை இரண்டு பாடல்களும் ஆசிரியரின் திறனாயும் திறனை எடுத்துக் காட்டுகின்றன.

'வைணவச் செல்வம்' என்ற அடியேனது நூலுக்கு (இரண்டு பகுதிகள்) பாடல்களைத் திறனாய்வு செய்து சிறப்புப் பாயிரப் பாமாலை ஒன்று வழங்கியுள்ளார். அது பல்வேறுவகை மரபுக் கவிதைகளால் ஆனது. அதில் சில பாடல்கள்.

செப்பம் மிக்கநம் செம்மலின் நெறியில்
திகழும் நீற்றொளி யாண்டு பரவலால்
ஒப்பற் றோங்கும் வைணவ மார்க்கத்தில்
உலாவி வேங்கட மாலருள் எய்தினார்

துப்புற் றோங்கும் வைணவ ஞானத்தால்
தூய நால்வரின் புனித நெறியினை
இப்பு விக்கண் விளக்கிட வல்லவர்
இவர்தம் தொண்டு மிகவும் பெரியதால்.

வேங்கடத் தப்பன் அருளினால் முதுமை
விடைகொள இளமையை அழைக்கும்
பாங்குறும் இந்த அருங்கலைக் கோன்நம்
பாக்கியம் ஒன்றுபட் டதனால்

ஓங்கிய புகழ்சால் வைணவச் செல்வம்
உதவினார் இப்பெரு நூலைத்
தாங்குதல் புலவர் தங்கடன் அதனால்
தத்துவ சரித்திரம் புலனாம்.

இவை இரண்டும் ஆசிரியரின் தொண்டு பற்றி அறிமுகம் செய்பவை.

கருமத்தை ஞானப் பொலிவினை உறுப்பாய்க்
கண்டிட்ட புனிதநற் பத்தி
மருமத்தை உணர்த்தி அதன்சிர மத்தை
மாண்புறும் உளந்தொறும் வித்திப்
பெருமையால் எளிய பண்பினால் யார்க்கும்
பீடுறு முத்தியை வழங்கும்
அருமையார் தூய பிரபத்தி தன்னை
அமைவுற இந்நூல் விளக்கும்

மூன்றுகோல் ஏந்தி ஐந்துகோல் வென்ற
முனிவரன் யதிபதி முடியால்
சான்றவர் இதய மலருறும் அடியால்
சால்புறு பெரியவர் தம்மைத்
தோன்றுசீர் சான்று வைணவம் வளர்க்கத்
துலங்குகால் வாய்எனப் பரந்து
வான்றரும் புகழ்கொள் அரியணைச் செல்வர்
மாண்பினை இந்நூல் விளக்கும்.

இவையிரண்டும் நூல்விளக்கும் பொருளைப் பற்றியவை.

திட்பமாய் அறிவாய் அடிமையாய் வினையின்
சிமிழ்ப்பினால் விபுத்துவம் இழந்து
நுட்பமார் அணுவாம் நல்லுயிர்த் திரளை
நூற்றொரு கோடிமேல் விரிந்து
பெட்புறும் உலகாய் விரிபகு தியினைப்
பிறப்பறுத் தருள்இறை யவனை
நட்புறக் காட்டும் இந்நூல் தமிழர்
நற்றவப் பயன்என அறிந்தேன்.
நிறைவுறும் மூலப் பகுதியை ஞான
நேயமார் உயிர்ப்பெருந் திறளைக்
குறைவுறும் உடலாய்க் கொண்டுஅப் பிரம்மம்

கோதிலாக் காய்கனி பெற்று
நறையுறு தருவே எனுமுண்மை பகரும்
நலமமர் ஞானமார் இந்நூல்
பொறைவடி வாய பிரபந்தம் முன்பு
புரிதவப் பயனென உணர்ந்தேன்.

இவை இரண்டும் இந்நூலால் இராமராசன் அறிந்தவற்றைக் கூறுபவை

கருணையே வடிவாம் எதிபதி ஞானக்
களஞ்சிய தேசிகன் புல்லர்
மருணெறி போக்கும் வரமுனி இவர்கள்
வளர்த்திட்ட நல்லறம் வளரத்
தெருணிறை கின்ற வைணவச் செல்வம்
திருவுருக் கொண்டதை அறிந்தேன்
இருளினைத் தகர்த்தேன் என்றினி இசைப்பர்
இப்பெரு நூலுணர் புலவர்.

பரத்துவம் முதலா ஐவகை நிலையைப்
பாங்குறத் தெளிந்தனம் உயிரின்
தரத்தினை உணர்த்தும் பிரபத்தி நெறியைத்
தகவுறத் தெரிந்தனம் தெய்வ
வரத்தனை வழங்கும் மந்திர நெறியின்
மாண்பினை உணர்ந்தனம் அதனால்
சிரத்தினில் ஏற்கத் தக்கதென் றுரைப்பர்
திருந்துமிந் நூலுணர் புலவர்.

இவையிரண்டும் புலவர்கள் இந்நூலைப் பற்றிக் கூறுவனவாக அமைந்தன.

தத்துவம் ஒருபால் ஒளிவிடும் ஞானச்
சரோருகம் ஒருபக்கம் மலரும்
வித்தகப் பத்திஒரு புலத்திலங்கும்
வேதமோ யாங்கணும் துலங்கும்
சத்தியம் ஞானக் கோவினை ஏந்தித்
தந்ததே இந்நூல் என்று
பத்தியின் மிக்க சான்றவர் உணர்வர்
படைத்தவர் வாழிபல் லூழி.

இப்பாடல் இந்நூலைப் பற்றிச் சான்றோர் கருத்தையும் இராமராசனின் வாழ்க்கையும் எடுத்துரைப்பது.

பொதுவாக இராமராசன் பாடல்கள் மரபுவழி வரும் யாப்புகளைப் பெரும்பாலும் தாழிசை, துறை, விருத்தம் என்ற பாவினங்களின் யாப்புகளையே தழுவினவை . இவர்தம் பாடல்களில் ஆழ்வார் பாசுரங்களின் சாயலும், கம்பனின் சொல்வளமும் மிளிர்வதைக் காணலாம். எங்கோ சென்று அறிவியல் துறையில் பணியாற்ற வேண்டிய அடியேனைத் தமிழ்த்துறைக்கு ஈர்த்தவரும் தமிழ்ப் புலமைக்கு அடியேனுக்கு ஒரு கலங்கரை விளக்கம் போல் நின்று வழிகாடிய வருமான பன்மொழிக் குரிசில் திரு. வே. வேங்கடராசுலு ரெட்டியார் ஒரு சமயம் அடியேனிடம் " பெயர் குறிப்பிடாமல் நம் இராமராசன் பாடல்களை நோக்கினால் அவற்றில் சிந்தாமணி ஆசிரியரின் கற்பனையும் சொல்வளமும் தென்படுகின்றன" என்று கூறியதை ஈண்டு நினைவுகூர்ந்து இவரின் கவிப்பெருமையை நிறைவு செய்கிறேன்.

# 3. நாரா. நாச்சியப்பன்

இவர் செட்டி நாட்டுக் கவிஞர் குழாமைச் சேர்ந்தவர். பாவேந்தர் பரம்பரைக் கவிஞர்களில் ஒருவர். சிவகங்கை மாவட்டம் திருப்புத்தூர் வட்டம் குன்றக்குடிக்கு அடுத்த ஆத்தங்குடி முத்துப் பட்டிணத்தில் பிறந்தவர் (1927). கோனா பட்டில் உயர்நிலைப் பள்ளிப் படிப்பை முடித்துக் கொண்டு (1946 -47) திருச்சி தேசியக் கல்லூரியில் இடைநிலை வகுப்புவரை படித்தவர். கல்லூரி வாழ்விலேயே கவிதைகள் எழுதத் தொடங்கி இன்றுவரை எழுதிக் கொண்டிருப்பவர். சில ஆண்டுகட்கு முன்னர் திருச்சியில் நடைபெற்ற பாரதிதாசன் நூற்றாண்டு விழாவில் பாரதிதாசன் விருது, பத்தாயிரம் பொற்காசுகள் வழங்கிச் சிறப்பிக்கப் பெற்றவர். சுமார் முப்பத்தைந்து ஆண்டுகளாக எழுதிய மரபுக் கவிதைகளைத் தொகுத்து முதல் (1980) இரண்டாவது (1981) தொகுதிகளாக வெளியிட்டவர்.

*பிறப்பிடம்*: கவிஞர் செட்டி நாட்டைச் சேர்ந்தவர், நகரத்தார் மரபினர் என்பதை

*கட்டிவைத்த மனைவியையே வீட்டில் வைத்துக்*
*கடல்கடந்து பொருள்திரட்டச் செல்லு கின்ற*
*கெட்டவொரு பழக்கத்தால் ஆண்க ளெல்லாம்*
*கெட்டுவிட்டார் பெண்களுக்கும் இன்பம் இல்லை*
*வட்டிக்கு வட்டியெனப் பொருள்பெ ருக்கி*
*வாழ்ந்தவர்கள் சொத்தெல்லாம் வைப்புக் காசு*
*தொட்டுவிட்ட மனைவிதனைத் தனியில் வைத்துத்*
*தொலைபோகும் பழக்கத்தை நிறுத்த வேண்டும்.*

என்னும் கவிதை பளிச்சிட்டுக் காட்டும். இப்பழக்கம் பெரும்பாலும் இப்போதில்லை. செட்டி மக்கள் செட்டாகவும் இருப்பர்; கணக்காகவும் இருப்பர். பிறர் இப்பண்பை மேற்கொள்ள வேண்டியது. பதினாறாண்டுக் காரைக்குடி வாழ்வில் இப்பண்பு என்னிடம் படிந்தது. சில கடிதங்கள் சுப்பு செட்டியார் என்றே எனக்கு வருவதுண்டு. வரவு செலவுக் கணக்கை அற்புதமாக எழுதுவார்கள்.

*நகரத்தார் வரலாறு தமிழர் நாட்டில்*
*நாகரிக வரலாற்றின் பகுதி யாகும்.*

என்று கூறுவதை நேரில் அறிந்தேன். காசி நகரத்தார் விடுதியின் பொன் விழாவில் வெளியிடப் பெற்ற மலரில் இவர்தம் சமூக வரலாறு பற்றி ஓர் ஆங்கிலக் கட்டுரை எழுதியதையும் நினைவு கூர்கின்றேன்.

**தமிழ்ப் பற்று:** கவிஞர் நாராநாவின் பாசுரங்களில் தமிழ்மணம் வீசும். தமிழ்ப்பற்றையும் எடுத்துக் காட்டும், தமிழ்த்தாய் வணக்கம் இதற்கொரு சான்றாக அமைகின்றது. எல்லாம் வெண்பாக்கள்.

என்றும் உனதுபுகழ் யான்பேச வேண்டுமென
நின்று தொழுகின்றேன் நீயருள்வாய்;
உலக மொழியெல்லாம் உன்னடியில் தோன்றி
இலகும் எழில்கண்டேன்;
வள்ளுவனைப் பெற்று வளர்த்த மடிதனிலே
துள்ளி விளையாடும் துப்புடைய –பிள்ளைநான்

என்ற பாடற் பகுதிகள் இதற்கு அரணாக அமையும். அடுத்துவரும் கலிவெண்பாப் பாடலில்

கனிபோலே நல்ல கனிரசத்தைப் போலே
இனிதான செந்தமிழே எங்கள் பெருந்தமிழே
கற்கண்டு போலே கருப்பஞ்சாற் றைப்போலே
சொற்சுவையும் சொல்லின் பொருட்சுவையும் சொக்கும்
கவிச்சுவையும் சேர்ந்திருக்கும் கற்பனையைக் காட்டும்
சுவையமுதே தித்திக்கும் சொல்லோ வியமே

என்ற அடிகளும் இதற்குப் பெருமை சேர்க்கும்.

அனைத்து மொழிகளிலும் மூத்த மொழிதான் தமிழ் என்ற கருத்தைத் கவிஞர்,

பலப்பல மொழிக ளுள்ளே
பழமொழி யாக நின்றாய்
சிலச்சில இறந்த வேனும்
செம்மைபெற் றிலங்கு கின்றாய்
புலமிக உடையா ரெல்லாம்
போற்றிநின் னெழிலைக் காக்கும்
நலத்தினில் ஈடு பட்டார்
நன்றுநீ வாழ்க மாதோ

என்ற பாடலில் குறிப்பிட்டு மகிழ்வார். தமிழ் வளர்ச்சியில் பிறமொழிச் சொற்களைக் களைந்த மறைமலையடிகளைப் போற்றுவார்.

*சந்தேகம் தமிழில்லை "ஐய" முண்டோ ?*
*சந்தோஷம் தமிழில்லை "மகிழ்ச்சி" கண்டீர் !*
*குந்துமொரு வண்டியைப்போய்ச் 'சைக்கிள்' என்பீர்*
*குறையுண்டோ "மிதிவண்டி" என்னும் சொல்லில் !*
*எந்திரத்தை விசைப்பொறிதான் என்று சொன்னால்*
*இளக்கமில்லை பெருமையென எடுத்துக் காட்டிச்*
*செந்தமிழைத் தூய்தாக்கி ஸ்ரீயை நீக்கித்*
*"திரு" த்தந்தார் மறைமலையார்..................*

என்ற பாடல் இதனைக் காட்டும். கோயில், அறமன்றம், கல்லூரி, அரசுப் பணியகம், திருமணம் போன்ற இடங்களில் தமிழைக் கூடாமல் செய்துவிட்ட இழிநிலையைக் கண்டு இரங்குவார்.

தமிழ் வளர்கிறது என்ற பாடல் இன்றையத் தமிழ்நாட்டு நிலையை அழகாக எடுத்துக் காட்டுகிறது.

*தமிழினை வளர்ப்போம் என்றும்*
*தமிழர்நா டடைவோம் என்றும்*
*அமிழ்தென மொழிவோ ரெல்லாம்*
*அவரவர் கொள்கை கொண்டு*
*சுமைசுமை யாகத் தீமை*
*தோற்று வித்திடுதல் கண்டேன்*

*அரைப்படிப்புக் காரரெலாம் தமிழ்வ ளர்க்கும்*
*ஆர்வமுள்ள எழுத்தாள ராகி விட்டார்*
*திரைப்படத்தின் எழுத்தாள ரெல்லாம் இந்தத்*
*திருநாட்டில் அறிஞர்களாய் உலவு கின்றார்*
*உரைப்படிப்புப் பண்டிதரோ புதுமை என்றால்*
*ஒதுங்குகின்றார் நூற்பொருளில் திருத்தம் சொன்னால்*
*கறைப்படுத்தி விட்டோம்என் றலறு கின்றார்*
*காண்பதெலாம் விந்தைகளே தமிழர் நாட்டில்*

போன்ற பாடற் பகுதிகள் நடப்புநிலைத் திறனாய்வாக அமைகின்றன.

நடை சரியாக இல்லாவிட்டால் கடக்க வேண்டிய தூரத்தை எளிதில் அடைய முடியாது. எளிய நடையை மேற்கொள்ள

வேண்டுமானால், திரு.வி.க. டாக்டர் மு.வ. நடையைப் பின்பற்றலாம். முதுகலை டாக்டர் பட்டம் பெற்றவர்கள் கூடப் பிழையின்றி எழுத முடியாத நிலையைக் கண்டு வருந்த வேண்டியுள்ளது.

பிழையின்றிப் படித்தற்கும் எழுது தற்கும்
பெரும்பாலோர் முயல்வதில்லை இலக்க ணத்தை
நுழைப்பதற்கு மூளையிலே இடமும் இல்லை
நொண்டியென வாசகத்தை எழுது கின்றார்
அழைத்துவந்து தமிழறிவைப் புகுத்த வேண்டும்
அழகுதமிழ் நடைசிறக்க உழைத்தல் வேண்டும்
பிழையில்லாச் செந்தமிழைப் பெருக்க வேண்டும்
பேருலகில் தமிழ்முழக்கம் எழுப்ப வேண்டும்

என்ற பாடல் இதற்கு வழி வகுக்கின்றது.

இலக்கணத்தும் இலக்கியத்தும் பெரும்புலமை எய்தி
எழிற்றமிழைக் கொழிக்கின்ற வல்லமையைப் பெற்றுக்
கலக்கமற்ற திறனறிவு வாய்ந்திருக்கும் நிலையில்
கணக்குடனே விஞ்ஞானத் தொழிற்கல்வி கற்றோன்
வலக்கையைப் பெற்றபயன் பெற்றவனாம் இந்த
வையத்தின் மேன்மைக்கும் அச்சாணி ஆவான்
மலர்க்குவியல் தருமழகு மல்குவிக்கும் சொற்கள்
வழங்கிடுவான் விஞ்ஞானத் துறையெல்லாம் அவனே

என்ற பாடலும் இதே பாணியில் செல்கின்றது. இப்படி மொழிவளத்தைப் பெருக்க வேண்டும் என்று நுவலும் பாடல்கள் பல உள்ளன.

தமிழ் நாடு : தமிழ்நாட்டை உலகப் பெரும்புகழ் பெற்ற நாடாக்க வேண்டும் என்ற கனவும் இக்கவிஞருக்கு உண்டு. இந்நாட்டுப் பற்று மிக்க கவிஞரைப் பளிங்குபோல் பல பாடல்கள் காட்டுகின்றன.

நாற்றங்கால் நடுகின்ற போதிலொரு பாட்டு
நன்குபயிர் வளர்ந்தபின்னே அறுவடைக்கோர் பாட்டு
ஏற்றநீர் இறைக்கின்ற போதிலொரு பாட்டு
ஏரியிலே தோணிவிடும் போதிலொரு பாட்டு
மாற்றலர்மேல் படையெடுக்கும் போதிலொரு பாட்டு
வாகைபெற்றுத் திரும்பிவரும் போதிலொரு பாட்டு
காற்றடிக்கும் போதிலெல்லாம் காதில்விழும் பாட்டு
களிபெருக்கும் செந்தமிழ்த்தாய் நாடெங்கள் நாடே

இவ்வகைப் பாட்டுகள் எல்லாம் கொண்டது எங்கள் நாடு என்று சொல்லிப் பெருமிதம் கொள்ளுகிறார்,

இன்றையத் தமிழ்நாடு சாதி வேற்றுமைகளால் சீர்கெட்டுக் கிடக்கின்றது. இதனைக் கவிஞர்

*தமிழ்நாட்டைக் கெடுத்ததெலாம் வேற்று மையாம்*
*தடையென்று தெரிந்ததனை யொழிக்கச் சேர்வோம்*

என்று கூறி அதனையொழிக்க வகை செய்வோம் என்று அறை கூவல் விடுக்கின்றார். தமிழ் நாடு மேம்பாடடைந்து பண்டைய நிலையைப் பெற வேண்டுமானால் சாதி வேறுபாடு நீங்க வேண்டும். நமது முந்திய அரசு தெருப் பெயர்களில் சாதியை நீக்கியது. இன்றைய அரசு போக்குவரத்துக் கழகங்களில் அப்பெயரை நீக்கியது. வள்ளுவப் பெருந்தகை சாதியைப் பற்றி,

*பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா*
*செய்தொழில் வேற்றுமை யான்.*

என்று கூறுவார். இக்கருத்தையே கவிஞர் நாராநா,

*தொழிற்பெயரைச் சாதியென்று வகுத்த பின்னர்*
*தோன்றியவள் வறுமையெனும் ஆட்டக் காரி*
*எழிற்பிறவி மானுடமென் றறிஞர் சொல்வார்*
*யாமுமிந்தப் பிறவிதனை யடைந்தும் வாடி*
*நிழல்காண வகையின்றி நிற்க நேர்ந்தால்*
*நெஞ்சத்தான் கொதியாதோ இந்த நாட்டில்*
*அழுதொருவன் இருக்கும்வரை விடுத லையை*
*அடைந்துவிட்டோம் என்பதெல்லாம் வெறுங்கூப் பாடே*

என்று விளக்கமாக உரைப்பார். கவிஞரின் பகுத்தறிவு எண்ணங்கள் சில பாடல்களில் வெளிப்பட்டுள்ளன. புரட்சியின் தொடக்கதினைக் கவிஞர்

ஏழை நெஞ்சம்

*புண்ணாக நடைமுறையில் தாழ்வு செய்து*
*பொறுமைக்கோர் எல்லையினைக் காணச் செய்தீர்*
*எண்ணாமல் இருந்துவிட்டீர் பொறுமைக் கெல்லை*
*என்றாலே புரட்சிப்போர்த் தொடக்க மென்றே*

என்று காட்டியிருப்பது உலக வரலாற்று வெளிப்பாடாகக் உள்ளது.

இயற்கை வருணனை : இயற்கையைப் பாடாத கவிஞர்களே இல்லை. இயற்கைப் பொருள்கள் இன்பமான சமாதியில் அடங்கிக் கிடக்கின்றன. அந்த அமைதி நிலையைக் கலைக்காமல் அதனுடன் நெகிழ்ந்து கலந்து கொள்ளும் இயல்புடையவனே கவிஞன். கவிஞர் நாராநாவின் கவிதைகளில் இத்தகைய போக்குகளைக் காணலாம். 'நம் நாடு என்ற கவிதையில் இயற்கை கொலு வீற்றிப்பதைக் கண்டு மகிழலாம்.

பச்சைவயல் அத்தனையும் பொன்பரப்பக் கண்டு
பகலவனார் கண்விழித்துப் பார்க்கின்ற போதில்
இச்சையுடன் முகமலர்ந்து வரவேற்புக் கூறி
இதயத்தைத் திறக்கின்ற பூக்களினம் கோடி
சுச்சிதமாய்க் கோலமிட்டு வாசலிலே தங்கள்
கைமலரால் எழில்பரப்பும் மாதர்களின் தோற்றம்
அச்சிட்ட நெஞ்சினராய்த் தொழில்நாடிச் செல்லும்
அன்பினர்வாழ் செந்தமிழ்த்தாய் நாடெங்கள் நாடே.

காடுகளும் சோலைகளும் காவிரியின் ஆக்கம்
கமழ்கின்ற தமிழ்மணமோ வைகைக்கரைத் தேக்கம்
வீடுகளும் ஆலயமும் இசைகமழும் பாக்கம்
வீணையுடன் நாதசுரம் விளைக்குமிசை காற்றில்
ஓடிவரும் உளம்நிறையும் உவகையிலே கூத்தும்
உண்டாகி எங்கணுமே ஆனந்தம் சேர்க்கும்
ஆடுகளும் மாடுகளும் கழுத்துமணி அசைய
ஆடிவரும் செந்தமிழ்த்தாய் நாடெங்கள் நாடே

என்ற இரண்டு பாடல்கள் செந்தமிழ்த்தாய் நாட்டினைப் படம்பிடித்துக் காட்டுகின்றன

கவிஞர் அழகினை ஓர் அழகுமங்கையாக உருவகித்துக் காண்கின்றார். அக்காட்சியினைக் காட்டும் பாடல் ஆறு. அவற்றுள் இரண்டு.

வையத்தில் இருக்கின்ற பொருளி லெல்லாம்
வானத்தில் இருக்கின்ற பொருளி லெல்லாம்
தையலர்கள் மீனக்கண் ஒளியி லெல்லாம்
தானாகத் தோன்றியவள் கவிதை தந்து
செய்யதிருப் பாக்களிலே நடம்பு ரிந்து
சிறுகுழந்தை புன்சிரிப்பில் மின்ன லாகிப்

பெய்திருக்கும் மழைநீரில் ஓடி வந்து
பெருமகிழ்வால் சிரித்தபடி பேசு கின்றாள்

அழகு மங்கை இப்பூவுலகில் உள்ள பொருள்களிலெல்லாம் தென்படுகின்றாளாம். விண்வெளியில் ஒளிர்கின்ற நட்சத்திரங்களில் காணப்படுகின்றாளாம். இங்ஙனம் தோன்றியவள் செய்ய திருப்பாக்களில் நடம்புரிந்து சிறு குழந்தை புன்னகைப்பில் மின்னலாகி பெய்திருக்கும் மழைநீரில் ஓடிவந்து நகைத்தபடி பேசுகின்றாளாம். அற்புதக் காட்சி இது.

காலையிலே கடல்மீது தோன்று கின்ற
கதிரவனின் செவ்வொளியில் மிதந்து வந்தாள்
சாலையிலே நடுப்பகலில் மரத்தின் கீழே
சரிந்திருக்கும் நிழலிலே ஒட்டிக் கொண்டாள்
மாலையிலே வானத்தின் செங்க ளத்தில்
வழிந்திருந்த குருதியிலே மின்னித் தோன்றிச்
சோலையிலே நிலவுவந்து பாலை யள்ளித்
தெளித்தவுடன் சிரித்துவிட்டாள் அழகு மங்கை

இந்த அழகு மங்கை காலையில் உதிக்கும் கதிரவனின் செவ்வொளியில் மிதந்து வருகின்றாள். சாலையில், நடுப்பகலில், மரத்தின் நிழலில் ஒட்டிக் கொள்ளுகிறாள். மாலையில் செக்கர் வானில் மின்னித் தோன்றுகிறாள். சோலையில் நிலவாகத் தோன்றிப் பாலைஅள்ளித் தெளித்துச் சிரிக்கின்றாள் முல்லைப்பல் காட்டி. எல்லாப் பாடல்களும் அற்புதமானவை. இவை பாவேந்தரின் 'அழகின் சிரிப்பில்' முதல் மூன்று பாடல்களின் பிரதிபலிப்பாக அமைந்திருக்கின்றன. மழையைப் பற்றிய வருணனை மகிழ்ச்சியை நல்குகின்றது.

வையத்திற் கமுத மாக
வந்திடும் மழையைக் கண்டு
செய்யதம் உள்ள மாரச்
செடிகளும் கொடிகள் மற்றும்
வெய்யவன் கொடுமை மாற்ற
விளங்கிடும் மழைகள் தாமும்
கையெனத் தளிர்கள் நீட்டிக்
களித்திடும் சீர்த்தி என்னே.

'நீரின்று உலகம் அமையாது' அன்றோ?

மண்ணிலே புதைந்தி ருந்தோம்
மற்றுநின் வரவு கண்டோம்
எண்ணிலா மகிழ்வ டைந்தோம்
இன்னும்நீ வாழ்க வென்று
வெண்ணிலா வரவு கண்டு
விரியுமோர் அல்லி போன்று
தண்ணீரில் தவளை யெல்லாம்
தாளப்பாட் டிசைத்த தம்மா!

இப் பாடலில் மழையின் வரவால் தவளைகளின் கும்மாளம் காட்டப் பெறுகின்றது. பாவேந்தரின் அழகின் சிரிப்பில் வருவது போல் ஒரு குரங்கின் செயல் வருமாறு.

மழைசொட்ட நனைந்து போன
மதிகெட்ட ஒருகு ரங்கு
குளத்துநீர் மொண்டு யாரோ
கொட்டி னாரெனநி னைத்தே
உளங்கொண்ட சினத்தை யெல்லாம்
உணர்ந்திட நீரை மொண்டு
மளமளவென் றிறைத்த காட்சி
மதிக்கொரு நகைவி ருந்தாம்.

அடுத்து வருவது மகளிர் விளியாக வருவது.

வானைச்சேர் மேக மெல்லாம்
வலிமிகும் யானைக் கூட்டம்
யானைகள் ஒன்றை யொன்று
அழிந்தன மோதி மோதித்
தேனைப்போல் இனிய சொல்லாய்!
திகழ்ந்தன தந்த மாக
மீனைப்போல் ஒளிரும் உன்கண்
கவர்ந்திடும் மின்னல் கண்டால்.

மேகங்கள் யானைகளாகவும், மின்னல் அவற்றின் தந்தமாகவும் காட்டப் பெறும் கட்புலப் படிமம் (visual image) அற்புதம்.

*கற்பனை நயம்:* கவிதைக்கு மிகவும் இன்றியமையாத பண்பு கற்பனையாகும். கவிஞரின் கற்பனையாற்றலைப் பல பாடல்களில் கண்டு மகிழலாம். பகலவனையும், அம்புலியையும் பாடாத கவிஞர்களே

இல்லை, இந்த இருசுடர்த் தோற்றத்தைக் கம்பனில் அருமையாக வருணித்திருப்பதைக் கண்டு மகிழலாம். மிதிலையில் இராமன் உறங்கா நிலையைக் கம்பன்,

*கனியும் போல்பவன் கங்குலும் 'இருட் திங்களும்*
*தனியும் தானும் அத்தையலும் ஆயினான்*

என்று காட்டுவான். இது முதல் எட்டுக் கவிதைகள் காகுத்தன் சீதையின் உருவ வெளிப்பாட்டைக் கண்டு தன்னுட் கூறுவனவாக அமைந்துள்ளன. தொடர்ந்து சந்திரன் மறைவதும் பகலவன் தோன்றுவதும் காட்டப் பெறுகின்றன. பகலவன் கதிர்கள் பாரெங்கும் பரவுவதைக் கவிஞன்,

*எண்ணரிய மறையினொடும் கின்னரர்கள்*
*இசைபாட உலகம் ஏத்த*
*விண்ணவரும் முனிவர்களும் வேதியரும்*
*கரம்குவிப்ப வேலை யென்னும்*
*மண்ணும்மணி முழுவதிர வானரங்கில்*
*நடம்புரிவான் இரவி யான*
*கண்ணுதல்வா னவன்கனகச் சடைவிரித்தால்*
*எனவிரிந்த கதிர்கள் எல்லாம்*

என்று காட்டுவான். வானரங்கில் சிவபெருமான் (நடராசனாக) நடனம் புரியுங்கால் - அவன் தலைவிரி கோலமாக ஆடும்போது அவனது சடைகள் விரிந்து நேராக நிற்கும், முள்ளம் பன்றி சிலிர்ப்பது போல் இருப்பதாகக் கூறலாம். அதுபோல் பகலவனது கதிர்கள் பளபளப்புடன் விரிந்து காட்டுகின்றன. இவைபோன்றே கவிஞர் நாராநா அவர்கள் பகலவன் வரவை எட்டுப் பாடல்களில் வருணிப்பார்.

*பகலவன் வரவு பார்த்துப்*
*பனியனும் அகன்று போகப்*
*புகலிடம் அறியா தாங்குப்*
*பொசுங்கினான் இரவு மன்னன்*
*அகன்றனர் பகைவ ரென்ற*
*மேகத்தின் அரச னிங்குத்*
*திகழ்ந்திடும் காட்சி தன்னைக்*
*காணநீ வாராய் தம்பி!*

இது பகலவன் வரவைக் காட்டுவது.சூரியன் வருகின்றான்; பனியன் அகன்று போகிறான். இரவு புகலிடம் அறியாது தவிக்கிறான். மேகத்தின்

அரசன் மேக நாதன் இப்போது கொலுவீற் றிருக்கின்றான். இன்னுமோர் அற்புதமான பாடல்,

கதிரவன் வரவு கண்டு
காரிருள் போன பின்னர்
உதிர்ந்திடா வெண்முத் தென்ன
ஒளிரும்வெண் மீன்க ளெல்லாம்
மதிக்கவே செய்யா ரிந்த
மான்விழிப் பெண்க ளென்றே
அதிர்ந்துபோய் ஒளியும் காட்சி
அதிசயம் பாராய் தம்பீ.

இரவில் ஒளிவிடும் விண்மீன்கள் பகலில் புறப்படுவதில்லை. அவை ஒளிந்து கொள்கின்றனவாம். காரணம் என்ன? மான்விழி மகளிர்தம்மை மதிக்கார் என்று அதிர்ந்துபோய் அப்படிச் செய்கின்றனவாம். இங்ஙனம் கற்பனை வளத்தைக் காட்டும் பல பாடல்கள் உள்ளன.

முன்னோர் பெருமை ; முன்னோரைத் தழுவி மூவேந்தரைப் பற்றி ஒரு பாடல் உண்டு. ஆயினும் இந்திய வரலாற்றில் பண்டையோர் தொட்டுக் கட்ட பொம்மன் வ.உ.சி வரையிலான பலரும், இருட்டடிப்புச் செய்யப் பெற்றுள்ள இழிநிலையை,

கொட்ட மடித்த வெள்ளையர்க்கே – வரி
கொடுக்க மறுத்துப் போரிட்ட வீரன்
கட்ட பொம்மனின் பெயர்சொன்னால் – இரு
கைகளும் வாளினை ஏந்திடத் துடிக்கும்

வெள்ளைய ராட்சியை எதிர்த்தவராம் – உயர்
விடுதலைக்கே உழைத்தவராம் – நெஞ்சிற்
கள்ள மில்லாத சிதம்பரனார் – அவர்
கப்ப லோட்டிய தமிழரடா தம்பி!

எத்தனை நல்ல செய்திகளும் – நம்
இந்திய நாட்டு வரலாற்றில் இல்லை
அத்தனை செய்தியும் இருட்டடித்தார் – இந்த
அவமானத்தை யாரிடம் போய்ச்சொல்வேன்

என்ற பாடல்களில் கூறிக் கழிவிரக்கம் கொள்ளுகின்றார்.

நெஞ்சைக் கவர்ந்தவர்கள்; நெஞ்சைக் கவர்ந்த தலைவர்களைப் பாடிப் போற்றுதல் தொன்று தொட்டு வழங்கும் நெறி; தமிழர் பண்பாடு. சுந்தரர் திருத்தொண்டத் தொகையிலும் நம்பியாண்டார் நம்பி திருத்தொண்டர் அந்தாதியிலும் சேக்கிழார் பெருமான் பெரிய புராணத்திலும் இந்நெறியைப் போற்றிப் பாராட்டியுள்ளதை நாம் அறிவோம். பாரதியார் நாட்டுக்குழைத்த நல்லவர்களையும், பாவேந்தர் திராவிடப் பெரியார்களையும் பாடியுள்ளனர். அதுபோல கவிஞர் நாராநா மறைமலையடிகளைக் குறிப்பிட்டுப் பாடியதை மேலே காட்டினேன். அறிஞர் அண்ணா, கலைஞர் கருணாநிதி, நாவலர் நெடுஞ்செழியன், தந்தை பெரியார் சொல்லின் செல்வர் சம்பத்து, தம்பிக் கோட்டைக் கணபதி போன்றவர்களையும் பாடியுள்ளார்.

கோவேந்தர் பாண்டியரைக் கொண்ட திருவுருவம்
நாவேந்தர் அண்ணாவின் நம்பிக்கைப் பேரிமயம்
பாவேந்தர் பாராட்டும் பைந்தமிழின் பொற்பேழை
மூவேந்தர் பண்பும் முதிர்ந்த நெடுஞ்செழியன்

எந்தை பெரியார் எழிற்கருத்தைக் கேட்போரின்
சிந்தைப் பதிவைத் தெருத்தோறும் பாய்ச்சிவரும்
மைந்தன் இளந்தாடி என்னும் மணிப்பெயரன்
நிந்தைக் கிளையா நிமிர்தோள் நெடுஞ்செழியன்

என்பன நெடுஞ்செழியனைப்பற்றியன.

மொழிப்போரில் வெற்றி பெற்று
முடிவிலே நாட்டுப் போரும்
விழிப்போடு நடத்து தற்கு
வேண்டிய தகுதி பெற்றாய்
செழிப்பான தமிழர் நாட்டுச்
செல்வமே சம்பத் தென்னும்
எழிற்பேராய் வாழி வாழி
இளஞ்சிங்க மனையாய் வாழி !

என்ற பாடல் சம்பத்தை வாழ்த்துவதாக அமைந்தது.

கற்றவரைப் பின்பற்றும் கலைஞன், நல்ல
கவிஞர்களைப் போற்றுகின்ற கலைஞன், தன்னைப்
பெற்றவரைத், தவம்பெற்றார் ஆக்கி விட்ட
பெருமைந்தன் தமிழன்னை பெற்ற செல்வன்,

உற்றபெருந் தலைவர்கட்கு நிதிவ ழங்கும்
ஒருவள்ளல், சுடத்தியலாம் தமிழ்க்க லைக்கு
வற்றாத ஊற்றனைய களஞ்சி யம்போல்
வளஞ்சுரக்கும் சண்முகத்தை வாழ்த்தாய் நெஞ்சே!

இது ஔவை சண்முகத்தை ஒரு சொல்லோவியம் போல் காட்டுகின்றது.இவ்வாறு நெஞ்சம் கவர்ந்த தலைவர்களைப் போற்றும் இவர்,

கோவையிலே ஒருபெண்ணைக் காத லித்துக்
கூடலிலே ஒருத்தியுடன் மணமு டித்துத்
தேவையுள்ள போதெல்லாம் வேறு வேறு
தேடுகின்றார் சிலதலைவர் இந்த நாளில்!
காவியத்து நாயகரின் மேன்மை பற்றிக்
கழகத்துக் கூட்டத்தும் பத்தி ரிக்கை
ஓவியத்தும் காண்பதன்றித் தலைவர் என்போர்
உள்ளத்தில் நடைமுறையில் காண வில்லை

என்ற பாடலில் இன்றையத் தலைவர்தம் இயல்புகளை அங்கை நெல்லிக் கனியாக்கும்போது 'ஆகா' எனவியந்து 'வாழ்க கவிஞரின் துணிவு' எனப் பாராட்டுகின்றோம்.

பாரதியாரைப் பற்றிப் பன்னிரண்டு பாடல்கள் பாடியுள்ளார். அவற்றுள் ஒன்று இதோ

வெட்டரிவாள் போல்முறுக்கி விட்ட மீசை
விழிகளிலே ஒளிபெருக்கும் வீரப் பார்வை
கட்டற்ற உரிமைகளை விரும்பும் நெஞ்சம்
கற்பனையில் நனைந்ததமிழ் பாடும் செவ்வாய்
சட்டைக்கு மேல்பழைய கோட்டு மற்றும்
சரிகையின்றித் தலைமேலே சேரன் போலே
கட்டிவைத்த தலைப்பாகை இதுதான் அந்தக்
கவியரசன் பாரதியின் தோற்றம் கண்டீர்.

இந்தச் சொல்லோவியம் பாரதியை நமக்கு நேரில் கொண்டுவந்து நிறுத்துவதுபோல் அமைந்துள்ளது.

பாரதிதாசனைப் பற்றிப் பதினொரு பாடல்கள் பாடியுள்ளார். அவற்றுள் ஒன்று வருமாறு.

பாண்டிய நாட்டில் அந்நாள்
பைந்தமிழ்ப் புலவ ரெல்லாம்
மாண்டனர் என்றால் சங்க
மாண்புநம் முன்னே தோன்றும்
மீண்டவர் வந்தார் என்று
விளம்பிடப் பாட லைக்கை
யாண்டவன் புகழைப் பெற்றோன்
பாரதி தாசன் அன்றோ.

பாவேந்தரைச் சங்கப் புலவர்களுடன் ஒப்பிட்டுக் காட்டுவது அவர்மீது கவிஞர் நாரா நா அவர்கள் கொண்ட அளவற்ற மதிப்பைக் காட்டுகின்றன.

பாரதியும் பாரதிதாசனும் பற்றிப் பதினான்கு பாடல்கள் பாடியுள்ளார் .

பக்தியிலே சக்தியுண்டென் றெண்ணி னாலும்
பழமூடப் பழக்கத்தைச் சாடி நிற்கும்
மிக்கபுகழ்க் கொள்கையிலே ஊறி நிற்கும்
மீசையுள்ள பாரதிக்குத் தாசன் எந்தப்
பக்கத்தில் வந்தாலும் மூடப் போக்கைப்
பாய்ந்தெதிர்க்கும் வெறியுள்ளான் ஆகை யாலே
சிக்கென்று பாரதியைக் குருவாய்க் கொண்டான்
சிங்கத்தைப் பின்பற்றும் சிங்க மானான்

இருவரும் மீசைப் புலவர்கள் . பாரதி முறுக்கு மீசைக்காரர். பாவேந்தரோ தட்டையான அகல இட்லர் மீசைக்காரர். இருவர் தோற்றமும் எடுப்பான வசீகரத் தன்மை வாய்ந்தவை.மூடப் பழக்கத்தையும், மூடப் போக்கையும் பாய்ந்தெதிர்ப்பதில் ஒரே அணியில் நிற்பவர்கள்.

தந்தை பெரியாரைப் பற்றிப் பல்வேறு தலைப்புகளில் பல பாடல்கள் பாடியுள்ளார். கிழச்சிங்கம், வெண்தாடி வேந்தர் பெரியார், வாழ்க, தமிழர் தலைவர், இயக்கமாய் நின்ற எந்தை என்ற தலைப்புக்களில் இவையமைந்துள்ளன.

நேரிய ஒழுக்கம் பண்புடைமை – நாட் டில்
நிலைபெற் றோங்க வேண்டுமெனும்
சீரிய கருத்தை உடையவராம் – கிழச்
சிங்கம் பெரியார் வாழியவே !

என்பது ஒன்று. வெண்தாடி வேந்தரடி என்று தொடங்கும் இசைப் பாடல் வருமாறு.

எண்ணூறும் கருத்தெல்லாம் சொல்லி
அகன்றிடும் முன்னால்
எதையும் சிந்தித்துக் கொள்க
என்றுரை சொன்னால்
கண்ணூறும் கருத்துமாய்த் தன்மா
னத்தினுக் குழைக்கும்
கைத்தடிக் கிழவரின் மெய்யென்
றோபயன் விளைக்கும்

இதை இசையேற்றிப் பாடினால் இன்பம் துள்ளும். பெரியார் வாழ்க என்னும் ஆறு பாடல்களில் இறுதிப் பாடல்.

பிறந்ததெலாம் தமிழ்நாட்டில், உண்ணச் சோறு
பெற்றதெலாம் தமிழ்நாட்டில், எனினும் தாமே
திறமுடையார் எனச்சொல்லி வெள்ளை யர்க்கும்
தீங்குமிகு வடவர்க்கும் வால்பிடித்த
சிறுநரிகள் செயல்காட்டித் தீயர் ஆட்சிச்
சிறுமையினை மனுநீதிப் பாசி சத்தின்
உறவுதனை நீக்கிடவே தமிழ கத்தின்
உயர்வினுக்கே உழைத்திடுவார் பெரியார் வாழ்க.

காரணம் கூறித் தந்தை பெரியாருக்கு வாழ்த்துக் கூறுகிறது.

துடிப்பெலாம் அடங்கி நெஞ்சச்
சூடெலாம் தணிந்து கையின்
பிடிப்பெலாம் தளர்ந்து சாவுப்
பேழையுள் ஒடுங்கி விட்டீர்
படிப்பெலாம் மறந்து போமோ
பழந்தமிழ் உணர்வு போமோ
வடிப்பெலாம் அமுத மாக
வழங்கினீர் போற்றி வாழ்வோம்.

இப் பாடல் மறைந்த பெரியார் பற்றி இரங்கிக் கூறுவது.

செந்தமிழை அரியணையில் ஏற்று தற்குச்
சிந்தையிலே உறுதிகொண்ட தாலே யன்றோ

*இந்த நிலத் துள்ளமக்கள் அண்ணா வைத்தும்*
*எண்ணமெனும் அரியணையில் ஏற்றி வைத்தார் !*
*மந்தமதி படைத்தவர்கள் பிறமொ ழிக்கே*
*மாநிலத்தை யாளுகின்ற திறனுண் டென்று*
*விந்தைமொழி பேசியதால் வீழ்ந்து விட்டார்*
*விடிவெள்ளி போலண்ணா மேலே ழுந்தார்.*

இது 'தென்னாட்டின் விடிவெள்ளி ' என்ற தலைப்பில் அறிஞர் அண்ணாவின் நீள்நோக்கை நினைந்து பாடியது.

'என்னாசான் பாவேந்து' எனத்தம்மை அவர்தம் மாணாக்கராக்கிக் கொண்டு பாடும் இக்கவிஞர் ஆசிரியம், அறுசீர், எண்சீர், ஆசிரிய விருத்தங்கள், வெண்பா, சிந்துப் பாடல்கள் எனப் பலவகை யாப்புகளில் பாடியுள்ளார். பாரதி, பாரதி தாசன் ஆகிய இருவரிடத்தும் பாவலருக்கு மிகுந்த ஈடுபாடு இருந்தது என்பதை இவர்தம் பாடல்கள் காட்டி நிற்கின்றன. பாடிய பாடல்களின் நாள் குறிப்பிட்டிருந்தால் பாடல்கள் எழுந்த சூழ்நிலையை அறிந்து கொண்டு அவற்றைச் சுவைக்க முடியும். எழுந்த காரணத்தையும் அறிந்துகொள்ள முடியும்.

கவிஞர் நாராநா பல கதைப் பாடல்கள் எழுதியுள்ளார். அவை முதல் தொகுதியில் ஒளிர்கின்றன. அவற்றோடு பல நெடுங்கதைகளும், சிறுவர் கதைகளும் எழுதியுள்ளார். விரிவஞ்சி அவற்றை நாம் எடுத்துக் கொள்ளவில்லை. சிறுகதைக்கும் நெடுங்கதைக்கும் உள்ள வேறுபாட்டை

*அடுத்தடுத்து வாழ்க்கையிலே தொடரும் சிக்கல்*
*அத்தனையும் வகைப்படுத்திப் பிரித்தெ டுத்துத்*
*தொகுத்துரைக்கும் ஆற்றலினால் உண்மை வெல்லச்*
*சொல்லுகின்ற பாங்கிருக்கும் பெருங்க தையில்*
*விடுத்ததொரு கவண்கல்லில் மோதிக் கீழே*
*விழுகின்ற கனிச்சுவையைத் துய்த்தல் போலே*
*எடுத்ததொரு கற்பனையின் திறத்தி னாலே*
*இசைப்பதுதான் சிறுகதையின் ஆற்ற லாகும்.*

என்ற பாடலில் சுருங்கச் சொல்லி விளங்க வைக்கின்றார். இக் கவிதை ஓர் இலக்கண நூற்பா போல் அமைந்திருப்பது எண்ணி மகிழத் தக்கது. கதை ஆசிரியர் எத்தகு கதைகளை எழுத வேண்டும், எத்தகையவற்றை எழுதலாகாது என்பதற்கும் விதித்த விதி.

என்பது ஒன்று. வெண்தாடி வேந்தரடி என்று தொடங்கும் இசைப் பாடல் வருமாறு.

என்ணும் கருத்தெல்லாம் சொல்லி
அகன்றிடும் முன்னால்
எதையும் சிந்தித்துக் கொள்க
என்றுரை சொன்னால்
கண்ணும் கருத்துமாய்த் தன்மா
னத்தினுக் குழைக்கும்
கைத்தடிக் கிழவரின் மெய்யென்
றோபயன் விளைக்கும்

இதை இசையேற்றிப் பாடினால் இன்பம் துள்ளும். பெரியார் வாழ்க என்னும் ஆறு பாடல்களில் இறுதிப் பாடல்.

பிறந்ததெலாம் தமிழ்நாட்டில், உண்ணச் சோறு
பெற்றதெலாம் தமிழ்நாட்டில், எனினும் தாமே
திறமுடையார் எனச்சொல்லி வெள்ளை யர்க்கும்
தீங்குமிகு வடவர்க்கும் வால்பிடித்த
சிறுநரிகள் செயல்காட்டித் தீயர் ஆட்சிச்
சிறுமையினை மனுநீதிப் பாசி சத்தின்
உறவுதனை நீக்கிடவே தமிழ கத்தின்
உயர்வினுக்கே உழைத்திடுவார் பெரியார் வாழ்க.

காரணம் கூறித் தந்தை பெரியாருக்கு வாழ்த்துக் கூறுகிறது.

துடிப்பெலாம் அடங்கி நெஞ்சச்
சூடெலாம் தணிந்து கையின்
பிடிப்பெலாம் தளர்ந்து சாவுப்
பேழையுள் ஒடுங்கி விட்டீர்
படிப்பெலாம் மறந்து போமோ
பழந்தமிழ் உணர்வு போமோ
வடிப்பெலாம் அமுத மாக
வழங்கினீர் போற்றி வாழ்வோம்.

இப் பாடல் மறைந்த பெரியார் பற்றி இரங்கிக் கூறுவது.

செந்தமிழை அரியணையில் ஏற்று தற்குச்
சிந்தையிலே உறுதிகொண்ட தாலே யன்றோ

*இந்த நிலத் துள்ளமக்கள் அண்ணா வைத்தார்*
*எண்ணமெனும் அரியணையில் ஏற்றி வைத்தார்!*
*மந்தமதி படைத்தவர்கள் பிறமொ ழிக்கே*
*மாநிலத்தை யாளுகின்ற திறனுண் டென்று*
*விந்தைமொழி பேசியதால் வீழ்ந்து விட்டார்*
*விடிவெள்ளி போலண்ணா மேலே ழுந்தார்.*

இது 'தென்னாட்டின் விடிவெள்ளி' என்ற தலைப்பில் அறிஞர் அண்ணாவின் நீள்நோக்கை நினைந்து பாடியது.

'என்னாசான் பாவேந்து' எனத்தம்மை அவர்தம் மாணாக்கராக்கிக் கொண்டு பாடும் இக்கவிஞர் ஆசிரியம், அறுசீர், எண்சீர், ஆசிரிய விருத்தங்கள், வெண்பா, சிந்துப் பாடல்கள் எனப் பலவகை யாப்புகளில் பாடியுள்ளார். பாரதி, பாரதி தாசன் ஆகிய இருவரிடத்தும் பாவலருக்கு மிகுந்த ஈடுபாடு இருந்தது என்பதை இவர்தம் பாடல்கள் காட்டி நிற்கின்றன. பாடிய பாடல்களின் நாள் குறிப்பிட்டிருந்தால் பாடல்கள் எழுந்த சூழ்நிலையை அறிந்து கொண்டு அவற்றைச் சுவைக்க முடியும். எழுந்த காரணத்தையும் அறிந்துகொள்ள முடியும்.

கவிஞர் நாராநா பல கதைப் பாடல்கள் எழுதியுள்ளார். அவை முதல் தொகுதியில் ஒளிர்கின்றன. அவற்றோடு பல நெடுங்கதைகளும், சிறுவர் கதைகளும் எழுதியுள்ளார். விரிவஞ்சி அவற்றை நாம் எடுத்துக் கொள்ளவில்லை. சிறுகதைக்கும் நெடுங்கதைக்கும் உள்ள வேறுபாட்டை

*அடுத்தடுத்து வாழ்க்கையிலே தொடரும் சிக்கல்*
*அத்தனையும் வகைப்படுத்திப் பிரித்தெ டுத்துத்*
*தொகுத்துரைக்கும் ஆற்றலினால் உண்மை வெல்லச்*
*சொல்லுகின்ற பாங்கிருக்கும் பெருங்க தையில்*
*விடுத்ததொரு கவண்கல்லில் மோதிக் கீழே*
*விழுகின்ற கனிச்சுவையைத் துய்த்தல் போலே*
*எடுத்ததொரு கற்பனையின் திறத்தி னாலே*
*இசைப்பதுதான் சிறுகதையின் ஆற்ற லாகும்.*

என்ற பாடலில் சுருங்கச் சொல்லி விளங்க வைக்கின்றார். இக் கவிதை ஓர் இலக்கண நூற்பா போல் அமைந்திருப்பது எண்ணி மகிழத் தக்கது. கதை ஆசிரியர் எத்தகு கதைகளை எழுத வேண்டும், எத்தகையவற்றை எழுதலாகாது என்பதற்கும் விதித்த விதி.

ஆடை குறைக் கின்றகதை வேண்டா நல்ல
அறிவுவளர்க் கின்றகதை படைத்தல் வேண்டும்
வாடைமதுக் குடிக்கதைகள் வேண்டா தூய்மை
வளர்க்கின்ற சிறுகதைகள் வரைதல் வேண்டும்
பீடைமதம் சாதிகதை வேண்டா அன்பு
பெருக்குகின்ற திருக்கதைகள் மிகுதல் வேண்டும்
மேடையிலே வீசுகின்ற பூங்காற் றைப்போல்
மிகவினிய சிறுகதைகள் படைப்போம் வாரீர்!

என ஒரு பாடலாக வடிவம் கொள்ளுகின்றது. பொதுவாகக் கவிஞர் நாராநா ஒரு குறிக்கோள் மனிதர் எனலாம்.

# 4. திருமதி சௌந்தரா கைலாசம்

இவர் சேலம் மாவட்டத்தில் அழகுநல் நதியாம் அமராவதிக் கரையில் அமைந்துள்ள செட்டிப் பாளையம் என்ற சிற்றூரில் (1927) பிறந்தார். பிறந்த குடும்பம் செல்வச் செழிப்பும் பக்திப் பெருக்கும் உடையது. திருச்செங்கோடு வட்டத்தில் புதுப்பாளையம் எனும் சிற்றூரில் இராஜாஜி – காந்தி ஆசிரமம் நிறுவிய போது அதற்கு வேண்டிய நிலத்தை அளித்தது இவர்தம் அன்னைவழிப் பாட்டனார் இரத்தின சபாபதிக் கவுண்டர். இவர் நாட்டுப் பற்றாளர். தந்தையார் சுந்தரக் கவுண்டர்தான் செந்தமிழ் ஆர்வத்தை இவர்தம் இதயத்தில் வளர்த்தவர்.ஒன்பதாவது வகுப்பில் பயின்றபோது பள்ளிப் படிப்பு நின்றது. திருமணம் கூடி இல்லத்தரசியானார்கள். 1941 இல் இவர்தம் திருமணத்தை நடத்தி வைத்தவர் டாக்டர் சுப்புராயன் அவர்கள். அப்போது பெண்ணின் வயது 14. இவர்தம் ஒன்றுவிட்ட தம்பி சேலம் மாவட்டம் நாமக்கல் வட்டம் பாலப்பட்டி பெருநிலக் கிழவர் சடையப்பக் கவுண்டரின் இரண்டாவது மகன் பா.ச.கைலாசம் அவர்கள் இவர்தம் கணவராக வாய்த்தார்கள்.திரு கைலாசம் அவர்கள் பெரும்புகழ் பெற்ற திரு.எதிராஜர் என்ற புகழ் பெற்ற வழக்கறிஞரிடம் பயிற்சி பெற்றுச்சிறந்த வழக்கறிஞராக மலர்ந்து சென்னை உயர்நீதி மன்ற நீதிபதி, தலைமை நீதிபதி, புது தில்லி உச்ச நீதி மன்ற நீதிபதி, என்ற பல பதவிகளில் உயர்ந்தார்கள். அம்மையாரின் இல்லற வாழ்வில் கணவர் அளித்த சுதந்திரத்தின் காரணமாகப் பல தமிழறிஞர்கள் தொடர்பினால் தமிழறிவு வளர்ந்தது. கவிதை இயற்றும் ஆற்றலும் வளர்ந்தது. பல ஆயிரக்கணக்கான கூட்டங்கள் கவியரங்கங்கள், கருத்தரங்குகள் ஆகியவற்றில் கலந்து கொள்ளும் வாய்ப்புகள் கிட்டின. நூற்றுக்கணக்கான திருத்தலப் பயணங்களை மேற்கொண்டு இறை வழிபாட்டில் தோய்ந்தார். சென்னை வடபழநி முருகன் இவரது விருப்பமான தெய்வம். அவனருளால் கவிதை இயற்றும் ஆற்றல் பெருகியது.

இதுகாறும் அம்மையார் இயற்றிய பாடல்கள் இரண்டாயிரத்திற்கும் மேற்பட்டவை ஆகும். இவர்தம் பாடல்களின் முதல் தொகுப்பு தெய்வப் பாடல்கள். தேசப் பாடல்கள், சமூகப் பாடல்கள், சான்றோர் பாடல்கள், பல்சுவைப் பாடல்கள் என்று ஐந்து வகையாகப்பாகு

படுத்தப்பட்டுள்ளன. இது வெளிவர உதவி புரிந்தவர் குழந்தைக் கவிஞர் அழ.வள்ளியப்பா அவர்கள். இவர்தம் கவிதைகளில் மூன்றில் ஒரு பகுதி தெய்வப் பாடல்களாக அமைந்திருப்பது இவர்தம் இடையறாத இறையன்பிற்கும் இறைவழிபாட்டிற்கும் சான்றாக அமைகின்றது. முதல் தொகுதி இவர்தம் அன்புக் கணவர் நீதியரசர் அமரர். பா.ச.கைலாசம் அவர்கட்கு அன்புப் படையலாக்கப் பெற்றுளது. அவற்றுள் சில பாடல்கள் வருமாறு.

வீட்டிற்குள் நிற்காமல் வெளியில் சென்று
விளையாடும் பருவத்தில் மேலாம் அன்புக்
கூட்டிற்குள் எனைவளர்த்துத் தாலி கட்டிக்
குடும்பத்துத் தலைவியெனக் கூறி விட்டாய்
ஏட்டிற்குள் சுரைக்காயால் பயன்யா தென்றே
எனையுலகம் அறிந்தவளாய்ச் செய்ய எண்ணி
நாட்டிற்குள் ஆங்காங்கே நடப்ப வற்றை
நயமாக எடுத்தெடுத்து நாளும் சொன்னாய்

தந்தையுமாய் அன்னையுமாய்ப் பாடம் சொல்லித்
தந்திடும்நல் ஆசானாய் அன்பி னாலே
எந்தஒரு பொழுதினிலும் என்னைக் காக்கும்
ஈடறியா ஈசனுமாய் வேறு வேறாய்
வந்தனைநீ கணவனென வழங்கும் அந்த
வார்த்தைக்குள் அடங்காத வண்ணம் நின்றாய்
சிந்தனைநீ மொழியும்நீ செயலும் நீயே
சிரிக்கின்ற என்சிரிப்பில் உயிரும் நீயே

உன்னரிய குணத்தாலே உயர்வி னாலே
ஒளியுடைய கலைநுகரும் உணர்ச்சி யாலே
என்னுள்ளே தானிருந்த ஆற்றல் தன்னை
எளிதாக நீயுணர்ந்தாய் எனக்கும் சொன்னாய்
பொன்னுள்ளே உள்ளசுடர் பொலிய வைத்துப்
பூரித்தாய் வாழ்வித்தாய் புகழில் வைத்தாய்
தன்னுள்ளே தானெனவே உட்கா ராமல்
தமிழாலே எங்கெங்கோ தவழ வைத்தாய்.

திடமாகக் கடவுளினை நம்பி விட்டால்
சேதாரம் ஒருநாளும் இல்லை யென்று

வடபழநிக் கோயிலுக்குச் செவ்வாய் தோறும்
 வழக்கமாய் நான்செல்ல நினைத்த காலை
சுடர்கின்ற எண்ணத்தைத் தூண்டி விட்டுத்
 தூயவனைத் தெரிசிக்கத் துணையாய் நின்றாய்
முடமாக மூலையிலே முடங்கா வண்ணம்
 முன்னேறக் கைகோத்து முன்ந டந்தாய்

பேருலகில் நன்னீதி சிறிது கூடப்
 பிறழாமல் இறைவனவன் துணையைக் கொண்டு
சீருடைய பணிசெய்த உன்னை என்றன்
 சிறப்புடைய துணையாகப் பெற்றேன் மிக்க
ஆர்வமுடன் கவிமலர்கள் தொடுத்தேன் நீயோ
 அழகென்று பாராட்டி ஊக்கு வித்தாய்
பேருயரும் உன்பதத்தில் அவற்றை வைத்துப்
 பெருமையுடன் படைக்கின்றேன் ஏற்றுக் கொள்வாய்

இந்த நூல் தயாரானதும் முதற்படியை அவரிடம் தந்து ஆசிபெற விழைந்தனர்பதிப்பாசிரியர்கள். அந்தோ நூல் தயாராவதற்கு முன்பே அவர் பொன்னுலகை அடைந்து விட்டார் புகழுடம்பை இங்கு விட்டு. இனி அம்மையாரின் கவிதைகளில் ஆழங்கால்பட முயல்கின்றேன்.

இவர் தம் கவிதைகள் தெய்விகம். தேசம், சமூகம், சான்றோர், பல்சுவை என்ற பிரிவுகளில் வெளியிடப்பட்டுள்ளன (1987). இவற்றுள் தெய்வங்களைப் பற்றிய கவிதைகள் மூன்றில் ஒரு பகுதியாக அடங்கும் என்பதால் அம்மையார் இறைப்பற்று மிக்கவர் என்பதாக அறியக் கிடக்கிறது. கணநாதரைப் பற்றி 24 கவிதைகள் உள்ளன. இவர் ஒருவரே ஆயுதம் தாங்காத கடவுள் பிறருக்குவரும் தீங்குகளை விக்கினங்களை சங்கல்பத்தாலே நீக்கி விடுகின்றார், 'எங்கும் தெய்வம் உண்டு' என்பதற்கு எடுத்துக் காட்டை மெய்ப்பிப்பது போல இவர் காட்சி தருகின்றார். என்பதை

தினந்தோறும் சரியாகத் திறந்து மூடும்
 திருக்கோயில் பலவுண்டு நமது நாட்டில்
கனமேறு அடியார்க்கே தெய்வம் அங்கு
 காட்சிதரும் மிகஅருகில் கணக்குப் பார்த்து,
புனலூறும் கண்ணார்க்குப் புணையாம் தெய்வம்
 போவார்க்கும் வருவார்க்கும் பொதுவாம் தெய்வம்

மனந்தோறும் குடியேறும் மக்கள் தெய்வம்
வழிபாடில்லை யார் என்றால் மறுப்பார் யாரே ?

என்ற பாடல் மெய்ப்பிக்கின்றது.

வாய்த்துள்ள முகம்போலும் இலையைக் கொண்டே
மரத்தடியான் குளக்கரையான் மும்ம லத்தைத்
தீய்த்துதவும் திருவிழியான் பெற்றோர் தம்மைத்
தெய்வமெனச் சுற்றியசீர் அடியான், துன்பம்
பேர்த்தருள ஓங்குமொரு தும்பிக் கையான்
பிறவாத நன்னிலையில் உயிரை ஏற்றிக்
காத்தருளும் கணநாதர் கழல்கள் போற்றிக்
காலமுந்திக் கிடப்போமா மாயச் சேற்றில்.

இப்பாடலில் 'பெற்றோர் தம்மைத் தெய்வமெனச் சுற்றியசீர் அடியான்' என்பதில் அடங்கியுள்ள வரலாற்றை நாம் நன்கு அறிவோம்.

செட்டி நாட்டில் பிள்ளையார் வழிபாடு அதிகம். 'உசிவமயம்' போட்டு எழுதும் பழக்கம் இங்குதான் அதிகமாகக் காணலாம். 'உ' என்பது பிள்ளையர் சுழி. தும்பிக்கையை நினைவு கூர்வது,. துதியாகப் பாடியபின் ஔவையாரைத் தூக்கி விட்ட கையல்லவா?

காப்பிற்கும் அவனுக்கும் சொந்த முண்டா ?
யானைமுகக் காதிற்குச் சந்த முண்டோ ?
காப்பிற்கு வாவென்று தமிழ கத்துக்
கவிஞரிலே பெரும்பாலோர் மறவா தென்றும்
கூப்பிட்ட காரணத்தைக் கூற வாநான்
கொம்பெடுத்து எழுதியவன் கொம்பன் என்றே
ஆப்பிட்டு நின்கின்றார் ஆசிக் காக
அத்தனையும் கணபதிகை ராசிக் காக.

முருகனைப் பற்றியும் அதிகமான பாடல்கள் உள்ளன. வடபழநி ஆண்டியைச் செவ்வாய் தோறும் வழிபடுபவரல்லவா? தமது இல்லத்திற்கும் 'முருகனடி' என்று திருநாமமிட்டு மகிழ்ச்சி பெற்றவர்.

கழலும் ஒளியும் முருகனடி – இன்பத்
தமிழின் சுவையும் முருகனடி,
மழையும் புயலும் முருகனடி. – நீல
மயிலின் அழகும் முருகனடி,

இதனைத் தொடர்ந்து ஒன்பது கவிதைகள், அத்தனையும் கற்கண்டுக் கவிதைகள்,

ஞாயிற்றின் பின்னாலே திரியும் திங்கள்
நடந்துவரும் திங்களுக்குப் பின்னே செவ்வாய்
ஆயிற்று வடபழநிக் கோயி லில்தான்
அடியேன்நான் கண்விழிப்பேன் அலறி ஓடிப்
போயிற்று உலகநினை வென்கின் றாற்போல்
பொங்கிவரும் கண்ணீரில் எனையி ழப்பேன்
வாயற்று நின்றுவட பழநிக் குள்ளே
வாழ்வெல்லாம் நானாக வளங்கொ ழிப்பேன்

என்ற பாடல் அம்மையாரின் அநுபவத்தைக் காட்டுவது. அடுத்த தலைப்பில் வரும்

கந்தனுனைக் கோயில்வந்து செவ்வாய் தோறும்
காணுகின்றேன் உள்ளூரக் களிக்கின் றேன்யான்
சொந்தமிகக் கொண்டாடும் என்னைத் துன்பம்
சுடமுயன்று தோற்பதெலாம் பிறர்கண் ணுக்கு
எந்தவிதம் படுமோவென் றொருகா லத்தில்
எண்ணியவள் மாறுகிறேன் இன்றென் நெஞ்சம்
வந்துநிலை கொள்ளும்உயர் வான சாதி
வடபழநி முருகாபோய் வருவேன் போற்றி.

என்ற பாடலும் அநுபவத்தை உரக்கப் பேசுகின்றது.

பாரதியார் விநாயகர் நான்மணி மாலை யாத்ததுபோல் அம்மையாரும், திருமுருகன் நான்மணிமாலை பாடியுள்ளார். இதிலும் முருகனைப் பணிந்துருகும் பாங்கினைக் கண்டு மகிழ்வோம். இதில் கணபதி துதி காப்பாக அமைகின்றது.

நின்னை நினைந்துருகும் நெஞ்சில் நிலைத்திடுவாய்
என்ன இடர்வரினும் ஏற்றிடுவாய் – அன்புடைய
உன் தம்பி ஆறுமுக உத்தமனின் சீர்பாட
இன்றெனக்குக் காப்பாய் இரு.

முருகனைப் பற்றி வரும் அகவற்பா ஒன்றில்

வேற்படைக் கெதிரே வேதனை துகளாம்
ஆறு முகத்தனை ஆளும் அரசினைக்

*கூறிடக் கூறிடக் குணம்புதி தாகும்*
*ஆணவம் அழியும் ஆசைகள் ஒழியும்*
*பேணிடும் நற்குணம் பெருகியே வளரும்*
*மாணாப் பிறப்பு மறைந்திடும்.....*

என்ற அடிகள் நம் நெஞ்சைக் கவர்பவை.

*மனத்தில் இனிப்பான் மதியில் இனிப்பான்*
*புனையும் கவிதைப் பொருளில் இனிப்பான்*
*சிவனே உணரச் செழும்பொருள் சொன்ன*
*அவனே முருகென் றறி.*

*சேவற் கொடியேந்திச் செங்கையில் வேலேந்திக்*
*கோவைக் கனியிதழில் கொஞ்சுதமிழ்ப் பாவேந்தி*
*நின்றான்என் நெஞ்சைத்தன் நெஞ்சமதில் ஏந்தியவன்*
*சென்றான்என் செய்திடுவேன் செப்பு.*

என்ற முருகனைப் பற்றிய வெண்பாக்கள் அற்புதமானவை.

*தமிழ்போல் இனிக்கும் முருகனவன்*
*தண்ணளி சுரக்கும் தெய்வமவன்*
*இமைகள் கண்ணைக் காத்தல்போல்*
*என்றும் காக்கும் தெய்வமவன்*
*அமைதி யோடே நாமுருகி*
*ஆனந் தக்கண் ணீர்விட்டால்*
*சுமையாய்த் தோன்றும் துன்பத்தால்*
*தோன்றும் கண்ணீர் தோன்றாதே.*

என்ற அறுசீர் விருத்தமும்

*பாரென் னிடத்தில் பரம்பொருள் பார்எனும் பார்தனிலே*
*சீருற வந்த திருப்புகழ் அன்புடன் செப்பிடவே*
*வேரறும் ஆணவம் கண்களில் நீரெழும் விம்மிமனம்*
*ஆரத் தழுவத் தருவான் முருகன் அறிகுவையே.*

என்ற கட்டளைக் கலித்துறையும் நம்மை முருகன்பால் செலுத்த வல்லவை. பாரதியாரின், 'விநாயகர் நான்மணி மாலை', வெண்பா, கலித்துறை, விருத்தம், அகவல் என்ற நால்வகைப் பாக்களால் அமைந்தது. அவன் தம்பி மேல் அம்மையார் யாத்த நான்மணி மாலையோ வெண்பா, கட்டளைக் கலித்துறை, விருத்தம், அகவல் என்ற

பாவகையால் தோன்றியது. 'யார் குற்றம்?' என்ற தலைப்பில் அமைந்த பாடலில்

*இசையினிலே குறையென்றால் எழுப்பி விட்ட*
*இசைவாணன் பிழையன்றோ அங்கு மிங்கும்*
*அசைந்திடுதே செடியென்றால் வலிய காற்றை*
*அடிக்கவிட்டோன் பிழையன்றோ ஈர மண்ணைப்*
*பிசைந்துசெய்த பானையிலே பழுது காணில்*
*பிழையதனைக் குயவனன்றி யார்சு மப்பார்*
*பசுமையிலை பக்தியிலை நெஞ்சில் என்றால்*
*பண்ணியவன் குற்றமின்றி யார்குற் றம்சொல்?*

படைத்தவன் மீதே குற்றம் சுமத்துவது அற்புதமாகஉள்ளது.

'திருக்கருவூர்த் தலப் பெருமை' என்ற தலைப்பில் காணப் பெறும் 77 பாடல்களின் ஓட்டமும் சொல்லமைப்பும் நம் நெஞ்சை நெகிழ்விக்கின்றன. சில காட்டுகள்,

*ஈசன் அடியவருக்(கு) இன்னல் இழைப்பவரை*
*வீசும் மழுப்படையால் வீழ்த்தும் ஒருவிரதம்*
*பூண்ட எறிபத்தர் பூவடிகள் பட்டுலகில்*
*நீண்ட புகழ்விரித்து நின்ற திருக்கருவூர்*

*இன்பத்தை அந்த இறைவனிடம் கண்டுணர்ந்த*
*அன்பர் சிவகாமி ஆண்டார் வசித்ததலம்*
*தேவன் புகழிசைக்கத் தீந்தமிழின் வாயசைத்த*
*தேவர் பிறந்து திகழ்ந்த தமிழ்க்கருவூர்.*

*பேருலகில் வந்து பிறப்பதற்கு முன்னாலே*
*யாரும் குடியிருப்ப(து) அன்னைக் கருவூர்தான்!*

இந்த இறுதிப் பாடல் தத்துவத்தின் ஒளியுடன் மிளிர்கின்றது. அம்மையார் சக்தி தேவிகளைப் பற்றியும் அதிகமான பாடல்களைப் பாடியுள்ளார். அவை அனைத்தும் கல் நெஞ்சத்தையும் கரைக்கும் ஆற்றலுள்ளவை,

*நன்மையெலாம் தந்தருளும் நாயகியாய் நின்று*
*நானிலத்தை வாழ்விக்கும் உமையவளே தாயே*
*உன்னுடைய நாமமெனும் பீஜமதை எங்கள்*
*உள்ளமெனும் பூமியிலே ஒழுங்குடனே நட்டோம்*

அன்புநிறை பக்தியெனும் நீரதனை வார்த்தோம்
அதுசெழித்து அற்புதமாய் வளர்ந்தோங்கக் கண்டோம்
எந்நாளும் அதன்நிழலில் இருக்கின்ற எம்மை
எவரென்ன செய்துவிட இவ்வுலகில் முடியும்?

என்ற பாடல் ஈரேழு உலகங்களையும் ஈன்று கன்னியாக இருக்கும் உமையம்மையைப் பாடியது.

மயிலைக் கற்பகாம்பாள், பவானிதேவி, திருவேற்காடு கருமாரி அம்மன், கொல்லூர் மூகாம்பிகை, மாங்காட்டுக் காமாட்சி, காளித்தாய், காயத்ரி தேவி, யோகினி தேவிகள், லாகினி தேவி. காசினி தேவி, ராகினி தேவி, டாகினி தேவி, ஹாகினி தேவி, யாகினி தேவி, கோலவிழி அம்மன் ஆகிய தேவிமார் மீது அம்மையாரின் பாடல்கள் உள்ளன.

மண்ணுக்குள் தானியத்தின் விதையொன்று முளைத்து
மறுபடியும் எண்ணற்ற தானியங்கள் விளைக்கும்
மண்ணுக்குள் செல்லாமல் வறுபட்ட விதைகள்
வளராமல் சுவைமிக்க உணவாக மாறும்
எண்ணத்தில் எழுகின்ற காமங்கள் அந்த
ஈஸ்வரியின் அருளாலே நிறைவுற்ற தென்றால்
திண்ணமவை மறுபடியும் கிளைவிடுவ தில்லை
தேவிபக்தி கொண்டமனம் மாறுவது மில்லை

மாங்காட்டுக் காமாட்சி மீது பாடிய அற்புதமான பாடல் இது. ஏனையவைகளும் பல்வேறு தத்துவங்களை விளக்குகின்றன.

ஜம்மு நாட்டிலுள்ள வைணவ தேவி பற்றி ஐந்து அருமையான பாடல்கள் உள்ளன. அவற்றுள் ஒன்று.

அம்மாஉன் சந்நிதியின் புனிதம் இந்த
அகிலமதை வாழ்விக்கும் உனையு ணர்ந்தால்
எம்மாயை சூழ்ந்தாலும் அழிந்தி டாமல்
இன்புறலாம் இதயத்துள் மகிழ்ச்சி வெள்ளம்
கும்மாளம் இட்டுவரும் வாழ்க்கை முற்றும்
குறையேதும் வாராது பக்தி பொங்கச்
செம்மாந்து நின்றிடலாம் எனவே உன்றன்
திருவடியில் தலைசாய்த்து வணங்கு வேனே.

அம்மையாரின் பக்தியும் ஈடுபாடும் இதில் ஒளிர்வதைக் காணலாம். அம்மையார் அவர்கள் பார்க்காத தலங்கள் இல்லை. திருத்தலப் பயணத்தில் அவர்கட்குக் கொள்ளை ஆசை. அப்பயணத்தின் காரணமாகத்தான் இத்தகைய பாடல்கள் எழுந்தன.

1964 செப்டம்பர்-அக்டோபர் மாதம் என்பதாக நினைவு. அடியேன் குடும்பம் அப்பொழுது காரைக்குடியில் இருந்தது. நான் திருப்பதியில் இருந்தேன். அப்போது நம்மாழ்வார் தத்துவம் பற்றி ஆய்ந்து கொண்டிருந்தேன். 108 வைணவ திவ்ய தேசங்களைச் சேவிக்கும் திட்டம் இருந்தது. அப்பொழுது என் இளையமகன் இராமகிருஷ்ணனுடன் நானும் சில வைணவத் தலங்களைச் சேவித்துக் கொண்டு, திருப்பரங்குன்றம் முருகனையும் சேவிக்க வந்தேன். தற்செயலாக அம்மையார் அவர்களைத் திருக்கோயில் வாசலில் சந்தித்தேன். முருகன் அருளால் ஒருவர்க்கொருவர் அறிமுகமானோம். அப்போது அம்மையார், கோவையிலிருந்து பெ.தூரனை ஆசிரியராகக் கொண்டு நடைபெற்று வந்த 'கால சக்கரம்' பிறை இதழில், 'செந்தமிழ்த் தீனி' என்ற கட்டுரை எழுதிய ரெட்டியார் நீங்கள்தானா? என்று கேட்டார்கள். அவ்வளவு நினைவு அவர்கட்கு. கட்டுரை எழுதியது 1947-48இல், அம்மையார் கேட்டது 1964இல். அதன் பிறகு அக்குடும்பத்துடன் அடியேனுக்கு நெருங்கிய தொடர்பு ஏற்பட்டது. ஜஸ்டிஸ், பா.ச.கைலாசம் சென்னை உயர்நீதி மன்றத் தலைமை நீதிபதி பதவியை விட்டுத் தில்லி உச்ச நீதிமன்ற நீதிபதி பதவிக்குப் போகின்ற காலம் (பிப்ரவரி - மார்ச்சு 1977) அப்பொழுதுதான் என் பாண்டி நாட்டுத் திருப்பதிகள் என்ற நூலுக்கு (மார்ச்சு 1977) அணிந்துரை வழங்கினார். அதற்குப் பிறகு சுமார் பத்து ஆண்டுகளுக்குப் பின் ஞானசம்பந்தர் என்ற ஆய்வு நூலுக்கு (நவம்பர் 1986)30 எண்சீர் விருத்தங்கள் அடங்கிய சிறப்புப் பாயிரமாலை அளித்து வாழ்த்தினார்கள். அந்தக் கவிதைத் திறனைக் காட்ட மூன்று கவிதைகளை ஈண்டுத் தருவேன்.

*சுப்புரெட்டி யாரென்று சொல்லும் போதே*
*சுகமான சுவைமிக்க தமிழ்ம ணக்கும்*
*ஒப்பரிய ஆராய்ச்சித் திறன்கள் மிக்க*
*உயர்வுடைய நூல்களின்நற் சங்கொ லிக்கும்*
*செப்பமுள்ள சிந்தனையின் ஆழத் துள்ளே*
*திகழ்ந்தொளிரும் முத்தான கருத்துப் பூக்கும்*

கட்டுகின்ற இருளதனை விலக்கி வைக்கும்
காரியங்கள் அகலாமல் காப்ப திக்கும்.

முத்துமணி ரத்தினங்கள் கோத்த தேரில்
முடியாத அழகதனைக் கொலுவி ருத்தி
எத்திசையும் புகழ்விளங்கப் பவனி செல்லும்
ஏற்பாட்டைச் செய்யுமொரு வேந்தனைப் போல்
மெத்தஎழில் விளங்குகின்ற கருத்துத் தேரில்
மேலான இலக்கியத்தை அமரச் செய்து
புத்தொளியை நாற்புறமும் பரவ விட்ட
பூந்தமிழர் திருசுப்பு ரெட்டி யார்தான்,

திருமாலை நெஞ்சத்தில் நிறைத்தி ருப்பார்
சிவனாரை எக்கணமும் நினைத்தி ருப்பார்
ஒருகாலும் பிறர்போற்றும் மதத்தை வாழ்வை
உள்ளத்தில் குறைவாகக் கருத மாட்டார்
சருகாக உலகத்தில் வாழ்வோர் மீண்டும்
தழைக்கின்ற வழிகாண முயற்சி செய்வார்
கருகாமல் காயாமல் அறிவுக் கன்று
கற்பகமாய்ச் செழித்தோங்க வகைகள் காண்பார்.

ஞானசம்பந்தர் வாழ்வையும் அடியேனது நூலின் சிறப்பையும் பல கவிதைகளில் அற்புதமாக விளக்கியுள்ளார். இப்போது அவர்தம் கவிதைகளைப் பேசும் வாய்ப்பைக் கவிஞர்.ரெ.முத்துக் கணேசனார் தமிழ் அறக்கட்டளை வழங்கியது குறித்து மகிழ்கிறேன்.

சபரிமலை ஐயப்பனைப் பற்றியும் ஐந்து கவிதைகள் படைத்துள்ளார். அவற்றுள் ஒன்று,

சரணமெனும் பாட்டிசைத்து மக்கள் வெள்ளம்
சபரிமலை செல்லுகின்ற காலந் தன்னில்
கரணங்கள் மூன்றிலுமே புனிதம் ஓங்கும்
காரியங்கள் அனைத்திலுமே மேன்மை ஓங்கும்
தருணமெலாம் இறைநினைவே நெஞ்சில் தங்கும்
சந்ததமும் ஒளிமயமாம் பாதை தோன்றும்,
மரணமிலாப் பெருவாழ்வு மனத்துள் பூக்கும்
மானுடத்தில் தெய்வீகம் மகிழ்ந்து வாழும்!

அம்மையார் இலண்டனில் இருந்தபோது, 'கொள்ளை எழில்வயிரக் கோபுரம் ஏறிடுவோம்' என்ற தலைப்பில்

சுதந்திரத்தின் வெள்ளிவிழாச்
சுடரொளியில் வந்துலவ – இந்தச்
சவுந்தரத்திற் கொருவாய்ப்பு
தந்ததிலே பெருமகிழ்ச்சி
ஊறிவரும் மகிழ்ச்சியையும்
உளமார்ந்த நன்றியையும்
கூறிடுவேன் உங்களுக்குக்
கும்பிடுவேன் கையெடுத்து
நாடுவிட்டு நாடுவந்து
நலம்வளர வேண்டுமென்று
பாடுபட்டு வாழ்வில்நீர்
பரமளித்து வருகின்றீர்
பொருளீட்டப் பிறநாடு
புகுந்தாலும் மரபுவழி
அருளீட்ட வேண்டுமெனும்
ஆர்வமுடன் திகழ்கின்றீர்

என்று தொடங்கிப் பல அற்புதமான கவிதைகளைக் கேட்போர் நெஞ்சம் பிணிக்கும் வண்ணம் பாடியுள்ளார். விரிவஞ்சி அவை ஈண்டுக் காட்டப் பெறவில்லை. இவை தேசம் என்ற பிரிவில் உள்ளன.

அடுத்து சமூகம் என்ற பிரிவில் 'பொறுமை' என்ற தலைப்பில் காணப் பெறும் ஐந்து கவிதைகளில் ஒன்றைக்காண்போம்.

சிதையுண்டு போகாது சினங்கொள் ளாது
தீர்ந்ததும்நம் கணக்கென்று மனங்கொள் ளாது
புதையுண்டு சிறியவிதை பொறுமை யோடு
பூமிக்குள் தவம்செய்யும்; புதிய தாகக்
கதையுண்டு பண்ணுமது; பூக்கும் காய்க்கும்
கனியுதவும் பொறுமையினைக் கடைப்பி டித்தால்
எதையுண்டு பண்ணுவதற் கியலா தென்றே
எல்லோரை யும்பார்த்துக் கேள்வி கேட்கும்?

இதில் ஒரு சிறுவிதை பொறுமையைக் காட்டிச் செய்யும் அற்புதங்கள் அற்புதமாகக் காட்டப் பெறுகின்றன. இப் பொறுமை அம்மையாரின்

கற்பனைச் சிகரங்களைக் காட்டி நிற்கின்றது.

சான்றோர் பிரிவில் பல நல்ல கவிதைகள் காணப் பெறுகின்றன. இவை பெரும்பாலும் சுந்தர மூர்த்தியின் திருத்தொண்டத் தொகைப் பாணியிலும், பாரதியார், பாவேந்தர், கவிமணி இவர்கள் பாணியிலும் அமைகின்றன. பல பெரியோர்கள்-சான்றோர்கள் அம்மையாரின் கவிதைகள் மூலம் நமக்குக் காட்சி தருகின்றனர். பெரும்பாலோர் பாடல்கள் நீளமான அகவலில் அமைந்திருப்பதால் அவற்றை ஈண்டுக் காட்ட முடியவில்லை. ஒருசிலரை மட்டிலும் காட்டுவேன்.

*எதுவழி என்று காட்டி*
*இருவினை தவிர்க்க வந்த*
*முதியவர் தேவா ரத்தின்*
*மூவரில் ஒருவர் அப்பர்*
*நிதியவர் எங்கட் கென்றும்*
*நினைப்பினை நெஞ்சில் என்றும்*
*பதித்தவர் நடக்கத் தூக்கும்*
*பாதங்கள் நீடு வாழி!*

என்பது அப்பரது பெருமை காட்டும் எட்டுப் பாடல்களில் ஒன்று.

*சாதியா பெரிது ஒத்த*
*தன்மையே பெரிது, செல்லும்*
*பாதையா பெரிது? பக்திப்*
*பயணமே பெரிது என்னும்*
*சேதியால் எங்கும் சென்றே*
*அருளெனும் செடியை நட்ட*
*மேதையாம் இராம லிங்கர்*
*மேன்மையை அறிவோம் நாமே.!*

என்பது அருட்பிரகாச வள்ளலாரை அறிமுகம் செய்வது.

*ஊனுடம் பெடுத்துத் தெய்வம்*
*உலகினில் அவதரித்தும்*
*ஞானநன் னெறியைக் காட்ட*
*நயந்துநம் இராம கிருஷ்ணர்*
*ஆன்மிகம் என்று சொல்லும்*
*அரியதோர் உண்மைக் கிந்த*

நானிலம் கண்டு கொண்ட
நல்லதோர் விளக்கம் ஆவார்.

என்பது வங்க நாடு ஈந்த இராமகிருஷ்ணரைப் பற்றிய ஆறு பாடல்களில் ஒன்று.

மோகத்தை அகற்றி இன்ப
முகத்தினைக் கண்டே, அந்த
ஏகத்தை இணையில் லாத
எழிலினை எண்ணி எண்ணிச்
சோகத்தை மாற்றும், நெஞ்சுள்
சுகத்தினைக் காண்என் றார்த்த
வேகத்தை விவேகா னந்த
வெள்ளத்தை வியவார் யாரே?

என்பது வங்க நாடு தந்த நரேந்திரர் என்னும் விவேகானந்தரைப் பற்றிய ஐந்து பாடல்களில் ஒன்று.

இலக்கியமும் சரித்திரமும் காட்டு கின்ற
இணையற்ற பெண்களுக்கும் உள்ளம் தன்னைக்
கலக்குகின்ற வேதனைகள் வந்த துண்டு,
காலத்தின் கைப்பிடியுள் நொந்த துண்டு,
துலக்கமுறு நமதன்னை சார தைக்கோ
தொடர்ந்திருந்த சௌபாக்கியம் அதனால் எந்த
நலக்குறைவும் வந்ததிலை வாழ்க்கை முற்றும்
நன்மைகளே பெருகிவரக் கண்டி ருந்தோம்

என்பது அன்னை சாரதா தேவியைப் பற்றிய பாடல்களில் ஒன்று.

கனிவினைப் பார்வை யாக்கும்
கலையினில் வல்ல உன்றன்
நினைவினில் ஞானம் தந்த
நிழலினில் ஒதுங்கி நிற்கும்
எனைஇடர்ப் படுத்த வந்தால்
எவ்வகைத் துன்ப வாளும்
முனையது மழுங்கும், தோற்று
மூலையில் ஒடுங்கும் தானே.

என்பது காஞ்சிப் பெரியவரைப் பற்றிய ஒன்பது பாடல்களில் ஒன்று.

சிந்திடும் சொற்கள் யாவும்
செந்தமிழ்த் தேனை யள்ளி
வந்திடும், வாடு கின்ற
மனத்தினுக் கென்றும் சாந்தி
தந்திடும் உன்னைச் சார்ந்து
சரணெனக் கிடப்போர் தங்கள்
முந்திய வினைகள் எல்லாம்
முறிந்திடப் பெறுவர் தாமே

திருவரங்கம் ஆண்டவன் சுவாமிகளைப் பற்றிய ஆறு பாடல்களில் ஒன்று.

கருடன்தன் மந்திரத்தால் கண்டனைநீ வாசி
தருமுகனின் மந்திரத்தைத் தாவியவன் வந்து
பெரும்புகழே சேர்கவெனப் பேசினனே ஆசி
அருமையிது ஆர்பெற்றா ரால்.

தூப்புல் பிள்ளை என வழங்கும் வேதாந்த தேசிகரைப் பற்றிய பன்னிரண்டு வெண்பாக்களில் இது ஒன்று.

இரும்புமனம் கொண்டுலகில் கொடுமை செய்தே
எப்போதும் வாழ்ந்திருந்த வெள்ளைக் காரர்
கரும்பனைய இன்மொழியைக் கேட்ட தாலே
கல்லுருகும் தன்மையிலே உருகி உள்ளம்
விரும்பிஒரு நல்வழியைத் தேடிக் கொண்டார்
வேல்வாளை எறிந்துவிட்டுச் சரண டைந்தார்
அரும்பியது புதுமகிழ்ச்சி அவர்கள் வாழ்வில்
அண்ணலிவர் புதுப்பார்வை பட்ட தாலே!

ரிதமான பூதான யக்ஞம் இயற்றி வரலாற்றுப் புகழ்பெற்ற வினோபா வே பற்றிய நான்கு பாடல்களில் இஃதொன்று.

நோற்றது பெரிதோ ஞானி
நூறுநூ றாண்டுக் காலம்
வேற்றவர் பூட்டி விட்ட
விலங்கினை உடைக்கத் தாவி
ஆற்றொணாத் துயரை யெல்லாம்
அகமகிழ்ந் தையர் வாழ்வில்

ஏற்றதே பெரிது! மக்கள்
இதயத்தில் அவரோர் தெய்வம்!

திருச்சி வரகனேரியைச் சார்ந்த வ.வெ.சு. அய்யர் பற்றிய முப்பத்திரண்டு பாடல்களில் இஃதொன்று. சாதி வேற்றுமை காட்டியதன் காரணமாகத் தந்தை பெரியார் காங்கிரசுக்கே முழுக்குப் போட்டதாக வரலாறு.

யாரெது சொன்னா லென்ன
ஆத்திரப் பேச்சால் உன்றன்
சீரதை வயிரக் குன்றைச்
சிதைக்கவா முடியும்? இந்தப்
பாரதம் உனது தெய்வம்;
பக்தியை அறியும்; தீட்டும்
கூரிய மதியை என்றும்
குவலயம் புகழும்; வாழி!

கண்ணுதல் வந்து நெற்றிக்
கண்ணினைத் திறந்த போதும்
எண்ணிய சொன்ன வீரன்
இணையிலாக் கீர னாக
மண்ணிலே வாழ்ந்த அந்த
மனிதருள் மனிதன் நீயோ?
திண்ணிய நெஞ்சங் காட்டத்
திரும்பவும் வந்திட் டாயோ?

அருமை இராஜாஜியைப் பற்றிப் பாடிய பாடல்களில் இவை இரண்டு.

தன்னாடு தாழ்ந்ததனைக் கண்டு துன்பம்
தாங்காத தன்மான வீரர் இந்தத்
தென்னாடு பெற்றெடுத்த தீரத் தியாகத்
தீயினிலே முழ்கவந்த சூரர் எங்கள்
பொன்னாடு பொன்னாடு என்று கண்ணைப்
போலஅதைக் காக்கும்அரு ளாளர் இன்று
என்னாடும் போற்றும்அறி வாளர் மக்கள்
ஏற்றமுறப் பல்லாண்டு வாழ்க! வாழ்க.!

பெரியவர் காமராசரைப் பற்றிய பலவகைப் பாடல்களில் இஃது ஒன்று.

வெற்றுவாய்ச் சொல்லின் வீரர்
வீசிடும் அபவா தத்தை

ஏற்றுவாய் மேல்நடப்பாய்
ஏழையர் நலம்பெருக்கச்
சுற்றுவாய்; உனது சொந்தச்
சுகமெதும் கருதாய் நெஞ்சில்
தோற்றுவாய் என்றும் மக்கள்
தொழுதிடு மாறு நீயே.!

இந்திரா காந்தி மீது பாடிய ஐந்து பாடல்களில் இஃதொன்று.

வெளிநாட்டில் பிறந்தாலும் தமிழின் மேன்மை
மிகவுயர்ந்து வாழ்க்கையிலே பார்க்கும் நல்ல
ஒளிகாட்டும் இலக்கியங்கள் சமைத்துத் தந்தார்
உயர்தமிழ்க்கே அகராதி தொகுத்துத் தந்தார்
தெளிவான இலக்கியங்கள் எழுத்து மாற்றம்
செய்துவைத்துத் தமிழ்நெஞ்சில் நிலைத்து விட்டார்
ஒளிமறைவு இல்லாமல் கேட்கின் றேன்நான்
ஒருதமிழர் இவர்போலச் செய்த துண்டோ?

பெண்ணுக்குக் கற்பென்னும் அணியே போலப்
பிள்ளைக்கு மழலையெனும் கனியே போலக்
கண்ணுக்குப் பார்வையெனும் பயனே போலக்
கவிதைக்குச் சொல்லென்ற கவினே போல
மண்ணுக்குப் பயிர்கள்தரும் விளையே போல
மனதுக்குக் கருணையெனும் அமுதே போல
ஒண்ணுக்குள் ஒண்ணாகித் தமிழர் வாழ்க்கை
உடன்கலந்த மாமுனியை உளத்தில் கொள்வோம்.

பெஸ்கி பாதிரியார் என்ற தம்பெயரை வீரமாமுனிவர் என்று மாற்றிக் கொண்டு தமிழர் போல வாழ்ந்து தமிழருக்கு அரும்பெருந் தொண்டாற்றிய மேதையைப் பற்றிய ஒன்பது பாடல்களில் இவை இரண்டு.

இன்னும் தந்தை பெரியார். ஆறுமுக நாவலர், கம்பர் ,வள்ளுவர், சங்கரதாஸ் சுவாமிகள், பாரதி, பாரதிதாசன், மறைமலையடிகள், ரசிகமணி, டி.கே.சி, செட்டி நாட்டரசர் அண்ணாமலைச் செட்டியார், தமிழ்த் தென்றல் திரு.வி.க., வள்ளல் அழகப்பர், தமிழ் நாடகத் தந்தை சம்பந்த முதலியார், சொல்லின் செல்வர் சேதுப் பிள்ளை, நாமக்கல் கவிஞர், டாக்டர் மு.வ., தமிழ்க் கடல் இராய.சொ., கவியரசு கண்ணதாசன் முதலியோர்கள் பற்றி

அருமையான பாடல்கள் உள்ளன விரிவஞ்சி அவை காட்டப் பெறவில்லை.

இன்னும் ஏராளமான பாடல்கள் நூல்வடிவம் பெறாமல் உறங்கிக் கிடக்கின்றன. முதல் தொகுதியை வெளிக்கொணர்ந்த குழந்தைக் கவிஞர்அழ. வள்ளியப்பா போல் எவர் வருவாரோ? அஃது அம்மையார் வழிபடும் தமிழ் முருகனுக்குத்தான் வெளிச்சம்.

இவர்தம் பேச்சும் தென்றலாக இருக்கும். ஆகவே இவரைத் திரு.வி.க.வைப் போலவே தமிழ்த் தென்றல் என்றும், இந்தியக் கவிக்குயில் சரோஜினி தேவியாரைப் போல் தமிழ்க் குயில் **(Nightingale of Tamil Nadu)** என்றும் போற்றலாம்.

# 5. கவிச் செம்மல் டாக்டர். ரெ. முத்துக்கணேசன்

இவர் செட்டி நாடு ஈன்றெடுத்த 'முத்து'. காரைக்குடியில் பிறந்தவர் (1927). காரைக்குடியில் உயர்நிலைக் கல்வியை முடித்துக் கொண்டவர். இயல்பாகவே கவிதையுள்ளம் படைத்தவர். தமிழ்ப் புலவர்கள், திரு.க.தேசிகன், திரு. அமிர்தலிங்கம் போன்றவர்களின் தொடர்பினால் கவிதை இயற்றும் திறன் இவருக்கு வளர்ந்தது. இவர் குழந்தைக் கவிஞரும் கூட. 'அமுதம்' என்ற பெயரில் குழந்தைக் கவிதைகளின் தொகுப்பு வெளிவந்துள்ளது.

இவர் சத்துவகுணம் மிக்கவர். ஆதலால் அமைதியான போக்கு இவர்தம் இயல்பாக அமைந்தது. அதன் வழியாக இறையன்பும், இறைவழிபாடும் இவர்தம் அரிய பண்புகளாக அமைந்தன. வாழ்க்கை முழுதும் கவிதைகளை இயற்றுவதே இவர்தம் சிறந்த பண்பாக இருந்து வருகின்றது. இவர்தம் கவிதைகளில் தெய்வப் பாடல்களும், தெய்வ நெறியில் வாழ்ந்த அருளாளர்களைப் பற்றிய பாடல்களுமே அதிகமாக உள்ளன. எழுபது அகவையைத் தாண்டிய இவருக்கு அண்மையில் உள்ள மதுரை-காமராசர் பல்கலைக் கழகம் 'தமிழ்ச் செம்மல்' விருதினை வழங்காதது வியப்பினைத் தருகின்றது. அந்த விருதினை இவருக்குத் தருவதால் பல்கலைக் கழகத்துக்குத்தான் பெருமை. இத்தகைய கவிச்செம்மலின் கவிதைகள் காட்டும் நயத்தில் ஆழங்கால் படுவோம்.

இவர்தம் பாடல்களில் பெரும்பாலும் பக்தியே மீதூர்ந்து நிற்பதைக் காணலாம். வேறுபல பொதுத் தலைப்புகளிலும் பாடல்கள் காணப் பெறுகின்றன. அப்பாடல்கள் பெரும்பாலும் வெண்பா, எண்சீர் விருத்தம், தாழிசை முதலிய யாப்பு வகைகளில் அமைந்திருப்பதைக் காணலாம். தமிழ் இலக்கியங்களில் இவர் கொண்டிருக்கும் அதிகமான ஈடுபாடிற்குச் சான்றாக இவர்தம் தமிழ்த்தொகை என்ற நூல் அமைகின்றது. இந்த நூல் எண்பது பாடல்களின் விளக்கம் கொண்டது. இவை தனிப்பாடல் திரட்டு (கா.சு.பிள்ளை பதிப்பு), பெருந்தொகை, தொல்காப்பியப் பொருளதிகாரம், பேராசிரியம், நச்சினார்கினியம், யாப்பருங்கலக் காரிகை, யாப்பருங்கல விருத்தி, தண்டியலங்காரம், வீரசோழியம், தமிழ் நாவலர் சரிதை, தனிச்செய்யுட் சிந்தாமணி, பிற்காலச்

சோழர் சரித்திரம் பாண்டியர் வரலாறு (டி.வி.ச.பண்டாரத்தார்) போன்ற நூல்களில் தேர்ந்தெடுத்த பாடல்கள் கம்பனடிப்பொடி சா.க.தந்த கல்வெட்டுப் பாடல்கள் , திரு,க. தேசிகன் பாடல்களுடன், தம்முடைய பாடல்களும் ரசிகமணி. டிகே.சி. பாணியில் விளக்கம் பெற்றிருப்பவை ஆகும்.

கவிஞரின் தமிழ்ப்பற்று -தமிழ்த்தொகை என்ற நூலில்

*கடல்வாய்ப் புகுந்தாய் கறையான்வாய்த் தப்பி*
*இடர்வாய்ப் பலமொழியும் ஈன்றாய் – படர்தமிழே*
*காலப் பிறைகண்டும் கன்னியென் பாருன்னை*
*ஞாலத் தவர்மயக்கோ நன்று.*

என்ற பாடலால் சிறப்பாக விளங்குகிறது. எங்கும் பரவி நிற்கும் தமிழே. உன்னைக் கடல் கொண்டது. அதனுள்ளும் புகுந்து மீண்டாய். அறியார் கையில் தவழ்ந்த நீ தேடுவாரற்ற நிலையில் கறையானுக்கு இறையானாய், அதனின்றும் தப்பிப் பிழைத்தாய். இவ்வாறு பல வழியில் துன்புற்ற காலத்தும் பல மொழிகளை ஈன்றாய். பல்லாயிரம் பிறைகண்டு வாழ்ந்தாய். பல மொழிகட்கும் தாயாக விளங்கும் உன்னை இவ்வுலக மக்கள் மயக்கத்தாலோ என்னவோ "கன்னி கன்னி" என்றே வழங்குகின்றனர். இதுவே நன்று என்பதன் விளக்கம். எனக் கவிஞர் தாமே விளக்கம் தருவது சிறப்பாக உள்ளது.

இவ் விளக்கம் பிறப்பே இல்லாத சிவபெருமானை " ஆதிரையான் - ஆதிரையான்" (ஆதிரை நட்சத்திரத்தில் பிறந்தவன்) என்று சொல்வது போலுள்ளது என்று கூறும் முத்தொள்ளாயிரப் பாடலை இவ்விடத்தில் நினைவு கூரச்செய்கிறது. இது தவிர தமிழ்பற்றி வரும் எல்லாப்பாடல்களும் இக் கவிஞரின் ஆழ்ந்த தமிழ்ப் பற்றினைக் காட்டுகின்றன. 'தமிழ் ஊசல்' என்ற தலைப்பில் ஒரு பாடல்,

*வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து நின்று*
*வானுறையும் தெய்வமா வழிகள் கூறும்*
*துய்யமொழி முப்பாலாம் ஆரம் ஆடத்*
*தொல்சங்கத் தொகைநூலாம் அணிகள் ஆடச்*
*செய்யதிரு வாசகங்கள் இசைமு ழக்கச்*
*சிவமாக்கும் திருமுறைகள் போற்றி செய்யப்*

பொய்மலராம் தனிப்பாக்கள் உதிர ஆடும்
பேசுமொழித் தமிழ்த்தாயே ஆடீர் ஊஞ்சல்

இஃது 'ஊசல்' என்ற இலக்கிய வகையைச் சேர்ந்தது. ஊசலாவது ஆசிரிய விருத்தம் அல்லது கலித்தாழிசையில் ஆகி, 'ஆடீர் ஊஞ்ச, ஆடாமோ ஊசல்', 'ஆடுக ஊசல்' என ஒன்றால் முடிவு பெறுமாறு அமைப்பது. திவ்வியகவி பிள்ளைப் பெருமாள் அய்யங்காரின்; 'சீரங்க நாயகர் ஊசல்' மிகு புகழ் வாய்ந்தது. இது கலம்பகம் என்ற நூலில் ஓர் உறுப்பாகவும் வருவதுண்டு. இவ்வகை இலக்கியம் தொண்ணூற்றாறு பிரபந்த வகைகளுள் ஒன்று. கவிஞர் முத்துக் கணேசனார் தமிழைத் தமிழ்த் தாயாக உருவகித்து ஊசலில் ஆட விடுகின்றார்.

'தமிழ் அம்மானை' என்ற தலைப்பில் பதினைந்து பாடல்கள் உள்ளன. 'அம்மானை' என்பது பிரபந்த வகைகளுள் ஒன்று. மூன்று மகளிர் ஒருங்கு இருந்து அம்மானை ஆடுங் காலத்துப் பாட்டுடைத் தலைவன் புகழை ஒருத்தி வினாவாகப் பாட, ஒருத்தி விடையளிக்கும் முறையில் பாட, மற்றொருத்தி அதற்கான காரணங்கள் கூறும் முறையில் பாடுவதாக அமைந்திருக்கும். இருபது பாடல்களில் அமைந்த மணிவாசகப் பெருமானின் 'திருவம்மானை' மிகுபுகழ் வாய்ந்த இலக்கியம். இது ஒருத்தி பாடுவதாக அமைந்திருப்பது. கவிஞர் முத்துக் கணேசனார் மூவர் பாடுவதாக அமைந்துள்ளார். பதினைந்து பாடல்களில் தமிழை ஒருவகையாக உருவகித்துப் பாடும் கவிஞர், தமிழ்த்தாய் குறள், சிந்தாமணி, இராமகாதை, சிலம்பு போன்ற நூல்களாக ஆயினளோ என்று வினா விடுத்து, அங்ஙனமே ஆயினாள் என்று விடையிறுத்து முடிக்கின்றார்.

நாவாரப் போற்று திருநல்ல மலர்தொடுத்துப்
பூவாரம் பூணாத பொற்றமிழாள் அம்மானை
பூவாரம் பூணாத பொற்றமிழாள் ஆமாயின்
தேவாரம் பூண்ட செயலென்ன அம்மானை
தேவாரம் பூண்ட தெய்வமகள் அம்மானை

இந்த இலக்கியத்தின் இறுதிப் பாடலில், கவிஞர் தம்முடைய 'நல்லுரை வெண்பா' என்ற நூலுக்கும் இடந்தந்து விடுகின்றார்.

முத்துப் பல்வரிசை முகங்காட்டும் இச்செல்வி
தத்தி மொழிபேசும் தமிழ்மாதோ அம்மானை

*தத்தி மொழிபேசும் தமிழ்மாதே ஆமாகில்*
*இத்தரையில் வெண்பாவை இசைத்தனளே அம்மானை*
*இசைத்ததுவும் நல்லுரை வெண்பாவோ அம்மானை.*

இவர் தமிழைத் தமிழ்த் தாயாக உருவகம் செய்து பாடியிருப்பது அற்புத மாக உள்ளது.

*கலையாகிக் கருத்தாகி ஒலியாகி*
*எழுத்தாகிக் கவியு மாகித்*
*தலையாகி அகமாகிப் புறமாகித்*
*தவமாய குறளு மாகி*
*நிலையாகிச் சிலம்பாகிக் கதையாகி*
*நினைவிலுறு துதியு மாகிச்*
*சிலையாகி அறமாகி ஒளிர்கின்ற*
*தமிழ்த்தாய்........*

இங்ஙனமே 'தமிழ்மொழியாள்' என்ற தலைப்பிலும்

*பேராள நூல்பலவும் பிறப்பிப் பாளைப்*
*பிறங்குபுகழ் வானகத்தே கவிஞர்க் கென்றும்*
*வாராத நற்செல்வம் வழங்கு வாளை*
*வளமார்ந்த வாசகமாம் குறளே ஆகித்*
*தீராத நோய்பலவும் தெளிவிப் பாளைச்*
*சிந்தையுளே தித்திக்கும் செந்தேன் ஆய*
*சீராளை வாழ்வுண்மை செப்பு வாளைச்*
*செந்தமிழாம் மொழியாள்....*

என்று தமிழைத் 'தமிழ் மொழியாள் என்று உருவகித்துள்ளார்.

'தமிழாயிரம்' என்ற தலைப்பில் கும்மி, தாலாட்டு, பள்ளு, பழமொழி, அகம், புறம், தேவாரம் என்று பட்டியலிட்டுக் காட்டித் தமிழாயிரத்தைப் பாடிப் புகழ்ந்து மகிழ்கின்றார்.

*ஊனுருக்கி என்புருக்கி உலப்பிலா ஆனந்தத்*
*தேன்பெருக்கும் வாசகமாம் தெள்ளுதமிழ் ஆயிரமே*
*தரணியெலாம் வீரத்தால் தானாளும் மன்னவர்க்குப்*
*பரணிபல பாடுகின்ற பண்தமிழும் ஆயிரமே*
*புத்தொளியாய்ப் பொன்னொளியாய்ப் பூவொளியாய்த் தெய்விகமாம்*
*முத்தொளியாய் முகிழ்த்ததமிழ் ஆயிரம்நூ றாயிரமே.*

ஞானத் தமிழ்' என்ற தலைப்பில் திருமுறை, பூதத்தாழ்வார், பட்டினத்தார், அருணகிரியார் குமரகுருபரர், தாயுமானவர், இராமலிங்கர் இவர்கள் தமிழை வெண்பா யாப்பில் அறிமுகம் செய்து மகிழ்கின்றார்.

கவிஞர் முடியரசன், பாவலர்மணி ஆ,பழநி இவர்கள் கவியரங்கப் பாடல்களால் புகழ்பெற்றது போல் டாக்டர் முத்துகணேசனும் தம் கவியரங்கப் பாடல்களால் மிகுபுகழ் பெற்றுள்ளார்.

கம்பன் திருநாள் (20.3.1962) கவியரங்கத்தில் திருமுடிப் பெருமை என்ற தலைப்பில் பாடியவற்றுள் சில.

*கோலமான் வண்ணத்தைக் குறிஞ்சிப் பூவைக்*
*கூடுபனி, நீர்ப்புனலை அன்பைத் தேனை*
*நீலவான் பேரழகை உண்மைக் கற்பை*
*நெறிமுறையை அரசியலை அறத்தை யெல்லாம்*
*ஆலமா மரம்போலக் கம்ப நாடன்*
*ஆயிரமா யிரங்கவியாய் அமைத்த ளித்தான்*
*ஞாலமார் தமிழ்முடியாய் இராம காதை*
*நற்றமிழ்த்தாய் சூடிவரும் முடியே யன்றோ*

இது தமிழ் முடியைக் காட்டும் அற்புதமான பாடல். இப்பாடலின் கம்பீரம் கம்பன் பாடலின் கம்பீரத்தை ஒப்ப அமைந்துள்ளது. இதன் சொல்வளமும், அது நம்முள்ளத்தில் எழுப்பும் கற்பனை கலந்த கருத்து வளமும் நம்முள்ளத்தில் மகிழ்ச்சியைப் பொங்க வைக்கின்றன.

*உலகங்கள் பலப்பலவாய் வாழ்ந்திட் டாலும்*
*ஒருகுடைக்கீழ் ஆட்சியிலே நிலைத்திட் டாலும்*
*இலகுபுகழ்க் காராளர் இருகை பார்த்தே*
*இயங்கியிடல் வேண்டுமென்றான் கவிதைக் கம்பன்*
*திலகமெனும் நிலத்தாயின் வயல்கள் ஊடே*
*திகழ்கின்ற நாற்றுமுடி யன்றோ மன்னர்*
*குலமுடியிற் கொண்டிழைத்த முடியே யாகும்*
*குலச்சடையன் கொடைமுடிபோல் தளிர்க்கு மாலோ !*

இது கம்பன் வருணிக்கும் நாட்டு வளத்தை ' நாற்று முடி' என்ற சொற்றொடர் கடைசியரின் பூ முடித்த தலைமுடியை நினைக்கச் செய்கின்றது. அது மட்டுமா? 'சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம்' என்று கூறிய வள்ளுவரையும் நம் மனத்திரையில் கொண்டு வந்து நிறுத்துகின்றது. மன்னர் முடியும் நாற்று முடியின் அடிப்படையின் கீழன்றோ

அமைந்துள்ளது என்ற கருத்தைச் சுட்டியுரைத்துக் குலச் சடையன் கொடைமுடியையும் நன்றியுடன் நினைக்கச் செய்கின்றது. இவற்றையெலாம் மின்னல்போல் காட்டும் டாக்டர் முத்துக் கணேசனாருக்கும் 'தமிழ்ப்புலமைமுடியைச்' சூட்டி நம்மை மகிழ்விக் கின்றது.

இங்கு கவிஞர் ஆறு பாடல்களில் ' கருத்து முடி' என்ற தலைப்பில் கோடி கோடியாகத் திருமுடிகளைக் காட்டுகின்றார். இப்பாடல்கள் ஒவ்வொன்றும் நமக்கு ஒருபடித் தேனாக இனிக்க வைக்கின்றன.

*பூமாலை உடல்புரளப் பூக்கள் சூடிப்*
*பொய்ப்பெண்தான் உடல்காட்டி நடன மாடப்*
*பாமாலை இசைதொடுத்தே பக்கம் நின்று*
*பைங்கொடியாம் பெண்ணொருத்திப் பாட்டுப் பாடல்*
*காமாலைக் கண்ணுடைய மன்னர் பல்லோர்*
*கணிகையர்தம் திருவடியில் மயங்கி நிற்க*
*நாமேலே இருத்தலாகா தெனநி னைந்தே*
*நைந்திழிந்த திருமுடிகள் கோடி ! கோடி !*

இதில்வரும் கற்பனைக் காட்சிகள் நம் மனத்திரையில் விழும்போது அவை நாம் வெள்ளித் திரையில் விழுந்தாற் போல் கண்டு அநுபவிக்கிறோம். இன்னொரு பாடல்,

*நிலம்பூத்த மலர்க்கூட்டம் சிதைவு றாமல்*
*நீளுறுப்பால் தேனெடுக்கும் தேனீ போலக்*
*குலம்பூத்த வாழ்விருக்க வளமை உண்ணும்*
*குள்ளநரி தந்திரத்தார் அமைச்ச ருண்டு*
*நலம்பூத்த நல்லோராய்க் கையில் சிக்கி*
*நற்பதுமை மன்னரென வாழ்ந்தோர் பல்லோர்*
*தலம்பூக்க வழியின்றித் தலையில் நின்றே*
*தவித்திட்ட திருமுடிகள் கோடி ! கோடி !*

இதில்வரும் உவமைகள் அற்புதம். நரித் தந்திரமுடைய அமைச்சர்கள், பொம்மை அரசர்கள், கையாலாகாத மன்னர்கள் இவர்களைக் காட்டி நம்மைச் சிந்திக்க வைக்கும் கணேசனாரின் கவியுள்ளம் வாழ்க, பிறிதோர் பாட்டில்

வாய்திறந்த மன்னர்வாய் மூடு முன்னர்
வழக்கமாய் ஆம்போடும் பேர்கள் கூடிப்
பேய்வளர ஆட்சிசெயும் மன்னர் மாட்டே
பேறிழந்து விழிக்கின்ற முடிகள் கோடி

என்று விசித்திரமான மன்னர்கள் கூட்டத்தைக் காட்டுகின்றார்.

பண்புகளையெல்லாம் பல்வேறு முடிகளாகக் காட்டும் பாங்கினையுடைய பாட்டாக ஒன்றைக் காண்போம்.

நோய்பெருகும் துன்புடைய உள்ளம் மாற
நுண்ணகத்தின் அன்புமோர் முடியே யன்றோ
தேய்புகழின் செயலுடையார் நட்பு மாறச்
சேயுளத்துப் பண்புமோர் முடியே யன்றோ
காய்மையின்றி மக்களுயிர் காத்துத் தாங்கும்
காவலனின் நல்லுடலும் முடியே யன்றோ
தாய்மைநிகர் பொறையுடமை கொண்ட வாழ்வு
தனிமுடியா யிலங்குமொரு முடியே காணீர்

இங்கு அன்பு, பண்பு, நல்லுடல், பொறையுடைமை ஆகிய பண்புகளையெல்லாம் முடியாக்கி மகிழ்கின்றர். இத்தனை பண்புகளையுடைய கவிஞரோ ஒரு தங்க முடியைக் கொண்டவர் என்று நாம் எண்ணுகின்றோம்.

முத்தாய்ப்பாக ஓர் முடியைக் காட்டுகின்றார்கவிஞர். அதுதான் 'கம்பன் முடி' என்ற ஓர் அற்புதமான மணிமுடி. இந்த முடியில் பதிக்கப் பெற்றிருக்கும் நவமணிகளைக் காட்டுகின்றார் கவிஞர். பாட்டையும் அதில் பதிக்கப் பெற்றிருக்கும் கற்களையும் காண்போம்.

மருவினிய உயிர்க்காதல் பச்சை தோன்றும்
மலர்கின்ற நட்புருவாய் மணிகள் தோன்றும்
உருவளரும் பேரறிவாம் வைரம் தோன்றும்
ஒளிர்கின்ற நல்லுறவாய் நீலம் தோன்றும்
திருவழகு தமிழ்க்கவிதை முத்தாய்த் தோன்றும்
திகழ்கின்ற அறவடிவாய்ப் பவளம் போன்றும்
ஒருநிலவாய் ஒண்சுடராய்க் கலைகள் தோன்றும்
உயர்கம்பன் திருமுடியின் கற்கள் அம்மா!

பாட்டில் எப்படிக் கற்கள் ஒளி விடுகின்றன பாருங்கள்.

அழகப்பா கல்லூரியில் நடைபெற்ற கலைவிழாக் கவியரங்கத்தில் " பொழுதிடைத் தெரியிற் பொய்யே காமம் " என்ற குறுந்தொகைப் பாடலின் தலைப்பில் பாடிய கவிதைகளில் சிலவற்றை ஈண்டு தருகின்றேன். முதலில் குறுந்தொகையை வாழ்த்துகின்றார் கவிஞர்.

*நிலந்தழைக்க உயிரெழுந்து நாட்கள் செல்ல*
*நினைவெழுந்து நடமாடக் காலம் ஏகப்*
*புலந்தழைக்க உணர்வெழுந்து வேற்று நாட்டில்*
*பொன்றாத பழம்பாடல் தோன்றா முன்னர்க்*
*குலந்தழைக்க எழுந்திட்டார் தமிழர் என்பார்*
*குறைவகற்றும் நிறைகவிதை தமிழிற் கண்டார்*
*நலந்தழைக்கச் சங்கத்தார் வகுத்த ஏடாம்*
*நல்லமுதக் குறுந்தொகைக்கே ஞாலம் ஈடோ*

அடுத்து, கவிஞரக்கு ஆசிரியராகத் திகழ்ந்த பேராசிரியர், க. தேசிகனாரை வாழ்த்துகின்றார். தேசிகனாரின் பேச்சில் மூச்சில் எல்லாம் கவிதைகள் நடனமாடும். சொல்வளம் கருத்து வளம் மிக்க கவிதைகளைப் படைக்கும் திறன்மிக்கவர். அடுத்து வள்ளல் அழகப்பரை வாழ்த்தும் பாங்கில்

*என்னகத்துக் கவிப்பொருளை எழிலறமாம்*
*கதிர்வீசும் இளஞா யிற்றைத்*
*தன்னகத்துச் சார்ந்தாரைத் தானாகக்*
*கண்டருளும் திங்கள் தன்னைத்*
*தென்னகத்துப் புகழோங்கத் தெளிஞானக்*
*கலைக்கோயில் கட்டு வித்த*
*மின்னகத்து மென்முகிலை அழகப்ப*
*வள்ளலையே வாழ்த்தி வாழ்வாம்*

என்ற பாடல் அமைந்து வள்ளலை நினைக்கச் செய்கின்றது.

அடுத்துப் பாட்டரங்கத்தின் தலைப்பாக அமைந்த அடிகளை, அருளிய அள்ளூர் முல்லையார் என்ற சங்கப் புலவரை

*கரும்புநிகர் பொற்கொடியாள் நடன மாடக்*
*கத்தூரி புனுகுசவ் வாது வீச*
*அரும்பும்இள மாதொருத்தி அருகி ருக்க*
*அள்ளுசுவை இதழ்த்தேனைப் பருகும் பேற்றை*

விரும்புகின்ற மக்கள்வாழ் இக்கா லத்தே
விரைகாமம் பொழுதறியின் பொய்யே என்ற
பெரும்புலமைத் தமிழ்வல்ல அள்ளூர் முல்லைப்
பேராசான் அக்பொருளும் பொன்னே யன்றோ !

என்ற அரிய பாடலின் வாயிலாக நினைவு கூர்கின்றார்.

முளைமதியில் ஒதுப்புறத்தே காண்பார் கண்ணில்
முழுநேர வேலைக்கே ஏகும் சந்தில்
விளைகதிரை அறுக்குங்கால் வேலி யோரம்
விளையாடி மகிழ்கின்ற புன்சி ரிப்பில்
தளையவிழும் வெண்பூக்கள் தலையிற் றாங்கித்
தளிர்நடையில் ஆண்மகனை நோக்கும் போது
விளைகின்ற ஆசைக்கே காமம் என்று
விதிவகுக்கும் நாவல்கள் கோடி ! கோடி.. !

புதினங்கள் காட்டும் காமத்தைத் தெரிவிப்பது இப்பாடல். 'புதினங்கள்' இருப்பவற்றைக் காட்டுகின்றனவே தவிர இருக்க வேண்டியவற்றைக் காட்டவில்லை.

இருக்கின்ற மனையாளின் எண்ணம் ஓரார்
எழுந்துவரும் தன்னாசை உந்த லாலே
கருக்கொள்ளும் நினைவுக்கைப் பாவை யாகிக்
காமப்பொய் தருசுகமே காப்பர் ஆண்கள்
உருக்கொண்ட வாளொக்கும் கண்ணாள் நாளும்
உள்ளத்தைத் தொட்டிழுக்கச் சொத்தி ழந்து
தெருக்கொண்டு திரிகின்ற காமப் பித்தர்
தெளிஞானச் சித்தர்போல் அலைவார் கோடி !

இப்பாடலில் இக்காலச் செழிப்புடன் குபேரர்கள்போல் வாழும் சில இளைஞர்கள் ஒழுக்கக் கேட்டினால் குசேலர்களாகத் தள்ளப்பெறும் இழிநிலையைச் சித்தரித்துக் காட்டுகின்றார். இப்பாடல் இளைஞர் உலகைத் தெருட்டும் கவிதையாகவும் அமைகின்றது.

அரிசிக்கும் ஆடைக்கும் அல்லற் பட்டே
அவையடையக் காமவலை வீசிப் பின்னர்
மருவியவள் பொருள்கவர்ந்து எட்டிக் காயாய்
மறுகணத்தே வெறுத்தொதுக்கும் கயவர் உண்டு

அருவிசேர் கண்சோர அழகு நீங்க
அடை காத்த கற்பெல்லாம் பருந்து கொள்ளப்
பொருளிழந்து வாடுதலாம் பொழுத றிந்தால்
பொய்க்காமப் புலனறிந்த பெண்கள் கோடி !

இதில் காமப் பித்தர்களைத் தம் வலையில் வீழச் செய்து சில காலம் சொகுசுடன் வாழ்ந்து கற்பை இழந்து அனாதைகளாய்த் தெருவில் நிற்கும் பெண்களை இரக்கத்துடன் நோக்குகின்றார்.

ஆணோடு பெண்ணினத்தைச் சேர்த்து வைக்க
அம்மலரோன் வரவிடுத்த தூதோ காமம்
நாணகற்றிக் கூடுதற்குக் காம வேள்தான்
நாணேற்றித் தொடுத்துவிட்ட மலரோ காமம்
காணுகின்ற பொருளெல்லாம் விதிவ குத்த
கண்கட்டி வித்தையதோ காமம், இன்பம்
பேணுகின்ற பொழுதினிலே பெயர்ந்து விட்டால்
பெரும்பொய்யாய் மாறிடுமே காமக் கோலம்

என்ற பாடல் நெறி கோணின் நேரும் நினயைக் காட்டும் எச்சரிக்கையாய் அமைகின்றது.

இவ்விடத்தில் ' காதல் உணர்வு' பற்றிய அறிவியல் கருத்தை விளக்குதல் பொருத்தமாகும் எனக் கருதுகின்றேன். மானிட உடல் உயிரணுக்களால் (cells) ஆனது. ஓரணுவைச் சோதித்துப் பார்த்தால் அதில் 23 இணைநிறக் கோல்கள் (chromsomes) அமைந்திருப்பதைக் காணலாம். ஒவ்வொரு நிறக் கோலிலும் ஆயிரக் கணக்கான ஜீன்கள் (Genes) உள்ளன. ஆனால் ஆணின் விந்தணுவில் ஒற்றை நிறக் கோலும், பெண்ணின் முட்டையணுவில் ஒற்றை நிறக் கோலும் உள்ளன என்பது அறிவியல் உண்மை. ஓர் விந்தணுவில் எக்ஸ்(X) நிறக்கோல்களும், வொய்(Y) நிறக்கோல்களும் கலந்தே காணப் பெறும். பெண் முட்டையணுவில்Xநிறக் கோல்களும் மட்டிலுமே காணப் பெறும். விந்தணுவும், முட்டையணுவும் பிள்ளைப் பருவத்தில் ' சிதம்பர ரகசியமாய்' இருக்கும். பெண் பூப்பெய்தும் காலத்திலும், ஆணின் முன் குமரப் பருவத்திலும் இவை முதிர்ச்சியடைந்து செயற்படுவதற்குத் தயார் நிலையில் இருக்கும். இரு பாலரிடமும் காணப் பெறும் ஒற்றையணுக்கள் இணைந்து இரட்டையணுக்களாக மாறினால்தான் மனித உடல் உண்டாகும்.

இவை இணைவதற்கு இறைவன் காதல் உணர்வை ஊட்டியுள்ளான். இதனால்தான் ஆண் பெண்ணை நாடுகின்றான். பெண் ஆணை நாடுகின்றாள், காதலுணர்வினால் இருவரும் இணைகின்றனர். புணர்ச்சி நடைபெறுகின்றது. ஒரு புணர்ச்சியில் இலட்சக்கணக்கான விந்தணுக்கள் வெளிப்படுகின்றன. அனால் பெண்ணிடமுள்ள சூற்பைகளில் (Ovaries) இருந்து மாதம் ஒரு முட்டையணுதான் வெளியாகின்றது. (பக்குவ நிலையில்) இரண்டு பக்குவ நிலைகளும் ஒன்று கூடிச் செயற்படும் போது இந்த விந்தணுக்கள் யாவும் முட்டையணுவின் கருக்குழலில் (Felloantube) சந்திக்கின்றன. புறஉலகில் ஒரு பெண்ணுக்கு, 'சுயம்வரம்' நடக்கும் போது பல மன்னர்கள் பங்கு கொள்வதுபோல், ' அக உலகில்' சுயவரம் நடைபெறும் போது இலட்சக்கணக்கான விந்தணுக்கள் ஒரு முட்டையணுவைச் சந்திக்கின்றன. பெண் யாரேனும் ஒருவருக்குத் தெரிந்து மாலையிடுவது போல அகவுலகில் வன்மையான விந்தணு ஒன்று தெரியாமல் முட்டையணுவைத் துளைத்து உட்புகுகின்றது. முட்டையணு பிற விந்தணுக்கள் உட்புகாமல் கதவடைத்துக் கொள்ளுகின்றது. இவ்வாறு இணைதலே 'சூல்கொள்ளல்'. 'கருவடைதல் (fertilization) என்ற பெயர்களைப் பெறுகின்றன. பின்னர் சூல்கொண்ட முட்டையணு மெதுவாக நகர்ந்து சூற்பையை அடைந்து ஏதாவது ஓரிடத்தில் புதைந்து கொண்டு வளர்கின்றது. புதைந்து கொள்ளும் இடத்திலிருந்து தொப்பூள் கொடியாக இணைந்து கருவளர்ந்து குழந்தையாகின்றது. பத்து மாதம் ஆனதும் பெண் கருவுயிர்க்கின்றாள். பாலூட்டும் பிராணிகள் (மனிதன் உட்பட) அனைத்திலும் பக்குவமடைந்த பிறகே கருவுயிர்த்தல் நடைபெறுகின்றது. ஆனால் பறவை இனங்களில் பக்குவப் படாத நிலையில் முட்டையாக வெளிவந்து பெண்ணினத்தால் அடைகாக்கப் பெற்றுக் குஞ்சு ஆகின்றது. என்னே இறைவன் விந்தை என்று நாம் வியப்படைகின்றோம்.

ஒற்றையணுக்கள் இரட்டையணுக்களாக மாறுவதற்கு இறைவன் அளித்த உணர்வு காதல். அது இன்பமாக மாறுகின்றது. இன்பம்தான் இறுதி. அது உண்டாகவில்லையானால் படைப்பு நடைபெறாது. எல்லாவுயிருக்கும் இது பொருந்தும். இதனையே தொல்காப்பியர்

*எல்லா உயிர்க்கும் இன்பம் என்பது*
*தான்அமைர்ந்து வருஉம் மேவற் றாகும்*

என்ற நூற்பாவால் பெற வைத்தார். நாகரிகமடைந்த மனிதன் இந்த இணைப்பு நடைபெறுவதற்கு ஊழைக் காரணமாக்கினான். இதற்கும் தொல்காப்பியர்,

*ஒன்றே வேறே என்றிரு பால்வயின்*
*ஒன்றி உயர்ந்த பாலது ஆணையின்*
*ஒத்த கிழவனும் கிழத்தியும் காண்ப*

என்று நூற்பா அமைத்துக் காட்டியுள்ளார். இதை உரையாளர்கள் "இவனும் பதினாறாட்டைப் பிராயத்தானாய் இவளும் பன்னீரட்டைப் பிராயத்தாளாய் ஊழ் கூட்டுவிக்கக் கூடுதல் " என்பர். இது நாடக வாழக்கு நடைமுறையில் இது நடைபெறுவதில்லை. இந்த வயதில் இருவருக்கும் மனப்பக்குவம் ஏற்படுவதில்லை. குழந்தை பெறுவதற்கு ஏற்ற உள்ளுறுப்புகளும் முதிர்ச்சி அடைவதில்லை. அதனால்தான் நற்றாய் தடையாக நிற்கின்றாள். தோழி பக்குவம் அறிந்து இணைய வைக்கின்றாள்.

இந்த இணைப்புக்கு மதனவேளையும். மலர்க்கணைகளையும் படைத்து அவற்றின் செயற்பாட்டினால் காதலுணர்வு உண்டாவதாக நம் முன்னோர் புராண வாயிலாக விளக்குவர். இன்று பெண்ணுக்குத் திருமண வயது 21 என்று விளம்பரமும் செய்யப் பெறுகின்றது. உள்ளுறுப்புகள் அப்பொழுதுதான் தயார் நிலையில் உள்ளன என்பது இதன் பொருள். இத்துடன் இது நிற்க. இறுதியாகக் கவிஞர்,

*உயிரினொடு உயிர்சேரும் உணர்வே காமம்*
*ஒருபோதும் பிரிவறியா உறவே காமம்*
*பயில்கின்ற கலைஞானப் பண்பே காமம்*
*பண்போடு கலந்துவரும் பாட்டே காமம்*
*அயலின்றி ஆட்கொள்ளும் அழகே காமம்*
*அறமாகி நெஞ்சளிக்கும் அன்பே காமம்*
*செயலொன்றும் அருள்மோனத் தவமே காமம்*
*சித்தத்தில் நன்றாகும் காமம் மெய்யே*

என்று மெய்யான காமத்தை விளக்குவார் கவிச்செம்மல். பழங்காலத்தில் ' காமம் என்ற சொல் நற்பொருளில்தான் வழங்கப் பெற்றது. வள்ளுவரின் ' காமத்துப்பால்' என்பது இதற்குச் சான்று. இன்று 'காமம்' என்று தவறான பொருளில் வழங்க, 'காதல்' என்பது அந்த இடத்தைப் பிடித்துக் கொண்டு நற்பொருளில் வழங்கி வருகின்றது.

இந்து மதாபிமான சங்கத்தில் நடைபெற்ற பாரதி விழாக் கவியரங்கில் (11.9.1961) 'கண்ணன் பாட்டு' என்ற தலைப்பில் பாடிய கவிதைகளும் அற்புதமாக அமைந்துள்ளன.

கண்ணன் என் காதலி' என்ற தலைப்பில் அற்புதமான பாடல்கள் உள்ளன. பாரதி காட்டும் காதலியைக் காட்டும் கவிஞர்,

*நறுஞ்சாந்தம் துளியளவே மணக்கு மாபோல்*
*யாவருக்கும் விளங்கிடவே காதல் தன்னை*
*யாத்துரைத்தான் சிலசொல்லில் புலவன் கேளீர்*

என்று தொடங்கி விளக்கத் தொடங்குகின்றார். அதில் ஒரு பாடல்,

**தோய்கின்ற மதுவாகித் தும்பி யாகித்**
**துணையாகி அமுதாகி வீணை யாகி**
**வேய்க்குழலில் பிறக்கின்ற நாத மாகி**
**விளைகின்ற காதலினை உயிரை அன்பை**
**ஆயிரமாய்க் கதைஎழுதிச் சொல்லப் போமோ**
**அளப்பரிய காதலினை வாழ்வி னுக்கே**
**பாயிரமாய் வகுத்துரைத்தான் கண்ணன் பாட்டில்**
**பாரதியார்க் கிவ்வுலகில் ஈடோ சொல்வீர்.**

'கண்ணன் என் காதலி' என்ற தலைப்பில் பாரதி ஆறு பாடல்களைப் படைத்துள்ளார். அவற்றுள் 'பாயும் ஒளி நீ எனக்கு' என்ற பாடலைக் கணேசனார் கவிதை 'ஆடியில் உருவம்' போல் காட்டுகின்றது.

'கண்ணன் என் தாய்' என்ற தலைப்பில் பாரதியார் ஓர் அற்புதமான பாடலைப் பாடியுள்ளார். அதனைக் காட்டும் நம் கவிஞர்

*மருமகளை மகன்கூட்டி வெளியிற் சென்றால்*
*மாமியார் பொறாமையால் இடிந்து நிற்பாள்*
*இருவருமே காதலொடு சிரித்துப் பேசில்*
*இக்குடும்பம் உருப்படுமோ என்று ரைப்பாள்*
*விருப்பமொடு பொருள்வாங்கிக் கொடுத்திட் டாலோ*
*விளைந்துவிடும் பெருஞ்சண்டை போதும் தாயாம்*
*திருப்பெயரைத் தாங்கிநிற்கும் பெண்கள் உண்டு*
*தேன்கவிஞன் பாரதியின் தாய்மை கேளீர்.*

என்ற பீடிகை போடுகின்றார். பின்னர்.

*ஒன்றான வாய்மைக்கே வடிவ மாவாள்*
*உள்ளன்பால் பிறவுயிரைக் காத்து நிற்பாள்*
*நன்றாக மங்கையொரு பாக னாக*
*நானிருக்கும் காதலினைக் கண்டு வப்பாள்*
*பொன்றாத புகழ்க்கதையால் ஞானச் சொல்லால்*
*புத்தமுத அறிவுரையால் எனைவ ளர்ப்பாள்*
*நின்றாள வந்துதித்த தெய்வம் தாய்தான்*
*நீள்நிலத்தே கண்ணனெனப் போற்று கென்றான்.*

என்று கண்ணன் காட்டும் தாயைக் காட்டுவர். பாரதியின் கண்ணன் பாட்டில், 'கண்ணன் என் தாய்', கண்ணன் என் சேவகன்' என்ற இரண்டும் மிக மிக அற்புதமானவை. உண்ண உண்ணத் தெவிட்டாத உணவு எனும் முலைப்பால் ஊட்டிய அன்னை, சற்று வளர்ந்த பின்னர் - பேச்சு மொழி கற்ற பின்னர் குழந்தையை மடியிற் கிடத்திய வண்ணம் சந்திரன் முதலிய புறவுலகைக் காட்சிகளைக் காட்டுவாள். உளவியல் கற்ற ஆசிரியைபோல் - அவள் வகுத்த பாடத்திட்டம்போல் பல காட்சிகளைக் காட்டுவது மிக மிக அற்புதம். படித்துப் படித்து மகிழ வேண்டியவை.

*சாத்திரம் கோடி வைத்தாள் – அவை*
*தம்மினும் உயர்ந்ததோர் ஞானம் வைத்தாள்*
*மீத்திடும் பொழுதினிலே – நான்*
*வேடிக்கை யுறக்கண்டு நகைப்பதற்கே*
*கோத்தபொய் வேதங்களும் – மதக்*
*கொலைகளும் அரசர்தம் சூத்துகளும்*
*மூத்தவர் பொய்ந்நகையும் – இன*
*மூவர்தம் கவலையும் அவள்புனைந்தாள்*

என்ற பகுதியில் ஒவ்வொரு எழுத்தும் இலட்சம் பெறக் கூடியது என்று சொல்லலாம்.

நம் நாட்டில் இயற்கை பற்றிப் பாடாத கவிஞர்களே இல்லை. சங்க இலக்கியங்கள், முற்கால, பிற்காலக் காவியங்கள் முதல் பாரதி-பாரதிதாசன் வரை 'இயற்கை' என்ற பொருள் சிறப்பிடம் பெற்றுள்ளது. பாரதி தாசன் 'அழகின் சிரிப்பு' என்ற நூல் சொல்லின் செல்வர் அறிஞர் அண்ணாவின் உள்ளத்தைப் பெரிதும் கவர்ந்தது என்ற உண்மை நான் விடாமல் தொடர்ந்து கேட்ட மேடைப் பேச்சிலிருந்து தெரிய வந்தது. டாக்டர் முத்துக் கணேசனாரின் இயற்கை பற்றிய பாடல்கள் பாவேந்தரின் 'அழகின் சிரிப்பு' போல் அமைந்துள்ளது என்று சொல்லலாம்.

காலப் போக்கில் உனைக்கண்டார்
கல்லில் தோன்றி மறைந்திட்டாய்
ஞாலம் வாழப் பெருங்கலையாய்
நாளும் பிறந்து நடம்புரிவாய்!

மங்கை மலரின் கைசிவப்பால்
மகிழ்ந்துன் மேனி சிவந்ததுவோ
அங்கை நெல்லிக் கனிப்போலும்
அழலாம் மேனி காட்டிடுமோ

இது பகலவனைப் பற்றிய பாடல். இரண்டாவதில் உள்ள கற்பனை அற்புதமாக உள்ளது.

விண்ணில் கொழுநன் உன்வரவை
விழித்து நோக்கித் தாழாமல்
மண்ணில் நாணி இதழ்வீசி
மகிழ்ந்து கூடிச் சிவந்தனையோ
பழகு தமிழில் பாவையீர்க்குப்
படைக்கும் கலவிச் சொற்களிலே
அழகு முலைக்கே உனைக்கூற
அதற்கு நாணிச் சிவந்தனையோ

இது செந்தாமரை பற்றியது. இவற்றில் தாமரைக்குச் சிவப்பு நிறம் அமைந்ததற்குக் கற்பனையாகக் கூறும் காரணம் அற்புதம்.

காதலில் தோற்ற பேரும்
கலவியில் வென்ற பேரும்
ஓதலைக் கொண்ட பேரும்
ஒண்மையை அடைந்த பேரும்
தீதிலா துழைத்த பேரும்
தெளிவிலா தலைந்த பேரும்
ஆதாரம் நீயே என்பர்
அகிலத்தின் மூச்சு மாவாய்!

இதில் தென்றல்தரும் களிப்பினால்தான் இத்தனை பேரும் தம் செயல்களில் உற்சாகம் கொண்டதாகக் கூறுவது அற்புதம்.

காலத்தின் பருவம் காட்டக்
கடுங்குளிர் வாடை யாவாய்

ஞாலத்தில் குற்றங் காண்கில்
நவிலொணாப் புயலாய் நின்று
கோலத்தைக் காட்டிப் பின்பு
குளிர்தவழ் தென்ற லாவாய்
சீலத்தை உன்றன் சீரை
யாவரே செப்ப வல்லார்

இந்தப் பாடலில் தென்றல் வாடையாகவும், புயலாகவும் மாறும் பாங்கையும், பின் தன் இயல்பான தென்றலாக நிற்கும் பண்பையும் காட்டுதல் கவிஞரின் சிந்திக்கும் திறனைக் காட்டுகின்றது. இவ்விடத்தில் பாவேந்தர் பாடிய தென்றல் பற்றிய பாடலொன்றை நினைவு கூர்கின்றோம்.

உலைத்தீயை ஊது கின்றாய்
உலைத்தீயில் உருகும் கொல்லன்
மலைத்தோளில் உனது தோளும்
மார்பினில் உன்பூ மார்பும்
சலிக்காது தழுவத் தந்து
குளிர்ச்சியைத் தருவாய் பெண்கள்
விலக்காத உடையை நீபோய்
விலக்கினும் விலக்கார் உன்னை!

தென்றலின் பல செயல்களை விளக்கும் போக்கில் அதன் குறும்பாகப் பெண்களின் ஆடையை விலக்குவதையும் காட்டுவார். இப்பாடலை அறிஞர் அண்ணா பல மேடைகளில் கூறிக் கேட்போரை மகிழ்வித்த நிகழ்ச்சி நினைவுக்கு வருகின்றது.

டாக்டர் கணேசனாரின் கடல், மலை, மழை, மின்மினி பற்றிய கவிதைகள் யாவும் அற்புதமானவை. 'ஆசைபற்றி அறையலுற்றேன்' என்று கம்பநாடன் கூறுவது போல் 'மின்மினி'யைக் காட்டுவேன்.

கண்ணில் துளும்பும் காமம்போல்
காலை நீங்கும் கங்குல்போல்
விண்ணில் நிகழும் மின்னல்போல்
வீறிட் டலறும் வெறுமைபோல்
மின்மினி யொன்று மின்னுதுபார் – அதோ
மின்மினி யொன்றுமின்னுதுபார்

இந்தப் பாடலில் ஒரு மின்மினிப் பூச்சியை அற்புதமாகக் காட்டுகின்ற இதில் வரும் உவமைகள் நான்கும் கவிஞரின் நுண்மா நுழைபுலத்தைக் காட்டுகின்றன.

'இந்திய ஞானச் சுடர்கள்' என்ற கவிதை நூல் அற்புதமான மாநிலம் வாரியாகப் பிரித்துக் கொண்டு அங்குத் தோன்று பெரியார்களை ஞானச் சுடர்களை நினைவு கூர, நமக்குக் கவிதை மூல அறிமுகம் செய்வது சிறந்த முறை. முப்பது மாமணிகளை இவ்வ அறிமுகம் செய்கின்றார். இவர்கள்புத்தர் முதல் இரமணர் முடிய முப்ப பெரியார்கள். அற்புதமான கவிதைத் தொகுப்பு. அருமையா அறிமுகங்கள். (சுந்தர மூர்த்தி அடியையொட்டி இவரும் தேச தொண்டர்கள், சமயப் பெரியார்கள், சான்றோர்கள், பெருமக்கள் ஆகி பலரையும் பாட்டால் போற்றிப் பரவியுள்ளார்.) கவிமணி போல் பல இரங்கற் பாவால் பரவியுள்ளார்.

அன்னை பற்றி எழுந்த பாடல்கள் 'அன்னை அஞ்சலி' என தலைப்பில் வெளிவந்துள்ளன. அன்னை மீதுள்ள பாசம் எவரைய விட்ட பாடில்லை. முற்றும் துறந்த பட்டினத்தடிகளும், ஆதி சங்கர இதற்கு விதிவிலக்கு இல்லை. கவியரசு கண்ணதாசனைப் பற்றி இரங்கற்பாக்கள் பலபல.

**எண்ணக் குழல்கொண்டே இச்சை உணர்வுகளை**
**வண்ணத் தமிழமுதில் வார்த்தெடுத்தோன் – பண்ணார்**
**கன்னற் கவியாளன் கண்ணதா சன்குரலை**
**என்றுநாம் கேட்போம் இனி.**

**முல்லைச் சிரிப்பாளன் முத்தாய்த் திரைப்படத்தே**
**சொல்லை உருக்கிச் சுவைசேர்த்து – நல்லிசைப்பா**
**குன்றெனவே பாடிக் குவித்தான் இசைத்தமிழை**
**என்றுநாம் கேட்போம் இனி.**

**அரசுக் கவியாகி ஆக்கல் பணியால்**
**முரசுகொட்டி வாழ்ந்த முதல்வன் – விரசுபுகழ்**
**சென்றுசேர் வேந்தனவன் செந்தேன் பொழிகவியை**
**என்றுநாம் கேட் போம் இனி.**

கம்பன் அடிப்பொடி சா.கணேசன் பற்றிய இரங்கற் பாக்கள் சில.

செந்தமிழ்த் தாயே உன்றன்
திருப்புகழ் வளர்த்தான் சென்றான்
நந்தமிழ் நாட்டுக் காக
நற்பணி செய்தான் சென்றான்
பைந்தமிழ்க் கணேசன் இன்று
பாசமாய்க் கம்பன் பாதம்
வந்தனை செய்வ தற்கோ
வானகம் சென்றான் அந்தோ

செய்திடும் செயல்கள் யாவும்
செம்மையாய்ச் செய்யும் வீரன்
நெய்திடும் ஆடை போல
நிலத்தினில் உதவும் தொண்டன்
பெய்திடும் மழையைப் போல
நாட்டினைப் பேணும் சான்றோன்
ஐயகோ பிரிந்தான் அந்தோ
அறிவுடைத் தலைவன் அம்மா.

புலவரேறு இராய.சொ.பற்றிய பாடல்கள் சில.

பொன்னொளிசேர் ஞாயிறெனப் பொலிவுடையன்
புன்சிரிப்பன் சிவந்த மெய்யன்
நன்மதிபோல் வெண்ணீறு துலங்கொளியாய்
நலந்திகழும் நெற்றி யாளன்
மன்னுலகில் இந்துமத மறைவளர
வளர்சங்கம் காத்து வந்தோன்
தென்தமிழ்க்கோர் கடல்ராய சொக்கலிங்கன்
திருப்புகழ்கள் நீடு வாழ்க.

உண்மையினை மந்திரமாய் உணர்ந்திங்கு
வாழ்ந்திட்ட காந்தி தாளைத்
திண்மையுறப் பரவியவர் புகழையெலாம்
தீந்தமிழில் நூல்கள் பாடிப்
பெண்மைபோல் பித்தாகி அவர்நெறியைப்
பிடித்தொழுகும் தகைமை யாளன்
மண்விளங்க விடுதலைக்குச் சிறைசென்ற
மாண்புடையன் தொண்டு வாழ்க.

வந்துலகில் தோன்றுமுயிர் வாழ்விலெல்லாம்
உடனுறைந்து துன்பம் நீக்கி
அந்தமிலாப் பேரின்பம் அளித்திங்குக்
காக்கின்ற சிவனை எண்ணிச்
சிந்தைதனில் திருமுறையோ டைந்தெழுத்தை
இணைந்திங்குச் செபமே செய்யும்
தந்தையவன் சிவமணியாம் சொக்கலிங்கன்
திருப்பூசை நலங்கள் வாழ்க.

இந்த மூன்று பாடல்களால் சிவம் பெருக்கும் சீலரை சொல்லோவியமாய்க் காட்டும் கவிச் செம்மலின் திறனை மெச்சுகின்றோம்.

சுருக்கமாகச் சொன்னால் டாக்டர்.ரெ.முத்துக் கணேசன் சத்துவ குணத்தர், அமைதியான போக்குடையவர், வாழ்க்கையில் வசதி படைத்தவர், கவிதை உள்ளம் படைத்தவர். இலக்கிய வாழ்வையே இன்ப வாழ்வாகக் கொண்டவர். இன்று வாழும் கவிஞர்களில் முன்வரிசையில் திகழ்பவர் என்று பதிய வைக்கலாம். இவரைப் பற்றி நான் 1950 இல் காரைக்குடி நண்பர்கள் என்ற தலைப்பில் எழுதியுள்ள குறிப்பை அப்படியே தருகிறேன்.

"கல்லுக்கட்டி (மேற்கு) ரெ. முத்துக்கணேசன் என்ற தனவைசிய இளைஞருடன் அறிமுகம் ஆனேன். நல்ல தமிழ் ஆர்வலர். கவிபாடும் ஆற்றல் வாய்ந்தவர். சிறு சிறு கவிதை நூல்களை வெளியிட்டுள்ளார் இவர் எளிய நடையில் உரை எழுதி வெளியிட்ட 'முத்தொள்ளாயிரம் என்ற பதிப்பு மிகவும் தரமானது. சதா தமிழ்ப் புலவர்கள் சூழ இருப்பவர் இவருடன் உரையாடிக் கொண்டிருப்பது நல்ல பொழுது போக்காக இருக்கும். பேச்சில் பொதுவாக நாட்டு நடப்புகள் பங்கு பெற்றாலும் இலக்கியம் பற்றிய குறிப்புகளே அதிகமாக இடம்பெறும். இவரிடம் உள்ள நூலகத்தில் பல அரிய நூல்கள் இடம்பெற்றுள்ளன.".

# 6. டாக்டர். வா.செ. குழந்தைசாமி (குலோத்துங்கன்)

இவர் திருச்சி மாவட்டத்தில் கரூருக்கு அருகிலுள்ள வாங்கலாம் பாளையம் என்ற சிற்றூரில் பிறந்தவர் (1929). இந்தியா, ஜெர்மனி, அமெரிக்கா ஆகிய நாடுகளில் உயர்கல்வி பெற்ற பொறியியல் அறிஞர். நீர் வளத்துறையில் டாக்டர் பட்டம் பெற்றவர். நீர்வளத்துறைப் பேராசிரியர். தமிழகத் தொழில் நுட்பக் கல்வி இயக்குநர். மதுரை காமராசர் பல்கலைக் கழகத் துணைவேந்தர். யுனெஸ்கோ ஆலோசகர். அண்ணா பல்கலைக் கழகத் துணை வேந்தர், இந்திரா காந்தி தேசியத் திறந்தவெளிப் பல்கலைக் கழகத் துணைவேந்தர். மேற்கண்ட பொறுப்புகள் பலவற்றையும் வகித்து ஓய்வு பெற்றவர்.

இவர் தமிழ் நெஞ்சம் கொண்ட அறிஞர். ஆகவே இவர்தம் தமிழ் வளர்ச்சி தமிழிலக்கியம், தமிழ் எழுத்துச் சீரமைப்பு ஆகிய துறைகளில் ஆர்வத் துடிப்புடன் பணியாற்றுவதாக அமைந்தது. கவிதை இயற்றுவதில் ஆர்வங் கொண்டவர். ' பொன்னி' இதழ் இவரை 1950 இல் பாரதிதாசன் பரம்பரையின் கீழ் அறிமுகப்படுத்தியது. குலோத்துங்கன் என்ற புனை பெயரில் இவருடைய கவிதைகள் ஐந்து தொகுதிகளாகவும் சிலகவிதைகள் ஒலிப்பேழைகளாகவும் வெளி வந்துள்ளன. இவருடைய கவிதைகள் மரபுவழிப் பட்ட கவிதைகளேயாகும். பெரும்பாலும் இவர்தம் கவிதைகள் யாவும், அறிவியல் துறை தமிழில் வளர்ச்சிபெற வேண்டும் என்ற முற்போக்குக் கொள்கையுடையனவாகவே இருக்கும். வேறு நோக்கில் பாடப்பெற்ற பாடல்களும் உண்டு.

முறையாகத் தமிழ் பயின்றவர் அல்லர். ஆயினும் இவர் யாப்புப் பிசகாத அறுசீர், எண்சீர் விருத்தங்களையும், அழகிய புதிய நடைபயிலும் அகவல்களையும், சிந்து, கண்ணி போன்ற சந்தங்களையும் பாடியுள்ளார். மரபு வழி அமைந்த இவர்தம் கவிதைகளில் மரபு வழிப்பட்ட பண்டைய மரபுவழிக் கருத்துக்கள் வரும். அங்ஙனம் வரும்போது புது மெருகுடன் புத்தொளி வீசி வரும். இவற்றிற்கு மேல் புத்தம் புதிய சிந்தைகள் புதுக்கோலங் கொண்டு புதியவடிவமைப்புடன் வருவது இவர்தம் கவிதைகளின் தனிச் சிறப்பாகும். சொல்லாட்சி, புதிய ஆக்கப் படைப்பு, புணர்ச்சி விதிகள் மாறாமை, யாப்புடன் பிணைந்த வாக்கிய அமைப்பு ஆகியவற்றில் கவிஞர் குலோத்துங்கன் கொண்டிருக்கும் கவனம்

முறையாகப் பயின்ற புலவர்களையும் வியக்க வைக்கின்றது. இவர்த கவிதைகள் மரபு சார்ந்தவைகள் ஆயினும், அவை புதுமையான கருத்து புத்தம் புதிய சிந்தனைகள் ஆகியவை நிறைந்து தமிழ்க் கவிதைக்கு புதிய பரிமாணங்களைச் சேர்ப்பவையாக அமைந்து திகழ்கின்றன.

'அறிமுகம்' என்னும் தலைப்பிலுள்ள கவிதையில்

பாவலன் அல்லன்நான் பாவல னாகிவிடும்
ஆவலும் இல்லேன் அறிவியற் கலைகளில்
வல்லமை எய்தவும் வளர்தமிழ் வழியதைச்
சொல்லவும் விழைந்த தொண்டன் யான்என்
கருத்தின் முழுமையும் கருதிய கோள்வழி
இருந்திட விடாது எழில்தமிழ்க் கவிமகள்
தன்வழி ஈர்த்தனள் தயங்கினன் ஆயினும்
என்வழி தவிர்ந்து இடறினன், இடறியென்
காதலின் மொழிந்த கட்டுரை இவைஎன்
பாதையும் வேறு பாவலன் அல்லன்நான்

வாசகர்க்குத் தன்னை அறிமுகப் படுத்திக் கொள்வதில்' பாவல அல்லன் நான் என்று ஒருமுறைக்கு இருமுறை சொல்லிக் கொண்டாலு இவர்தம் ஐந்து தொகுதிகளிலும் உள்ள ஒவ்வொரு கவிதையும் இவரை சிறந்த பாவலன் என்பதைப் பறை சாற்றுவதை அறிகின்றோம்.

தாம் கவிதை எழுதுவதற்கான காரணங்களை ஒரு கவிதையி தருகின்றார் குலோத்துங்கன்

நாடெனைப் போற்றும் என்றும்
நல்லிசைப் புலவர் செய்யும்
ஏடெனைப் புகழும் என்றும்
இலக்கண இலக்கி யத்தின்
பீடெனக் குள்ள தென்றும்
பிழைசெயேன், பெருகும் நெஞ்சம்
பாடெனப் பணித்த போது
பணிந்தவன் பாடு கின்றேன்.

கவலும்என் நெஞ்சப் பாரம்
கவிமகள் தவிப்பாள் மிஞ்சும்
அவலம் நின்றழுத்தும் காலை
ஆறுதல் தருவாள், இந்தப்
புவனமும் கடந்த கோடிப்
பொலிவினள் புலன்கள் யாவும்
கவரும்என் கவிதை நங்கை
காதலாற் பாடு கின்றேன்.

என்று கூறும் கவிஞர் தன் நெஞ்சில் இருளிடை மின்னல் தோன்றுவது போன்று ஏதோ எண்ணம் தோன்ற அதன் எழுச்சியால் பாடுவதாகப் பகர்கின்றார். இவர் பாடும் பாக்கள் யாவும்' அவலம் நின்று அழுத்தும் காலை ஆறுதல் தருவாள்' என்ற மன இறுக்கத்தால் வெளி வந்தவையேயாகும். பாரதி பரம்பரை, பாரதிதாசன் பரம்பரை என்று குறிக்கத் தக்க இயல்புகள் காணப் பெறினும், அவர்களினும் மிகு வளர்ச்சி அதிகமாக ஏற்பட்டு விட்டதால் இன்றைய காலப் பகுதியை எதிரொலிக்கும் பாங்கில் தமிழ் நாட்டிற்கும் தமிழ் மொழிக்கும், மானுடத்திற்கும் இன்றியமையாத தமிழ்ப்பெருங் கவிஞராகி விடுகின்றார். இவருடைய கவிதைகள் தமிழுலகில் படிப்படியாக அறிமுகமாகிக் கொண்டு வருகின்றன. இவை தமிழுலகத்தில் இவருக்கு ஓர் ஒப்பற்ற நிலையான இடத்தைத் தேடித்தரும் என்று உறுதியாக நம்பலாம். தொடக்கக் காலத்தில் தாம் சுவைத்த தமிழ்ச்சுவையைத் தமிழர் அல்லாத பிறரும் நுகர வேண்டும் என்று கூறுவார்.

*இன்பத் தமிழ்அலவோ – எம*
*தெண்ணப் பெருவெளி தன்னில் ஒளிர்கிற*
*அன்புக் கடல்அடடா – தேறல்*
*ஆறாய்ப் பெருகிக் கரைபுரள் காட்சிகாண்*
*மன்பதைத் தோழர்களே – ஓடி*
*வாரீர் தெவிட்டாது வாரிப் பருகுவோம்*

என்ற கவிதையில் (1947) தமிழ் இன்பக் கடலிற் புகுந்து தாம் கண்ட சுவையை, அதுவும் புதிய சுவையைப் பிறரும் பெற வேண்டும் என்ற கவிஞரின் ஆர்வத்துடிப்பைக் காண முடிகிறது. ' நாளும் வருமோ' (1953) என்ற கவிதையில் ஒருவித ஏக்கத்தைக் காண்கின்றோம்.

*சங்கம் கூட்டி உண்மை ஆய்ந்த*
*தமிழர் வாழ்வின் த்கைமை இடையில்*
*மங்க நேர்ந்த கொடுமை எண்ணி*
*வாடும் நெஞ்சே! வளமும் கனவும்*
*பொங்க மீண்டும் தமிழர் பண்பைப்*
*புகழின் மிஞ்சி முதன்மை வாய்க்கும்*
*தங்க வாழ்வர் என்ற செய்தி*
*தரணி பேசும் நாளும் வருமோ*

*..............................................எங்கள்*
*அன்னை அமுதத் தமிழின் செல்வம்*
*அவனி விழையும் நாளும் வருமோ*

இதிலும் தாம் சுவைத்த தமிழ்ச் சுவையைத் தமிழர் அல்லாத பிறரும் அனுபவிக்க வேண்டும் என்று கூறுகின்றார். இங்கும் தமிழரின் பண்டைப் புகழ் உலகிடைப் பரவ வேண்டும் என்ற ஏக்கத்தையும் ஆர்வத் துடிப்பையும் காண முடிகின்றது.

கவிஞரின் உள்ளம் விரிவதை ஆறாண்டு இடைக்காலத்தில் காண முடிகின்றது. மனிதனின் வயது ஏற ஏற அனுபவத்தில் முதிர்கின்றான். அந்த அனுபவத்தின் முதிர்ச்சி அவனுடைய புற அகமனங்களில் எண்ணத்தில் சிந்தனையில் தாக்கம் ஆகாமல் இருக்க முடியாது. டாக்டர். வா.செ.கு ஓர் அறிவியல் அறிஞராதலின் உணர்ச்சியுடன் நின்று விடாமல், இப்புகழ் ஏன் பிற நாட்டாரால் பேசப் பெறவில்லை என்ற ஆய்வும் அவர்தம் உள் மனத்தைத் தொடுகின்றது. அதன் பயனாக உலகையும் தம்மையும் கூர்ந்து நோக்குகின்றார்.

பிற நாட்டார் தம் பழமையைப் படியாக்கிக் கொண்டு புதுமையில் முன்னேற்றப் பாதையில் செல்லும் முயற்சியை மேற்கொள்ளும் முயற்சியைக் காண்கின்றார். உலகம் சுற்றியவர் அல்லவா? நம் தமிழர்குறை அவர்தம் கவனத்திற்கு வருகின்றது. இவர்கள் பழமையைப் படியாக்கி மேலே முன்னேறாமல் அப்பழமையின் பெருமையையே திரும்பத் திரும்பப் பேசி இன்பங் காண்பதைக் குலோத்துங்கன் காணுங்கால் துயரம் அவரை ஆட்கொள்ளுகின்றது. அது பெருகவும் செய்கின்றது. இந்தத் துயர உணர்ச்சி அவர்தம் பற்பல பாடல்களில் பொங்கி வழிகின்றது.

## 1. போலித் தமிழ் வளர்ச்சி

**1. பழம்பெருமை பேசுதல்:** இந்தப் பண்பு இன்று எங்கணும் கோலோச்சி நிற்கின்றது. தமிழர்களில் பலர் 'தமிழ் வாழ்க' என்பதனோடு மனநிறைவு எய்துகின்றனர். கடித முகப்பில் 'தமிழ் வாழ்க', 'இமயத்தின் எல்லை கண்ட எந்தமிழ் என்றும் வாழ்க' என்பன போன்ற "பொன்மொழிகளை அச்சிட்டு வைத்துக் கொண்டு பார்த்துப் பார்த்து மகிழும் புலவர் கூட்டம், அரசியல் வாதிகள் கூட்டம் மலிந்து காணப்படுகின்றன. 'தமிழுணர்ச்சி' வணிகப் பொருளாகி விட்டது. எங்கும் இதே போர்க்குரல்

*வளர்கதமிழ் வாழ்கதமிழ் என்பீர் கூடி*
*வழுத்துவதால் தமிழ்வளர வசிட்ட ராநீர்?*
*அளவிலது பழம்பெருமை புகழ்வீர் வையம்*

*அறியும்வழி எடுத்தோத அறிந்தீர் இல்லை*
*குளமுறையும் தவளையென நமக்குள் நாமே*
*குலப்பெருமை பேசுவதும் கொடுமை யன்றோ ?*

என்பது அவர்தம் நெஞ்சக் குமுறலைக் காட்டும் பாடல். மற்றொரு பாடலில் பழம்பெருமைகள் பலவற்றையும் பட்டியலிட்டுக் காட்டி விட்டு

*ஓரினத்தின்*
*நிகழ்காலச் சாதனையில்*
*நிறைவின்றேல் தொல்பழமை*
*புகழ்வாரை முந்தையினைப்*
*போற்றுவாரை யார்மதிப்பார்*

என்று வினவுகின்றார். நிகழ்காலத்தில் ஒன்றைக் கூடச் செய்யாமல் பழம்பெருமையையே பேசித் திரியும் பலரைக் கடியும் பாணியே தனி.

*இந்நாளின் தேவைகளை*
*எண்ணாமல் காலமெலாம்*
*பின்னோக்கிப் பின்னோக்கிப்*
*பின்னோக்கிப் பேசுபவர்*
*கூட்டம் வளர்கிறதே !*

என்று வருந்துகின்றார். திறமையுள்ளவர்களைப் பட்டியலிட்டுக் காட்டிவிட்டு 'யார் தமிழர்'? என்பதைக் கூட முடிவு செய்யாமல் பலரை அந்நியப்படுத்திக் கொண்டு போகும் இழிநிலையைக் கடிகின்றார். தமிழகத்தில் உள்ள தெலுங்கர், கன்னடியர், மலையாளிகள் உட்படத் தமிழைத் தாய்மொழி என ஏற்பர். அனைவரையும் தழுவிக் கொண்டு தமிழை வளர்க்க வேண்டும் என்ற கருத்தை வற்புறுத்துகின்றார்.

**2. பேசியது போதும் :** வாய்ச்சொல் வீரராகத் தமிழின் பெருமை பேசியது போதும். திரும்பத் திரும்பப் பேசுவதால் பயனில்லை என்ற துயரம் பல பாடல்களில் கொப்புளிக்கின்றது.

*செந்தமிழ்த்தாய் நிலவளங்கள் சிறந்த வேனும்*
*தேவையினும் கோடியுள அவற்றுள் ஏதும்*
*எந்தமிழால் தீராதோ என்னும் நெஞ்ச*
*ஏக்கத்தால் எழுதுகின்றேன்,*
*ஆனால் இன்றும்*
*முன்செல்ல வழிகாணும் முனைப்பி லாது*
*மூவேந்தர் பழம்பெருமை முழங்கு வோரை*
*என்சொல்ல அவர்திருந்த என்ன செய்ய*

என்று ஏங்குகின்றார். இந்த நிலையில் சினம் மூள்கின்றது. அது

வெளிப்படுகின்றது. 'அரைநொடியில் பொற்காலம் ஆதல் கூடும்' என்ற கவிதையில்

வாழ்வில்
தலைமுறைகள் மூத்ததொரு தகுதி யன்று
முன்பிறந்தோம் மன்பதையில் முதல்யாம் என்னும்
மூடர்களே முதுமையென்ன முயன்றா பெற்றீர்

என்று வினவுகின்றார். அடுத்து, 'நந்தமிழின் பெருமை எது? என்ற கவிதையில் இச்சினம் ஆழ்ந்த சிந்தனையில் முகிழ்க்கும் வினாக்களுடன் வெளிப்படுகின்றது.

செந்தமிழின் பெருமையெனச் செவிகள் கைப்பத்
தினந்தோறும் பேசுகின்றீர் ஒருசொற் கேளீர்!
நந்தமிழின் பெருமைஎது ஆங்கி லம்போல்
ஞாலத்தின் பொதுமொழியா உலக மன்றில்

அமர்வுடைய ஆட்சிமொழிக் குழுவில் ஒன்றா
ஐக்கியநாட் டவைமொழியா?

எதைநம்பிப் பேசுகின்றீர் தமிழர் நம்மோர்
ஏற்றத்தின் ஊற்றறியீர் ஆய்வில் லாது
கதைசொல்லி என்னபயன்?

மூலையிலோர் கொடியேற்றி அண்ணன் தம்பி
முறைமையினர் தமைக்கூட்டி முன்னர் வைத்துக்

காலையிலும் மாலையிலும் தமிழர் வாழ்த்தக்
கதைபேசி இன்றுவரை கண்ட தென்ன?
ஆங்கிலமும் நன்கறியீர் செம்மை சான்ற
அயல்மொழிகள் கற்பதிலும் ஆர்வம் காணீர்
தீங்கிழைக்கும் வடமொழியென் றெதிர்ப்பீர் பேசும்
செந்தமிழின் முழுமையையும் தெரிந்தீர் இல்லை

இப்படிப் பல கருத்துகளைக் கொண்டு இலங்கும் இக் கவிதைத் தொகுப்பு இன்றைய நாட்டின் நிலையைத் தெளிவுடன் தெரிவிக்கின்றது. ஓட்டுரிமைப் பெற்றதன் பயனாக நாம் சிலரைத் தேர்ந்தெடுக்கின்றோம். அவர்கட்கு எவ்விதக் குறிக்கோளும் இல்லை. இது நடைமுறையில் நாம் காணும் உண்மை. தாம் மட்டிலும் வாழவேண்டும் என்றெண்ணும் தரம் மறைய வேண்டும். 'நாம் வாழ வேண்டும்' என்ற தலைப்பில் வருவன,

இருப்பதைப் பகுப்ப தல்லால்

இயற்றுதல் இயலார் கையில்
பொறுப்பெலாம் தந்த நாட்டில்
புல்கூட முளைப்ப தஞ்சும்

ஆக்குவ தறியார் ஆற்றார்
அற்பமே பெரிதாய்ப் பேசிப்
போக்குவர் பொழுதை நாளும்
போர்ப்பறை கொட்டி வாழ்வார்

இவை இன்றைய நாட்டு நடப்பைத் தெரிவிப்பன. இன்று செயல்திறமை இல்லாத 'வாய்ச்சொல் வீரர்' கூட்டம் தான் நாம் காண்பது. அவர் வடிப்பதும் நீலிக் கண்ணீர்தான். இவர்களைக் கவிஞர் "ஈரம் அற்ற தண்ணீரின் ஊற்றுகள்" என்று தெளிவாகக் குறிப்பிடுவார். ஈரம் இல்லாத தண்ணீர் கானல் நீர். இன்றைய அரசியல் வாதிகள்வடிக்கும் கண்ணீர் முதலைக் கண்ணீர் - ஈரமற்ற தண்ணீர்.

3. மொழிவளர்ச்சி - தற்பெருமை : 'வெற்று வேட்டு' போட்டுக் கொண்டே தமிழ் மொழியைத் தாம் வளர்ப்பதாகக் கூறித்திரிவோர் மலிந்த காலமிது. அவர்களைப் பற்றி,

ஒளியற்ற வெப்பத்தின் உருவம் நீவிர்
உம்பணியால் தமிழ்என்றும் உயர்வ தில்லை
வளியுண்டு இடியுண்டு மழைஇல் லாத
வானம்நீர் தமிழும்மால் வளர்வ தில்லை

இமயம்முதல் குமரிவரை பரவி நிற்கும்
இந்தியாவின் வாழ்வியலில் இலக்கி யத்தில்
சமயமெனும் சிந்தனையில் தத்து வத்தில்
தமிழ்மொழியின் பங்குண்டு சாற்ற வேண்டும்

இந்தியத்தின் பண்பாட்டில் விழிகள் என்ப
இன்தமிழும் வடமொழியும் என்னும் உண்மை,
விந்தியத்தின் வடக்கேயும் கடல்கள் தாண்டி
வெளியுலகின் மன்றத்தும் விளங்க வேண்டும்

உண்மை ஒளி வீசும் உயர்கவிதைகள் இவை.

4. இதிலும் அரசியல்: 'அரசியல்' என்பது இங்கு நேர் பொருளன்று. தொனிப் பொருள் , இறைச்சிப் பொருள்.

பிணியிலும் மருந்து பீடை ஆனது
அணியெனப் பூண்டவை அட்டை ஆயின

என்று கவிதை தொடங்குகின்றது. கவிதையின் தலைப்பும் இதுவே.

தனியெனத் தமிழெனத் தருக்கி னோரெலாம்
தனியராய்த் தமிழரைத் தவிக்க விட்டனர்
தம்நிலம் தம்மினம் தம்மொழி என்றவர்
தம்வயி றோம்பும் தலைவ ராயினர்
விதையெனத் தந்ததை விருந்தென உண்டனர்
கதையில் கற்பனைக் காட்சியில் களிப்பில்
பயணம் மறந்து பாதை பிறழ்ந்து
முயலுவ தொழிந்து மூச்சில் வெம்மையும்
வேகமும் குறைந்து மேல்செலும் ஆசைத்
தாகமும் தணிந்து "தமிழ்மொழி" என்பதை
மேய்ச்சல் காடென விளைச்சல் வயலென
வாய்த்ததாய், வேண்டும் வரமெலாம் தருவதாய்ப்
பயன்படு பொருளாய்ப் பார்த்தனர், அவர்தம்
வயப்பட் டெம்மவர் மயங்கி நின்றனர்
நம்பிய மக்கள்பால் நன்றி யிலாதவர்
உம்பரும் காணா உலகு காட்டுவம்
வறுமையொன் றறியா வாழ்வு காணுவம்
அரியணை ஏற்றுவம் அன்னைநம் தமிழைமுன்
சங்கம் வளர்த்த தகுதியும் பெருமையும்
எங்கும் பரவிட ஏற்றம் காணுவம்
என்று முழங்கி எளியரை ஏய்த்தவர்
இன்னும் கடைவிரித் தியங்கு கின்றனர்.

இவை உண்மையொளி வீசும் அற்புதச் சொல்லோவியங்கள். தன்மை நவிற்சி நல்கும் தங்க மொழிகள். அனைத்தையும் அங்கை நெல்லியென அலசிக்காட்டும் அரிய அமுத ஊற்றுக்கள். எனலாம்.

5. *தமிழரின் தாழ்நிலை;-* தமிழரின் தாழ்நிலையை எண்ணி இரங்கிக் கூறுவார் கவிஞர்.

எந்தமிழ் மொழியே என்னரும் நிலமே
முந்தையின் முந்தையில் முகிழ்த்தாய் இவணே
யாதும் ஊரே யாவரும் கேளிரென்
றோதும் நிலையினை ஒருயுகம் முன்னரே
நாட்டிய பேரினம், நட்டோர் நஞ்சினை
ஊட்டுவ ராயினும் உண்ணுவம் என்னும்
பண்பின் உச்சியைப் பார்த்தநன் மரபினர்
ஒண்புகழ் தேடுவ தொன்றே உயர்வெனக்
கண்டார், தன்னலம் கருதா வாழ்வினர்
உண்டால் அம்மஇவ் வுலகம்என் றுணர்ந்த
மெய்யறி வாளரிம் மேதினி வாழ்வின்
பொய்யும் புனைவும் பூசலும் கடந்து

ஒன்றே குலமும்மற் றொருவனே தேவனும்
என்றே யமைந்த இனமெனும் பெருமைக்
குரியவர், அற்றைநாள் உயர்வினர், இன்று
சிறியராய் மேலும் சிறியராய் மாலையின்
பாசிகள் அவிழ்ந்து பரவின வென்னத்
தேசம் பலவினும் சிதறிய குழுவாய்
எங்கு வாழினும் எதிரி சூழினும்
தங்கள் உட்பகை தவிரா எளியராய்
அழிவதும் தருமமோ? அறமோ? நமக்கிவ்
இழிநிலை ஏன்என இரவெலாம் பகலெலாம்
கலங்குவை நெஞ்சமே, கண்டதென்? உயிரினம்
துலங்கும் நாளெனும் தோற்றம் காண்பது
இன்றிலை என்பதை ஏற்கவும் விரும்பாய்,
'என்றெனக் கேட்பை என்றென நச்சுவை'
என்றெனக் கூறுவதற் கெவருளர்? தமிழமே
என்றெனக் கூறுவார் எவரைநாம் வளர்த்தோம்!

இக்கவிதையில் தமிழ் தமிழர் இவர்களின் தாழ்நிலைக்குத் தம் நெஞ்சம் கவல்கின்றதைக் கூறி நைகின்றார்.

6. தமிழரின் பகை: தமிழருக்கு நெடும்பகை புறத்தன்று தமிழருக்குத் தமிழரே தான் பகை.

ஒன்றுநும் கலத்தி லுள்ள
ஓட்டைகள், பகைவர் உம்மை
வென்றுள சரிதை உங்கள்
விரிசலின் சரிதை யன்றோ?
கடும்பகை உமது பண்பில்
கலந்துவாழ் கறையான், உம்மோர்
நெடும்பகை புறத்த தன்று
நீவிர்நும் பகைவர் காணீர்

'தம்மினம் அழிக்கும் பண்பில் தலையவர் ' என்னும் கவிதையில், தமிழனின் தன்னேரில்லாத் தமிழனின் சிறப்பியல்பை,

பேரினம் பிளவு பட்டுப்
பிரிந்துபின் பிரிந்து, நீண்ட
நாரிடைத் தொடுத்த பூக்கள்
நலமிழந் துதிர்தல் போலப்

பொலிவிழந் தழிதல் காணும்
பொறுமையொன் றில்லேன் மற்றும்
வலியிலன், எண்ணி எண்ணி
மனத்தினுள் நொந்து நொந்து

புழுங்குவன் மவுன மாகப்
புலம்புவன் எனது நெஞ்சம்
அழுங்குரல் அடங்கும் பாதை
அறிந்திலன், சரிதை தன்னில்

தன்னினம் அழிக்கும் பண்பில்
தமிழனுக் கிணையென் பாரை
இந்நிலம் கண்ட தில்லை
எனும்பழி சுமப்ப தேன்யாம்?

என்ற பாடல்கள் பட்டவர்த்தனமாகப் பகர்கின்றன.

பகைமையை வளர்ப்பார் தங்கள்
பாதையே வேத மென்னும்
தகைமையர், தமிழைப் பேணத்
தாங்களே வாரி சென்பார்

இசையொளிர் அறிஞ ரேனும்
இவர்வழி ஏற்கா ராயின்
வசைமொழி அன்றி வேறு
வழக்கெதும் பழக்க மில்லார்

கல்லையும் நிறுத்தி வைத்துக்
கடவுளென் றுறுதி செய்யும்
வல்லமை உயர்வு காணும்
வாழ்வியல் ஆன நாளில்

பொறற்பினுக் குருவம் தந்து
புகழ்மிகு கலைஞர் செய்த
சிற்பமென் றெனினும் உள்ளே
செறிவது கல்லே என்று

உடைத்ததை உறுதி செய்வார்
உயர்ந்தன படைக்கும் கொள்கை
கடைப்பிடித் தறியார், மற்றோர்
கருத்தினில் களங்கம் காண்பர்.

சொந்தங்கள் தேடி மண்ணில்
துணைவலி பெருக்கி மேலும்
பந்தங்கள் உறுதி செய்து
பயன்பெறும் பாதை தேடார்.

இந்தக் கவிதைகள் "ஒரு பகுதி தமிழறிஞர்களை"ப் புதிர் கதிர்கள்காட்டுவனபோல் காட்டுவன.

**7. புதிய சிந்தனை:-** பழந்தமிழர் எழு கடலில் சென்று வணிகர் கலம் ஒட்டியமை, சங்கம் கூடித் தமிழ் வளர்த்த பெருமை முதலியவற்றையெல்லாம் பெருமிதத்துடன் குறிப்பிட்டு விட்டு

*சூழ்ந்தமர்ந்து சிந்திப்பீர் வளர்ச்சி குன்றிச்*
*சுடர்மடங்கி நிற்கின்றோம் உலக மன்றில்*
*தாழ்ந்த இனம் உயர்ந்தமொழி சமைத்த தில்லை*
*தானாக எம்மொழியும் வளர்ந்த தில்லை*

என்று விரித்துரைக்கின்றார். திருக்குறள், சிலப்பதிகாரம், கம்பன்காவியம் போன்ற நூல்கள் மனிதனுக்கு வேண்டிய தேவைகளையெல்லாம் முற்றுப் பெறச் செய்ய முடியுமா? என்று வினவுகின்றார். செகப்பிரியர் நாடகங்கள், மில்ட்டனின் காவியம் மட்டிலுமா ஆங்கிலத்தின் பெருமைக்குக் காரணங்கள்?

*கருத்துலகப் பூம்பொழிலின் விரிவில் கோடி*
*கலைமலர்தல் காணீரோ அவைய னைத்தும்*
*திருத்தமிழில் கண்டீரோ அணுயு கத்தைச்*
*செந்தமிழில் பார்த்தீரோ மொழிவ ளர்க்க*
*மருத்துவரின் பொறிவலரின் அறிவி யல்நூல்*
*'வல்லுநரின் துணைதேட வழிசெய் தீரோ*

என வினாக்களை அள்ளி வீசுகின்றார். தமிழுக்கு எவை எவை தேவை என்பதை,

*ஊசிசெயும் சிறுதொழிலின் நுட்பம் கூற*
*ஒருகோ நூல்வேண்டும் தமிழில் இந்தக்*
*காசினியில் இன்றுவரை அறிவின் மன்னர்*
*கண்டுள்ள கலைகளெலாம் தமிழில் எண்ணிப்*
*பேசிமகிழ் நிலைவேண்டும், விண்ணை எட்டிப்*
*பிடிக்கிறது மனிதஇனம், முன்னோர் செல்வ*
*ஆசியிலே வாழ்கின்றோம் கால மெல்லாம்*
*அதன்பெருமை பேசுகின்றோம் அவல மன்றோ.*

என்று பட்டியலிட்டுக் காட்டுகின்றார். ஆயினும் பண்டைத் தமிழின்பெருமை, தமிழரின் பெருமை ஆகியவற்றையும் அற்புதமாகப் பேசி மகிழ்கின்றார்.

**8. மாற்றம் தேவை :** மாற்றமே அடையாத நிலை பிணநிலை என்பது கவிஞர் உலகுக்கு எடுத்தோதவிரும்பும் கருத்து.

*மாறாத பொருளெதுவும் வளர்வ தில்லை*
*வையத்தின் விதியிதற்கு மாற்ற மில்லை*
*தேறாத புலவர்களும் வளர்ச்சிப் பாதை*
*தெளியாத தலைவர்களும் தெரிந்த உண்மை*
*கூறாத அறிஞர்களும் ஆய்வுப் பார்வை*
*கொள்ளாத பண்பாடும் குடிமை செய்ய*
*வாராத செல்வர்களும் கொண்ட நாடு*
*வளராது வளர்கின்ற வழிகா ணாது*

என்ற பாடலில் அகவை முதிர்ச்சிக்கு ஏற்ப, எண்ண முதிர்ச்சியும், மாற்றம் வேண்டும் என்ற நோக்கமும், மாற்றமே வளர்ச்சிக்கு அறிகுறி என்பதையும் அவர் புலப்படுத்துகின்றார்.

## 2. அறிவியல் சிந்தனைகள்

தொடக்கக் காலத்தில் (1947) சங்கப் பாடலில் திளைத்துப் பயின்று தமிழ்க் கலையும் பெருமையும் அங்குதான் உண்டு என்றவர் குலோத்துங்கன். பிற்காலத்தில் (1981, 1984) மாற்றத்தை நாடுகின்றார். காரணம் அறிவியலை ஆழப் பயின்றுள்ள பொறியியல் மேதை, உலகம் சுற்றிய பெருமகன், அதன் பயனாக அகலப் பார்வையை அடைகின்றார். அதனால் அறிவியல் சிந்தனைகள் மலர்கின்றன.

**1.கல்வி** *பற்றி* ; வளர்ச்சி வாயில்' என்ற தலைப்பில்

*ஏடன்று கல்வி , சிலர் எழுதும் பேசும்*
*இயலன்று கல்வி, பலர்க் கெட்டா தென்னும்*
*வீடன்று கல்வி, ஒரு தேர்வு தந்த*
*விளைவன்று கல்வி, அது வளர்ச்சி வாயில்*

என்கிறார் 'கல்வியுலகம் மலர்கிறது காண வாரீர்' என்ற தலைப்பில்

*சொல்லாத சொல்கேட்கும் செவிகள் வேண்டும்*
*தோன்றாத பொருள்காணும் விழிகள் வேண்டும்*
*எல்லாரும் வளர்கவெனும் நெஞ்சம் வேண்டும்*
*எதிர்காலப் புலன்வேண்டும் இவைய னைத்தும்*
*வல்லாரே வையத்தை வழிந டத்தும்*
*மாண்புடையார் வளம்எதுவும் வருங்கா லத்தில்*
*கல்லாத சமுதாயம் காண்ப தில்லை*
*கல்வியுகம் மலர்கிறது காண வாரீர்.*

பள்ளி, கல்லூரிகளை விட்டு வெளிவந்து கற்கும் கல்வியே உண்மையுடையது என்கிறார். இப்படிக்கூறும் இவர் கருத்தும்

2. உறவினர் விரிவு. ' தூரத்து உறவினர்' என்ற தலைப்பில்

தரையொடும் மலையொடும் தண்புனல் கடலொடு
வரைகடந் தெழும்விரி வானொடும் வானில்
வெளிதிரி கோளொடும் விண்ணின் மீனொடும்
எளியவன் என்வாழ்வு இணைந்தது......
தாரகைக் கூட்டமும் தண்மதி பொழுதும்எம்
ஊரவர் தூரத்து உறவினர் ஆவர்

என்று பகர்வதால் இவர்தம் உறவுபற்றிய அகலப் பார்வை நீள்நோக்கு புலனாகின்றது. நம்மாழ்வாரின் தத்துவம் காட்டும் பார்வைபோல் அமைகின்றது.

3. பொற்காலம்: நொடியும் பொற்காலம் என்ற கவிதை' பொற்காலம்' என்பது என்ன என்பதை விளக்குகின்றது.

வானூர்தி நேற்றிங்கு வந்தாய் இன்று
வானத்தை ஆளுகிறாய்........
நில்லாது காற்றுலகில் நீந்து கின்றாய்
நேற்றினின்றும் இன்றுயர்ந்தாய் நிதம்வ ளர்வாய்!

முன்பிறந்தோம் மன்பதையில் முதல்யாம் என்னும்
மூடர்களே முதுமையென்ன முயன்றா பெற்றீர்
பின்பிறந்தார் உயர்வுபெறின் பிழையா? வாழ்வில்
பெரியநிலை இளமைபெறின் பெருமை யன்றோ

நரைமுடியில் மேதையிலை, நகரும் நாட்கள்
ஞானப்பால் வார்ப்பதிலை சரிதை ஏட்டில்
அரைநொடியும் பொற்காலம் ஆதல் கூடும்!
ஆண்டுபல இரவுகள்போல் அகலக் கூடும்!

அறிவியல் உலகில் இந்த அற்புதங்கள் நிகழ்ந்த வண்ணம் இருக்கின்றன. நியூட்டனின் பூகவர்விசை ஒரு நொடியில் கண்டது., ஆர்க்கிமிடீஸ் தத்துவம் நீராடிக் கொண்டிருந்த போது கண்டது. அம்புலிப் பயணம் வெற்றி பெற்றது பல்லாண்டுகள் முயன்ற பிறகுதானே.

4. புதிர்கள் காணும் நெறி: 'விண்ணுலகம் உண்டெனினும் விழைவோமில்லை' என்ற தலைப்பில் வரும் கவிதைகள்,

அறிவன்றி ஒளியெதுவும் அறியோம் இன்றெம்
ஆய்வுக்குள் அடங்காத புதிர்கள் யாவும்
தெரிகின்ற நெறிகாண்போம் உண்மை தேடித்
திசையெங்கும் அலைபவர்யாம் திறந்த நெஞ்சம்

விரிகின்ற கொள்கையினர் மாற்ற மில்லா
விதியெதையும் எக்காலும் ஒப்போம் சாலச்
சிறிதென்ற தூரும்பொன்றில் பார்பு ரக்கும்
செல்வமெலாம் காண்கின்ற திறந்த வர்யாம்

எண்ணுவதும் படைப்பதும்எம் பணிகள் யாங்கும்
எல்லோர்க்கும் சமவாய்ப்பு நிறைந்த தான
மண்ணுலகைச் சமைப்பதும்எம் குறிக்கோள் நாளை
வருகின்ற தலைமுறையின் வாழ்வுக் காக
உண்ணுவதும் உறங்குவதும் தவிர்த்தும் கூடி
உழைப்பதுவே யாம்மகிழும் இன்பம் மற்றும்
விண்ணுலகம் உண்டெனினும் விழைவோ மில்லை
மீளாத நரகென்றும் பயந்தோ மில்லை

என கவிஞரின் குறிக்கோளைக் காட்டுகின்றன. ஆராய்ச்சிப் பயணத்தின் முடிவில் தான்போய்ச் சேரும் இடம் அனைத்தும் தனக்கு இன்பம் என்பது இவர்தம் குறிக்கோள், ஓர் அறிவியல் அறிஞரின் நியாயமான குறிக்கோள் இது.

அறிவியலறிவு பெற்ற பொறியியல் வல்லுநர் ஒருவர் கவிதை எழுதுவது வியப்பேயாகும். குலோத்துங்கன் கருவிலே திருவுடையவராதலால் கவிதை எழுதுகின்றார், அவர்தம் தமிழறிவு இதற்குத் துணை செய்கிறது. அவர்தம் அறிவியலறிவு கவிதைகளில் அறிவியல்மணத்தை வீசச் செய்கின்றது. இலக்கியம் முழுவதும் அறிவியல் முறையில் அமைய வேண்டும் என்று ஒருவரும் வற்புறுத்தவில்லை. அறிவியல் இனி தவிர்க்க முடியாதவாறு மனித வாழ்க்கையில் பெரும்பங்கு பெறும் ஆகையால் அறிவியலை இலக்கியப் படைப்பாளர் புறக்கணிக்க இயலாது. இதுவே குலோத்துங்கன் கவிதைகளில் நாம் காணும் உண்மை.

## 3. சமுதாய நோக்கில்

அறிவியலறிஞராகவும் சிறந்த பொறியியல் வல்லுநராகவும் திகழும் குலோத்துங்கன், தாம் வகித்த உயர்பதவிகளால் மயக்கமுற்றுத் தாம் வாழும் சமுதாயத்தை மறந்து விடவில்லை, அதனையும் கடைக்கண் கொண்டு நோக்கிப் பல அருமையான கவிதைகளைப் படைத்துள்ளார். அவற்றைச் சில தலைப்புகளில் நோக்குவோம்.

*1. சாதிப் பிரிவினை:* தமிழ்ச் சமுதாயத்தைச் சீரழிக்கும் புற்றுநோய் இது

சாதி யென்பது தனிமர(பு) அன்(று) இது
ஆதி யிலிருந்தே அறிஞரும் பெரியரும்
திருத்தம் வேண்டாத் தெளிவுடன் கூறிய
கருத்து.......

சாதியின் குலத்தின் சகதியில் நெளிந்து
ஊதியம் தேடி ஊன்வளர்க் கின்ற
சிறியரில் சிறியர் தினந்தொறும் சாதி
வெறியினை ஊட்டி வேற்றுமை பெருக்கி
என்தமிழ் மக்கள்தம் இனவுணர் வழிக்கும்
புன்மையைக் கண்டு பொங்குமென் நெஞ்சின்
ஆத்திரம் தாங்குவ தாற்றிலன்

என வருந்துகின்றார் குலோத்துங்கன்

சாதியின் உணர்வும் தமிழின வாழ்வும்
மோதும் தகையின, முன்னது வாழின்
என்னருந் தமிழுக் கெதிர்வரு நாட்களில்
உன்னதப் பெருநிலை உறுதி யாயில்லை

என அறுதியிட்டு அறைவர். இதனை நாம் மனத்திற் கொள்ள வேண்டும். பிறிதோர் இடத்திலும் இச் சாதி வேறுபாடு பற்றிச் சாடுகின்றார்.

சாதியில் சந்து பொந்தில்
தன்னலக் குப்பை மேட்டில்
வீதியின் கழிவில் நாற்றம்
வீசிடும் சகதிச் சேற்றில்

இறைவனும் ஒருவன், மாந்தர்
இனமொரு குலமே, என்று
பறையறைந் திட்ட மண்ணில்
பசியெனச் சோறு தேடும்

சாதியின் சங்க மேன்எம்
தமிழர்தம் ஒருமை கொன்ற
ஊதியம் தேடி வாழும்
ஊழலர் வளர்வ தேன்..?

மேலும் விடம் விதைப்போம் என்ற ஒன்றில்,

சமநீதிப் பாற்கடலை மீண்டும் மீண்டும்
சாதியெனும் கயிறிட்டுக் கடைந்தீர், மேலும்
அமுதேதும் காணவில்லை சாதி நஞ்சு
அனல்போலப் பரவுதடா அணைப்பா ரில்லை!

பிணிஎன்னின் ஒன்றுண்டு முன்னோர் செய்த
பிழைஎண்ணின் ஒன்றுண்டு, பிறக்கும் போதே

அணிகின்ற தளையுண்டு சாதி பேத
அமைப்பென்றோம் புற்றிதனை அகழ்ந்தெ டுத்து
வேரின்றி நாரின்றி முளைக்கத் தக்க
விதையென்னும் கருவின்றித் துடைத்து எடுக்கப்
போரின்று துவங்குகின்றோம் என்று கூறிப்
புறப்பட்டீர், உம்பயணம் போன தெங்கே?
தாரகையின் ஒளியென்ன மின்னும் தூய
சமுதாயக் குறிக்கோளைத் தாழ்த்தித் தாழ்த்திச்
சேறனைய அரசியலில் சேர்த்தீர் சாதித்
தீமூட்டிக் குளிர்காயும் சிறுமை செய்தீர்

என சாதிபேத விடம் விதைத்து வேளாண்மை செய்து விட்டதை எண்ணி நைகின்றார். 'சாதித் தீயில் தமிழினம் வெந்தது' என்ற தலைப்பில்

வகுத்த சாதிகள் மற்றவர் கொணர்ந்து
புகுத்திய நமக்குப் புறமெனின் இன்று
சாதியை விடுத்த தமிழர் யாரடா?
வேதியர் சாதியை விடுப்பினும் அரசியல்
வாதியர் சாதியை வரமெனத் தாங்குவர்
சாதியை வைத்துத் தலைவர் வாழுவர்
சாதிகள் எங்கடா தமிழகத் தொழிவது?
ஆதியில் மதத்தை அண்டி நின்றஇப்
பேயது சமயப் பிடிகள் குன்றவும்
காய கல்பம் கண்டது போன்று
அரசியல் தன்னை ஆட்கொண் டெழுந்து
முரசம் முழங்க முடியும் பூண்டது,
சாதியின் வலியுடைச் சக்திநம் தமிழகம்
மீதில்இன் றிலைஇதில் வெட்குவர் காண்டிலம்.

என்ற பகுதியில் சாதியின் கொடுமை பற்றிய கருத்தைக் காணலாம். ஓரரசு ஆணையால் தெருப்பெயரில் உள்ள சாதியினை நீக்கியது. மற்றோர் அரசு பேருந்துகளில் உள்ள பெயர்களை நீக்கியது இஃதெல்லாம் சாதிபேதத்தால் விளைந்த வரலாறு.

2. தமிழர்களின் ஒற்றுமையின்மை: தமிழ் மொழிக்கு எட்டு வேற்றுமை என்று இலக்கண நூலார் வகுத்தனர். ஆனால் தமிழினத்துக்கு "வேற்றுமைகள்" கணக்கில. "நவக்கிரகம்" என்ற தலைப்பில்கவிஞர் நெஞ்சு பொறுக்காமல் விசனிக்கின்றார்

செத்த நாகமும் சிறிது சீறலாம்
சிதையில் ஏறிய சடலம் துள்ளலாம்
ஒத்த நோக்குடன் தமிழகம் திரண்டு
உரிமை கோரிய சரிதை ஏதடா?

நவம்ஏ னப்படும் கிரகம் யாவையும்
நண்பர் ஆகலாம் ஒன்று சேரலாம்
தவமி ருப்பினும் தமிழர் ஒன்றிஓர்
தலைமை ஒப்பிய சரிதை ஏதடா?

பாலை வெண்மணல் சோலை ஆகலாம்
பசுமை போர்த்திய பழமை தோன்றலாம்
வாலை நற்றமிழ் மாந்தர் சேர்ந்துதம்
வளம்பெ ருக்கிய சரிதம் ஏதடா?

சேர சோழ பாண்டியர்களின் வரலாற்றில் ஒற்றுமையின்மைக்குத் தமிழகச் சரித்திரமே சான்று.

மாறுதலை அடிநாதமாகக் கொண்டது வளர்ச்சிமுறை. காலத்திற்கேற்ற கோலமாற்றம் ஏற்கப் பெறல் வேண்டும். இதனை ஏற்காதவர்களைப் பற்றிக் கவிஞர் குலோத்துங்கன்

*மாற்றம் என்பது வாழ்வின் மூச்செனும்*
*தோற்றமும் ஏற்கார் திருத்துவ தாயின்*
*சங்கம் வளர்த்த தமிழையே மீண்டும்*
*இங்குக் காண்பதே ஏற்குவம் என்பார்,*
*காலம் என்பது கடந்த பாதையில்*
*ஞாலம் திரும்பி நடப்பது காண்கிலம்.......*
*வினைசெய முனைந்து மேற்செலும் முடிவுடன்*
*அனைவரும் திரளஓர் அறிக்கை காணினும்*
*எழுதிய அனைத்தும் ஏற்பினும் கருத்து*
*முழுமையும் ஒருவழி முறையுடைத் தாயினும்*
*காற்புள் ளியில்யாம் கருத்து மாறினம்*
*ஏற்பதற் கிலையென எழுந்து செல்லுவர்,*
*ஒற்றுமை யறியாது உளுத்த இனமடா*
*வெற்றுரை வெற்றுரை வெற்றுரை வீரர்*
*விதியே விதியே தமிழச் சாதியை*
*என்செயக் கருதி இருக்கின் றாயடா*

என்று கூறி வருந்துவது நம் உள்ளத்தைத் தொடுகின்றது. இ தமிழினத்தைத் தட்டி எழுப்புமா? காற்றில் கலந்த கற்பூரமாகுமா என்பகைக் காலந்தான் காட்ட வேண்டும்.

3. *பெண்ணியம் பற்றி:* பெண்ணினத்தைக் கீழ்மைப் படுத்திய நிலையை எண்ணித் துயருறுகின்றார். கவிஞர் சங்க இலக்கியங்கள் பெண்ணுக்குப் பெருமை சேர்த்தன. பிற்காலத்தில் கம்பன் பெண்ணுக்குப் பெருமை தந்தான். சூர்ப்பணகையின் வாக்காக,

இந்திரன் சசியைப் பெற்றான்
இருமூன்று வதனத் தோன்தன்
தந்தையும் உமையைப் பெற்றான்
தாமரைச் செங்க ணானும்
செந்திரு மகளைப் பெற்றான்

என்று கூறுவான். இந்திரனுக்குச் சசியால் பெருமை, சிவனுக்கு உமையால் பெருமை, நான்முகனுக்குக் கலைமகளால் பெருமை. அவர்தம் துணைவியரை எங்கு வைத்துள்ளனர் என்பதை,

பாகத்தில் ஒருவன் வைத்தான்
பங்கயத் திருந்த பொன்னை
ஆகத்தில் ஒருவன் வைத்தான்
அந்தணன் நாவில் வைத்தான்

என்று கூறுவான். சிவன் தன் துணைவியை இடப்பக்கத்தில் வைத்து, 'தையல் பாகன்' என்ற பெயர் பெற்றான். திருமால் பெரிய பிராட்டியாரைத் தன்மார்பில் வைத்துக் கொண்டான். நான்முகன் சரசுவதியை நாவில் வைத்தான். இவற்றால் பெண்ணின் பெருமை பேசப் பெறுகின்றன. இக்காலத்தில் ஒருவர் தம் மனைவிக்கு அதிக மதிப்புக் கொடுத்தால் அவரை, 'பொண்டாட்டியைத் தலையில் தூக்கி வைத்திருக்கின்றார்' என்று கிண்டல் செய்கின்றது. கவிஞர் குலோத்துங்கன் பெண்ணியம் பற்றிப் பல பாடல்கள் படைத்துள்ளார்.

"நினைந்து நினைந்து" என்ற தலைப்பில் ஒரு கவிதை,

பெண்மை எனப்படும் காவியம்—புவி
பேணும் வலிமையின் பெட்டகம்
உண்மை எனக்கிது காட்டினை – எனை
உம்பரின் விஞ்ச உயர்த்தினை

அற்புதமான கவிதை. தனக்கு உள்ளொளி காட்டியதைக் கண்டு வியக்கின்றார்.

அனைத்தும் பெண்மை. என்ற தலைப்பில்

காலமெலாம் பாடியதும் காவி யங்கள்
கருப்பொருளாய்க் கொண்டதுவும் கலைகட் கெல்லாம்
மூலமென நின்றதுவும், உயிர்தொட் டீர்க்கும்
மூரல்மலர் மென்மையடா தொன்று தொட்டுத்
தேடுமொரு புதையலடா தெளியும் தோறும்
தீராத புதுமையடா, செம்மை எல்லாம்
கூடுமொரு சங்கமம் நம் உயிரும் ஊனும்

குளிர்விக்கும் தென்றலடா குறைவில் லாத
புத்துணர்வின் மணற்கேணி அழகு கோடி
பூக்கின்ற மணற்காடு கண்ஒவ் வொன்றும்
முத்துடைய மாதுளைபோல் அங்கந் தோறும்
முடிவில்லாச் சுவையமைந்த முழுமை பெண்மை
இன்பத்துள் ஊற்றெனினும் நுகர்வ தென்னும்
இயல்பொன்றே பெண்மையல, இம்பர் வாழ்வில்
அன்புமது, ஆற்றலது, உயர்வு தேடும்
ஆசையது, அடிப்படைகள் அனைத்தும் பெண்மை.

எனப் பெண்மையைப் பல்வேறு உருவகக் காட்சிகளாகக் காட்டியது அற்புதம். 'அடிப்படைகள் அனைத்தும் பெண்மை' என்று கூறுவது முக்காலும் உண்மை, உண்மையைத் தவிர வேறொன்றில்லை. ஆண் விதைத்த விதையைப் பத்து மாதம் வளர்த்து விளைச்சலாகத் தரும் ஒன்றே போதும் நிலையான சான்றுக்கு.

பெருமானின் பெண்ணியம் என்ற தலைப்பில் ஒரு கவிதை.

சக்தியென முந்தையர்தம் பெண்ணி னத்தைத்
தரிசித்த பார்வையில்ஓர் தவறும் இல்லை,
பக்திவழி சென்றவர்தம் பாதை யேனும்
பகுத்தறிவும் ஏற்கின்ற பார்வை அம்மா !

புன்னகையும் குறுஞ்சிரிப்பும் பொலிய நிற்கும்
புத்துணர்வின் புதுவலியின் சுரங்கம், வானில்
மின்னலென நெஞ்சிலொரு விசையைச் சேர்க்கும்
விந்தையடா மாதரினம் வளர்க வாழ்க !

வையத்தின் மாண்பனைத்தும் ஒருசொல் கொண்டு
வருணிக்க வேண்டுமெனின் அழகுஎன் பேன்யான்
ஐயத்திற் கிடமின்றி, அருவம் நீக்கி
'அழகு' தனி வடிவுபெறின் 'அரிவை' ஆகும்

தென்றலினும் மென்மையினர், இம்பர் வாழ்வின்
'தேட்டமெலாம்' ஒன்றாகத் திரண்டு வந்து
நின்றதெனும் பண்புடையர், அகமுந் தோறும்
நிறைவூறும் உயிரூற்று நிலத்தின் மாதர்

காதலிலும் தீமையெனின் கனன்று பொங்கிக்
காய்வதிலும் எளியவரைக் காக்கத் தம்மை
ஈதலிலும் தலைமுறையின் ஏற்றம் தேடும்
இயற்கையிலும் தாய்க்குலத்துக் கிணையொன் றில்லை

பாவையினைத் தன்னுடலில் பாதி யாக்கும்
பகுத்தறிவால் பரமசிவன் வலிமை பெற்றான்

இவையும் தாய்க்குலத்தைப் பற்றிய அற்புதமான பாடல்கள். பெண்ணினத்துக்குச் சிறப்புச் சேர்ப்பன. பொறுமைக்குச் சான்றாய்ப் பூமியைக் காட்டுவர் புலவர். பொறையுடைமைக்குப் பூமிப்பிராட்டியை எடுத்துக்காட்டாகக் கொள்வர் வைணவப் பெருமக்கள்.

**4. மானிட நேயம்:** இராம காதையில் கம்பன்

ஆறுகொள் சடிலத் தானும்
அயனும்என்(று) இவர்கள் ஆதி
வேறுள குழுவை யெல்லாம்
மானுடம் வென்ற தம்மா

என்று பாடினான். அவனுக்குப் பிறகு தமிழ்க் கவிஞர்களில் எவரும் மனித இனத்தின் உயர்வை அவ்வளவாகச் சிறப்பித்துப் பாடவில்லை. கவிஞர் குலோத்துங்கன் அந்த இடத்திற்கு வருகின்றார். மானிடத்தைச் சிறப்பித்துப் பாடுகின்றார்.நான் ஒருவனே போதும் என்ற கவிதையில் கூறுவது.

என்ன வரம்வேண்டும் என்றென்னை முன்னழைத்துச்
சொன்ன மொழிகேட்டேன் தொழுதிட்டேன் எந்நாளும்
சின்ன வரங்கேட்கத் தெரியாத என்நெஞ்சில்
பன்னெடுநாள் ஆசை பகர்கின்றேன் பார்வணங்கும்
இறைவனே நின்படைப்பில் இருக்கின்ற எண்ணிறந்த
குறையெல்லாம் நீக்கிக் குவலயத்தை யான்விழையும்
வடிவில் அமைக்கின்ற வாய்ப்பெனக்குத் தாராய்ஓர்
........................................ ............ ........................................ மெய்ப்
பொருளொன்று தேடும் புனிதப் பணியதற்குக்
கூட்ட மெதற்கு? கொடிபிடித்துப் பின்தொடர்வோர்
ஆட்டமேன் வேண்டும்? அரிய பொருளெதையும்
தேடி யளிக்கச் சிலர்போதும் மற்றதனைக்
கூடிச் சுவைக்கக் குவலயத்தை நாமழைப்போம்

என்பது கவிஞர் குலோத்துங்கனின் எண்ண வளர்ச்சியில் மணிமுடியான பகுதியிது. 'யாதும் ஊரே' என்ற சங்ககால எண்ணத்தில் தோய்ந்த இப்பெரு மகனார்,

மானிடர் எம்மி னத்தர்
மண்ணெலாம் எமது தேயம்

என்று கூறுவார். இந்த எண்ண வளர்ச்சி

தத்துவங்கள் சமயங்கள் அறிவு வாழ்வைச்
சார்ந்தவைஎன் றறிந்தவெலாம் சலித்தெ டுத்தேன்

முத்தமிழின், தமிழினத்தின் மானி டத்தின்
முன்னேற்றம் என்னை ஆளும் முழுமை கண்டேன்
எப்பொருளும் எவ்வுறவும் மானி டத்தின்
ஏற்றம்போல் என்மனத்தை ஈர்த்த தில்லை
ஒப்பரிய பயணமிது, வாம னர்யாம்
உம்பர்பதி ஊடுருவி உயரச் செல்வோம்

என்ற கவிதைகளாக உருவெடுக்கின்றது.

கவிஞர் கூறும் 'மானுடம்' யாது? மானிட யாக்கையை உடையவர் யாவரும் மனிதரல்லர் .

உயர்திணை என்மனார் மக்கட் சுட்டே

என்பது தொல்காப்பியர் கருத்து. இதனையொட்டியே வள்ளுவர் பெருமான் மனித உடலையுடையவர் அனைவரும் மானிடர் அல்லர் என்றும், மனிதப் பண்புகள் இல்லாதவர் மரப்பாவை ஆகிவிடுவர் என்றும் கூறிப் போந்தார். இதுகாறும் கூறியவற்றுக்கெல்லாம் விரிவுரைபோல் கவிஞர் கூறுவது.

வயிற்றினில் மானிடம் வாழுவ தில்லை
வயிற்றை மறந்தும் வாழ்வொன் றில்லை
செயற்றிறம் தவிர்ந்த சிந்தனை யில்லை
சிந்தையும் தோளும் சேர்ந்தது மனிதம்

உளவலி யல்லது ஒருவலி யில்லை,
ஊனுடல் கடந்தும் உளவலி யில்லை
அளவிடற் கரியதோர் அற்புதம் மனிதன்
அளப்பதும் ஆய்வதும் அறிவதும் மனிதம்

கடவுளும் தேவரும் யாமெனும் சொல்லில்
கற்பனை, மடமை பின் கர்வ மொன் றில்லை
திடமுடன் குவிந்த சிந்தையும் செயலின்
திறமும் சேர்ந்தால் தெய்வமும் ஆவோம்

இக் கவிதைகளில் பொதிந்துள்ள கவிஞரின் கற்பனையும் எண்ண வீச்சும் நம்மை வியக்க வைக்கின்றன. 'சிந்தையும் தோளும்' என்பது'எண்ணமும் செயலும்' ஆகும். மனவுறுதியுடன் செயற்பட்டால் செயல்திறம் வளரும். பிறிதோரிடத்தில் இதே கருத்தை வேறு வகையில்,

தத்துவம் செய்வ தென்ன ?
சரித்திரம் படைப்ப தென்ன ?
வித்தகம் தருவ தென்ன ?
வினைசெயா வீணர் கையில்

என்று கூறுவார். முதல் மூன்று அடிகள் சிந்தையின் தொழில்கள், நான்காவது அடியில் 'வினை செயா என்பது தோளைக் குறிப்பது. சிந்தையும் தோளும் - எண்ணமும் செயலும்- சேர்ந்தது மனிதம்.

மனிதன் செயற்படுவதற்கு ஒரு மூலமந்திரம் போல், இரத்தினச் சுருக்கமாகச் சிலவற்றைக் கூறுவார்.

*வென்றி யென்பது வேண்டும் பொருளொடு*
*ஒன்றி ஒழியா துழைப்பவர்க் குறுவதாம்*
*மானிடர் தமக்கிம் மண்ணிற் பெருமைகள்*
*வானிடை யிருந்து மழையெனப் பெய்வதில்*

*பயிற்சி இன்றெனின் பண்படல் இல்லைநன்*
*முயற்சி இன்றெனின் முழுமை காண்கிலம்*
*பயிற்சி, கல்வி, எம் படையெனக் கொண்டோம்*
*முயற்சி யுண்டெனின் முழுமை காணுவம்*

மனிதன் முயலும் போது பல இடர்ப்பாடுகள் நேரிடலாம். இக்கட்டுகளும் துன்பங்களும் தொடரலாம். இச் சமயங்களில் எதிர் நீச்சல் போட வேண்டியிருக்கும். நமக்கு வரும் துன்பமெலாம் நம்மை வடிவப்படுத்தவே பயன்படுகின்றன. இக்கருத்து ஒரு கவிதையில் அமைகின்றது.

***என்னைச் செதுக்குகிறாள் – இயற்கை***
***இன்னும் உயர்த்துகிறாள்***
***பொன்னைச் சுரங்கத்திலே —எடுத்தவள்***
***புடம்இடு கின்றாள்***

நம்மீது ஏற்படும் 'சிற்றுளிக் காயங்கள்' நம்மைச்'சிற்பமாக்குவதற்குப்' பயன்படுகின்றன. 'பற்றும் துயரமாகிய நெருப்பில் 'நமதுயிர் பக்குவப் படுகின்றது. வெயிலில் குளிப்போருக்கு வெயில் சுடுமா?

*சுடச்சுடரும் பொன்போல் ஒளிவிடும் துன்பம்*
*சுடச்சுட நோக்கிற் பவர்க்கு*

என்பது வள்ளுவர் வாக்கல்லவா? தடைகளைப் படிகளாகக் கொண்டு முன்னேற வேண்டும். இப்படி மானிட நேயம் உருவாகின்றது. இறுதியாக அவர் கூறுவது,

*தானாக ஏதும்இந்தத் தரணிவந்து சேர்வதில்லை*
*ஊனாலும், நெஞ்சின் உரத்தாலும் கொள்கையெனும்*
*திண்மையினால், வேரோடு சிறுமையெலாம் தீர்ப்பதெனும்*
*உண்மையினால் அல்லாது உயர்வெதுவும் காண்பதில்லை*

இவற்றால் பெறப்படுவது. ' முயற்சி திருவினை ஆக்கும்' (குறள் 616) என்பது.

சோதனைத் தீயில் வெந்து நிமிர்ந்தவர்
    தோல்வியை ஏற்பதிலை – அட
சாதனைப் பாதையில் முன்னடி வைத்தவர்
    தாகம் தணிந்ததிலை.
கேள்விகள் ஆயிரம் கேட்பவன் மானிடன்
    கேட்டவை யாவினுக்கும் – தேடி
வாழ்வினில் பதில்சொல மானிட ரல்லது
    மற்றவர் யாருமிலை

என்ற கவிதைகளில் ஆள்வினைத் தத்துவத்தைக் காணலாம்.

## 4. சான்றோர்கள்

'தனக்கென முயலா நோன்தாள் பிறர்க்கென முயலுநர் உண்மையானே'.... உண்டாலம்ம இவ்வுலகம்' என்று கூறுவான் புறநானூற்றுப் புலவன். சங்க நூல்களில் இப்படிப் பல எண்ணங்கள். சுந்தர மூர்த்தி, நம்பியாண்டார் நம்பி, சேக்கிழார் முதலியோர் கருத்துகளை ஒட்டிப் பின்னர் வந்த புலவோர் தம் காலத்து வாழ்ந்த பெரியோர்களை நினைவு கூர்கின்றனர். கவிஞர் குலோத்துங்கனும் இம்மரபை ஒட்டிச் சிலரைத் தம் கவிதைகளில் நினைவு கூர்கின்றார்.

தந்தை பெரியார்: பூத உடலைத் துறந்தாலும் புகழுடம்புடன் தமிழர் மனத்தில் நிலையான இடம் பெற்றுத் திகழ்கின்றார். அடியார்கள் உள்ளத்தில் ஆண்டவன் திகழ்தல் போலப் பெரியார் இருப்பதால் அவரைப் பற்றிக் கவிஞர் பாடிய பாடல்களுள் மூன்று பாடல்களைக் காட்டுவேன்.

தென்னகத்தின் ஒருதலைவர் ஒருநூ றாண்டு
    திரவிடத்தின் வளர்ச்சிக்கே தன்னைத் தந்த
தன்னிகரி லாத்தமிழர் இந்த மண்ணில்
    சரிதையிலோர் புதுமனிதர் இருண்ட வானில்
மின்னலெனத் துலங்கியவர் வளர்ந்து யாங்கும்
    விரிகின்ற சுடரான வேந்தர், சூழும்
தன்னலத்தின் கோட்டையெலாம் ஒருங்கு வீழச்
    சாய்த்திட்ட பெரியாரே சிலையாய் நின்றார்.

முற்பட்ட குலங்கண்டார், தாழ்த்தப் பட்ட
    முதுகுடியில் இனங்கண்டார் சமுதா யத்தின்
பிற்பட்ட குலங்கண்டார் உயர்வு தாழ்வுப்
    பேதங்கள் நீக்குவதற் காள வந்தார்

கற்பித்த பிரிவிவற்றின் அடியில் சாதி
காலூன்றி வேரூன்றிப் புதுமை பெற்று
நிற்கின்ற நிலைகண்டார் தமிழன் என்ற
நிறைகாணார் நெஞ்சொடிந்து சிலையா னாரோ ?

சீர்திருத்தக் கொள்கையினை நுணுகி ஆய்ந்து
தெளிகின்ற பகுத்தறிவின் திறங்கள் கூறிப்
பார்திருத்தும் பண்பாளர் ஈரோட் டில்தன்
பாசறையில் வாழ்ந்தவர்கள் தாழ்வு நீங்கப்
போர்தொடுத்த பெருவீரர் பலரிந் நாட்டின்
பொறுப்பான பதவிகளில் அமர்ந்து யாவும்
நேர்நிறுத்த முயல்கின்ற நிலைமை கண்டு
நிறைமனதோ டோய்வுபெறச் சிலையா னாரோ ?

இவை தவிரக் "காவியங்கள் கலைகள் அவன்பெருமை பேசும்" என்ற தலைப்பில்

மனிதன்நீ, வையத்தின் மன்னன், வாழ்வு
மனப்பான்மை இல்லாது மண்ணில் நிற்கும்
துணிவுபெறு, பகுத்தறிவின் துணைகொள் என்று
சொன்னவன்எம் தென்னகத்தின் துயர்து டைத்தான்
தடம்சொன்னான், தமிழருக்குக் கண்ணும் காதும்
தன்னறிவும் மனவலியும் தந்தான் என்றும்
கடன்பட்ட தமிழுலகம் நன்றி சொல்லும்
காவியங்கள் கலைகள்அவன் பெருமை பேசும்.

என்று பாடுகிறார். அடுத்து தந்தை பெரியார் மறைந்ததைப் பற்றிப்பாடிய கையறுநிலைப் பாக்களில் இரண்டை ஈண்டுத் தருவேன்.

மலைசாய்ந்த தையகோ தன்மான
உயர்வனைத்தும் வடித்தெ டுத்த
சிலைசாய்ந்த தையகோ, தென்னகத்து
மண்முழுதும் தெளிவு கண்ட
நிலைசாய்ந்த தையகோ, நீதியெலாம்
தானாகி நின்ற வேந்தன்
தலைசாய்ந்த தையகோ, தமிழகத்தின்
கொழுகொம்பு சாய்ந்த தம்மா

வெண்தாடி வேந்தெங்கே? வேழத்தின்
நடை எங்கே? சீர்தி ருத்தப்
பண்பாடி ஒளிசேர்த்த பகுத்த றிவின்
சுடர்எங்கே? பழமை கோடி
மண்வீழச் சாய்த்திட்ட மாவீரன்
குரலெங்கே? மானி டத்தின்

புண்தேடி அதிலுள்ள புரைதேடி
ஆற்றியவன் போன தெங்கே?

இப்பாடல்கள் யாவும் தந்தை பெரியாரை நமக்கு அறிமுகப் படுத்தும் அற்புதச் சொல்லோவியங்கள். "மக்களின் மலிவுப் பதிப்பை " மாண்புற எடுத்துக்காட்டும் அமுத ஊற்றுக்கள். அயோத்தி இராமனுக்கு, "பாரகாவியம்" ஒன்று இயற்றிச் சிறப்பித்தான் கம்பநாடன். ஈரோட்டு இராமசாமிக்குப் பாவேந்தரின் 'பாண்டியன் பரிசு' போல் ஒரு சிறு காவியமாவது தக்க காவிய மாந்தர்களைத் தேர்தெடுத்து இயற்றுவது இக்காலக் கவிஞர்களது கடமை. புதுக்கவிதையிலாவது இயற்றிச் சிறப்பிக்கலாம்.

2. *பாரதிதாசன்:* 'புதுவை தந்த குயில்' என்ற தலைப்பில் நான்கு கவிதைகள். அவற்றுள் இரண்டு,

*இருள்கவிந்த தமிழ்வானை எழில்செய்த*
*எழில்நிலவே எம்மைச் சூழ்ந்த*
*மருள்தீர்க்கும் அருமருந்தே வளர்கலையின்*
*பிறப்பிடமே தமிழர் கட்குப்*
*பொருள்கனிந்த பாவிசைக்கும் தமிழ்க்குயிலே*
*புதுவைதந்த மணியே உன்றன்*
*பெருநெஞ்சம் பாலூறும் பேருற்றாம்*
*பாக்களெலாம் அமுத ஊற்றாம்*

*இன்னிசையின் சுவைபிழிந்து இசையமுதாய்*
*வழங்கிவிட்டாய் இருண்ட வீட்டில்*
*வெண்ணிலவை நிகர்குடும்ப விளக்கேற்றித்*
*தமிழியக்கம் விதைத்தாய் உன்கண்*
*முன்இயற்கை அழகாகச் சிரித்தாள்பாண்*
*டியன்பரிசில் முத்த மிழ்த்தாய்*
*புன்னகைபூத் தின்புற்றாள், புத்துலகப்*
*பாவரசே வாழி வாழி.*

3. *பாரதி,* " பாரதி நின் அறங்கள் வெல்க" என்ற தலைப்பில் ஐந்து பாடல்கள் . அவற்றில் மூன்று.

செந்தமிழில் வாழ்வில்ஒரு திருப்பங் கண்டாய்
தீங்கவிதை இலக்கியங்கள் புலவர் கட்கே
சொந்தமென நின்றதொரு தோற்றம் வென்றாய்
சொல்கடந்த புதுவாழ்வு தமிழன் னைக்கு
வந்ததெனப் புதுக்கவிதை படைத்தாய், பாட்டின்
வரியனைத்தும் மின்விசையின் வலிமை யூட்டித்

தந்ததமிழ்ப் பெருங்கவிஞ கவிதைத் தாயின்
தலைமகனே பாரதிநின் தலைமை வெல்க.

சுவைபுதிது, சொல்புதிது, பாடல் தேர்ந்த
துறைபுதிது, முறைபுதிது, பாடி நின்ற
அவைபுதிது, பொருள்புதிது, கவிஞ நீஎம்
அவலத்தின் ஊற்றுகளை ஆய்ந்த எண்ணக்
குவைபுதிது, குறிபுதிது, நமது பண்டைக்
கொள்கையெனும் தருவினில்நின் பார்வை கண்ட
சுவைபுதிது, மலர்புதிது, புதுயுகத்துக்
கவியரசே பாரதிநின் கலைகள் வெல்க.

வளியனைய உணர்வலைகள் எழுந்துன் நெஞ்சில்
வழிநின்ற மலைசாய்க்க வளர்ந்த போதும்
தெளிவுடைய சிந்தனையின் திறம்ம யங்காத்
திறனுடைய பெரியோய் திசைக டந்த
ஒளியுடைய பார்வையினோய் ! மண்ணும் விண்ணும்
ஒருங்கிணைய நின்றதமிழ் முனிவ ! பொங்கும்
அளியுடைய, மெய்யுடையை, தீய தீய்க்கும்
அனலுடைய, பாரதிநின் அறங்கள் வெல்க.

தேசியக் கவி பாரதியை மனத்திரையில் பதியவைக்கும் அரிய சொல்லோவியங்கள் இவை. இவை தவிர " பாரதி கண்ட பாரதம்" என்ற தலைப்பில் அற்புதமான கவிதைகள் உள்ளன. விரிவஞ்சி அவை ஈண்டு காட்டப் பெறவில்லை.

4. ஜவகர்லால் நேரு: "புகழனைத்தும் பூணுதற்கு ஒருவனம்மா" என்ற தலைப்பில் ஏழு கவிதைகள். அவற்றுள் ஐந்து

மேருவை மேலும் கீழும்
விஞ்சியோன், மேரு தோய்வெண்
நீருள தூய்மை வென்ற
நெஞ்சினன் நீர்சு மந்த
காருள வளங்கள் மீறும்
கருணையன் காலம் வென்ற
நேருவின் பரிமா ணங்கள்
நினைவிலும் விரிந்த தம்மா

சிறுமையொன் றறியான், மண்ணில்
தேவனாய் நின்ற மைந்தன்
வறுமையின் நிழலும் சாயா
வண்மையின் வடிவாய் வந்த

பெருமகன், பெரிய வன்றிப்
　　பிறவெதும் கண்டு தாங்கும்
பொறுமையொன் றில்லோன் வாழ்வின்
　　புனிதங்கள் தசையும் நாரும்

உருவமும் பெற்ற தன்ன
　　உத்தமன் புத்தன் சொன்ன
தருமமும் சமணர் அன்பின்
　　தன்மையும் பக்தி ஞானம்
கருமமும் பிரிந்து ரைத்த
　　கண்ணனின் வழியும் தொன்மை
மருவிய தமிழி னத்தின்
　　மறைகளும் அறிந்தோன் மற்றும்

பாரதம் தந்த யாவும்
　　பயின்றவன் பயின்ற வற்றின்
சாரமும் சார மற்ற
　　சக்கையும் தெளிந்து தேர்ந்த
காரணன், உணர்வும் ஆய்வும்
　　கலந்துநின் றுலகம் கண்ட
பூரண மனிதன் இந்தப்
　　புவிக்கொரு புதல்வ னம்மா

நிகரென அவனை ஒத்து
　　நின்றவர் அரிதே மண்ணில்
மகனென அவன்நி லைக்கு
　　வளர்ந்தவர் அரிதே காலம்
உகமெனச் சூல்இ ருந்திவ்
　　வுலகினுக் களித்த தெய்வப்
புகழினன் புகழ னைத்தும்
　　பூணுதற் கொருவ னம்மா !

இவை அண்ணல் நேருவை அற்புதமாக அறிமுகம் செய்யும் உயர்ந்த கவிதைகள் ஆகும்.

5. குன்றக்குடியடிகளார்: " புதுயுகத் துறவி" என்ற தலைப்பில் வருவது.

சமயமொடு தமிழ்வாழத் தமிழர் வாழத்
　　தாளாது தளராது தொண்டு செய்து
இமயமென நின்றதமிழ் ஞானி ஒய்ந்தான்
　　இனியதமிழ் வாழும்வரை இவனும் வாழ்வான்.

வாழையடி வாழையென வந்த சைவ
மரபுக்கு வளர்கின்ற மனித வாழ்வில்
நாளைவரும் தேவையொடு நடந்து செல்லும்
நாகரிகம் சேர்த்ததமிழ் ஞானி சாய்ந்தான்.

அறிவியலும் ஆன்மிகமும் இணைந்து நிற்கும்
அற்புதத்தின் தந்தைஇவன் பழமை கண்ட
நெறிமுறையும் புதுயுகத்தின் நிறையும் தேர்ந்தோன்
நிகழ்கால நெகிழ்வுக்கு நியதி தந்தான்.

குன்றத்தில் குடிகொண்டான் தமிழர் வாழ்வின்
குறிக்கோளில் உயிர்நின்றான் அறிஞர் கூடும்
மன்றத்தில் முன்நின்றான் சமய வாழ்வில்
மறுமலர்ச்சி கண்டமகன் மறைவ துண்டோ?

இசைபரவ வாழ்ந்தவர்கள் இறப்ப தில்லை
எங்கள்தமிழ்க் கொள்கை இது, ஞானத் தேரில்
திசைமுழுதும் தமிழ்பரவச் சென்றான் பண்டைத்
தேவார மூவரொடும் சேர்ந்தான் வாழ்க!

அற்புதமான கவிதைகள் இவை. மடத்துச் சம்பிரதாயங்களையெல்லாம் உதறித் தள்ளிப் பட்டிதொட்டியெல்லாம் வலம் வந்து பாமர மக்களின் உள்ளங்களைக் கொள்ளை கொண்ட 'குன்றை நகர் வாழ வந்த' அடிகளாரை இக்கவிதைகள் நம் மனத்திரையில் நிலையாகப் பதிய வைக்கின்றன.

## 5. பொதுநோக்கில்

1. கவிதை பற்றி. 'கலைவானில் வானம்' என்ற தலைப்பில் வருவது.

மாடிக்குப் படியமைத்த வண்ணம் போல
வார்த்தைஒரு வரியாக்கி அடுக்கி வைத்தல்
வேடிக்கை யன்றுபுதுக் கவிதை முற்றும்
விளங்காத தெனின்நன்று மேதைச் சின்னம்,

சொற்சிலம்பம் ஆடுபவர் இலக்கி யங்கள்
தோன்றியநாள் தோன்றியவர் இவர்கள் செய்யும்
அற்புதங்கள் சித்துக்கள் கண்டும் கேட்டும்
ஆர்ப்பரிப்பார் இன்றென்ன என்று முண்டு.

கலைவானில் மத்தாப்பு வாணம் விட்டுக்
களிப்பாரை வரவேற்போம் திருவி ழாவில்
விலைபோகும் பொருள்களிவை சிறிது காலம்
விண்ணதிர வெடிப்பனவும் வேண்டு மன்றோ.

*மரபுவழிக் கவிதையினி வாழா தென்போர்*
*மழலைமொழி ஒருசிலரை வருத்தக் கண்டோம்*
*பரவுமணற் கடற்கரையில் ஊற்றெ டுப்போர்*
*பரவையினி வற்றுமெனில் பகைப்ப துண்டோ*

சொற்சிலம்பங்கள் மரபிலும் உண்டு, புதியதிலும் உண்டு. நமக்கு உளக்கோட்டம் இருந்தால் இரண்டிலும் உண்மை காண முடியாது. டார்வின் சித்தாந்தப்படி இரண்டிலும் தகுதியானவை மட்டிலும் வாழும். மற்றவை வீழும். ஜாங்கிரி, ஜிலேபி, இலட்டு போன்ற இனிப்பு வகைகளும் வேண்டும். இவை அமர்ந்து சுவைக்க வேண்டியவை. மிளகு மிட்டாய், சாக்லேட்டு தினுசுகள் இவற்றை அமர்ந்து கொண்டும் சுவைக்கலாம், நடையாடிக் கொண்டும் சுவைக்கலாம். இவைதாம் மரவும் புதிதும்.

"நிதமுமா முழுநிலவு" என்ற தலைப்பில் வரும் கவிதைகள் சிறப்பாகக் கவிஞர்க்கும் பொதுவாக எல்லோரும் சிந்திக்க வேண்டியவைகளாக அமைகின்றன.

வேரற்ற பொருளன்று கவிதை செய்யும்
வினையற்ற இடமன்று கவிஞர் வையம்
ஊரற்ற நாடோடி வாழ்க்கை வேறு
உலகத்தின் குடிமகனாய் உயர்தல் வேறு.
எரிமலைகள், இடி, மின்னல் பூகம் பம்என்
றெழுதுவது புரட்சியல, எழுந்து பொங்கி
விரிகின்ற ஆவேசம் நெஞ்சி னின்று
வெடிக்கின்ற சொல்வேறு, வெறுஞ்சொல் வேறு

எரிக்கின்ற தீயிருக்கும், நெடிய வெற்பை
இடிக்கின்ற வெடியிருக்கும் விழுதும் வேரும்
பறிக்கின்ற புயலிருக்கும், இன்ப வெள்ளம்
பாய்ச்சுகின்ற ஊற்றிருக்கும் கவிதைச் சொல்லில்
மின்கம்பி செய்திசொலும், இரும்பில் காந்தம்
விசைஊட்டும், மின்சாரம் செம்பிற் செய்த
நுண்கம்பிக் காற்றல்தரும், சொல்லின் சக்தி
நுவல்வார்தம் உணர்வுகளின் நுழைவே யன்றோ

இவற்றைப் பன்முறை படித்து அநுபவித்தால் உண்மை தட்டுப்படும்.

2. **யாப்பமைதிகள்:** இருக்கை வாடகை தந்து தமிழைக் கல்லூரிகளில் முறையாகப் பயிலாதவராயினும், இல்லத்தில் ஓரளவு யாப்பிலக்கணத்தைப் பயின்றிருத்தல் கூடும். இந்த அறிவை, பாரதியார்,

பாவேந்தர் கவிதைகளைப் படித்து அநுபவிக்கும் போது அந்த இலக்கண அறிவு அநுபவ அறிவாக மலர்ந்திருக்க வேண்டும்.

இவர்தம் கவிதைகளில் அகவல், அறுசீர், எண்சீர் விருத்தங்கள், தாழிசை, கண்ணி, சிந்து முதலிய மரவழிப் பட்ட யாப்புகளே பெரும்பாலும் கையாளப் பெற்றிருப்பதைக் கண்டு மகிழலாம். அகவல் பாவினைக் குலோத்துங்கன் அற்புதமாகக் கையாண்டிருப்பது நம்மை வியக்க வைக்கின்றது. மரபுவழி வரும் பாக்களையும், பாவினங்களையும் கையாளுவதனால் வழக்கிறந்த சொற்களோ, தொல்வழக்குச் சொற்களோ, பொருளற்ற ஓசை நிரப்பிகளோ வந்து புகுந்து கவிதை வனப்பைச் சிதைத்து விடவில்லை. மாறாக எளிய மக்கள் வழக்கிலுள்ள சொற்களே இடம் பெற்று குறைந்த தமிழறிவுள்ளவர்களும் படித்து நுகருவதற் கேற்றவாறு கவிதைகள் அமைந்துள்ளன.

குலோத்துங்கனின் கவிதைகள் பிற கவிஞர்களின் படைப்புகளினின்றும் சற்று வேறுபட்டவை. அனைத்தும் பொதுநோக்கில்- ஆனால் அறிவியல் பார்வையில் அமைந்தவை, அணுகு முறையிலும் புதுப் போக்குடையவை. கவிதையுலகிற்குப் புதியவர்களாக அடியெடுத்து வைப்பவர்கட்குக் கலங்கரை விளக்கமாய், துருவ மீனாய் வழிகாட்டிக் கொண்டே இருப்பவை என இவர் கவிதை பற்றிய செய்தியை நிறைவு செய்கின்றேன்.

# 7. டாக்டர் . இரா. திருமுருகன்

புதுவை மாநிலம் புதுச்சேரி நமக்கு ஈந்த மரபுநிலைக் கவிஞர் (1929). இவர் ஒரு பிறவிக் கவிஞர். தமிழ்ப் புலமையோடு இசைப்புலமையும் வாய்க்கப் பெற்றவர். இவர் தமிழில் எம்.ஏ.எம்.எட், பி.எச்டி பட்டங்களும், பிரெஞ்சு மொழியில் மொழிப் பட்டயமும், மொழியியல் சான்றிதழ்களும் பெற்றவர். முனைவர் பட்டத்துக்கான இவரது ஆய்வுப் பொருள், சிந்துப் பாடல்களின் யாப்பிலக்கணம் என்பது. கடின உழைப்பால் உடல்நலம் குன்றியது. எனவே பணி ஓய்வு பெற்றார். தமிழ் முருகன் இத்திருமுருகனைத் தமிழ் வளர்ப்பதற்காகவே பிழைக்க வைத்திருக்கின்றான். இலக்கணத்தில் ஆழ்ந்த புலமை மிக்கவர். இத்தகைய சிறந்த அறிஞரின் பணி, மேனிலைப் பள்ளிகளிலேயே கழிந்தது. ஓய்வு பெற்ற பிறகு புதுவை அரசுக் கல்வித்துறை தமிழ் வளர்ச்சிச் சிறகத்தில் சில ஆண்டுகள் தனிப்பணி அலுவலராகப் பணியேற்றுச் சிறப்பாகப் பணியாற்றி நற்புகழ் பெற்றவர். இறுதியில் பாரதியார் வாழ்ந்த இடமாதலாலும், பாவேந்தர் பிறந்து வளர்ந்த இடமாதலாலும், அந்தப் புதுவை மண்ணில் பிறந்த காரணத்தால் இவரும் பிறவியிலேயே கவிஞராகத் திகழ்கின்றார், பாவேந்தர் மரபில் தோன்றிய முதற் கவிஞர் முதலாவதான கவிஞரும் கூட. இவர் பல காலங்களில் பல நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு பாடிய கவிதைகள் நூல் வடிவம் பெற்றுள்ளன. கம்பனை ஆழ்ந்து கற்று, கம்பனில் வண்ணங்கள் என்ற ஆய்வு நூலை வெளியிட்ட பெருமகன். பாவேந்தர் போலவே இவரும் திராவிடக் கொள்கையினர். கடந்த இருபது ஆண்டுகளாக என் அரிய நண்பர்.

இனி இவருடைய கவிதைகளை நோக்குவோம். பல்வேறு காலங்களில் பல்வேறு பாட்டரங்குகளில் பங்கு பெற்றுப் பாடிய கவிதைகள் இதழ்களில் வெளிவந்த சில கவிதைகள் ஆகியன நூல்களாய் வெளி வந்துள்ளன. (1) ஓட்டைப் புல்லாங்குழல் (2) பன்னீர் மழை என்ற இரண்டு பெயர்களில் வெளிவந்துள்ளன.

### 1. தமிழுணர்வு

இவர்தம் பாடல்களில் இழையோடி இருப்பது இவர்தம் தமிழுணர்வு ஆகும்.

*வான்தலை கொட்கும் வளிதவழ் காலத்து*
*வடக்கண் தணிகை.தென்கண் குமரி.*
*குடக்கண் சேரலம்.குணக்கண் புணரி*
*ஆயிடை*

இனித்திடும் மாண்பின் தனித்தமிழ் திகழ்வுற
மேல்நில வாணரும் விழைந்துவந் தீண்டும்
நானிலத்து இருந்துசெங் கோல்நிலை நடாத்தும்
இறைவீ பெருமுதுக் குறைவீ முற்படு
மூத்த அன்னாய் மூவாக் கன்னீ
குறிஞ்சித் தேனே கோவலர் குழலே
நிழல்மலி மருதே நெய்தல் மலரே
இயலே இசையே எழில் ஆர் நடமே
கயலே வில்லே கதமிகு புலியே
அன்பே அறமே தென்பால் தவழ்தரு
மென்கால், நின்கால் மேவுதும்
மன்பதைக்கு இன்பம் மலிந்திடற் பொருட்டே.

இது சங்க இலக்கிய நடையில் வடவேங்கடம் தென்குமரி ஆயிடை என்ற தொல்காப்பிய நூற்பாபோல் அமைந்துள்ளது. வடவேங்கடம் ஆந்திரத்திற்குப் போய்விட்டதால் வடக்கு எல்லையை திருத்தணியாக அமைத்தார் இதில் மூத்த மூவாத என்ற முரண்பாடுள்ள சொற்கள் ஒரு பொருளுக்கே உள்ள நயம் காணத் தக்கது. தமிழ் நானிலத்துக் கருப்பொருளாக உருவகம் செய்யப் பெற்றுள்ளதும். தமிழகத்தில் இயற்கைப் பாலை இன்மையால் அது தவிர்க்கப் பெற்றதும் தனிச் சிறப்புகள். மேலும், முத்தமிழும், மூவேந்தர் கொடியும், தமிழ் நாட்டிற்கே உரியதென்றலும் பாடலில் அமைந்த பாட்டின்பத்தைப் பறை சாற்றுகின்றன.

" படைத்திலனே" என்ற தலைப்பில் காணும் மூன்று பாடல்கள் கவிஞரின் உலப்பிலாத தமிழ்ப் பற்றைக் காட்டுகின்றன.

கிடைத்திடு மேடையிற் பேசவும்
தாய்உறும் கேடுகளைத்
துடைத்திடு மாறுநம் ஆளவந்
தாரைத் தொழுதிடவும்
தொடுத்திடு தொன்னூல் சுவைக்கவும்
அன்றித் தொடர்ந்தொருநூல்
படைத்திட நேரம் படைத்தில
னேஎன்றன் பைந்தமிழ்க்கே

வலந்தருவோர் தமை வாழ்த்தவும்
இற்றை வழக்கினிலே
கலந்துள நெல்லொடு கல்லும்
கொழித்துக் களைத்திடவும்

புலந்தரு நூல்களைச் சொல்லவும்
அன்றிப் புதியசெய்து
நலந்தர நேரம் படைத்தில
னேஎன்றன் நற்றமிழ்க்கே

அற்புதமான கட்டளைக் கலித்துறையில் அமைந்து கவிஞரின் ஏக்கக் குரலாக ஒலிக்கின்றன. இக்கவிஞர் பாரதிதாசனைப் பற்றி ஒரு சிறு காவியமாவதுபாண்டியன் பரிசு போல்படைத்து மன அமைதி அடைய வேண்டும் என்பது என் எதிர்பார்ப்பு. பொருத்தமான பாத்திரங்களைத் தேர்ந்தெடுத்து, தந்தை பெரியாரைப் பற்றியும் ஒரு சிறு காவியம் இயற்றலாம்.

அடுத்து 'வாழிய தமிழே' என்ற தலைப்பில் உள்ள ஒரு பாடலில் தமிழின் தூய்மையைக் காத்த சான்றோர்களைப் புகழ்ந்து பேசுகின்றார்.

கண்ணுதற் கடவுளும் கழகமோடு அமர்ந்து
பண்ணுற ஆய்ந்ததாப் பகர்ந்திடு தமிழே
ஞாலம் தோன்றிய நாள்உடன் தோன்றிக்
காலம் வென்றொளிர் கன்னிச் செல்வமே
மலயத்து எழுந்து மதுரையில் தவழ்ந்து
புலவர் நாவில் பொருந்திய தென்றலே
நெற்றிக் கண்ணில் நெருப்பெழச் சீறினும்
குற்றமே என்று கூறிய கீரன்,
போலிப் புலமையாற் புல்லிய பாடும்
காலிப் புலவரைக் காதை யறுத்தவர்
குட்டும் பாண்டியன், குறைசெய் வார்தலை
வெட்டும் கூத்தன், வீண்வழக் கணையச்
சூறா வளியினைச் சுழற்று மாமுனி,
இலக்கிய இலக்கணக் கொலைத்தொழில் புரிவார்
கொட்டம் அடக்கிய செட்டியார், தமிழிற்
பிறமொழி கடியும் மறைமலை யடிகள்
வீறார் சொல்லால் வெடிபடச் சீறும்
நாவலர் புரட்சிப் பாவலர் என்றிவர்
துறைதொறும் துறைதொறும் தூய்மை காத்தனர்.

என்று இவர்களைப் பட்டியலிட்டுக் காட்டி மகிழ்வார்.

டாக்டர் திருமுருகனின் அளவிலாத் தமிழ்ப் பற்று போலிப் புலவர்களைக் கடியச் செய்கின்றது. தமிழன்னையை நோக்கி, அவர்

கூறுவார் 'பாடலியற்ற விரும்புவார் பலரும் தமக்குத் தோன்றியவாறெலாம் எழுதி இதழ்கட்கு அனுப்பலாம், பெரிய பெயர் எடுக்கலாம், உன் எழிலைக் கெடுக்கலாம், அவர்களை ஏனென்று கேட்பதற்கு ஒருவரும் இலார்' என்று கூறியவர், மேலும் கூறுவார்,

*பாப்புனை இற்றைப் பாவலர் பலரும்*
*யாப்பிலக் கணம்எனில் யாதென அறியார்,*
*எழுத்திலக் கணத்தில் இம்மியும் அறியார்,*
*'அசை' எனில் அசைவர், 'சீர்' எனில் சீறுவர்*
*'தளை' எனில் கையைத் தலைமேல் வைப்பர்,*
*'அடி'எனில் கவிழ்ந்தே அடியினை நோக்குவர்*
*'தொடை' எனில் 'எங்கே துடைத்திட ?' என்பர்.....*
*தொல்காப்பி யமோ சொல்லக் கேள்விதான்*

என்று அவர்களின் இலக்கண அறிவை விளக்கமாகக் கூறியவர் இலக்கிய அறிவையும் 'சுழி' என்று காட்டி அவர்கள் எழுதுவதைப் பற்றி எடுத்தியம்புவார்.

*எதுவோ ஆட எதுவோ கண்ணுற்*
*றதுவாய்த் தானும் ஆடிய கதைபோல்*
*என்னவோ காண்குவர் என்னவோ நினைகுவர்*
*கான மயிலாட ........... முதுரை நினைந்து*
*சொல்நயம் பொருள்நயம் தொடைநயம் இன்றி*
*என்னவோ எழுதுவர் இதுவே செய்யுளென்*
*றிதழுக் கனுப்புவர் இதழா சிரியரோ*
*அதனைக் காண்பார் அவர்க்கென்ன தெரியும்*
*வீறு முதிரான் விளைத்த புணர்ச்சியில்*
*பேறு முதிராள் பெற்ற குழவிபோல்*
*பாஎனும் தோற்றம் மேவிடும், அதனை*
*ஓவச் செய்தியால் ஒப்பனை செய்தே*
*அச்சுக் குதிரையில் அமர்த்தி நாடெலாம்*
*மெச்ச விடுப்பர் வேதனை ................*

என்று ஓலமிட்டு 'அன்னையே' 'முத்தமிழ்' என்று போற்றும் நின்னை வளர்க்கும் அழகிது என்று பெருமூச்சு விடுவார்.

காலம் என்ற தலைப்பில் தம்காலத்துத் தமிழின இழிநிலையைக் கண்டு இரங்கி வேதனைப்படுகின்றார் தமிழுணர்வு மிக்க கவிஞர் இரா. திருமுருகன். முருகன் தமிழ்க் கடவுள் அல்லவா?

தனது எழுத்தைப் பிறமொழி தன்னில்
　　தறுக்குடன் கிறுக்கிடும் காலம்
தனது பிள்ளைக்குப் பிறமொழிப் பெயரைச்
　　சார்த்தியே மகிழ்ந்திடும் காலம்
தனது தாய்மொழியைத் தாழ்த்துவோன் தன்னைத்
　　தாங்குவோர் உயர்ந்திடும் காலம்
இனிதுநம் தமிழென்று இயம்பியே நம்மேல்
　　இன்னொன்றைத் திணித்திடும் காலம்.

'ஜுனியர் போஸ்டு" எனத்தமிழ் இதழுக்குப்
　　பெயர்தனைச் சூட்டிடும் காலம்
தான்அதில் 'லைட்ஸ்ஆன்' 'கவர்ஸ்டோரி' என்ற
　　தலைப்பினில் எழுதிடும் காலம்
தேன்என இனிக்கும் 'நன்றி' யை மறந்து
　　'தேங்கஸ்' என மொழிந்திடும் காலம்
மானமே இன்றி "மம்மி" "டாடி" என்று
　　மழலையைப் பயிற்றிடும் காலம்.

பூக்களைப் புஷ்பம் என்பதில் மகிழ்வோர்
　　புதுக்கவி படைத்திடும் காலம்
காக்கைகள் கரையக் குயில்எலாம் எங்கோ.
　　கரந்தயர்ந் துறைந்திடும் காலம்

என்று தனது வருத்தத்தைத் தெரிவிக்கின்றார். 'தமிழ் முருகனும்' இந்த நிலையை மாற்ற முடியாது.' டாக்டர் திருமுருகனும் இந்த நிலையைப் பார்த்துக் கொண்டுதான் இருக்க வேண்டும். ஆங்கிலேயர் நாட்டை விட்டுச் சென்று ஐம்பது ஆண்டுகள் உருண்டோடின. கடந்த முப்பதாண்டு காலமாக நம்மவர் விருப்பத்திற்கிணங்க ஆங்கிலப் பள்ளிகள் தோன்றி வருகின்றன. தமிழாசிரியர்கள் மட்டுமே - ஒரு சிறு கூட்டம்-இதனைக் குறை கூறி வருகின்றனர். கவலை வேண்டா, நீராலும் நெருப்பாலும் அழிக்க முடியாத தமிழை யாராலும் அழிக்க முடியாது . தன்னேரில்லாத தமிழன்னைக்குத் தன்னைக் காத்துக் கொள்ளும் ஆற்றல் உண்டு.

## 2. பல்சுவைத் தலைப்புகள்

டாக்டர் இரா. திருமுருகன் படைத்த பலசுவைப் பாடல்கள் பல உள. அவற்றை இத்தலைப்பில் காட்ட விரும்புகின்றேன்.

கற்பதில் ஆர்வம், சாந்துணையும் கல்லாதவாறு-ஏன்? என்ற வினா எழுப்பினார் வள்ளுவர் (குறள் 397). கவிஞர் அதற்கு விடையாக அமைகின்றார். 'பாடை ஏறினும்' என்ற தலைப்பில் காணப்படும் பாடல்

இதற்குச் சான்றாக அமைகின்றது., ஒரு நண்பர் அகவை ஆனபின்பும் ஏன் படிக்கின்றாய்? என்ற நண்பருக்கு விடைதரும் பாங்கில்,

*படிப்பத னாலே பட்டம் பெற்றுப்*
*பதவி யாலே பணத்தைப் பெறுவதன்*
*இறுதி நோக்கே இன்பந் தானே?*
*வையத்து வாழ்க்கையின்*
*இறுதிக் குறிக்கோள் இன்பம் என்றால்*
*எனக்குப்*
*படிப்பதி லேயே கிடைக்கிறது இன்பம்*
*அந்த இன்பத்துக் காகப்*
*பாடை ஏறினும் நூலது கைவிடேன்*

என்று வசனகவி தருகின்றார். சரியான விடை. என் இயல்பும் இதுவாதலால் என்னைக் கேட்கும் அன்பர்கட்கு இதுவே விடையாக அமையலாம்.

நட்பு நெறி என்ற இத்தலைப்பில் காணப்பெறும் பாடலின் பிற்பகுதி, வருமாறு

*பொல்லாத பண்புகளைப் போற்றாமல் யார்மாட்டும்*
*ஒல்லும்வாய் எல்லாம் உயர்பண்பே போற்றி, அவர்*
*நல்லாரோ அல்லாரோ நம்மிடையே வாழ்கின்ற*
*எல்லாரிடத்தும் இணக்கமுற வாழ்வதுவே*
*நல்லநெறி என்பேன்நான்*

என்பது அருமையான 'உபதேசம்'. என் கல்லூரி வாழ்வுமுதல் (1934) இன்றுவரை நான் கடைப்பிடிப்பதும் இதுதான்.

*குணம்நாடிக் குற்றமும் நாடி அவற்றுள்*
*மிகைநாடி மிக்க கொளல்.* (குறள் 504)

என்று வள்ளுவர் கூறுவதும் இதுதானே.

நாகரிகம், புறநாகரிகம், அகநாகரிகம் என இரண்டுவகை. முன்னது ஆடை, இல்லம் உணவு முதலிய படாடோபங்கள். பின்னது வருமாறு;

*பெயக்கண்டும் நஞ்சுண்ணல்*
*சினத்தைக் காத்தல்*
*பிறர்நோயும் தன்நோய்போல்*
*போற்றல், தம்இன்*
*உயிர்ஈந்தும் பிறர்துன்பம்*
*நீக்கல் என்றும்*

உள்ளத்தைத் தூய்மைசெயல்
ஒழுக்கம் பேணல்
புயல்அனைய துன்பம்வரின்
நகைத்துப் போக்கல்
புத்தர்என யேசுஎனக்
காந்தி என்ன
உயர்ந்த குறிக்கோளுடன்
வாழ்தல் இன்ன
உள்ளத்தின் நாகரிகம்
என்ன லாகும்.

இம்முறையில் முயன்று நடத்தல் நன்று.

வாழ்க்கை இது புதிர் போன்றது என்ற உண்மையை

அலைகொழிக்கும் ஆழ்ந்துஇருக்கும்
கடலும் அன்று
அரிதான முரணிருக்கும்
போரும் அன்று,
தொலையாத சிக்கிருக்கும்
சுரிநூல் அன்று
சுழன்றுசுழன்று அடித்துவரும்
புயலும் அன்று
கலக்கம்உறும் தெளிவுஅடையும்
சில்நீர் அன்று
கடும்புனலில் எதிர்ஏறும்
கயலும் அன்று
கலைகொழிக்கும் மறைந்துஒழியும்
வானவில் அன்று
கருதரிய புதிர்ஆகும்
அதுதான் வாழ்க்கை

என்ற பாடலில் உணர்த்துகிறார். அற்புதமான இச் சொல்லோவியத்தில் வாழ்க்கை என்பது 'அப்படி இப்படி' என உறுதி செய்ய முடியாதபடி ஒவ்வொருவருக்கும் அவரவர் நோக்கப்படி, ஒருவித கானல் நீர் தோற்றப்படி இருக்கும் என காட்டப்பட்டுள்ளது.

செல்வத்துள் எல்லாம் தலை என்று வள்ளுவர் கூறியவற்றைப் பட்டியலிடுவார்

உலகத்து மாந்தர்தம் பொருளென்று சொல்லுவதும்
உயர்வான மக்கள் என்றேன்

உள்ளசெல் வத்துளே செல்வமாய் ஓதுவதும்
உயர்அருள் என்று ரைத்தேன்
பலபற்றும் விட்டொழித்தே உடலும்வேண் டாமையைப்
பகர்விழுச் செல்வம் என்றேன்
பனுவல்பல கற்கவரு கல்விதான் உலகிலே
பழுதிலாச் செல்வம் என்றேன்

தலையான தென்றுயான் ஒன்றையே கூறியது
தன்னைநீ உணர விலையோ
தன்னிக ரிலாததோர் கேள்வியே உலகினில்
தலையான செல்வம் என்றேன்
அலகிலாப் பலநூல்கள் கற்றலின் கேட்டலே
அறிவுமிகு நெறிஎன் பர்காண்
ஆதலால் செல்வமாம் யாதினும் தலையானது
அதுஎன்ப தறிக மகனே

இதில் கேள்வியின் சிறப்பை அற்புதமாகக் காட்டியுள்ளார் கவிஞர்.

ஒற்றுமையால் எல்லாம் இயலும் என்ற கருத்தை வலியுறுத்துவதாக 'கை கோத்தால்' என்ற தலைப்பில் மூன்று பாடல்கள் உள்ளன. மூன்றும் அற்புதமானவை, ஒரு பன்முகம் காட்டி போல் (Kalei doscope) பல செய்திகளை ஓரிடத்தில் காட்டுபவை.

தனிமரங்கள் கைகோத்தால்
தோப்பே ஆகும்
தழை இலைகள் கைகோத்தால்
நிழலே ஆகும்

பனித்துகள்கள் கைகோத்தால்
பாறை ஆகும்
பலகற்கள் கைகோத்தால்
சுவரே ஆகும்

தனிஇழைகள் கைகோத்தால்
துணியே ஆகும்
தாள்கள்பல கைகோத்தால்
நூலே ஆகும்

மனிதமனம் கைகோத்தால்
உலகில் ஆக
மாட்டாத செயலுண்டோ
காட்டு வீரே?

சார்ந்தவிழல் கைகோத்தால்
கூரை ஆகும்

தனிமணிகள் கைகோத்தால்
உணவே ஆகும்
சேர்ந்தில்லம் கைகோத்தால்
தெருவே ஆகும்
தெருக்கள்பல கைகோத்தால்
நகரம் ஆகும்
தேர்ந்தசுரம் கை கோத்தால்
இசையே ஆகும்
தேயங்கள் கைகோத்தால்
உலகம் ஆகும்
மாந்தர்மனம் கைகோத்தால்
உலகில் ஆக
மாட்டாத செயலுண்டோ
காட்டு வீரே

பச்சோலை கைகோத்தால்
கீற்றே ஆகும்
பாவையர்கள் கைகோத்தால்
துணைங்கை ஆகும்
வைக்கோல்கள் கைகோத்தால்
பெரும்போர் ஆகும்
மணிக்கயிறு கைகோத்தால்
வடமே ஆகும்
தக்கமலர் கைகோத்தால்
மாலை ஆகும்
தமிழ்எழுத்துக் கைகோத்தால்
அமிழ்தே ஆகும்
மக்கள்மனம் கைகோத்தால்
உலகில் ஆக
மாட்டாத செயலுண்டோ
காட்டு வீரே?

இவை கவிஞருடைய சிந்தனை ஆற்றலைக் காட்டுகின்றன.

## 3. சான்றோர்

சுந்தர மூர்த்தி நாயனாரைப், பின்பற்றி பாரதியார் முதல் பலரும் பாடியுள்ளது போல் கவிஞர் திருமுருகனார் சிலரைப் பாடியுள்ளார். அவர்களைக் காண்போம்.

1. பாட்டி: ஔவைப் பாட்டி போல் சிலர் இன்றும் உளர்.

அவர்களை நினைந்து பாடியது. இத்தலைப்பில் எட்டுப் பாடல்கள் உள்ளன.

பழுத்தமுடி யுடனே வருவாள் – வாழ்வின்
படிகள்பல கடந்த உருவாள் – நல்ல
பட்டறிவு மட்டிலாது
கொட்டிவைத்த பெட்டகமே
பாட்டி – மூ – தாட்டி

தாயருக்கும் அறிவுரை தருவாள் – சேயர்
தமக்குள்நல் வழிகாட்டி வருவாள்—யாரும்
தப்பிதங்கள் செய்கையிலே
ஒப்புடன் முகம்மலர்ந்து
தடுப்பாள் –சினம்—கெடுப்பாள்

இரண்டு பாடல்கள் ஈண்டுத் தரப்பட்டுள்ளன. அனைத்துப் பாடல்களும் அற்புதமானவை. பாட்டி கோலூன்றி நடப்பது போன்ற நடை.

**2. பாரதியார் :** பாரதி வழிபாடு என்ற தலைப்பில் வருவது.

உருக்கொண்ட பெண்களெலாம் உள்ளத்தில்
ஆண்மையுடன் உழைக்கக் கண்டும்
இருக்கின்ற சொத்தையெலாம் எழுதிவைத்தால்
தான்பெண்ணை ஏற்பேன் என்னும்
தருக்கொன்று பேடிகளைத் தமிழ்ப்பாட்டால்
ஆணாக்கித் தருவாய் என்று
சுருக்கென்று தைக்கின்ற சொற்புலவா
உன்றனைநான் தொழுகின் றேனே.

இது பாரதியாரின் சொல் வேகத்தைக் காட்டுவது.

**3. காந்தியடிகள் :** 'வாய்மையின் வடிவமாக வந்தவன்' என்ற தலைப்பில் வருவது. நான்கு பாடல்களில் இரண்டு.

வாய்மையின் வடிவாக வந்தான்—எங்கும்
வளமோங்க விடுதலை நிலம்வாங்கித் தந்தான்
தாய்மைக்குக் காட்டாக நின்றான்—அன்பின்
தகைகொண்டு நகைகொண்டு பகைவென்று நின்றான்.

உரிமையின் குரலாக வந்தான்—இந்த
உலகமெங்கும் வளர்கின்ற கலகம் களைந்தான்
ஒருமையின் கயிறாக நின்றான்—மக்கள்

ஒற்றுமைப் பெற்றியைக் கற்றிடச் சென்றான்

காந்தியடிகளின் கொள்கைகளைக் காட்டுவன இவை.

4 பாரதி தாசன் : ' நான் கண்ட பாவேந்தன்' என்ற தலைப்பில் வருவன இரண்டு பாடல்கள்,

மாடுகளும் வழக்கத்தால் செக்கைச் சுற்றும்
மடையர்களும் இயற்றிடுவார் கடவுட் பாட்டென்(று)
ஏடெழுதும் போக்கினிலே புரட்சி, தூய
இசைத்தமிழில் புரட்சி, தமிழ்க் கொலைசெய் வாரைச்
சாடுகின்ற மொழிப்புரட்சி, கயவர் ஆட்சி
சரிக்கின்ற சொல்புரட்சி, தமிழர் மேன்மை
நாடுகின்ற துறைதோறும் புரட்சி செய்தோன்
நான்கண்ட புரட்சிப்பா வேந்தன் தானே.

குட்டுதற்கோ பிள்ளைப்பாண்டி யன்ஈங் கில்லை
குறும்பியள வாக்காதைக் குடைந்து தோண்டி
எட்டினமட்டும் அறுப்பதற்கோ வில்லி இல்லை
இரண்டொன்றாய் முடிந்துதலை இறங்கப் போட்டு
வெட்டுதற்கோ கவிஒட்டக் கூத்தன் இல்லை
வீறுதமிழ்ப் பாவடியால் விரைந்து மட்டம்
தட்டுதற்கோ புரட்சிப்பா வேந்தன் இல்லை
தமிழ்க்கொலைசெய் கவிஞரெங்கும் தழைக்க லாமே!

இவையிரண்டும் பாவேந்தரைச் சொல்லோவியமாகக் காட்டுவன.

5. பாவலரேறு வாணிதாசன்: இன்னுமொரு நூற்றாண்டிரு என்ற தலைப்பில் வருவன மூன்று பாடல்கள். அவை

காக்கை பிடிக்காமல் கட்சிகளை நாடாமல்
தூக்கிலிடும் கூட்டம் தொடராமல்—பாக்களெனும்
பொன்னைச் சொரிந்து புகழ்வளர்க்கும் பாவலநீ
இன்னுமொரு நூற்றாண் டிரு.

கூடும் அரசினரைக் கும்பிட்டு வாழாமல்
ஏடுகளின் செல்வாக்கே இல்லாமல்—பாடலெனும்
கன்னல் பிழிந்து கலைவளர்க்கும் பாவலநீ
இன்னுமொரு நூற்றாண் டிரு.

தக்கைகளின் முன்னே தலைசொரிந்து நில்லாமல்
நக்குப் பொறுக்கிகளை நாடாமல் — சற்றேனும்
தன்னலமே இன்றித் தமிழ்வளர்க்கும் பாவலநீ
இன்னுமொரு நூற்றாண் டிரு.

இவை மூன்றும் தென்கலை சாத்து முறையில் மணவாள மாமுனிகளை வாழ்த்தி வரும் பாடலை ஒட்டி பாடப் பெற்றவையாகும்.

6. பி. என். இராசமாணிக்கனார் : 'வாழ்ந்து போகோமோ' என்ற தலைப்பில் வருவது புதுமையானது.

இலைஎனல் அறியா ஏந்தலே புதுவை
இராசமா ணிக்கமே நீநின்
நலமிகு கொடையைச் செல்வர்கள் தமக்கும்
நடுவினை வணிகர்கள் தமக்கும்
தொலைவில் ஆள்வினையை இளைஞர்கள் தமக்கும்
தொண்டினைத் தந்நலத்த வர்க்கும்
நலமையை எனக்கும் தந்துசென் றிருந்தால்
புண்ணியா வாழ்ந்துபோ கோமோ?

7. இலக்கணச் செம்மல் சுந்தர குமரனார்:

முழுத்தேங்காய் போல உருட்டுவோர்
உண்டு, முயன்றுகற்றுக்
கிழித்திட்ட தாகக் கிளப்பவர்
உண்டு, கிளர்ந்துமிக
உழைத்து உணர்ந்து உள்ளுள் உவந்த
குமரன்போல் உன்னெழிலை
எழுத்தெழுத் தாகச் சுவைத்தவர்
உண்டோ இலக்கணமே!

'இனம் இனத்தோடு சேரும்' என்பது பழமொழி. சுந்தர குமரனைப் போல டாக்டர் இரா. திருமுருகனும் இலக்கணப் புலவரே. பாம்பறியும் பாம்பின கால் என்பது போல் சுந்தரனாரின் படிப்பை நன்குணர்ந்தவர் திருமுருகனார். ஆகவே மிகவும் இரங்கிப் பாடுகின்றார்.

8. திருமுடி சேதுராமனார் :

நுண்பொருள் தன்னில் முடைவரக் கண்டால்
உதவிடும் செல்வர்பால் செல்வேன்
புண்படும் உள்ளம் புழுங்கிடக் கண்டால்
பொருந்திய நண்பர்பால் செல்வேன்
கண்படை கொள்ளாது இரவொடு பகலாய்க்
கலைநலம் பயிலுவோய் யான்ஓர்
நுண்பொருள் கண்டால் யாரிடம் சொல்வேன்
நுவலுமாய் சேதுரா மையா!

வாழும் நுண்மாண் நுழைபுலம் ஒன்று, மறைந்த நுண்மாண்

நுழைபுலத்தை நோக்கி இரங்கிப் புலம்புகின்றது. இதில் உண்மையான கையறு நிலையைக் காண்கின்றோம்.

9. *இரஞ்சித் சிங் தயாள் :* இவர் புதுவை ஆளுநர். இவர் காலத்தில் புதுவை மாநில அரசுத் துறைகளில் தமிழ்மொழியை, மக்கள் தொடர்பு மொழியாகவும், அலுவலக மொழியாகவும் பயன்படுத்த வேண்டுமென்று ஆணை பிறப்பித்த போது மகிழ்ந்து பாடிப் பாராட்டிய பாடல் 'பல்லூழி வாழ்க மகனே' என்ற தலைப்பில் வருவது.

*'உண்ணுவது பருகுவது தின்னுவது மட்டுமோ*
*உயிரதும் தமிழே என்னும்'*
*ஒருகட்சி யாரிந்த ஊரிலே பலகாலம்*
*உரிமையுடன் ஆண்ட துண்டு*

*கண்ணான தமிழென்று கவிபாடும் வண்மைமிகு*
*கவிஞர்களும் ஆண்ட துண்டு*
*கருதரிய மொழிஎன்றும் உயிரையே தருவதாய்க்*
*கட்டுரைத் தவர்கள் உண்டு*

*மண்ணாண்ட இவரெலாம் ஆங்கி லத்தின்மேல்*
*மனம்வைத்து வாழ்ந்தி ருந்தார்*
*மக்களறி தமிழினை அலுவலக மொழியாக*
*மாற்றிய தயாளன் நீயே*

*பண்ணொழுகு தமிழென்று பாராட்டும் மக்கள்*
*பார்த்தின்று வெட்கம் அடையப்*
*பஞ்சாபி யேனும்என் நெஞ்சுமகிழ் செய்தநீ*
*பல்லூழி வாழ்க மகனே.*

இந்தப் பன்னிரு சீர் விருத்தம் தாயுமான அடிகள், குமரகுருபரர் இவர்களை நினைவு கூர வைக்கின்றது. இப்பாடல் தமிழன்னை தன்மகனை வாழ்த்தியதாக அமைந்தது.

இது தவிர எம்.ஓ.எச்.பாரூக் என்பார் (அமைச்சர்) சட்டமன்றப் பேரவையில் முதன்முதலாகத் தமிழில் பேசியதற்கு மகிழ்ந்து இது போன்ற ஒரு பாடலும் பாடியுள்ளார்.

அவரே தமிழ் இலக்கியப் படைப்பாளர்க்குக் கம்பன் புகழ்ப்பரிசு (ஐயாயிரம்) அறிவித்தது கண்டு மகிழ்ந்து ஒரு பாடலும் பாடியுள்ளார். மேலும் புதுவை மாநில மாண்புமிகு கல்வியமைச்சர் காங்கேயன் வழக்கத்திற்கு மாறாக மலர் ஒன்றில் 11.3.66 இல் தமிழில் வாழ்த்துச் செய்தி அளித்தது கண்டு மகிழ்ந்து வாழ்த்தியதாக ஒருபாடல் உள்ளது. விரிவஞ்சி அவை ஈண்டு காட்டப் பெறவில்லை. எங்கெல்லாம் தமிழுக்கு ஏற்றம்

வருகின்றதோ அங்கங்கெல்லாம் மகிழ்ந்து பாட இவர்தம் தமிழுணர்வு தூண்டுவதைக் காணலாம்.

## 4. டாக்டர் திருமுருகனார் கருத்து

1. மரபுக் கவிதையைப் பற்றிய இவர்தம் கருத்து முக்கியமானது., பொதுவானது. எல்லோரும் ஒப்புக் கொள்ளக் கூடியது. யாப்பிலக்கணத்திற்கு அப்பாற் பட்டது. இரசிகமணி டி.கே.சி அவர் வாழ்நாள் முழுவதும் சொல்லிவந்த கருத்து. புதுக் கவிஞர்கள் இதனையொத்த கருத்தைக் கூறி வருகின்றனர்.

*மலரினும் மெல்லிது காமம், சிலர் அதன்*
*செவ்வி தலைப்படு வார்*

என்றார் வள்ளுவர். பாட்டின் சுவையைப் பருகும் செவியினர் அவரினும் மிகச் சிலரே என்கின்றார் கவிஞர் திருமுருகன். அவர் கூறுவார்,

*கலையில் பாதி கலைஞன் என்றால்*
*மற்றொரு பாதி சுவைஞன் ஆவான்*
*எண்ணிய பொருளை இலக்கண யாப்பில்*
*அமைத்துவிட் டாலே அதுதான் பாட்டென்று*

*நானும் ஒருகால் நம்பி இருந்தேன்,*
*மின்றுவ தெல்லாம் பொன்னாய் விடுமா*
*பறப்ப தெல்லாம் பறவையாய் விடுமா?*
*யாப்பு டைத்தெல்லாம் யாப்பாய் விடுமா*

என்று கூறியவர் இரண்டு சான்றுகளால் தம் கருத்தை நிலைநாட்டுகின்றார்.

தண்டியலங்காரம்-98உரை

*வாயாயா நீகாவா யாதாமா தாமாதா*
*யாவாகா நீயாயா வா*

பாட்டு இலக்கணம் எல்லாம் பயின்ற குறளிது. 'மாலைமாற்று' என்பதற்கு எடுத்துக் காட்டாகத் தரப்பெறுவது. தலைகீழாய்ச் சொல்லினும் அந்தப் பாவே வரும். இத்தனை இலக்கணம் இருந்தும் இதில் கவிதை இன்பம் கடுகளவும் இல்லை என்பது அங்கையின் நெல்லி.

ஒரு புதிய தனிப்பாடல்

மைடியர் பிரதர் எங்கள்
மதருக்குக் கூந்தல் நீளம்
ஐடிலாய் அவளும் தூங்க
அறுத்துஅதை விற்று நானும்
சைடில்ஓர் லேடி யாக
சட்காவில் ஏறிக் கொண்டே

ஒய்டான ரோட்டின் மீதில்
உல்லாச மாகப் போனேன்.

இது விளச்சீர், மாச்சீர், தேமா என்ற அமைப்புடன் கூடிய அறுசீர் ஆசிரிய விருத்தம். எதுகை மோனை எதற்கும் குறைவில்லை. இதுவும் ஒருபாட்டாக எந்த உணர்வும் தரவில்லை. எனவே இதெல்லாம் பாட்டாகாது. எது பாட்டு என்பது பற்றிக் கூறுகிறார் கவிஞர்.

ஒருமொழி தன்னில் உயர்பாட்டு இயற்ற
அம்மொழி இலக்கிய அறிவு வேண்டும்
யாப்பிலக் கணமும் இலக்கியத் தோய்வும்
உணர்வும் கலந்தே உருப்பெறும் கவிதை

என்று கூறியவர் பாட்டு என்பதற்குச் சான்றுகள் தருகின்றார்.

முருகிச் சிவந்த கழுநீரும்
முதிரா இளைஞர் ஆருயிரும்
திருகிச் செருகும் குழல்மடவீர்
செம்பொற் கபாடந் திறமினோ

இது கலிங்கத்துப் பரணியில் (கடைதிறப்பு 30) வருவது.

கைக்கரும்பு என்ன கணைஎன்ன
நீஎன்ன மன்மதா — இந்தச்
செக்கரும் பாவி
நிலவுமே போதாதோ மன்மதா

இது திருக்குற்றாலக் குறவஞ்சியில் (34-1) வருவது.

காலயுகக் கொடியோன்
கைஆயுத விழியால்
மாலாயுதம் ஈன்ற
மாமணியைத் தானுதிர்த்தாள்

இது கூளப்ப நாயக்கன் காதலில் வருவது. இங்கெல்லாம் நாம் பாட்டைக் காண்கின்றோம். இக்காலத்திற் சிலர்

சீடையும் முறுக்கும்
சேர்ந்தாற்போ லேதின்றால்
தாடை வலியைத் தரும் (புதிய தனிப்பாடல்)

என்பது போன்ற 'வெள்ளைப்பா' பாடுவர். இது போன்றவை பாட்டாகா.

2. கவிஞரின் ஒருமைப்பாடு பற்றிய கருத்து சிறப்பானதாகும்

அரசியலில் ஒருமைப்பாடு .

வடாஅது பனிபடு நெடுவரை வடக்கும்
தெனாஅது உருகெழு குமரியின் தெற்கும்என்று

உரைத்த பழந்தமிழ் உலகத்து எல்லையும்
விறுகொள் பாரதம் விடுதலைக் கெழும்நாள்
கூறு படாமல் கொத்தென நின்றதும்
உரிமை பெற்றதும் உட்குறு நிலங்கள்
ஒருமை பெற்றதும் ஒருநா டானதும்
அரசியல் அமைப்பினை ஆக்கிநாம் அனைவரும்
ஒருசீர்க் குடியர சோச்சி வருவதும்
அரசியல் முறையில் அமைந்த ஒருமைகள்

பண்பாட்டினில் ஒருமைப்பாடு:

பத்ரி நாத்தில் பரவு நாரணனைப்
பத்தர்கள் திருவனந் தையிலும் பணிவதும்
காஞ்சி காமாட்சி மதுரை மீனாட்சி
காசி விசாலாட்சி காப்பாய் என்பதும்
சீலம் பரவும் சீதையின் காதையை
மூலை முடுக்கெலாம் முயன்று கற்பதும்
சாத்திரிக்கு ஆயினும் சாத்தனுக்கு ஆயினும்
மூத்த மகனே மூட்டும் ஈமத்தினும்
வடமொழி கண்ட நெடுங்கணக் கமைப்பைத்
தடநிலைப் பொருள்பெறு தமிழ்மொழி தவிர்த்திங்கு
அடம்பெறும் மொழியெலாம் ஏற்றுக் கொண்டதும்
குமர குருபரன் தமிழ்மடம் காசியில்
அமைத்ததும் வடமொழி அருங்கலைக் கழகம்
பாகூர் தனிலே பல்லவன் வைத்ததும்
பாகேசுவரி சிந்து பைரவி சுத்தபங்
கான்சா ரங்கா காபி நவரச
கன்னட யமுனா கல்யாணி காந்தாரி
மால்கோசு என்னும் மாளவ கௌசிகம்
தேவ காந்தாரி தேவார வர்த்தினி
சௌராஷ்டிரமும் சரிகம பதநியும்
திசிரம் சதுசிரம் கண்டம் மிசிரம்
சங்கீரணம் என்னும் தாள நடைகளும்ஆகிய
ஏழிசை தனிலே இயலும் ஒருமையும்
பண்பாட் டினிலே பயிலும் ஒருமைகள்
........................................................................................... இவற்றுள்
அரசியல் ஒருமையை அனைவரும் போற்றினால்
ஒருபே ரரசாய் உயர்ந்துநாம் வாழலாம்
பண்பாட்ட தனில் பாரதம் முழுமையும்
ஒன்றுபோல் ஆக்கும் ஒருசெயல் வேண்டுமோ?
..................................................................................................................
சுற்றம் தழாஅலில் சூழ்துயர் களையில்
ஒற்றுமை யாக உறைந்திடல் இல்லையோ?

ஒருமைப் பாட்டை வளர்க்கும் வழிகள்
தானே கனியத் தரும்பண் பாட்டைத்
தடிகொண்டு கனிவித்தல் தகுதியோ ?
காஷ்மீரத்துக் கபார்கான் தனதெனக்
கன்னியா குமரியைக் கருதிட வேண்டும்
கூர்ச்சர மாநில கோபால் லால்மணிப்பூர்
மலையும் தமதென மதித்திட வேண்டும்
உள்ளம் எவ்வழி உலகம் அவ்வழி
உள்ளம் திருந்தினால் உலகம் திருந்துமே

உருவாலே உடையாலே உணவி னாலே
உறைகின்ற நிலத்தாலே மொழியி னாலே
கருவான மரபாலே கலைக ளாலே
கடவுள்கோள் நெறியாலே வேறு பட்ட
விரிவான ஐம்பத்தி ரண்டு கோடி
வேறான மெய்களெலாம் உணர்வி னாலே
ஒருமெய்யாய் தோன்றுவதே ஒருமை யாம்அவ்
ஒருமெய்யும் உயிர்மெய்யாய் உலவல் வேண்டும்

அரிய கருத்துகள் அற்புதமான பாடல்களில் வடிவம் பெற்றுள்ளமையைக் கண்டு மகிழ்கின்றோம்.

3. இவர்தம் பாடல்களில் திருவாய்மொழி-ஈட்டின் கருத்துத்தாக்கமும் பிரதிபலிக்கின்றது. "இதயத்தைக் கூட எலி விழுங்கும்" என்ற தலைப்பில் வரும் பாடல்கள் திருவாய்மொழி பாசுரத்தின் (1.5.5) ஈட்டுரையில் காணப்படும்' போம் பழியெல்லாம் அமணன் தலையோடே' என்ற நம்பிள்ளை சூக்தியின் வரலாற்றில் கண்ட நிகழ்ச்சியினை அடியொட்டி அமைந்தவை. சுவைமிக்க அந்த வரலாற்றைச் சுவைமிக்க பாடல்கள் காட்டுவது படிப்போரைப் பாட்டனுபவத்தில் மூழ்கிடச் செய்யும்.

இந்த வரலாற்றில் அமணன் குற்றம் செய்யாதிருக்கவும், பழி அவன் தலை மேலே ஏறினாப் போலே கண்ணபிரான் தீம்பு செய்யாதிருந்தாலும் பிறருடைய தீம்பும் அவன் தலையில் ஏறும்.

*பல்லா யிரவர்இவ் வூரில்*
*பிள்ளைகள் தீம்பு செய்வர்*
*எல்லாம் உன்தலை மேலன்றிப் போகாது*

*(பெரியாழ்.திரு2.5.5)*

என்று யசோதைப் பிராட்டி சொல்வதைப் போல, இதனைக் கவிஞர்,

சமணத்தார் நலிந்து போன
சமயத்தில் நாட்டில் எந்தச்
சமயத்தார் பிழைசெய் தாலும்
சமணர்மேல் பழிபோட் டார்கள்
நமையாளும் அரசும் நாடும்
நடுநிலை தவறிப் போனால்
இமயத்தைக் கூடச் சின்ன
எலிகளே விழுங்கும் அம்மா.

என்ற இறுதிப் பாடலில் நம்மை ஆளும் அரசுக்கும் ஓர் எச்சரிக்கையும் தருவது போலக் கூறியுள்ளது சிந்திக்கத் தக்கதாக உள்ளது.

இவர்தம் பாடல்களைப் பாடிய வயது நிலைகளை ஒப்பிட்டு ஆய்ந்தால் கவிஞரின் 'மனப்பக்குவ முதிர்ச்சிக்கேற்பவும், அறிவு முதிர்ச்சிக்கேற்பவும் பாடல்கள் தரத்தாலும் உயர்ந்து விளங்குவதைக் காணலாம். இத்துடன் இவர் பற்றிய கவிதைச் சிறப்பை நிறைவு செய்கிறேன்.

# 8. கவிஞர் ஆ. பழநி

இக்கவிஞர் காரைக்குடியில் காட்டுத் தலைவாசல் என்ற பகுதியில் வேளாண்மையைத் தொழிலாகக் கொண்ட குடும்பத்தில் பிறந்தவர் (1931). ஒன்பதாவது பிள்ளையாகப் பிறந்தவர். ஐந்து வகுப்புவரை படித்து, வட்டிக் கடை (இரண்டாண்டுகள்) துணிக்கடை (இரண்டாண்டுகள்) பெட்ரோல் விற்பனை நிலையம் (இரண்டாண்டுகள்) பல்பொருள் அங்காடி(ஓராண்டு) வேளாண்மை (எட்டாண்டுகள்) என்று இப்படி வாழ்க்கை நடத்த விதி வகுத்த வகையில் சிக்கியவரை அதே விதி 'கண்டது கற்கும்' தொழிலிலும் கற்றவற்றைச் சிந்திக்கும் பாங்கிலும் ஈடுபடுத்தியது. படித்த ஏடுகள் திராவிட நாடு, போர்வாள், திராவிடம், முரசொலி, தென்றல் ஆகியவை. இவை இந்த இளைஞரின் அறிவைக் கூர்மையாக்கின. மேலைச் சிவபுரிக்கு வழி காட்டியது. முறையாகத் தமிழ் பயின்று வருங்கால் மீண்டும் விதியின் சதி, குடல்வால் அழற்சி நோய்க் கொடுமை, தொடர்ந்து அறுவை சிகிச்சை, தலைவலி போய்த் திருகுவலி வந்ததுபோல் நுரையீரல் கட்டி தோன்றியது. கட்டியை அகற்றும் பணியில் ஒரு பக்க நுரையீரலையே பறிகொடுத்த நிலை. இந்தக் கோளாறுகள் எல்லாம் விளைந்த காலம். இவர் புலவர் தேர்வு எழுத வேண்டிய இறுதியாண்டில் (1959) இவற்றால் தேர்வு எழுத முடியாமல் மூன்றாண்டிற்குப் பின் (1962) தேர்வு எழுதி வெற்றி பெற்றது. இது இறைவனது திருவருள். தமிழன்னை பெற்ற தவப்பயன்.

'தீதும் நன்றும் பிறர்தர வாரா'! முறைவழிப்படும் ஆருயிர். நெற்பயிரை வளர்த்த கையை சொற்பயிரை வளர்க்க ஆற்றுப்படுத்தியது ஊழ். சாதாரணமாகக் குடும்பச் சூழ்நிலையும் நிதிப்பற்றாக்குறையும்தான் இளமைக் கல்விக்கு யமனாக இருப்பவை. ஆனால் இவர் வாழ்வில் 'நோய்' எமனாகத் தோன்றி ஊழ்வலியால் விடுபட்டுப் போயிற்று. கருவிலேதிருவுடைய இந்த இளைஞர்க்கு மாணவப் பயிரை வளர்க்கவும், கவிதைப் பயிரை வளர்க்கவும், காரைக்குடி மீ.சு. உயர்நிலைப் பள்ளித் தமிழாசிரியர் பதவியை நல்கியது (1964). செட்டிநாட்டில் சிறந்த கவிஞர்களுள் ஒருவராகத் திகழவும் 'ஆகூழ்' இவருக்குத் துணை செய்தது.

அடியேன் 1950-60 வரை அழகப்பர் ஆசிரியர் பயிற்சி கல்லூரியில் பணியாற்றி 60ல் திருப்பதி சென்று விட்டாலும், என் குடும்பம் 1966 வரை சிறுவர்களின் கல்விநிமித்தம் காரைக்குடி யில்தான் இருந்தது. விடுமுறைக் காலங்களில் காரைக்குடியில் தான் இருந்தேன். அப்பொழுதெல்லாம் கவிஞர் முடியரசனையும், புலவர் பழநியையும் இரட்டையர் போல் காட்சிதரக் காண்பேன். கண்டு உசாவி உரையாடி மகிழ்வதும் உண்டு. அப்பொழுதே முடியரசன் பெருங்கவிஞர். புலவா பழநி கவிதை உலகில் ஒரு கற்றுக் குட்டி. அவர்கள் இருவரும் துரோணர்-அருச்சுனன் போல் காட்சி தந்ததை இப்போது நினைவு கூர்கின்றேன். அன்று கற்றுக் குட்டியாக இருந்த புலவர் பழநியை இன்று மாபெருங் கவிஞராக மலர்ந்த நிலையில் கண்டு மகிழ்கின்றேன்.

இவர் ஒரு மரபுவழி முகிழ்த்த கவிஞர். யாப்பு வழுவாது பாடுபவர். அகவல், கலிவெண்பா, அறுசீர், எண்சீர் விருத்தங்கள் ஆகியன இவர்தம் கலைவண்ணப் படைப்புக்களைக் கவின்பெறச் சிறப்புடன் காட்டுகின்றன. அனிச்ச அடி, சாலி மைந்தன் போன்ற செய்யுள் நாடகக் காப்பியங்கள் ஆசிரியரே அடியேனுக்கு அன்பளிப்பாக நல்கியவை. அவ்வப்பொழுதே படித்து மகிழ்ந்து பாவலர்மணி பழநியின் கவிதைத் திறனையும் , முற்போக்குச் சிந்தனைகளையும் அறிந்து மகிழ்ந்துள்ளேன்.

இவர்தம் பாடல்கள் ஒவ்வொன்றும் ஒரு படித்தேனாக இனிக்கின்றது. தமிழ்ப் புலமை சுடர்விட்டு ஒளிர்கின்றது. சொல்வளம் சுவையுணர்வை ஊட்டுகின்றது. தமிழன்னை இவர்தம் பெருமையை உணர்ந்து உணர்ந்து மகிழ்வாள் என்று எண்ணுவதற்கு ஐயமில்லை. உவமைகளின் தனித்தன்மை, உருவகங்களில் புது விளக்கங்கள், சொற்களில் மிளகு மிட்டாய்ச் சுவை, சமுதாய நிலை இவை படிப்போரின் நெஞ்சில் நிலைத்து நிற்கும். பகுத்தறிவுச் சிந்தனைகள் கவிதைகளில் இலைமறை காய்களாக நின்று கனிந்து படிப்போரின் உள்ளத்தையும் கனிவிக்கும். சில சமயம் இவர்தம் உரைநடை கூடக் கவிதைப் பாங்கில் இனிக்கும். பெரிய குளத்தில் பிறந்த கவிஞர் முடியரசனைக் குறிப்பிடும் போது 'இலக்கியச் சாறு' பருகும் பழக்கம் இளமையிலேயே இவருக்குக் கிட்டிற்று. அஃது இந்தக் கவிதை மீனுக்குப் பெரிய குளத்தை நல்ல நீச்சற் குளமாக ஆக்கிற்று. 'முடியரசனை, 'கவிதை மீனாகவும் பெரிய குளத்தை நீர் கொண்ட குளமாகவும்' உருவகித்துக் காட்டுவது அற்புதம்.

"திருக்குறள் என் காதலி" என்ற கவிதை இருபத்தொன்பது ஆண்டுகட்கு முன்னர் பாடப் பெற்றது. இது முழுமையான உருவகக் கவிதை. இது படிப்போரிடம் முழுமையான கவிதை இன்பத்தை விளைவிப்பது. கவிஞர் வாக்கில் இது,

*வள்ளுவர்செய் திருக்குறளாம் இனிய பெண்ணை*
*வளர்கின்ற நூலகமாம் காவிற் கண்டேன்*
*உள்ளுருகி நின்றதுவும் அவள்ந லத்தை*
*உண்டுசுவை யுற்றதுவும், மணமு டித்து*
*விள்ளரிய இல்லறத்தில் மேவிப் பின்னர்*
*விரும்புகின்ற கல்வியினால் பிரிந்து சென்று*
*கள்ளொழுகும் மலர்க்குழலை மீண்டும் கூடிக்*
*களித்ததுவும் ..........*

என்று உருவகித்துப் பாடப் பட்டதாகக் கூறப் பெறுகின்றது. அப்பெண்மணியின் நலன்களைப் பற்றி,

முத்திருக்கும் அவள்வாயில், இதழி ரண்டும்
முறுவலித்த படியிருக்கும், கண்ணோ மீனை
ஒத்திருக்கும் என்றாலும் காண்பார் உள்ளில்
ஊடுருவித் தைத்திருக்கும், குழலிற் பூவின்
கொத்திருக்கும், காளையர்தம் நெஞ்ச மெல்லாம்
குடியிருக்கும் படியிருக்கும், தோற்றங் கண்டு
மத்திருக்கும் தயிர்போலக் கலக்க முற்று
மறுகிருக்கும் படியழகு மலிந்தி ருக்கும்

என்பது ஒரு பாடல். படித்துப் படித்து இன்புறலாம்.

"ஆற்றுப்படை" என்பது ஓர் அற்புதமான கவிதை, நகைச்சுவைக் களஞ்சியம், படிப்பவர் வயிறு வெடிக்கச் சிரிக்க வேண்டும். சிரிப்பு, உடல் நலத்திற்கு ஓர் அற்புதமான மருந்தல்லவா?

தமிழ்ச் சங்கத்திற்கு நம்மை ஆற்றுப் படுத்தும் போக்கில் அமைந்தது. பத்துப் பாட்டில் காணப் பெறும் ஆற்றுப்படைகளின் பாணியில் அமைந்தது. 'கல்லுக் கட்டி' என்ற இடத்தில் ஒரு வழிப்பாதையில் போகுமாறு ஆற்றுப்படுத்துகின்றார் கவிஞர். வழியில் ஒரு வாய்ச் சண்டை. எது பற்றி?

*முன்னணி நடிகையின் முதற்குழந்தைக் கார்தகப்பன்*
*என்பதே ஆங்கிருக்கும் இளைஞர்களின் ஆராய்ச்சி*

காதுகளைப் பொத்திக் கொண்டு கவனமாக நடந்தால் பாதையில் ஓர் அழகான ஓவியத்தைக் காணலாம் என்கின்றார். அஃது என்ன ஓவியம்?

ஆடை குலைந்ததோர் அழகியின் ஓவியத்தை
மேடையிலே ஏற்றி மேற்செல்வார் கண்களினைத்
தொட்டிழுக்க வைத்திருப்பர் தோன்றும் திரைப்படத்தைக்
கட்டுலனாற் காணக்கமலா திரையரங்கம்
எழுவீர் இளைஞர்களே என்ற குறிப்பினையும்
பழுதின்றி ஆங்கே பதித்திருப்பர் அவ்வழியே
ஈருருளி வண்டியிலே எதிரெதிரே வருபவர்கள்
பார்வை கவருமந்த ஓவியத்தைப் பார்த்தபடி
முட்டி விழுவார்கள் முகத்திற் சினமிலராய்த்
தட்டுவார் தூசியினை, தையலின் ஓவியத்தை
கடைக்கண்ணால் மீண்டும் பார்த்துச் சுவைத்துக்
கடையிதழில் சிறியநகை கட்டவிழ வண்டியைத்
தள்ளி நடப்பார்கள்

இதனைக் கவிஞர் 'தள்ளரிய காட்சி' என்கின்றார். இதில் எள்ளற் குறிப்பினை உணரலாம்.

அடுத்துக் காண்பது குழாயடிச் சண்டை. இதைப் பட்டிமன்றம் என்று நகைச்சுவையாகக் குறிப்பிடுகின்றார் கவிஞர். தலைவர் தண்ணீர்க் குழாய்; பங்கேற்றுப் பேசுபவர்கள் முழுமதி மடவார்கள். இதோ அந்தப் பட்டி மன்றம்,

நடுவர் தலைமையிலே நல்லதோர் பட்டிமன்றம்
முடுகிநடக்கும் முழுமதி மடவார்கள்
அணிஅணியாப் பிரிந்து அருமைத் தமிழில்
மணிமணியாக வார்த்தைச் சரந்தொடுப்பார்
அகர முதலியினும் காண்டற் கரிதான
நகைமொழிகள் பன்னூறு நடமாடும் அந்த
இடந்தான் குழாயடியாம், இடையில் குழாயென்னும்
நடுவர் நிலைமைக்கு நாணித் தலைகவிழ்ந்து
சொட்டுக் கண்ணீரை விட்டுக் கலங்கிநிற்பார்

இந்தத் தீர்த்தத் துறையில் இரண்டு நிகழ்ச்சிகளைச் சுட்டுகின்றார். (1) இங்குச் சிவந்த மேனித் தெரிவையரும் மாநிற மேனி ஆடவரும் ஆடுகளும் மாடுகளும் அணுவளவும் பேதமின்றித் தீர்த்தமாடும். இதனைக் காந்தியடிகள் கண்ட கனவு பலிப்பதற்குக் 'கால்கோள் இது' என்று மனத்தில் இருத்துமாறு நகைச்சுவையாகக் குறிப்பிடுகின்றார். (2) இந்தத் தீர்த்தத் துறையில் எல்லா விலங்குகளும் ஏதும் பகையின்றிக் கொல்லாமை போற்றிக் குளிர் நீர் அருந்தும் காட்சி. இது காந்தியார் கண்ட இராமராச்சியக் கனவாகக் கருதுமாறு தெரிவிப்பதாகும்.

இது மேற்குக் கல்லுக்கட்டிக் காட்சிகள். வடக்குக் கல்லுக் கட்டியில்

(1). விளம்பரத்தைக் கண்டு கல்போல் நிற்கும் ஆட்களை 'குற்றியா? மகனா? என்று அறியாது குழம்பிப் பெற்றங்கள் உரசும் காட்சி

(2) பழக்கடையில் அழுகல் பழத்தைத் தூக்கி எறியும் போது எருதும் பன்றியும் முட்டி மோதிப் போராடி அதைக் கொள்ள முயலும் காட்சி

(3) வாழைப்பழத்தோலில் சறுக்கி விளையாடும் பனிக்கட்டி விளையாட்டு.

(4) ஒருவழிப் பாதையில் மிதிவண்டி மீது எதிரில் வரும் காவலரின் மிதி வண்டி மோதும் காட்சி. இந் நான்கு காட்சிகள் பற்றிக் கூறும்.

**இருப்பதை வைத்தே எதையும் முடிப்பதுதான்**
**பொறுப்புள்ள தேசியம் என்று புலங்கொள்வீர்**

என்ற கவிதையடிகளில் கவிஞரின் எள்ளல் தொனியைக் கண்டு மகிழலாம்.

கிழக்குக் கல்லுக்கட்டியில் (1) வாருங்கள், வாருங்கள் என்றே வரவேற்றுப் பாருங்கள், பாருங்கள் என்று துணிபரப்பும் அறுவைக் கடைக்காரரின் அறுவைப் பேச்சு. (2) கொப்புடைய நாயகி திருக்கோயில் கோபுரம். இத்திருக் கோயிலில் வடமொழி மந்திரத்தை உதறி, காசு பறிக்கும் குருக்களின் காட்சி. அடுத்துக் காண்பது காலத்தைப் போற்று எனக் காட்டும் மணிக் கூண்டு.

சந்நிதித் தெருவில் தங்கநகைக் கடையில் காணும் காண்டிகை, விருத்தி, உரைகள். இவை நகைக்கடைக்காரர் புரியும் தில்லு முல்லுகள், உரைக்கும் பொன்துகள்களை மெழுகில் ஒற்றிக் கொள்வார்கள். நான் காரைக்குடியில் வாழ்ந்த போது சில நகைக் கடைக்காரர்களோடு நெருங்கிப் பழகியதுண்டு. 'புதுக் கணக்கு' போடும் ஒரு கடைக்குப் போயிருந்தேன். அங்கு இரண்டு மெழுகு உருண்டைகளைப் பார்த்தேன். அவற்றின் விவரம் கேட்டதற்குச் செட்டியார் (வேடிக்கையாக) ஓர் உருண்டையைக் காட்டி 'இதில் சேர்வது என் முதல் திருமகள் திருமணத்திற்குப் போதும் ' என்றும், மற்றோர் உருண்டையை எடுத்துக் காட்டி' இதில் சேர்வது என் இரண்டாம் மகள் திருமணத்திற்குப் போதும்' என்றும் கூறினார்.

வைணவ ஆச்சாரியார்கள் இந்த மெழுகுருண்டையை எடுத்துக் காட்டாகக் கொண்டு இறைவனது திருக்குணத்தை விளக்குவர். பொன் வணிகன் பொன் துகளை ஒற்றி எடுத்துச் சேர்ப்பதுபோல் பரம காருண்யனான இறைவன் நாம் அன்றாடம் புரிகின்ற, நல்வினைகளை ஒற்றி எடுத்து வைத்துக் கணக்கிடுவான். மேலும் அவற்றிற்கேற்ப நாம் வினைப் பயன்களை அநுபவிக்க வேண்டியிருக்கும் என்று விளக்குவர்.

'குப்பை' என்றாலே செல்வம் என்பது பொருள். பொற் கொல்லர் பணி இடங்களிலும், நகைக்கடைக்கு முன்னால் உள்ள இடங்களிலும் சேரும் குப்பைகளிலிருந்து முப்பது நாற்பது சவரன்களைச் சேர்க்கும் நிகழ்ச்சிகளையும் நேரில் கண்டதுண்டு. நகைக்கடைகளைக் கடந்து வருங்கால் சிவன் கோவிலை அடைவோம். அந்தத் திருக்கோவில் ஊருணியைப் பற்றிக் கூறுகின்றார்.

*தீநாற்றம் பாய்ந்துநம் மூக்கினைத் தீண்டிடுமேல்*
*ஆனூர்ந்தான் திருக்கோயில் ஊருணியும் அண்மியதா*
*எண்ணுங்கள், அந்த ஊருணியில் எழுநாற்றம்*
*விண்ணுலகம் எட்டும் வீறுடைய தாயிருக்கும்*
*குளத்தில் முழுகி எழுபவரைக் காணின்*
*நிறத்தில் திருமாலை நினைவிற் கொணர்வார்கள்*

அடுத்து, ஆடவர் பயிலும் மீ.சு.உயர்நிலைப் பள்ளியைக் குறிப்பிட்டு 'பூங்கொடி' யின் தந்தை முடியரசனைக் காட்டி அவர்தம் பெருமையை உணர்த்துவார். தொடர்ந்து இந்து மதாபிமான சங்கத்தைக் காட்டி, அங்கு வாழ்ந்த இராய.சொ.இல்லாமையால்

*"திடல்விழுங்கிப் போனதனால்*
*வெறுமை திகழ்ந்திருக்கும்"*

என்று மனவருத்தத்துடன் குறிப்பிட்டு இராய.சொ.வின் பெருமைகளை எல்லாம் பன்னி உரைப்பார். பின்னர் காரைக்குடித் தமிழ்ச் சங்கத்திற்கு வந்து அங்கு நடைபெறும் நிகழ்ச்சிகளை எடுத்துரைப்பார். ஒரு நுரையீரலுடன் வாழும் கவிஞரிடம் இறைவன் இதயத்தை விட்டு வைத்தான். அதனைச் சிறந்த இதயமாகவும் மாற்றியருளினான். அதனை அற்புதமாகப் பயன்படுத்திக்கொண்டு எழுதிய இவர்தம் நகைச்சுவைப் பண்பு என்றும் இவரை வாழ வைக்கின்றது.

இவருடைய 'வாழைமரம்' என்ற கவிதை அற்புதமான படைப்பு. வாழையே தன் வரலாற்றைக் கூறுவதாக அமைந்தது. அந்நியச் செலாவணியை அள்ளிவரும் பொருளாகக் குறிப்பிடும் பொழுது

பொருளியலின் சாயல் தொனிப் பொருளாக அமைந்து விடுகின்றது. வாழை கரும்பைப் போல் வந்தேறி அல்லவென்றும், தான் மண்ணின் மைந்தன் என்றும் கூறும்போது அதன் உரிமைக் குரல் நம் காதில் ஒலிக்கின்றது. வாழையின் பாடல்களைப் பன்முறை படித்தால் ஒவ்வொன்றும் ஒருபடித் தேனாக இனிக்கும். முக்கனியில் வாழைக் கனியும் ஒன்று என்பதை

காவியப் புலவோர் எல்லாம்
கனிமூன்றில் ஒன்ற வைத்தார்

என்ற அடிகளால் புலப்படுத்தி வாழைக்கனி பெருமிதம் கொள்ளுகின்றது. சில பாடல்களால் வாழை தன் சிறப்பைப் புலப்படுத்திக் கொள்வதைப் பார்ப்போம்

வண்டுகள் பூவில் மொய்க்கும்
வடையாகச் சுட்டு வைத்தால்
கண்டவர் கண்கள் மொய்க்கும்
கனிகளைக் காணின் மென்பூச்
செண்டுகள் அனைய பிள்ளைச்
சேய்களும் மொய்க்கும் வாழ்க்கை
உண்டெனின் மொய்க்க வாழும்
ஒன்றுக்கென் னிகர்யார் சொல்வீர் !

பலரும் வாழையை விரும்புவதால் வாழைக்கு நிகர் வாழையே என்பது இதில் காட்டப்பெறுகிறது.

பின்வரு வாருக் கெல்லாம்
பெருவாழ்வு தருதல் வேண்டி
என்னிடம் காலி செய்வேன்
இஃதென்றன் குறிக்கோ ளாகும்
இன்னுமோர் ஆண்டுக் காலம்
என்பணி நீட்டிப்பீ ரென்று
உன்னியோர் வேண்டு கோளை
அனுப்பிட உவந்தி லேன்யான்

வாழை பிறருக்கிடம் கொடுக்கத் தன்இடத்தைக் காலி செய்கின்றது. மனிதர்கள் தம் பதவிக் காலத்தை ஓர் ஆண்டு நீட்டிக்க வேண்டுவது போல் வாழை வேண்டுவதில்லை. மனிதர்களின் சுய நலத்தைக் குறித்து மெல்லிதான கிண்டலை இதில் காணலாம்.

பலமுறை கருவு யிர்த்துப்
பத்துக்கு மேலாம் பிள்ளை

பொலபொல வென்றே ஈன்று
நலமெலாம் பொன்ற வாழேன்
நலமுற ஒருமு றைதான்
நான்கருக் கொள்வேன் இந்தக்
குலமுறை ஒழுக்கம் என்றன்
உயிரினும் மேலாம் கொள்வேன்

வாழை தன் குடும்பக் கட்டுப்பாட்டைக் காட்டி மனிதர்கள் அவ்வாறு இல்லையென்று கிண்டலாகப் பேசுகின்றது.

சிவப்புமுக் கோணக் காட்சி
தெருவெங்கும் விளங்கக் கண்டீர்
உவப்புற ஒன்றின் மேலே
கருக்கொள ஒருப்ப டாத
தவப்பெருஞ் சிறப்பை எண்ணித்
தந்தாரா 'பதும பூடன்'
அவமுற்றேன் இந்தி யாவின்
அரசுசொற் கடைப்பி டித்தே

'ஒன்றுக்குமேல் எப்போதும் வேண்டாம்' என்ற கொள்கையைக் கடைப்பிடித்தும் 'பதும பூடன்' என்ற விருது வழங்கப் பெறவில்லையே என்று, தான் பெருமை இழந்த நிலையை எண்ணி மனம் கவல்கின்றது வாழை.

பாளைப்பல் வரிசைப் பெண்டிர்
கருங்குழல் பணைத்தோள் வீழ
வாழைப்பூக் கொண்டை போட
வடிவம்நான் கொடுத்த தன்றோ?

தென்னம்பாளைச் சிரிப்புக்காரிகட்கு வாழைப்பூக் கொண்டை போடத் தான்தான் வழி காட்டியதாக எண்ணிப் பெருமைப் படுகின்றது.

காரில்தான் ஈனும், கூதிர்க்
காலத்தே ஈனும், இந்தப்
பாரிலே செடிகள் ஒவ்வோர்
பருவத்து மட்டும் ஈனும்
ஊரிலே நான்மட் டும்தான்
உங்களைப் போலக் காலம்
ஆறினும் ஈன்றி ருப்பேன்
தென்னைஎன் அண்ண னாவான்.

இதில் வாழை, தான் எல்லாக் காலங்களிலும் மனிதர்களைப் போலப் பிரசவிக்கும் பேறு பெற்றிருப்பதைப் பெருமையுடன் பேசுகின்றது.

திருமண வீட்டு வாயில்
தெருவிலே வருக என்பேன்
நறுமண மாலையில் நான்
நாராக இணைந்தி ருப்பேன்
உறுமணம் கமழச் செய்த
உண்டியில் பொறியல் கூட்டாய்ப்
பெருமணம் செய்தி ருப்பேன்
பந்தியுள் இலையு மாவேன்

திருமணப் பந்தலில் கட்டப் பெற்றுத் தான்தான் வரவேற்பளிக்கும் முதல் ஆள் என்றும், மணமக்கள் கழுத்தில் தாங்கும் மாலையில் நாராக இணைந்திருக்கும் பேறினைப் பெற்றிருப்பதாகவும், உண்ணும் உணவிலும் பல்வேறு வடிவங்களில் தலைகாட்டுவதையும் கூறி வாழை பெருமைப்படுகின்றது. நைந்து போன பிற பொருள்களைப் போல் தான் ஒதுக்கப் பெறாமல், தோலும் உள்ளுறைப் பொருளும் ஒன்றாய் நைந்து நைந்து உழன்ற போதும் யாவரும் விரும்பும் பஞ்சாமிர்த உருவில் காட்சியளிக்கும் பெருமையும் தனக்குண்டு என்கின்றது வாழைப்பழம், மேலும் கூறுகின்றது.

பந்தியுள் இனிய கூழைப்
பருகிடத் தொன்னை யுந்தான்,
வந்தவர் விடைகொள் ளுங்கால்
வழங்கிடப் பழமாய் நிற்பேன்
இந்தஇப் பிறவி எல்லாம்
மானிடர் தமக்கே ஈந்தேன்
அந்தோநீ அளியன் என்றே
இரங்குவார் ஆரும் காணேன்.

என்று 'என்பும் உரியர் பிறர்க்கு' என்றதன் நிலையினை எண்ணி இரங்குவார் ஒருவரும் இல்லையே என்று வருந்துகின்றது.

மக்களுக்குள் வேற்றுமை இருப்பதைப்போல் தனக்கும் உண்டு என்கின்றது வாழை.

சிறுமலை கிழவோன் உண்டு
செவ்வாழை மேலோன் உண்டு
குறுமதிப் பேயன் உண்டு
கொள்பச்சை நாடான் உண்டு
குருவொளிர் பூவன் உண்டு
குமரிநேந் திரனும் உண்டு
பெருகிய சாதி யாலே
பிளவுகள் எமக்கும் உண்டு

சாதியை விட்டு வேறோர் சாதியில் மணங்கொள்ளாத தன்னை அறிவியல் வல்லார் பூவினால் கலப்புமணம் செய்து 'ஆங்கிலோ-இந்தியன்' என்றாற் போலப் புதுச் சாதியை உண்டாக்கி விட்டனர். இந்தச் சீர்திருத்தத்தைப் பொருட்படுத்தி அரசு தனக்குப் பொற்பதக்கம் வழங்கவில்லையே என்று கிலேசப் படுகின்றது.

தன்னுடைய பல்வேறு பயன்களைச் சிறிதும் கருதாமல் மனிதஇனம் சந்தனக் கட்டை வீரப்பனைப் போல கடுகளவும் இரக்கமின்றித் தன்னைக் கழுத்தறுக்கின்றது. சித்திரவதையும் செய்கின்றது என்று முத்தாய்ப்பாகக் கூறுவதைக் காண்போம்.

இலைமுதல் கிழங்கீ றாக
எத்தனை பொருள்கொ டுத்தேன்
விலைமுதற் பொருளாய் மாறி
வேண்டிய நலங்கள் சேர்த்தேன்.
கலைதெளி மாந்தர் நன்றி
சிறிதேனும் காட்டா ராய்என்
குலையினை அறுக்கின் றாரே
கொடுமையை என்ன சொல்வேன்?

இலையினைக் கேட்பார், பின்னர்
இன்கனி பறிப்பார் வண்ணச்
சிலையெனத் தெருவில் வைப்பார்
திருமணம் முடிந்து விட்டால்
துலையிலாத் தூரியன் தம்பி
துரோபதை துகிலை வாங்கும்
நிலையென உரிவார் நானோ
நாணத்தால் வெளுத்துப் போவேன்

கவிஞர் தன்னை வாழையாகவே கருதி ஒட்ட உணர்ந்து நைந்து உருகுவதைக் கண்டு நாமும் அந்நிலையை எய்துகின்றோம்.

'கறுப்புப் பணம்' என்பதைப் பற்றிக் கவிஞர் பேசும் போதுதான் இன்றைய நிலையைத் தோலுரித்துக் காட்டும் பெருமையை அடைகின்றார்.

கறுப்புப் பணத்தையே பேச வைத்துத் தான் ஒதுங்கிக் கொள்ளுகின்றார். கறுப்புப் பணத்தின் அவதாரம் பற்றிக் கவிஞர்

கண்ணனும் அவதா ரங்கள்
ஒன்பதே காட்டி னானாம்
எண்ணின்என் அவதா ரங்கள்
எழுதவும் முடிவ துண்டோ?

என்கின்றார். அவரவர் செய்த வினைக்கேற்ப அவரவர் பிறப்பு நேரும் என்பது மெய்ப்பொருள் விளக்கம். ஒருவர் வினை பிறிதொருவர்க்குப் போகாமல் பார்த்துக் கொள்வது இறைவனது ஆட்சி முறை. இந்த முறை அணுவளவும் தவறாது நடைபெற்று வருகின்றது. ஆனால் கறுப்புப் பணத்தின் பிறப்பு பிறர் செய்யும் வினையின்மேல் நேரிடுகின்றது.

*பேராசை வணிகர் நெஞ்சும்*
*பிழைபட்ட வரிவி திப்பும்*
*நேராக மோதிக் கொள்ள*
*நிலத்தில்நான் பிறந்து வந்தேன்*
*யாராரோ செம்முக் கோணம்*
*எடுத்தாலும் தடைசெய் தாலும்*
*ஆராலும் தடுக்கொ ணாதுஎன்*
*பிறவியை அறுக்கொ ணாது.*

என்பது கறுப்புப் பணத்தின் சுய புராணம்.

தான் இருட்டிலே பிறந்தாலும் தனக்குப் பகையானாரை உருட்டி ஒடுக்க முடியும்; தேன் இருட்டில் கிடைத்தாலும் அதன் சுவை கெடுமா? என்று கேட்கின்றது கறுப்புப் பணம்.கண்ணன் இருளில்தான் பிறந்தான். ஆனால் அவன் ஆற்றிய திருவிளையாடல்கள். எத்தனை என்று நமக்குத் கேட்கத் தோன்றுகின்றது கட்சி அரசியலில் கறுப்புப் பணம் ஆற்றும் திருவிளையாடல்கள் சொல்லி முடியா. இன்றைய மத்திய மாநில அரசுகளில் அது புரியும் திருவிளையாடல்களைச் செய்தித்தாள்கள் வெளியிடுவதைக் காண்கின்றோம். ஆளும் கட்சிகளிலும் சரி, எதிர்க் கட்சிகளிலும் சரி, அதனை ஒதுக்கித் தள்ளி வாழும் பத்தினித் தன்மையுள்ள ஓர் அரசியல்வாதி உண்டா? கறுப்புப் பணத்தின் செல்வாக்கு இல்லாத அரசே இல்லை என்பது அங்கையில் நெல்லியாம். அதன் திருவிளையாடல்களை அதன் வாயாலேயே கேட்போம்.

*ஆண்டவோர் கட்சி தன்னை*
*எதிர்க்கட்சி ஆக்கி வைப்பேன்*
*தீண்டுவார் ஆரும் இன்றித்*
*தேய்ந்தஓர் கட்சி தன்னை*
*மீண்டும்நான் ஏற்றி வைப்பேன்*
*மேல்வரும் இயல்பை எல்லாம்*
*ஈண்டுநீர் தெளிவீ ராயின்*
*என்னலால் அரசொன் றுண்டோ?*

என்னாலே முளைத்த கட்சி
எத்தனை யோஉண் டென்றன்
பின்னாலே எம்மெல் லேக்கள்
பின்பற்றித் திரிவ துண்டு
கண்ணால் நான் அசைப்பே னால்
கட்சிகள் பிளந்து போகும்
சொன்னால்நீர் நம்ப மாட்டீர்
தொழத்தகும் கடவுள் நான்தான்.

பொருளியல், அருளியல், திரையுலகம் போன்ற இடங்களிலெல்லாம் தன் ஆதிக்கம் இருப்பதாகக் கூறும். இன்னும் தன் ஆற்றலைப் பற்றிக் கூறும் போது எத்தனைப் பிறப்பெடுத்தாலும்,

புலப்படேன் கடவுள் போலப்
புரைசெய்வேன் வினையைப் போல

என்கின்றது. புகழிலும் கருஞ்செல்வம் புகுந்ததைக் காட்டுவார்,

உடலுக்குப் பணந்தான் செல்வம்
உயிருக்கோ புகழ்தான் செல்வம்
கடைத்தேங்காய் திருடிக் கோயிற்
கடவுளுக் குடைத்தாற் போல
உடைப்பிறர் செல்வம் ஈந்து
உயர்வள்ளல் வேடம் போட்டுக்
கெடல்இலாப் புகழ்செல் வத்தும்
கருஞ்செல்வம் சேர்த்தார் உண்டே

மேலும் கல்வியிலும் கருஞ்செல்வம் சேர்ந்து கொண்டிருப்பதைப் பட்டவர்த்தனம் ஆக்குவார்.

கல்வியும் செல்வம் என்றால்
அதற்குள்ளும் கறுப்புச் செல்வம்
புல்லுதல் இயல்பு தானே
பொழுதெலாம் வீண டித்தோர்
நல்விடைத் தாளைத் தேடி
நாடெலாம் அலைந்து பெற்ற
கல்விச்சான் றிதழும் கூடக்
கறுப்புச்செல் வம்தான் அன்றோ?

அண்மையில் மருத்துவ, பொறியியல் வகுப்பில் சேர்ந்தோரின் தில்லு முல்லுகள் வெட்ட வெளிச்சம் ஆனதை நாம் அறிவோம். அடுத்து கறுப்புப் பணத்தின் வேண்டுகோள், நயமானதாக உள்ளது.

நாசிக்கில் பிறந்த போது
எப்பழி நான்சு மந்தேன்
பேசிடின் வணிக ரானார்
பேராசைக் குணத்தால் இன்றோர்
வேசிக்குப் பிறந்தேன் போன்று
வீண்பழி தாங்கி வாழ்வேன்
யோசிக்கும் திறத்தீர் என்மேல்
ஒருபழி கூறல் ஆமோ?

அடுத்தும் "என்னை இகழாதீர், என்னை உருவாக்கிய விரோதியை இகழுங்கள், எய்தவர் இருக்க அம்பை நோவது ஏன்? என்று அழும் கறுப்புப் பணத்தின் குரல் நம்மிடம் இரக்கத்தை எழுப்புகிறது. அதன் குரலைக் கேட்போம்.

எத்தனை யோபி றப்பை
எடுத்துநான் அலுத்து விட்டேன்
அத்தன்நீர் ஆத லாலே
என்பிறப் பறுப்பீர் நீங்கள்
எத்துதல் ஏய்த்தல் விட்டால்
என்பிறப் பறுந்து போகும்
இத்தரை வாழ்வு தீரும்
இஃதென்றன் விருப்ப மாகும்.

கெஞ்சினேன் எனைக்க றுப்புப்
பணமெனக் கிளத்தல் வேண்டா
வஞ்சகன் ஒருவ னாலே
வான்பழி சுமந்து வாழ்வேன்
நெஞ்சினுட் கிடக்கை எல்லாம்
உரைசெய்தேன் கேட்ட நீவிர்
கொஞ்சமென் மேலி ரக்கம்
கொள்வரேல் ஒன்று போதும்.

"காந்தியார் இன்று வந்தால்" என்ற கவிதையைப் படிக்கும் போது நம் கண்களில்நீர் சுரக்கின்றது. காந்தியடிகளே சொல்வதாக கவிதை அமைகின்றது. காந்தியடிகளின் கொள்கைகள் கல்லறையில் அடங்கி விட்டன. நிர்மாணத் திட்டங்கள் நிர்வாணமாகி விட்டன. கிண்டலும் கேலியும் மின்வெட்டுகள் போல் அமைந்த இக் கவிதை நம் உள்ளத்தை உலுக்குகின்றது.

பத்தினியர் தேர்விற்குப் பாஞ்சாலி வேட்புமனு
வைத்தால் அதையும் வரவேற்கும் இந்நாடு
புலியும் சிறுத்தைகளும் புலால்உணவின் கேடுகளை
மொழிந்தால் அதையும்வாய் மூடாது கேட்டிருக்கும்

என்ற கிண்டலைக் காணலாம்.

சாராயக் கடைகள் நடத்தத் தடைகூட உள்ளது. மது விற்கும் கடைக்கு உரிமம் வழங்கவில்லை என்பது உண்மைதான் என்றாலும் எது வேண்டுமானாலும் இருளில் அது கிடைக்கும். இது பற்றிக் கவிஞர் கூறுவது.

*சட்டம் இருக்கிறது சாராயம் கிடைக்கிறது.*
*தட்டினால் தருகின்ற தருமம் நடக்கிறது*
*காந்திபேர் வாழவைத்துக் காந்தியத்தைக் கொன்றுவிட்டார்*
*காந்தி செயந்திதனைக் கொண்டாடிக் களிக்கின்றார்*
*ஏந்திய கொள்கைகளை எங்கோ புதைத்துவிட்டார்*

என்ற அடிகள் நாட்டின் அவலத்தைப் பிட்டுப் பிட்டு வைக்கின்றது. கோட்சே கொன்றது அடிகளின் உடம்பையே. கதர்வேட்டி, காந்திகுல்லா அணிந்து கொண்டு அடிகளின் உயிரையே சிதைத்து விட்டார்கள் சிலர்

'பாரியும் பறம்பும்,' தமிழ்க்கடல் இராய.சொ.', 'வள்ளல் அழகப்பர்', 'மறையா மலையா? மறைமலையார்' என்ற பாடல்கள் சங்கப் பாடல்களைப் போன்ற கையறுநிலைப் பாடல்கள் கல்நெஞ்சத்தையும் கரைக்க வல்லவை.

வாட்டுகின்ற பசிப்பிணியால் வருந்திவரு
வோர்க்கெல்லாம் அன்ன வாசல்
மீட்டுகின்ற யாழெடுத்து மிகுபுலமைத்
திறலுடைய கவிக்கு யில்கள்
வேட்டெழுந்து வந்திடுமேல் விரும்பிவர
வேற்கின்ற வேடந் தாங்கல்
காட்டகத்து வெண்முல்லைக் கவிஞனுக்கும்
சிறப்புகளை வழங்கும் தேரூர்.

என்பது பறம்பு நாட்டின் அறிமுகம்

*திறமைக்குப் பரிசுதரல் பாரிவள்ளல்*
*குறியன்று தீயாய்ப் பற்றும்*
*வறுமைக்குப் பொருள்தரலே வாழ்க்கைநெறி*
*எனக்கொண்டான் கபிலர் பாட்டில்*
*பெருமையிலா எருக்கினையும் இறைபேணத்*
*தவறுகிலான் என்ற பேச்சில்*
*பொருளென்ன? கடைக்கோடி மனிதனையும்*
*இவன்புரத்தல் கழறத் தானே !*

இது பாரி வள்ளலை நமக்குக் காட்டும் கவிஞரின் சொல்லோவியம்.

மூவர்க்கும் முன்தோன்றி முளைத்ததமிழ்
விளைத்தசுவை முழுதும் வானத்
தேவர்க்கும் ஊட்டுதற்குச் சென்றனையோ
வாசகத்தின் தேனெ டுத்து
தேவர்க்கும் வாசகத்தேன் ஊட்டுதற்குச்
சென்றிலையேல் தீரா மம்மர்
யாவர்க்கும் வழங்குவையோ? இனியசெயும்
நாகரிக இயல்பின் மிக்கோய்!

அருந்தேனை அமுதத்தை ஆக்குபவன்
என்பதனை அறிந்த கூற்றம்
விருந்தமுதம் அருந்திடவும் வீவில்லா
நிலைபெறவும் விழைந்தான் போலும்!
விருந்தமுதம் அருந்திடவும் வீவில்லா
நிலைபெறவும் விழைந்த தாற்றான்
பெருந்துணையா உனைக்கொண்டு தன்னலத்தாற்
பிழைசெய்து பெயர்ந்தான் போலும்!

திங்கள்நேர் காரைமகள் திருநுதலின்
பொட்டிழந்தாள் கலையின்தெய்வம்
துங்கமணி நாணிழந்தாள் இலக்கியத்துத்
தூய்யமகள் கைம்மை துய்த்தாள்
துங்கமணி நணிழக்கத் தூய்யமகள்
கைம்மையுறத் தோன்று மாயின்
சங்கமுறை எம்மவரைச் சலித்ததுயர்
எந்தவணம் சாற்று கேனோ

இவை இராய.சொ.வைப் பற்றிய கையறுநிலைப் பாடல்கள். எல்லாப் பாடல்களுமே நெஞ்சு வெடிக்கச் செய்யும் பாங்குடையவை.

கங்கைஇங்கு பாயவில்லை காவிரியும்
காரைநகர் காண வில்லை
பொங்குபெருந் தொழில்வளங்கள் பூக்கவில்லை
என்றாலும் இந்தப் பூமி
தங்குபெரும் நலமெல்லாம் தான்பெற்ற
தெவ்வாறு? அழகப் பன்றன்
செங்கைபொழி கொடையாறு பெருகியதன்
செழிப்பன்றோ இச்செ ழிப்பு!

கொடைவிளங்கும் இவன்கையில் குலம்விளங்கும்
வாணிகத்தில் கொள்கை சான்ற
நடைவிளங்கும் வாழ்க்கையிலே நல்லறிவு
விளங்குமவன் செயலில் நேர்ந்த

படைவிளங்கும் ஆளுமையில் பண்பாடு
    விளங்குமவன் சொல்லி லெல்லாம்
தொடைவிளங்கும் ஒருமாலை இவன்போல
    மானுடந்தான் தொகுத்த தில்லை

கோட்டையில்லை வெண்கொற்றக் குடையுமில்லை
    குடிமக்கள் இல்லை எந்த
நாட்டையுமே ஆளவில்லை அரசனென
    நவில்வதென்ன என்று கேட்பீர்
கோட்டையூர் ஊராகக் குளிர்கருணை
    குடையாகப் பயில்வோர் எல்லாம்
நாட்குடியா இங்கிருக்க நல்லாட்சி
    நடத்துவதால் அரசன் என்பேன்.

இவை மூன்றும் வள்ளல் அழகப்பர் பற்றிய கையறுநிலைப் பாடல்கள். இவை நெஞ்சை நெகிழ்வித்து கண்ணில் நீர் சொட்டச் செய்யும் பாங்குடையவை.

எதுநெறி என்றே அறிகிலாப் போதில்
    எதிர்வரும் ஒருமலை யானாய்
மதுநெறிக் குள்ளே அயலவர் நம்மை
    மாட்டிட எரிமலை யானாய்
இதுநெறி என்றே நறுந்தமிழ் மொழியில்
    இசைக்கையில் பனிமலை யானாய்
புதுநெறி தந்தாய் உளந்தொறும் நின்றாய்
    புகழ்மலை ஆயினை ஐயா !

செந்தமிழ் கமழும் சந்தனச் சாரல்
    சிறந்திடும் தனித்தமிழ் குதித்து
வந்திடும் அருவி வயங்கிடும் ஒருபால்
    வளர்ந்திடும் சிந்தனை மரங்கள்
முந்திவிண் தடவி மூண்டெழும் ஒருபால்
    முடிவிலா ஏரணக் கொடிகள்
வந்திடை மிடைய வளர்தரு சாரல்
    மன்னிய பொதியில்நீ ஐயா

மறைந்தன எல்லாம் வெளிக்கொணர் மலையை
    மறைஉறை உட்பொருள் அனைத்தும்
முறைமுறை உணரத் தருமொரு மலையை
    முறையிலார் செய்ம்மறை எல்லாம்
திரைதனை விலக்கி வெளிக்கொணர் மலையைச்
    சிறிதும்ஒவ் வாதஓர் முறையில்
மறைமலை என்றே உரைத்திடல் என்னோ ?
    மயங்குமால் எஞ்சிறு நெஞ்சம் !

ஆண்டுநூ றிங்கே வாழ்ந்திடு முறையை
அறைந்தநீ தோற்பினும் ஐயா
ஈண்டுபன் னூறாம் ஆண்டுகள் வாழும்
இடும்புகழ் நிறுத்தலில் வென்றாய்
தூண்டுதல் வேண்டா விளக்கெனும் நின்னூல்
துலங்கிடும் பேரொளி வீச்சில்
மூண்டஎவ் விருளும் எதிர்வரத் தயங்கும்
முத்தமிழ் நெறிவிளங் கிடுமால்.

இவை மூன்றும் மறைமலையடிகள் பற்றியவை. அவர் தமிழ்மொழிக்கு அசோகர் தூண்போல் நின்றவர், தனித்தமிழ்ப் பற்றாளர். அவரைக் காட்டும் போக்கில் தமிழ்முருகன் பெயரை வைத்துக் கொண்ட நம் கவிஞர் தம் தமிழ்ப் பற்றையும், தனித்தமிழ்க் கொள்கையையும் புலப்படுத்திக் கொள்கின்றார்.

பாவலர் மணியின் பாடல்கள் அனைத்தும் அவர்தம் தமிழ்ப்பற்று, சொல்நயம், பொருள்நயம், அவர் கொண்ட தனித்தமிழ் நெறி ஆகிய இவற்றையெலாம் புலப்படுத்தி அவரைச் சங்கப் புலவர் அருகில் வைத்துப் புகழ் மாலை சூட்டுகின்றன. இத்துடன் இவர் கவிதை பற்றிய சிறப்பை நிறைவு செய்கின்றேன்.

# 9. பன்மொழிப் புலவர் மு.கு. ஜகந்நாத ராஜா

இவர் ஓர் அபூர்வமான மனிதர். மதுரை மாவட்டம், இராஜபாளையத்தில் பிறந்தவர். பிறந்த ஆண்டு 1933. ஏலக்காய் வேளாண்மைத் தொழிலில் கிடைக்கும் வருவாயைக் கொண்டு வாழ்க்கை நடத்துபவர். தெலுங்கைத் தாய்மொழியாகக் கொண்ட சிறந்த தமிழறிஞர். இவர் தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், சமஸ்கிருதம், பாலி, பிராகிருதம், இந்தி, ஆங்கிலம் ஆகிய மொழிகளில் புலமை பெற்றுத் திகழ்கின்றார். சிறந்த மொழி பெயர்ப்பாளர். ஆண்டாள் நாச்சியாரின் வரலாற்றை "ஆமுக்த மால்யதா" (சூடிக் கொடுத்தவள்) என்ற பெயரில் ஸ்ரீ கிருஷ்ண தேவராயரால் தெலுங்கு மொழியில் படைக்கப் பெற்ற காவியத்தைத் தமிழில் மொழிபெயர்த்துப் பெரும்புகழ் பெற்றவர் (1988). கபிலரது குறிஞ்சிப் பாட்டைத் தெலுங்கில் மொழி பெயர்த்துள்ளார். பல திறப்பட்ட பன்னூல்களின் ஆசிரியர். பல நிறுவனங்களைத் தொடங்கி அவற்றைச் சிறப்புடன் கண்காணித்து வருபவர். மரபுவழிக் கவிதைகளையும், புதியவகைப் பாடல்களையும், புதுக் கவிதையையும் இயற்றித் தமிழுக்கு வளம் சேர்த்தவர். சிறுகதை, கட்டுரை, ஒப்பாய்வு போன்ற நூல்களையும் படைத்தவர். அரிய கருத்துக்களை மிக எளிய முறையில் விளக்குவதில் வல்லுநர். ஆரவாரமின்றி அருந்தொண்டாற்றி வரும் இப்பெருமகனார் பெற்ற விருதுகளையும், பாராட்டுதல்களையும் பன்னி உரைக்கில் பாரதமாக விரியும். மரபு வழியில் இயற்றிய சிலவற்றை ஈண்டுக் காட்டுவேன்.

***கற்பனைப் பொய்கை:*** இஃது இவ்வாசிரியரின் கவிதைத் தொகுப்பு (1972) பல்வேறு காலங்களில் எழுதப் பெற்றவை. இளமையிலிருந்தே கவிதை படைக்கும் திறன் இவரிடம் அமைந்திருந்தது. இந்நூலில் மரபுக் கவிதைகளையும், புதுவகைப் பாடல்களையும் அமைத்துள்ளார். இந்தப் பொய்கை அழகியல், அறவியல், அறிவியல், அரசியல் என்ற நான்கு கரைகளைக் கொண்டது. பொய்கைக் கரை எதுவாக இருந்தாலும் பொய்கையில் உள்ளது கவிதைப் புனல், தெள்ளத்தெளிந்த குளிர்ந்த தமிழ் வெள்ளம். பன்மொழிப் புலமையும், இலக்கியப் பயிற்சியும் உடைய ஒரு தனிமனித

உள்ளத்தில் தோன்றும் கருத்து உணர்ச்சி, உணர்வு ஆகிய மூன்று ஆறுகளும் ஒன்றாகிக் கற்பனைப் பொய்கையில் சங்கமமாகி இருப்பதை இங்குக் காணலாம். கவிஞரே,

மண்ணும் விண்ணும்
மகிழ்ந்து தழுவி – இத்
தண்ணீர்ப் பொய்கையில்
தவழ்தல் பாரீர் !
கற்பனைப் பொய்கையில்
கவிதை மலர்கள்
அற்புத மாகவே
அலர்வதைப் பாரீர் !
பொதிகைத் தென்றல்
பொய்கையில் குளித்துப்
புதியதோர் வெறியுடன்
புறப்படல் காணீர் !

என்று காட்டுவார்.

அழகுக் கரையிலிருந்து நோக்கும் போது 18 மலர்கள் தென்படுகின்றன. 'மலரின் மணம்' என்ற தலைப்பில் மலர்களே பேசுவதாகப் பத்துக் கவிதைகள் அமைந்துள்ளன.

கொட்டும் மழையினுக் கஞ்சிக்
குணம்தரும் என்று விரும்பிப்
பட்டெனும் இழைகளின் ஊடே
பதுங்கிக் கிடந்திடமாட்டோம்
தென்றல் வந்து வந்து
தீண்டிச் செல்லும் இன்பம்
நன்றெனை மதித்து நாங்கள்
நாளையும் இருப்பதில்லை.

தூசியில் வீழினும் வருந்தோம்
தோகையர் சூடினும் வருந்தோம்
பூசனை புரிந்தபின் எறிந்தே
புழுதியில் களையினும் வருந்தோம் (9)
வாழ்நாள் முழுதும் மணமும்
மதுவும் தந்தோம் அதற்காய்
தாழ்நாள் வந்தது என்றே
சஞ்சலம் கொள்ள மாட்டோம்

இக்கவிதைகளில் " வாழ்வாவது மாயம், மண்ணாவது திண்ணம்" என்பதன் எதிரொலியும்

நன்றாங்கால் நல்லவாக் காண்பவர் அன்றாங்கால்
அல்லற் படுவ தெவன்? (குறள் 379)

என்ற கருத்தும் இருவினையொப்பு, மலபரிபாகம் என்ற சைவ சித்தாந்தக் கருத்தும் பொதிந்து கிடப்பக் காண்கின்றோம்.

கவிஞன் கற்பனையுலகில் வாழ்பவன். கற்பனையில் திளைப்பவன். திரு. ராஜா 'என் கனவுகள்' என்ற தலைப்பில்

என்கன வெல்லாம் இசைப்பே னாகில்
மன்பதை வியக்கும் மாகா வியமாம்

எனத் தொடங்கி

கடலில் செலுமரக் கலம தொப்பவே—கனாக்
கடலில் என்மனக் கலமும் செல்லுமே!

நிலவின் ஒளியில் நீந்தி நீந்தி
மலருள் நுழையும் வண்டா கிடுவேன்!

வானில் நீந்தி மழையில் அமர்ந்துவிண்
மீனாம் பூக்கள் மெல்லப் பறிப்பேன்!

கற்பக மலரைக் கையில் கொண்டே
அற்புத இன்பங்கள் அநுபவித் திடுவேன்!

இயற்கை அழகுகள் எல்லாம் கண்டே
மயங்கிக் கிடப்பேன் மண்ணை மறப்பேன்

எனக் கூறுகிறார். இத்தலைப்பில் உள்ள 15 கவிதைகளில் சில மட்டும் காட்டப் பெற்றன. ஜாங்கிரிக் கடையில் புகுந்தால் எல்லாவற்றையும் தின்றுவிடும் ஆசையிருக்கும் . தின்ன முடியுமா? அது போலவே இங்கும்.

'நான் என்ற தலைப்பில்' உள்ள நான்கு கவிதைகளில்

காலக் கதிரோன் காட்டும் அழகில்
கலந்து கிடப்பதும் நானே
காலமும் இடமும் கடந்தொளிர் தத்துவக்
கடவு ளாவதும் நானே

என்ற பாடற் பகுதி தேசியகவி பாரதியின் எதிரொலியாக 'நான்' தானாக மாறுகின்றது.

ஆனபொருள் அனைத்திலும் ஒன்றாய்
அறிவாய் விளங்குமுதற் சோதிநான்

என்ற பாடலோடு ஒப்பிடுக. இவையிரண்டும் கண்ணன் காண்டீபனுக்கு உரைத்த கீதையிலும் (கீதை 10 விபூதியோகம்) தலைவன் தன்மைகளைத் தன்னவையாகக் கொண்டு ஆழ்வார் நாயகி பேசுபவையும் (திரு 5.6) எதிரொலிப்பவையாக உள்ளன.

அழகுக் கரையில் நாம் சந்திக்கும் 'பூக்காரி' ஓர் அற்புதமான கற்பனைப் பெண். அவளுக்கும் கவிஞருக்கும் ஒரு கற்பனை உரையாடல் நிகழ்வதாக அமைந்தவை இரண்டு கவிதைகள்

*தாமரை உளதோ? என்றேன்—உளதே*
*தண்ணருங் காட்டில் என்றாள்*
*மல்லிகை உளதோ என்றேன் —உளதே*
*மாந்த, என் வீட்டில் என்றாள்*
*முல்லைதான் உளதோ? என்றேன் —உளதே*
*முதுதமிழ்ப் பாட்டில் என்றாள்.*
*இருவாட்சி உளதோ ? என்றேன்—உளதே*
*இப்பெரும் நாட்டில் என்றாள்*

(தாமரை—தாவுகின்ற மான், தாமரைப் பூ, மல்லிகைப்பூ, மல்லிகை கொத்து மல்லி கையில் முல்லைப்பூ, முல்லைத்திணை, இருவாட்சிப்பூ, இரண்டுவித ஆட்சி)

*மந்தார முண்டோ ? என்றேன்—இது*
*மழைநாள் அன்றோ என்றாள்*
*அந்தி உண்டோ என்றேன்—அது*
*ஆதவன் மறைந்தால் என்றாள்*

(மந்தாரம்—பூ, மப்பு, மந்தாரம், அந்தி—செவ்வந்திப் பூ, சந்தியா காலம்)

இந்தவிதமான இயற்கைப்பெண் தன்னை மறுத்து, தன் இதய மலரைப் பறித்து வந்த வழியே ஏகினாள் என்றும், ஏகினதால் தான் வருந்தி நிற்பதாகவும் கூறுவது அற்புதம். கவிஞன் இவ்வாறு இயற்கையில் தோய்ந்து நின்று தான் மறந்த நிலையில் இருப்பதை இவ்வாறு புலமைநலம் தோன்றக் கூறுவதால் நம் உள்ளம் பெருமகிழ்ச்சி அடைகின்றது.

மழலையின் இயக்கத்தில் தத்துவத்தைக் காண்கின்றார்.

*பூவினும் மெல்லிய பூங்கொடிக் குழந்தாய்*
*கூவிநீ அழுதது மேனோ? கூறாய்*
*ஏவி என்னை இங்கே விட்ட*
*தேவை காணாது திகைத்தே அழுதேன்.*

பொய்யில் உள்ளம் பொங்கும் புனித
கையும் காலுமேன் கடிதே ஆட்டுவாய்
மெய்யில் உலகில் மேவும் மாசுகள்
பையா வரவே பகைத்தே உதைத்தேன்

கன்னல் தன்னிலும் களிப்பை ஈவோய்
என்னோ அங்கும் இங்கும் பார்ப்பாய்?
என்னுடை இருப்பிடம் எச்சூழ் நிலையென
முன்னும் பின்னுமாய் முயன்றே பார்ப்பேன்.

வினா விடையாக அமைந்த இக்கவிதைகளுக்கு விளக்கம் தேவை இல்லை. இரசவர்க்க மாங்கனியின் சாறு போல் இனிப்பதை உணர்ந்து மகிழ்கின்றோம்.

கண்ணன், முருகன் இவர்கள் படங்களில் காணப்பெறும் குறு மூரல் நம்மை மகிழ்விக்கின்றது. அங்ஙனமே இயற்கையின் புன்னகை விளைவிக்கும் இன்பம் சொல்லுந்தரமன்று. 'புன்னகை' என்ற தலைப்பில் காணப் பெறும் ஆறு பாடல்களும் ஆறுமுகனின் முகத்தில் தவழும் புன்னகைபோல் நம்மை உடல் சிலிர்க்க வைக்கின்றது.

விண்ணெலாம் துளைத்த இடிபோல்
வேதனை குடையும் நெஞ்சப்
புண்ணெலாம் தீர்க்க உன்றன்
புன்னகை ஒன்று போதும்

நஞ்செனும் வஞ்ச கத்தால்
நலியுமென் உளப்புண் ஆறக்
கொஞ்சியே வந்த நின்றன்
குறுநகை ஒன்று போதும்

மன்னுவெங் கொடுமை யாலே
வாழ்வெலாம் தொடர்ந்து வாட்டும்
இன்னலைத் துளைக்க உன்றன்
இளநகை ஒன்று போதும்

இவற்றைப் படித்து அநுபவிக்கும் போது பராசக்தியைக் குழந்தையாகப் பாவித்துப் பாரதியார் படைத்த 'கண்ணன்-என்குழந்தை' என்ற பாடல்களைப் படித்து அநுபவித்த இன்பம் நினைவிற்கு வருகின்றது.

கவிஞர் இயற்கையழகில் தன் உள்ளத்தைப் பறிகொடுத்து ஏங்கி நிற்பதாக நான்கு பாடல்கள், எழுதியுள்ளார் அவற்றில் ஒன்று.

தண்ணமுதப் பைந்தமிழில்
தாவிவரும் கடலலையில்
மண்ணணைந்த பசும்புல்லில்
வானொளிரும் செங்கதிரில்

பெண்ணினத்தின் பேரழகில்
பிள்ளைகளின் மழலைதனில்
எண்ணமதைப் பறிகொடுத்தே
ஏங்கியேங்கி நிற்கின்றேன்

இதனைப் படிக்கும் போது அழகு எங்கெங்குள்ளது? என்று பாவேந்தர் பாரதிதாசன் பட்டியலிட்டுக் காட்டும் பாடல்கள் ஒன்றில்' அழகென்பாள் கவிதை தந்தாள்' என்ற இறுதியடினை நினைக்கின்றோம்.

இந்த அழகைச் சுவைப்பதில் ஒரு நீதியையும் அறிந்து கொண்டதாகக் கூறுவது மிகமிக அற்புதம்.

எட்டாத தூரத்தில்
இருக்கின்ற வான்மலர்கள்
தொட்டாநாம் இன்புற்றோம்
தூயமண மலர்களிலும்
கிட்டாத பொருள்போலக்
கீழ்மை மனப் பற்றுகளை
விட்டாலே நலமன்றோ
விடல்வேண்டும் என்றுணர்ந்தேன்.

என்ற பாடலில் "பற்றற்ற நிலை" யைக் காட்டுகின்றார். அந்த நிலையை நம்மனமும் அவாவி நிற்கின்றது.

'இந்திர கோபம்' என்ற பூச்சி ஒன்றுண்டு, மழைக் காலங்களில் அவற்றைக் காணலாம். இரத்தினம் போல் ஒளிரும் செந்நிறத்தவை. அதனைப் பற்றிவரும் பாடல்களில் சில,

இந்திர கோபங்காள்
எந்த விதமாக
யந்திர வெல்வெட்டின்
அந்துகில் போர்த்தீரோ

செம்பருத்திப் பூவின்
செம்மை பிழிந்தெடுத்து
உம்பர் உனக்காக
ஒருடலைத் தந்தாரோ ?

இயற்கை அன்னையவள்
இளந்தளிர் வெற்றிலையை
நயப்பாக் குடன்மென்று
நன்குமிழ்ந்து விட்டாளோ ?

மழைபெய்த மறுநாளே
 மண்மேல் உலவுதற்கு
அழைத்துதவும் யாரேயோ
 அன்புடன் சொல்லீரே
உயிருள் பவளந்தான்
 உன்னதமாம் வெல்வெட்டின்
மயிருற்று வந்திந்த
 மண்ணிடையில் தவழ்கிறதோ
பட்டுடலைப் பெற்றுப்
 பரவசப் படுகின்றீர்
எட்டுமென் கற்பனையில்
 எதைஉவமை சொலவல்லேன்?

காதலியின் மென்கன்னம்
 கனிவுடனே வருடுமின்பம்
மீதும்மைத் தொட்டாலே
 மேவுமென்றன் இதயத்தே.

இவை யாவும் அற்புதமான பாடல்கள். பூர்வாசிரம இளைஞர்களையும் அசைபோட்டு மகிழ வைக்கின்றது.

இறுதியாக அழகுக் கரையில் "வானவில்" பற்றிக் காண்போம். பத்துப் பாடல்களிற் சில,

செங்கதிரோன் ஏழ்பரிகள்
 செல்வதற்கு வகுத்திட்ட
மங்காத பாதையிதை
 மலரயன்தான் படைத்தானோ?

இயற்கையெனும் சித்திரத்தை
 இயற்றுதற்கு மலரயனார்
நயமுடனே குழைத்திட்ட
 நல்வண்ணப் பலகையிதோ

மழைகண்டு நடமாடும்
 மயிற்பீலி தனையொத்துக்
கழையொன்று வளைத்ததுபோல்
 கவினுடனே தோன்றுதடா

மேகமெனும் பஞ்சாலே
 மெல்லிழையார் இழைத்திட்ட
வாகமரும் நூலாலே
 வனைந்திட்ட வனத்துகிலோ?

வானவில்தான் மறைந்தாலும்
மழைமுகில்கள் சிதைந்தாலும்
நானெனது உள்ளத்தில்
நாள்தோறும் காண்கின்றேன்

அற்புதமான கற்பனைகளை ஈண்டுக் காண்கின்றோம்.

அறவியல் கரையிலிருந்து சிலவற்றைக் காண்போம். இங்குள்ள பாடல்கள் மூலம் புத்தர் பெருமானையும், சாக்ரடீசையும், நபிகள் நாயகத்தையும், காரல் மார்க்ஸையும், காந்தியையும் கொன்றொழித்த உலகின் மடமையைக் கண்டு வருந்துகின்றோம்.

தேவாம்சம் பொருந்தியநற் செம்மல்களை
நீதிநெறி தெரியக் காட்டி
மூவாத புகழடைந்த ஏந்தல்களைக்
கொன்றொழிக்கும் மூட உலகே

என்று தம் வெறுப்பைக் காட்டுகின்றார்.

பித்தேறித் தமக்குள்ளே பேதம் பேசிப்
பிழைபட்டுப் போகின்ற மதங்கள்

என்றாலும் அவற்றினுள்ளும் சத்தாய பேருண்மை ஒன்றைக் காண்கின்றோம். அந்த உண்மை என்ன?

ஒத்துரிமை யோடிந்த உலகோ ரெல்லாம்
ஒழுக்கமுடன் அன்பறங்கள் ஓம்பிக் காத்து
நித்தியமாம் பரம்பொருளை நினைந்து வாழ்த்தி
நீதியுடன் வாழவேண்டும் என்றே சொல்லும்

உண்மையைத்தான் கவிஞர் வாக்கில் காண்கின்றோம்.

"ஊனினைச் சுருக்கி உள்ளொளி பெருக்கி" என்று பெரியோர்கள் சான்றோர்கள் இரண்டையும் விரும்புவார்கள். கவிஞர் தாம் இவ்விருமுனைகளின் ஈர்ப்பால் துன்புறுவதை,

பருந்தும் தவளையும்போல்
பாழ்மனமும் உடலுணர்வும்
இருந்தென்னை அலைக்கழித்தே
எதிரெதிராம் திசைகளிலே
விருந்துக்கே அழைக்கிறது
வேட்கைப் பெருநெருப்போ
அருந்தென்று தூண்டுவதால்
ஆர்பக்கம் சேர்வதுவோ?

ஆன்மிகப் போராட்டமாக எடுத்துரைக்கின்றார். ஆயினும் 'துருவ மீன்' தென்படும் என்ற நம்பிக்கையைக் கொண்டுள்ளார்.

*சேற்றுமண்ணைத் துவைத்துப் பிசைந்து*
*சிதைத்துப் பின்னே கலம்செய் தல்போல்*
*ஊற்றெடுக்கும் உணர்ச்சிச் சுழலில்*
*உருக்கு லைந்தே உள்ளொளி பெறுவேன்!*

*தீன னாகி யானெனும் முனைப்பில்*
*திசைதடு மாறித் திகைக்கும் போதே*
*மோன மான வான வெளியில்*
*முளைக்கும் துருவம் தென்படு மம்மா!*

என்பவற்றில் இந்நம்பிக்கையைக் கண்டு மகிழலாம்.

அறிவியல் கரையிலிருந்து பல நல்ல காட்சிகளைக் காட்ட முயல்கின்றேன். இங்கு ஏவாள் உலகு என்னும் புதிரை அவிழ்க்க முயன்று அறிவுக் கனியைப் பறித்து உண்ட ஏவாள்

*பொய்கலந்த இருள்நீக்கிப் புத்தொளியைத்*
*தந்தெமக்குப் புலன்தந்த*
*தெய்வீகப் பொற்கொடி*

ஆவதைக் கவிஞர் காட்டக் காண்கின்றோம். அன்று ஏடன் என்னும் அழகிய பூங்காவில் ஆதாமின் சொல் மீறி இறைவனால் தவிர்த்திட்ட இன்தருவின் மென்கனியைச் சுவைத்திராவிட்டால் மனிதன் இழி விலங்காய்க் கிடப்பான். நாணமில்லா மனிதற்கு நல்லறிவுப் பழச்சுவை நாவினிக்கத் தரப்பெற்றதனால், இன்று மனிதன் நாகரிகம் கொண்டவனாய்த் திகழ்கின்றான். இவற்றையெல்லாம் நன்கு உணர்ந்த கவிஞர் ராஜா,

*பூகண்ட வண்டொலிப்பப் புதுத்துறைகள் ஆய்ந்ததுவும்*
*போற்றுகின்ற மின்சாரம் பூவுலகில் பெற்றதுவும்*
*நீகண்ட பகுத்தறிவு நீள்கனியின் பயனன்றோ?*
*நினையென்றும் வாழ்த்துகின்றேன் நீடூழி வாழியரோ*

என்ற பாடலில் வாழ்த்தி மகிழ்கின்றார்.

*தெய்வத்தின் கட்டளையைத் தெம்பாக மீறியவள்*
*தீமைதனைத் தந்தாள்என் றூமையர்கள் சொல்லட்டும்*

அதைப்பற்றி எவரும் கவலை கொள்ள வேண்டியதில்லை என்று நவில்கின்றார். கவிஞர் விவிலியத்தின் மாற்றுக் கருத்தினைநல்கி மக்களிடையே நிலவிவரும் பத்தாம் பசலித் தனத்தை நேரல் முறையில் சாடுகின்றார்.

'கேள்வி' என்ற தலைப்பில் கவிஞர் பல வினாக்களை விடுத்துப் புத்தகத்தை மூடிவிட்டுச் சிந்தித்து விடை பகருமாறு வேண்டுகின்றார்.

1. முட்டை முதலா? பெட்டை முதலா?
2. விதை முதலா? செடி முதலா?
3. விண் முதலா? மண் முதலா?
4. பெண் முதலா? ஆண் முதலா?
5. பிறை முதலா? மதி முதலா?
6. கண் முதலா? கருத்து முதலா?
7. கடல் முதலா? கார் முதலா?
8. உடல் முதலா? உயிர் முதலா?

இந்த வினாக்களுக்கும் விடை பகர்ந்தால், தாம் 'கடவுள் உண்டு,' இல்லை என்ற விடுகதைக்குத் துணிவான கருத்தினைக் கூறுவதாகச் சவால் விடுகின்றார்.

மேலும் இந்தக் கரையில் சத்தியத்தின் நித்தியத்தைச் சாற்ற வந்த சான்றோர்களாக அறிவியலறிஞர்களைக் காண்கின்றார். 'பொருளே சத்தியம்' என்று பொருள் முதல்வாதியும், கருத்தே சத்தியம்' என்று கருத்து முதல் வாதியும் நீண்டதோர் தத்துவவாதம் நிகழ்த்துவதைக் காண்கின்றோம். இருவர் வாதங்களையும் கேட்ட சியாத்வாதி கூறும் முடிவுகள் அறிவுக்கு நல்ல விருந்தாகின்றது.

ஒருநா ணயத்தின் இருபக்கம்
ஒப்பக் கிடக்கும் பொருள்கருத்தை
ஒன்றே பெரிதென் றுழல்வானேன்
உயிரும் உடலும் கலந்தன்றோ !

தருமிவ் வாழ்க்கை அமைந்துளது
தனித்துக் கிடந்தால் சரியாமோ?
தரணி வாழ்க்கை இருநெறியும்
சத்தி யத்தின் கூறுகளாம் !

உண்மை பலகோ ணங்களிலே
ஒவ்வொரு விதமாய்த் தோன்றிடுமே
ஒருபனித் துளியில் பன்னிறமும்
உருவா யிருத்தல் அறியோமோ !

திண்மை யான கருத்துகளே
சின்னாட் செல்லின் மாறுபடும்
தேரும் தருக்க நெறிகளிலே
சியாத்வா தந்தான் சிறப்புடைத்தாம்

அரசியல் கரையில். ஆதிக்க வெறி மண்டும் வேற்றுமை முதலியவற்றைக் காண முடிகின்றது. உலக அரசியலையும் காட்டுகின்றார் கவிஞர்.

விண்ணெட்டிப் பறந்துலவும்
விசையான ராக்கெட்டின்
பண்ணெட்டும் ஒலிகேட்டுப்
பரவசந்தான் அடைகின்றீர்
கண்ணெட்டும் தொலைவினிலே
கார்மேகம் போல்திரண்டு
மண்ணெட்ட வருகின்ற
மறப்போரை விலக்கீரோ ?

சந்திரனை நோக்கிப்பல்
சாத்திரங்கள் ஏவி விட்டுத்
தந்திரங்கள் பேசியதும்
சமாதானம் வந்திடுமோ ?
சந்ததமும் போரின்றிச்
சமாதானம் தழைத்தோங்கப்
பந்தமுறும் அணுகுண்டைப்
பாழ்படுத்த மாட்டீரோ ?

இவை யாவும் சமாதானத்துக்கு வழி கோலவில்லையே என்று மனம் கவல்கின்றார். அச் சமாதானத்திற்குத் தாம் வழி காட்டுகின்றார்.

இருக்கின்ற குண்டுகளை
இருங்கடலில் எறியுங்கள்
பெருக்குங்கள் செல்வத்தைப்
பேணுங்கள் சமாதானம்
செருக்கின்றிச் சமமாகச்
சேர்ந்துண்டு பண்புடனே
உருக்கொண்ட நன்னெறியில்
உயர்ந்தோங்கி வாழ்ந்திடுவீர் !

விவசாயம் பெருகட்டும்
வியாபாரம் ஓங்கட்டும்
நவமான விஞ்ஞானம்
நாள்தோறும் வளரட்டும்

அவமான வெடிகுண்டும்
அணுகுண்டும் அழியட்டும்
தவமான மெய்ஞ்ஞானம்
தழைக்கட்டும் தழைக்கட்டும்

அன்புதான் உலகை ஆளும் ஆற்றல் பெற்றது என்பது கவிஞர் ராஜாவின் அதிராத நம்பிக்கை,

இனமொழி பேதங்கள் இல்லாமல்
எந்த உயிரையும் கொல்லாமல்
மனமொழி செயல்களால் சத்தியத்தின்
வழியில் நடப்போம் நித்தியமே

ஒவ்வொரு மனிதனின் உரிமைதனை
ஒவ்வொரு மனிதனும் மதித்திட்டால்
இவ்வவ னிதனிலே போருண்டா?
இன்னல் என்னும் வேருண்டோ?

அன்பே உலகை ஆளுமடா
அதிகார வெறிகள் மாளுமடா
இன்பம் வேண்டும் மனிதகுலம்
இன்றே திருந்த வேண்டுமடா

என்ற பாடலில் கவிஞரின் நம்பிக்கையைக் கண்டு மகிழலாம். இக் கரையிலிருந்துகொண்டு அவர் உலகத் தலைவர்கட்கும் விண்ணப்பம் விடுப்பதையும் நம்மால் காண முடிகின்றது.

உலகை இயக்கும் தலைவர்களே
உங்கட் கென்றன் விண்ணப்பம்
தலைமைப் பதவி தனைவிடஇத்
தரணி வாழ்தல் அவசியமாம்

அணுகுண் டுகளைச் செய்யாதீர்
அதற்காம் செலவு முழுவதையும்
துணிவாய் உலகம் முழுமைக்கும்
துன்பம் நீங்கச் செலவழிப்பீர்!

பேசித் தீர்க்கும் பிரச்சினையைப்
பெரிது பண்ணிக் குழப்பாதீர்
நாசம் தவிர்க்க நீங்களெலாம்
நல்ல மனது வைத்திடுவீர்!

பலவகை மொழிகள் பேசிடுவோர்
பாங்காய் ஒருநாட் டிணைந்திருப்பப்
பலவகை நாட்டார் அதுபோலப்

கவிஞரின் உலக நோக்கு இவற்றில் வெளியாகின்றது.

மறைந்த முன்னாள் முதலமைச்சர் குமாரசாமி ராஜாவைப் பற்றி ஏழு வெண்பாக்களைப் பாடியுள்ளார். இந்த வெண்பாக்களின் முதல் எழுத்துக்களை மேலிருந்து கீழும், இறுதி எழுத்துக்களைக் கீழிறிந்து மேலுமாகப் படித்தால், குமாரசாமி ராசா' என்ற பெயர் வருமாறு அமைத்திருக்கும் கவிஞரின் பாப்புனையும் திறன் பளிச்சிடுவதைக் காணலாம்.

மொழி வெறி இல்லாமல் அனைத்து மொழிகளையும் கற்றுத் தமிழில் கவிதை புனையும் ஒருவர்-தெலுங்கு மொழியைத் தாய்மொழியாகக் கொண்ட ஓர் அரிய மனிதர்-ஏன்? முடியரசனைப் போல ஒருவர்-நம்மிடையே வாழ்வது நமக்குப் பெருமை அளிக்கின்றது. சிறிதளவும் தன் முனைப்பின்றிச் சாந்த மூர்த்தியாக இருப்பது நம்மை மேலும் மகிழ்விக்கின்றது.

# 10. டாக்டர். ச. சவகர்லால்

செட்டி நாட்டில் பெரும்புகழ் வாய்ந்த கவிஞர்களில் இவரும் ஒருவர். காரைக்குடியில் பிறந்து (1936). தேவகோட்டை தே பிரித்தோ உயர்நிலைப் பள்ளியில் (தற்போது மேல்நிலைப்பள்ளி) பள்ளிக் கல்வியும், அழகப்பர் கலைக் கல்லூரியில் எம். ஏ. பட்டமும், மதுரைகாம ராசர் பல்கலைக் கழகத்தில் பி.எச்.டி. பட்டமும் பெற்று, 28 ஆண்டுகள் கல்லூரித் தமிழ்ப் போராசிரிய ராகவும், ஓராண்டு கல்லூரி முதல்வராகவும் பணியாற்றி ஓய்வு பெற்று (1994) சென்னையில் குடியேறித் தம் மக்களின் அரவணைப்பில் வாழ்கின்றவர். கல்லூரியில் பயின்ற நாள் தொட்டே கவிதை இயற்றி வருபவர். தவத்திரு குன்றக்குடி அடிகளாரால் பொற்கிழிக் கவிஞர்' என்ற பட்டம் பெற்றுச் சிறந்த கவிஞராக அறிமுகம் செய்யப் பெற்றவர். இவர் இன்றுவரை கவியரங்குகள், இதழ்கள், மலர்கள் போன்றவற்றில் வெளியிட்ட கவிதைகள் யாவும் இன்னும் நூல் பெறவில்லை. ஒரே ஒரு நூல் சில ஆண்டுகட்கு முன்னர் வெளிவந்துள்ளது. இவர் பாடிய அனைத்தும் மரபுக் கவிதைகளேயாகும். இவற்றையொட்டி யாப்பு நெறிக்குட்பட்ட புதியவகைப் பாடல்களும் இவர்தம் படைப்புகளில் உள்ளன. இனி இவர்தம் கவிதைகளை நோக்குவோம்.

முருக வழிபாடு : டாக்டர். ச. சவகர்லால் இறையன்பு மிக்கவர். குறிப்பாக முருகன் மீது அதிக பக்தி கொண்டவர்.

கந்தனெனும் மந்திரத்தைச் சொனன்துமே
காதவழி பறந்துமிக ஓடுமே – என்றும்
சொந்தமென வேலனடி சொன்னதுமே – சொல்பவர்க்குச்
சீர்மிகுந்து செல்வமெல்லாம் கூடுமே !

வள்ளிமண வாளனென்று சொல்லிமிக அன்புகொண்டு
வந்திடுவோர் துன்பமெலாம் மாயுமே – நெஞ்சை
அள்ளுகின்ற கொள்ளையழ குள்ளமகன் கந்தனவன்
அடியிரண்டில் தலையதனைச் சாயுமே !

என்பவை புதுவகைப் பாடல்கள். அடுத்து வேறொரு பாணியில்,

கையிலே வேலுண்டு கண்ணிலே அழகுண்டு
கவலை யொழிந்தி டாதா
பையவே சேர்கின்றோம் பாதமே நேர்கின்றோம்
பயமெலாம் தொலைந்தி டாதா

'முருகா வருவாய்' என்ற தலைப்பில் பதினான்கு சீர் ஆசிரிய விருத்தம் ஒன்றும் உண்டு.

1. ***சான்றோர்கள்:*** சுந்தரரின் திருத்தொண்டத் தொகையைக் கலங்கரை விளக்கமாகக் கொண்டு பாரதி, தேசத் தொண்டர்களையும் பாரதி தாசன் திராவிடத் தொண்டர்களையும் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை, பலவேறு தொண்டர்களையும் பாடியுள்ளதைப் போல் கவிஞர் சவகர்லாலும் ஒரு சிலரைப் பாடியுள்ளார். அவர்களைக் காண்போம்.

வள்ளுவர் : இரண்டு பாடல்களில் இது ஒன்று,

சமயக் குதர்க்கந் தனைக்கடந்தாய்
சாதி இனத்தின் திறங்கடந்தாய்
சகல அரசும் நாட்டெல்லை
தனையும் கடந்தாய் விண்ணிடிக்கும்
இதயத் தளவில் உயர்ந்திட்டாய்
இருளைப் போக்கி ஒளியூட்டும்
இருட்சுடர் எனநீ ஒளிர்ந்திட்டாய்
எண்ணப் பொழிலில் மலர்ந்திட்டாய்
தமதெனத் தமிழர் தோள்கொட்ட
நாவிற் குறளின் தேன்சொட்ட
நாளும் விழவும் கொண்டிட்டாய்
நமது தெய்வம் தனையும்நீ
அமைவாய் வென்று விழாக்கொண்டாய்
ஆடுக செங்கோ செங்கீரை
ஆதி யுலகத் தொருபொருளே
ஆடுக செங்கோ செங்கீரை

பிள்ளைத்தமிழ்ப் பாணியில் பாடப்பெற்ற இக்கவிதை அற்புதமாக அமைந்துள்ளது. வள்ளுவர் மேல் பிள்ளைத் தமிழே பாடியிருக்கலாம் என்று நினைக்கத் தோன்றுகிறது.

***கம்பன்;*** கம்பனைப் பற்றி ஐந்து பாடல்கள் பாடியுள்ளார். எல்லாம் எண்சீர் விருத்தங்கள். அவற்றுள் இரண்டை ஈண்டுத் தருவேன்.

உள்ளத்தில் உடைப்பெடுத்த இராம காதை
ஒட்டத்தில் இணைந்திட்டால் வரும்எல் லாமும்

என்று தொடங்குகிறார்.

சொல்லாலே மண்டபத்தை அமைத்தான், பாட்டுச்
சுவையாலே மேடையினைப் போட்டான், சந்தச்
சொல்லணங்கை ஆடவிட்டான், அணிகள் என்னும்
சுவையணங்கை நடக்கவிட்டான், உணர்வை யெல்லாம்

அள்ளுகின்ற கவியணங்கை ஆட்டு வித்தான்
அவளாடக் கலைவளத்தைக் கூட்டு வித்தான்
வல்லவனாம் பெருங்கம்பன் ஆட்டு விக்க
வளர்கவிதை நங்கையவள் நடன மாடும்

சொல்மண்டபம் அதில் சுவை மேடை. அதில் சந்தச் சொல்லணங்கு ஆடுகின்றாள். அணிகள் என்னும் அணங்கு நடக்கின்றாள், கவியணங்கின் பிரவேசம், அவள் ஆடவே கலைவளங்கள் வந்து குவியும் நிலையில் கவிதை நங்கை நடனம் ஆடுகின்றாள். இந்தக் கற்பனை நடன அரங்கில் நாமும் இருந்து கவிதை மங்கை நடனமாடுவதைக் கண்டு களிக்கின்றோம். எல்லாம் மான சீகமாகத்தான்.

இன்னும் கம்பன் என்னென்ன வளங்களைக் காட்டுகின்றான். என்று கவிஞர் காட்டுவதைக் காண்போம்.

நாட்டுவளம் காட்டுவித்தான், செல்வ மிக்க
நகரவளம் காட்டுகின்றான், மாத ராடும்
ஆட்டவளம் காட்டுகின்றான் அதன்நுட் பத்தை
அழகுபெறக் காட்டுகின்றான், மழலை வெல்லும்
பாட்டுவளம் காட்டுகின்றான், மதன்தூ தர்கள்
பயில்வளத்தைக் காட்டுகின்றான், சுருங்கச் சொன்னால்
காட்டுவளம் அத்துணையும் காட்டி விட்டான்
காணாக்கால் நம்கண்ணின் பார்வை தப்பு.

பொருள் வெளிப்படை. விளக்க வேண்டியதில்லை. விளக்கம் தெளிவில்லையாயின் மீண்டும் ஒரு முறை படியுங்கள் விளக்கம் தெளிவாகும்.

அண்ணல் காந்தி : வயதான காலத்திலும் காந்தியடிகள் வேகமாகவே நடந்தார். ஆகவே அவரைப் பாட்டிலும் வேகமக நடக்க விடுகின்றார் கவிஞர்

கத்தியும் இரத்தமும் மெத்த இழிவெனக்
கத்தி முழக்கியதார்? — மெய்ச்
சத்தியம் நித்தமும் சக்தி தருமெனச்
சாற்றி முழக்கியதார்?

அண்ணல் காந்தியென் றெண்ணிடு போதில்
ஆடுது நெஞ்சமெலாம் — அவர்
எண்ணி லுயர்வினை எண்ணி மகிழ்வினில்
ஏறுது நெஞ்சமெலாம்.

இந்தப் புதிய வகைப் பாடல்களில் காந்தியடிகளை மானசீகமாகக் காணச் செய்கின்றார் கவிஞர்.

ஆசிரியர் : ஆசிரியர் சான்றோர் கூட்டத்தவர். இவரைப்பற்றி

*பிஞ்சு மனதுநா லஞ்சு பொருளுறப்*
*பேணிப் புகட்டுவோர்யார்? — தன்னைத்*
*தஞ்ச மெனவருங் கொஞ்சு கிளிகளைத்*
*தாங்குநல் லாசிரியர்.*

*கேள்வி முளைத்தெழும் பாலர் உணர்வினைக்*
*கிளைத்தெழச் செய்பவர்யார்? — தன்னைச்*
*சூழ்ந்து முழக்கிடும் சிறுவர்க் கிதமெனச்*
*சொல்லுநல் லாசிரியர்.*

*பாரில் பொறுமையை யுளத்தில் நிறுத்திய*
*பண்புடைப் பெரியவர்யார்? — தரு*
*நூறு குழந்தைகள் கூறு மொழிகளை*
*நேர்படக் கொள்ளுமவர்*

*ஏணி யிவரெனத் தோணி இவரென்*
*இடர்புகழ் பெற்றவர்யார்? — உடல்*
*கூனி வளமது குறுகி வாழ்வினிற்*
*கொடுந்துயர் கொள்ளுமவர்*

எனப்பலவகையாகப் பாடல்களில் காட்டுகின்றார். இறுதிப் பாடலில் காட்டுதல் போல் இன்று ஆசிரியர் இல்லை. நல்ல ஊதியம் பெற்று ஏறுபோல் பீடுநடை போடுகின்றார்கள்.

பாவேந்தர் : இவரைப் பற்றி கவிக்குயிலே என்ற தலைப்பில் நான்கு பாடல்கள் உள்ளன. நான்கும் அற்புதமானவை. பாவேந்தர் திருநாடு அலங்கரித்ததைக் குறித்து இரங்கிப் பாடியவை. அவற்றில் ஒன்று—

*தமிழ்நாட்டில் இளஞ்சோலை உள்ள மட்டும்*
*தமிழ்க்குயிலா யங்கிருந்து பாடல் சேர்ப்பாய்*
*தமிழ்நாட்டில் மலர்க்கூட்டம் மல்கு மட்டும்*
*தமிழ்த்தேனீ யாய்வந்து தேனைச் சேர்ப்பாய்*
*தமிழ்நாட்டில் இளந்தென்றல் வீசு மட்டும்*
*தமிழினிமை கலந்ததிலே குளிராய் நிற்பாய்*
*தமிழ்நாட்டில் இயற்கையழ கிருக்கு மட்டும்*
*தனியழகின் சிரிப்பாக நிற்பாய் நீயே.*

பாவேந்தரின் பூதவுடல் மறைந்தாலும் அவர்தம் புகழ் உடல் என்றும் மறையாது தமிழ்நாட்டில் இயற்றையழகு இருக்கும் வரையிலும் அவர்தம் அழகின் சிரிப்பாக என்றும் நிலைத்து தம் புகழ்நிறீஇ தாம் மயந்து பெரியோரில் ஞ ஒருவராக இருப்பார் என்று கவிஞர் சவகர்லால் அடித்துக் கூறுகின்றார்.

இயற்கை : இயற்கையைப் பாடாத கவிஞர்கள் இல்லை. சங்க இலக்கியங்கள், சமய இலக்கியங்கள், பக்தி இலக்கியங்கள், காவியங்கள் இவற்றிலெல்லாம் இயற்கை வருணிக்கப் பெறுவதைக் காணலாம். பாவேந்தரின் அழகின் சிரிப்பு ஓர் அற்புத இயற்கைக் களஞ்சியம். அதிலுள்ள தொடக்கப் பாடல்கள் பிற்காலக் கவிஞர்கட்கு அடியெடுத்துக் கொடுக்கின்றன.

## 2. இயற்கை மண்ணில்

'அழகு' பற்றி ' எழிலைக் கண்டேன்' என்ற தலப்பில் மூன்று கவிதைகளை அழகாகப் பாடியுள்ளார்.

புலர்ந்திடு பொழுதில் வானிற்
　　பறந்திடு புள்ளிற் காலை
மலர்ந்திடு பூவில் தேனை
　　மாந்திடு வண்டின் கூட்டம்
கிளர்ந்திடு ஒலியிற் கீச்சுக்
　　குரலிடு கிள்ளைப் பேச்சில்
அலர்ந்திடு கமல மொட்டின்
　　அசைவினில் எழிலைக் கண்டேன்

மடிதனை முட்டிப் பாலை
　　மண்டியே தாயை விட்டுக்
கடிதினில் ஓடி மீளும்
　　கன்றதின் செய்கை தன்னில்
மிடிதனில் உழன்று வாழ்வை
　　வெறுத்திடு தாயர் உள்ளம்
நொடிதனில் மாற்றும் சேயன்
　　நெளிப்பினில் எழிலே கண்டேன்

இரண்டுப் பாடல்கள் மட்டும் ஈண்டுக் காட்டப் பெற்றன.

மலர் : நந்தவனத்திலும் இளமரக்காவிலும் பல்வேறு வண்ண மலர்கள் மாலையில் மலர்ந்திருக்கும் காட்சி கண்ணுக்கு இனிமையானது. கற்பனைக்கு விருந்தாக அமைவது, மனத்திற்கு அமைதியை நல்குவது. மலர்களைப் பற்றி ஐந்து பாடல்கள், அனைத்தும் அற்புதமானவை.

ஒளிப்புனலில் குளித்தெழுந்து வண்ணம் பூசி
உயர்மணத்தைக் காற்றினிலே கலக்க விட்டே
ஒளிப்பேது மில்லாமல் இதழ்கள் நீக்கி
உள்ளதெல்லாம் காட்டுகின்ற புதுமுகம் போல்
ஒளிந்திருந்த சுவைத்தேனைத் திறந்து காட்டி
ஓடிவரும் வண்டினத்துக் குணவு கூட்டிக்
களிப்போடு காற்றோடு நடன மாடும்
காட்சியினைத் தருவதுவும் மலரேயன்றோ?

மலர்கள் மலர்ந்து அசைதலை அவை காற்றோடு களிப்போடு நடனமாடுவதாகக் கூறுவது கவிஞரின் நுண்ணுணர்வைக் காட்டுகின்றது.

பலவகை மலர்களை இரண்டு பாக்களில் காட்டுகின்றார்.

கதிர்முகத்தை விரும்புகின்ற மலர்க ளுண்டு,
காலையிலே அவனெழுந்து மேலே ஏறிக்
கதிரொடுங்கி மாலையிலே மறையு மட்டும்
கழுத்தொடிய முகம்பார்க்கும் மலர்க ளுண்டு,
மதிமுகத்தை விரும்புகின்ற பூக்க ளுண்டு,
வட்டநிலா வான்பரப்பில் தோன்றி வந்தால்
பொதிந்திருந்த மணம்சிந்தி மலர்ந்து காட்டும்
புதுப்பொலிவு தூமலர்கள் பலவு முண்டு.

இவை ஒருவகை மலர்களாகும்.

கதிரவனை விரும்புகின்ற கமலம் வானில்
கலைகூட்டி மதிகண்டு மலர்த லில்லை
கதிர்கூட்டி ஒளிகூட்டி மயக்கி னாலும்
கயத்தல்லி பகலவனுக் கலர்த லில்லை,
இதுதானே தமிழொழுக்கம், கொண்டான் கண்ணே
இனிமையெனக் காண்பதல்லால் பிறரி டத்தே
எதுநலமிக் கிருந்தாலும் தமிழ்ப்பெண் ணுள்ளம்
ஏற்காதே அதையென்று மலர்கள் சொல்லும்.

இவை மற்றொரு வகை மலர்களாகும். இவ்வகை மலர்வழியாகத் தமிழ்ப் பெண்ணின் பண் பாட்டுள்ளத்தைப் பகர்வதாகக் கூறுவது கவிஞரை ஆங்கில கவிஞர் வொர்ட்ஸ்வொர்த் என்பவரிடம் கொண்டு வந்து நிறுத்துகின்றது.

பெண்ணையொரு மலரென்பார், இனிமை சொட்டப்
பேசும்வாய் மலரென்பார், வேலைப் போன்ற
கண்ணையொரு மலரென்பார், தொட்டுப் பார்த்துக்
கையையொரு மலரென்பார், பளிங்கு போன்ற

*கன்னமொரு மலரென்பார், பஞ்சின் மென்மைக்*
*காலையொரு மலரென்பார், நாசி கண்டு*
*சின்னதொரு மலரென்பார், ஆண்கள் பெண்ணைச்*
*சிறப்பான மலர்க்குவிய லாக்கித் துய்ப்பார்.*

ஆழ்ந்த தமிழ் இலக்கியப் பயிற்சி இல்லாமல் இத்தகைய பாடல் கவிஞரின் படைப்பில் பிறந்திருக்க முடியாது. தேவரின் சிந்தாமணியிலும் கம்பன் காவியத்தில் மட்டிலுந்தான் இத்தகைய பாடல்களைக் காண முடியும். பெண்ணைச் சிறப்பான ' மலர்க்குவியலாக'க் காண்பது கவிஞனின் கண்ணுக்கு மட்டிலும் தான் சிறப்பாக உரியது.

*தென்றலிலே சதிராடும், வண்டு வந்து*
*தீண்டையிலே குதிபோடும், மான்கள் வந்து*
*நின்றவுடன் தலையாட்டும், மயில்கள் சற்று*
*நடந்தவுடன் நகைகாட்டும், பெண்கள் கிட்டச்*
*சென்றவுடன் தலைநீட்டும், அவர்கள் தொட்டால்*
*சிலிர்ப்பெய்தித் தரைசேரும், பின்னர் வீடு*
*சென்றவுடன் தொடையாகும், யாப்பில் நின்று*
*தளைபெற்றே சீராகும், கூந்தல் சேரும்.*

மலர்களின் தன்மை தம் அண்டையில் வரும் பிராணிகளுக்கேற்ப மாறிக் காட்டப் பெறுவது அற்புதம். எல்லோருக்கும் ஒருவித சைகையைக் காட்டிவிட்டு தாம் உவமையாகக் கூறப்பெறும் பெண்ணுக்கு மட்டிலும் அடிமைப்பட்டு அவளுடன் ஐக்கியமாவது ஆன்மா பரமான்மாவுடன் கலப்பது போன்ற விசிட்டாத்வைத நிலையைக் காட்டி நிற்பது அற்புதம். தொடை, யாப்பு, தளை, சீர் போன்ற இலக்கணச் சொற்களை மலர்மாலையாக மாறுவதில் அமைத்துக் காட்டுவது கவிஞரின் நுண்மாண் நுழைபுலத்தைப் புலப்படுத்துகின்றது.

*சில இயற்கை நிகழ்ச்சிகள் :* சில இயற்கை நிகழ்ச்சிகளைப் பட்டியலிட்டுக் காட்டி அவற்றில் உண்மைப் பொருளைப் பொருத்திக் காட்டுவது கவிஞரின் தத்துவ நோக்கைப் புலப்படுத்துகின்றது.

'ஏன்?' என்ற தலைப்பில் காணும் பாடலொன்றில் கவிஞர் இவற்றைக் காட்டுவார், நம்மை வியக்க வைப்பார்.

*கீற்றுப் பரங்கிபோல் தோணுவதேன்? — பிறை*
*கன்னியர் நுதலெனக் காணுவதேன்?*
*சோற்றுச் சிதறல்போல் மீன்களிடை — வெள்ளித்*
*தட்டென முழுநிலா ஊர்வதுமேன்?*

தண்ணொளி இரவையே ஆளுவதேன்? – அந்தப்
பொன்னொளி காலையில் மாறுவதேன்?
வெண்ணகை காட்டிய நீலவானம் – காலை
வெறுமையாய்த் தோன்றிடு நிலையதுமேன்?

காலையில் கதிரவன் தோன்றுவதேன்? – பொய்கைக்
கமலம் குறுநகை பூப்பதுமேன்?
மாலைக் கதிரொளி மாய்வதுமேன்? – அல்லி
மலர்களும் செவ்வெனச் சிரிப்பதுமேன்?

புள்ளினங் காலையில் எழுவதுமேன்? – பகற்
போதினி லெங்கணும் பறப்பதுமேன்?
மெள்ளென அந்திபிற் கூடுவந்தே – பின்பு
மேனி சுகம்பெறத் தூங்குவதேன்?

இந்த நான்கு பாடலில் எழுப்பிய வினாக்களுக்கு அடுத்து வரும் இரண்டு பாடல்களில் விடையாகத் தத்துவ உண்மையையே தருகின்றார் கவிஞர்.

வாழ்வது வும்நிலை தாழ்வதும் – இந்த
வாழ்வி லியற்கையென் றோதிடவே
ஆழ்கடல் விட்டெழு கதிரவனும் – மாலை
அடுக்கிய மலைதனில் வீழுகின்றான்.

இயற்கை நிகழ்ச்சிக ளத்துணையும் – வாழ்வை
எடுத்துரைத் திடத்தான் நிகழ்வதுமே
செயற்கை நலமெதும் நிலைத்திடாமல் -- வாழ்விற்
சுழன்றிடும் என்பதை உணர்ந்திடவே.

இவற்றிலுள்ள 'நிலையாமை' என்ற உண்மையைக் கண்டு பயன் பெறுவோம்.

*மழையணங்கு:* வள்ளுவப் பெருமான் வான்சிறப்பைத் தம் குறளில் காட்டுவார். கவிஞர் சவகர்லால் மழையை அணங்காக உருவகித்து அதன் அற்புதப் பண்புகளைக் காட்டுவார். அவற்றினை ஈண்டுக் காண்போம். காவடிச் சிந்து பாணியில் கவிதை நடைபோடுகின்றது.

வாடிப் பயிரெலாம் நீடிக் கருகையில்
வந்து பொழிந்திடுவாய் – நலந்
தந்து மகிழ்ந்திடுவாய் – எனச்
சிந்தை வணங்கிடுவோம் – எமை

நாடிப் பொழிகிலாய் ஓடி யொளிகுவாய்
நன்று சிரித்திடுவாய் – இடியாய்

நின்று நகைத்திடுவாய் – மலையுட்
சென்று மறைந்திடுவாய்

ஆசை துடித்திட ஓசை நடுக்குற
அங்கம் பதறிடுவாய் – மின்னற்
செய்கை உதறிடுவாய் – இடியாய்
எங்கும் கதறிடுவாய் – உன்றன்

ஆசைக் குரியவன் மோசம் புரிந்தானோ
ஆகிய உண்மையென்ன? – சிந்தை
போகிய தன்மையென்ன? – மழை
ஆகிய பெண்ணணங்கே!

மழையின் தன்மையை அற்புதமாகக் காட்டுகின்றது கவிதை.

*வெள்ளக்காட்சி* : சில பகுதிகள் ஈண்டு தரப் பெறுகின்றன

ஊழியின் கூத்தினுக் கரங்கமென – இடிதான்
ஒத்திசை மத்தள முழங்கியதே
பாழென இப்புவி யாகிடுமோ – என்னப்
பதறிட மழையது பொழிந்ததுவே,

கவிஞரின் கற்பனை உளமெனவே – தமிழ்க்
காவலர் கொடைத்திற நலமெனவே
புவியினி லெங்கணும் வெள்ளமதே – தோன்றிப்
பொங்கிட வழிந்தது ஆற்றினிலே
இலைகளுந் தளிர்களும் காய்களுமாய் – மலர்ந்த
இன்மணம் பூக்களும் கனிகளுமாய்
குலைகளும் முறிந்தநற் கிளைகளுமாய் – ஆற்றில்
குவிந்திட நீர்பொழில் ஆனதுவே

பள்ளமும் மேடென ஆகிடவே – சில
பள்ளமே மேட்டை விழுங்கிடவே
கள்ளமும் நல்லதும் போரிடுமோர் – உண்மைக்
காட்சியின் நலத்தினைக் கண்டேனடா

புள்ளினம் விண்ணிலே பறப்பதுவும் – நாணற்
புல்லின மதைக்கண் டாடுவதும்
வெள்ளமே காட்டிடும் காட்சியடா – அதை
வேறெதிற் கண்டிடக் கூடுமடா.

அற்புதமான வருணனையைக் கவிதையில் கண்டு மகிழ்ந்திடலாம்.

### 3. இயற்கை - விண்ணில்

**1. கதிரவன் :** காலையில் எழுஞாற்றின் அழகையும் மாலையில் படுஞாயிற்றின் பாங்கையும் கம்பனில் கண்டு மகிழலாம். கவிஞர்

சவகர்லால் கதிரவனை நான்கு எண்சீர் ஆசிரிய விருத்தக் கவிதைகளில் காட்டுவர். ஈண்டு இரண்டைக் காட்டுவேன்.

அலைமகளைக் கீழ்வானில் முத்தமிட்டே
அலர்கதிரால் உடல்தழுவி விடையும் பெற்று
நிலைபெயர்ந்து வானிலுயர் கதிரைக் கண்டு
நீர்க்கமலம் மெல்லிதழை விரிக்கக்கண்டேன்
அலைமகளுக் கவன்கணவன், தாமரைக்கோ
அவன்மேலே பெருங்காதல் இரண்டினுக்கும்
நிலையளிக்கும் கதிரோனுக் குலகைச் சூழும்
நீளிருளை யொழிப்பதுவே இலட்சியம்மாம்.

காலையிலே இருள்கிழித்தே எழுவான், வானிற்
கண்சிமிட்டு மீன்கூட்ட மழிப்பான், குளிர்பூஞ்
சோலையிலே ஒளிபரப்பி எழிலைச் சேர்ப்பான்
தோகைமயி லாடலுக்கு வண்ணம் கோர்ப்பான்
சாலையிலே நடமாட முடியா வண்ணம்
தகித்திடுவான் அப்போதும் நன்மை செய்வான்
வேலையிலே கிடக்கின்ற நீரை மேலே
மேகமென ஏற்றிமழை பொழியச் செய்வான்.

கவிஞர் தாம் உற்றுநோக்கி நேரில் கண்ட காட்சிகளை நம்மையும் தம் கவிதை மூலம் காணச் செய்கின்றார். அவற்றை நாம் நேரில் காணும் காட்சிகளுடன் ஒப்பிட்டு மகிழ்கின்றோம்.

2. *நிலவரசன்* : 'நிலவரசே' என்ற தலைப்பில் நிலவரசனைப் பற்றி நான்கு அறுசீர் ஆசிரிய விருத்தப் பாடல்கள் உள்ளன. நான்கும் நம் மனத்தில் நவநவமான காட்சிகளை எழுப்பவல்லவை. அவற்றுள் இரண்டினை மட்டிலும் ஈண்டுத் தருவேன்.

கலையொளிரக் கண்சிமிட்டும் மீன்கூட்டம்
கணக்கிலவாய்க் கிடந்த போதும்
நிலையுயர்ந்த உன்றனொளி காட்டுகின்ற
நீளாணைக் கடங்கி நாளும்
தலையெடுத்துத் தோன்றுமிடம் தப்பாமல்
தான்தோன்றி மிளிரு கின்ற
நிலையறிந்தேன் நிலவரசே, நின்னாணை
நிலவுகின்ற நிறமும் கண்டேன்.

ஆடிவரு முன்தோற்றங் கண்டுள்ளம்
அசைந்தாட இன்ப வெள்ளம்
கூடிவர இதழ்விரிக்கும் குமுதத்தாள்
குறுநகையைப் பார்த்து நீயும்

நாடிங்குக் கருமேகப் போர்வையினுள்
நல்லுறவை மறைத்து நெஞ்சம்
ஆடிவிழச் செய்கின்றாய் இதுநன்றோ?
ஏனிந்த ஆட்ட மெல்லாம்?

இந்த இரண்டு பாடல்களிலுள்ள கற்பனை நயம் தன்மைநவிற்சியில் சிறப்பாக மிளிர்வதைக் கண்டு களிப்பெய்துகின்றோம்.

3. நடப்பு நிலை : இத்தலைப்பில் பல்வேறு நிலைகளைக் காட்டுவார். 'மறுபடியும் வருவாய் நீ' என்ற தலைப்பில், காந்தியடிகளைப் பற்றி

பொக்கைவாய்ச் சிரிப்பில் இந்தப்
பூமியே மயங்கக் கண்டாய்
மக்களின் துன்பம் போக்க
மேனியை வருத்திக் கொண்டாய்
தக்கபல் நெறிகள் கூட்டித்
தந்தையே தந்தாய் உன்றன்
மக்களோ மறந்து விட்டோம்
மறுபடி வருவா யாநீ!

என்ற பாடலில் அறிமுகம் செய்து

அரசியல் வாழ்வில் தூய்மை
அறத்தொடு வாழ்ந்தாய் பின்னால்
வருபவர் தமக்குத் தூய
வழிமுறை சொன்னாய் இன்றோ
அரசியல் நாறிப் போச்சு
அறநெறி மறந்து போச்சு
மறுபடி பாடஞ் சொல்ல
மகாத்மா வருவா யாநீ!

என்றுநடப்பு நிலைகளை எடுத்துக் காட்டுவார். மேலும் புதிர்க்கதிர் (X-Ray) படம்போல் வெட்ட வெளிச்சமாக்குவார்.

சாதிகள் சிரிக்க லாச்சு
சண்டைகள் பெருகிப் போச்சு
நாதியில் ஏழைக் கூட்டம்
நாடெலாம் பரவிப் போச்சு
வீதிகள் வஞ்சப் பேச்சு
வெடிப்பினில் தகர லாச்சு
மீதியும் அழியு முன்னே
மறுபடி வருவா யாநீ

சேராதார் குத்திக் கொள்ளவார்
சொந்தமோ பகையைக் கூட்டும்
சாதிகள் கொலைகள் செய்யும்
தலைவரோ கட்சி சேர்ப்பார்
வீதிக ளெங்கும் கட்சி
முழக்கமோ வெறியை யூட்டும்
காதலாய் எம்மைக் காணக்
கருணையே வருவா யாநீ.

எளிய சொற்கள், தெளிவான கருத்துகள் அடங்கிய அறுசீர் ஆசிரிய விருத்தங்கள் அற்புதமாக அமைந்து படிப்போரை அன்புடன் அழைக்கின்றன.

'வருவாயா நீ' என்ற தலைப்பில் கவிஞர் சமூக நிலையைக் காட்டுகின்றார்.

இதன் நிலையை பாரதியார் 'நெஞ்சு பொறுக்குதிலையே' என்று பாடினார். விடுதலை பெற்ற பிறகு சமூக நிலையைக் காண அப் புதுமைக் கவிஞரை அழைக்கின்றார் காரைமாநகர்க் கவிஞர்.

விடுதலை கெட்டு நாட்டின்
வண்ணமும் கெட்டு மக்கள்
கெடுதலை அடையக் கண்டாய்
கிளர்ந்தெழும் உணர்ச்சி கொண்டாய்
துடித்தெழுந் தார்க்கப் பாட்டைத்
துடியென முழக்கி நின்றாய்
விடுதலை வளத்தைக் காண
மறுபடி வருவா யாநீ !

நாட்டிலே உயிரை வைத்தாய்
நாள்தொறும் கொட்டித் தந்த
பாட்டிலே உணர்வை வைத்தாய்
பண்பெனும் விளைச்சல் தன்னை
நாட்டிலே காண ஏங்கி
நல்லுளம் துடித்த வள்ளல்
நாட்டுள களைகள் காண
நாடியே வருவா யாநீ !

கீதையைச் சொன்ன மாயக்
கண்ணனும் நபியும் ஏசும்
மாதினைப் பாகம் வைத்த
வள்ளலும் ஒன்றே என்ன

ஓதிய கவிஞ னேஇவ்
வுலகினில் கடவுள் பேரால்
தீமையின் சிரிப்பைக் காணத்
திரும்பியே வருவா யாநீ !

ஒன்பது பாடல்களில் மூன்றினை மட்டிலும் தந்தேன். நாட்டிலே மாற்றம் வேண்டும். ஆனால் இப்படி இழிநிலைக்கு இறங்கியது நமக்கு வருத்தத்தைதான் நல்குகின்றது.

இயற்கையில் நடைபெறுவது மாற்றம். "தோற்றத்தில் இருந்தபடி இருப்பின் யாதும் துளிப்பெருமை பெறுவதில்லை" என மாற்றம் பற்றிக் கூறுகிறார் கவிஞர்.

பதித்தவிதை முளையாகி தளிரா யாகிப்
படர்ந்துவரும் கொடியாகி நுனியில் முத்துப்
பதித்ததுபோல் மொட்டாகிச் சிரித்து நிற்கும்
படர்மணத்துப் பூவாதல் இயற்கை மாற்றம்
குதிகொண்ட நெஞ்சத்துக் குமரி கொய்யக்
குழலேறி அழகுபெறல் அடுத்த மாற்றம்
கதிரோடு வேண்டிநின்ற வண்டுங் கூடத்
தொடர்விரும்பா துதிர்ந்திடுதல் இறுதி மாற்றம்.

இயற்கை மாற்றம் முதல் இறுதி மாற்றம் வரை படிப்படியாகக் கூறுதல் அற்புதம். இதில் ஆங்கிலக் கவிஞர் வொர்ஸ்வொர்த்துக்கு நிகராகின்றார். அடுத்து பருவ மாற்றத்தைக் கூறுவது இதைவிடச் சிறக்கின்றது.

கள்ளமிலாச் சிரிப்போடு கழுத்தைக் கட்டிக்
கைகொட்டி மேல்விழுந்து முத்த மீந்த
வெள்ளையுளச் சிறுபெண்ணா ளொதுங்கி நின்று
மேலாடை சரிசெய்து நிலத்தைப் பார்த்தே
உள்ளத்து மகிழ்ச்சிக்கோர் அணையைக் கட்டி
ஓரத்தில் இதழசைத்துத் தூர நின்று
வெள்ளத்து வாடுகின்ற கொடியைப் போல
விளங்குகின்ற நிலையதுதான் பருவ மாற்றம்.

காலத்தைப் பெண்ணாக உருவகித்து பருவ மாற்றத்தைக் கூறுவதால் அதனைப் படிக்கும் நாம் அடையும் மகிழ்ச்சிக்கோர் எல்லை இல்லை.

அமுதசுரபி, தேனாறு, தமிழ்ப்பணி போன்ற இதழ்களில் வெளிவந்த பாடல்களையும், எதிலும் வெளிவராத பாடல்களையும் தொகுத்து வைத்துள்ளார். அவை வெளிவந்தால் கவிஞர் ச. சவகர்லாலின் பெருமை மேலும் உயரும் என்று கூறி அவர் பற்றிய கவிதையை நிறைவு செய்கின்றேன். இவர் அழகப்ப ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் (1960) என் மாணாக்கராக இருந்தார் என்ற பெருமிதம் எனக்கு என்றுமே உண்டு.

# 11. கவிவேந்தர் கா. வேழவேந்தன்

இவர் சென்னையை அடுத்த செங்கையைச் சேர்ந்தவர். செங்கை மாவட்டத்தில் பொன்னேரி அருகில் ஓரூரில் பிறந்தவர் (1936). தொடக்கக் கல்வி பயின்ற நாள் முதல் தமிழில் ஆர்வமிக்கவராகத் திகழ்ந்தவர். சென்னைப் பச்சையப்பன் கல்லூரியில் பயின்று பி.ஏ.(B.A) பட்டமும், சட்டக்கல்லூரியில் பயின்று பி.எல் (B.L)பட்டமும் பெற்றவர். சிறந்த வழக்கறிஞர். தொடக்ககால தி.மு.க. ஆட்சியில் அமைச்சராகப் பணியாற்றியவர். இளமை முதல் தமிழில் ஆர்வங்காட்டிப் பயின்றதால் கவிதை இயற்றும் பண்பு கருவிலே திருவாக அமைந்தது. இப்போது அரசியலை விட்டு ஒதுங்கி தொழில் நடத்தி வருபவர். 'வேழவேந்தன் கவிதைகள் ', 'தூறலும் சாரலும்', 'வண்ணத்தோகை', 'ஏக்கங்களின் தாக்கங்கள்' என்ற நான்கு கவிதைத் தொகுதி நூல்கள் வெளியிட்டவர். இறுதியாகக் குறிப்பிட்ட நூல் என் பார்வைக்கு வந்ததால் அதிலிருந்து இவர்தம் கவிதைத்திறனை எடுத்துக்காட்ட முற்படுகின்றேன். கவிதை இலக்கணம் நன்கு அறிந்த சிறந்த மரபுக் கவிஞர் என்பதை முதலில் குறிப்பிடுகின்றேன். அகவல், அறுசீர், எண்சீர் ஆசிரிய விருத்தங்கள் புனைவதால் சிறந்த கவிஞராகத் திகழ்கின்றார். பாவேந்தர் பரம்பரையில் ஒரு முதன்மைக் கவிஞராக இருந்து வருகின்றார்.

## 1. தமிழ்ப் பற்று

இவர்தம் தமிழ்ப் பற்றைப் பல்வேறு இடங்களில், பல்வேறு சந்தர்ப்பங்களில் பாடிய கவிதைகளிலிருந்து தெளியலாம். "நாநடனம் ஆடுதற்கே நட்டுவனார் ஆடுகின்ற ஞானத்தமிழ்" என்று தமிழைப் பாராட்டுவதிலிருந்து இதனை முதலில் அறியலாம்.

**1. *கவிதையைப் பற்றி*** : எல்லா மொழிகளிலும் கவிதையே (பாட்டே) முதன்முதலாகத் தோன்றியதாக ஆய்வாளர்கள் கருதுவர். நெல்லால் வயிற்றுப்பசி தீரும், கவிதையால் மூளைப்பசி தீரும் என்பார் வேழவேந்தன்.

*கவிதைஎன்றால் என்னகவிதை? அறிவுத் தோட்டம்*
*கழனிவிதை அவையன்றோ? உழும்பாட் டாளி*
*புவிமண்ணில் விளைவிக்கும் நெல்லால் இங்கே*
*புயப்பசிதான் பறந்தோடும்! கவிப்பாட் டாளி*

சுவைசுவையாய் விளைவிக்கும் கவிதைச் சொல்லால்
சுடர்முளைப் பசியன்றோ நீங்கும் ! நாட்டில்
அவையேறிப் பாடிவந்த புலவர் இன்றேல்
அன்றிருந்த வரலாறும் தெரிவ துண்டா?

இளங்கோ இல்லையென்றால் கண்ணகியின் கற்பும், சாத்தனார் இல்லையென்றால் மணிமேகலையின் மேன்மையும், காளிதாசன் இல்லையென்றால் சகுந்தலையின் அழகும், ஹோமர் இல்லையென்றால் அளவிலாப் பேரழகி ஹெலனைப் பற்றிய வரலாறும் எப்படித் தெரியும்? தெரியாதன்றோ? இன்னும் கூறுவார்.

எங்கேயோ மறைந்திருந்து செவிகள் கேட்க
இசைஎழுப்பும் சில்வண்டைப் பாடு வோன்யார்?
எங்கேயோ வான்முகட்டில் கண்சி மிட்டும்
எழில்மீனைப் பாராட்டிப் பாடு வோன்யார்?
எங்கேயோ ஒளிந்திருக்கும் கடலின் முத்தை
எடுப்பதற்குத் தூண்டியிங்கே பாடு வோன்யார்?
சிங்காரக் கவிஞனன்றோ? அவன்கண் ணோட்டம்
செல்கின்ற தொலைதூரம் சொல்லப் போமோ?

பிறிதோர் இடத்தில் ' செந்தமிழின் சிறப்புக்கோ இனிமை வாயில்' என்பவர், துடிப்பான கவிதைக்கோ கருவே வாயில் ' என்பார். 'தமிழ்க் கவிதை' நமக்கென்றும் தெவிட்டாத பொங்கல் ! ' என்பார் மற்றோர் இடத்தில்.

2. **ஊர்ப்பெயர் மாற்றங்கள் :** ஒரு காலத்தில் தமிழ்ப் பெயரை வடமொழிப் பெயராக மாற்றினார்கள். இது வடமொழிமேல் வந்த மோகம். வேற்று நாட்டார் தம் வாயில் நுழையாத தமிழ்ப் பெயர்களை தம் உச்சரிப்புக்கேற்பச் சிதைத்து வழங்கினர். ஆங்கிலேயர்கள் 'தரங்கம்பாடி'யை 'டிரங்கு பார்க்' என்று வழங்கினர். அதனைச் சீராய்ப்படியாத மாணவன் 'டிரங்கு(பெட்டி) செய்ய இருக்கின்ற ஊர்' என்று சொன்னதாகக் கவிஞர் ஒரு நகைச்சுவையை உதிர்க்கின்றார். தரங்கம்-அலை. அலை வந்து பாடும் ஊர் என்று பொருள் தெரியுமாறு 'தரங்கம்பாடி' என்ற பெயர் வழங்கினதாக விளக்கம் தருவார் கவிஞர்! தூத்துக்குடி 'டூடிகோரி' என்றாயிற்று, பின்னர் பழைய நிலைக்கே மாற்றப்பட்டது. குடுமியாமலை -சிகாகிரி என்றாயிற்று. வில்முனை-தனுஷ்கோடி, ஏழுமலை-சப்தகிரி, திருமறைக்காடு-வேதாரண்யம், மன்னார்கோயில்-மன்னார்குடி என்பனவெல்லாம் பழைய நிலையை எய்திட நடவடிக்கை எடுக்கப்பெறுதல் வேண்டும்.

## 2. இயற்கை

இயற்கையைப் பாடாத கவிஞர்களே இல்லை. ஒவ்வொருவரின் நோக்கிற்கேற்ப, நோக்கத்திற்கேற்ப, வருணனையும் குறிப்பிடும் பொருளும் வேறுபடும். இவை கவிஞரின் ஆளுமையைப் பளிங்கெனக் காட்டும்.

விண்ணில் காணப்பெறும் இயற்கையைக் கவிஞர் வருணிப்பதன் பாங்கைக் காண்போம். சில பாடல்களை ஈண்டுத் தருவேன்.

*இயற்கையெனும் பெருவியப்பே ! மாயச் சித்தே !*
*எத்தனைஎத் தனைக்கோலம் காட்டு கின்றாய் !*
*உயர்வானக் கூடாரம் படைத்தாய் ! அங்கே*
*ஓவியமாய் வண்ணவண்ண முகில்ப டைத்தாய் !*
*வானகத்தின் முற்றத்தை அலங்க ரிக்க*
*வைரப்பூ விண்மீன்கள் பதித்தாய் ! பாவம்*
*தேனிலவை ஏனிங்கே திங்கள் தோறும்*
*தேய்த்துப்பின் வளர்க்கின்றாய்? என்ன கூத்து?*
*ஊனத்தைத் திங்களுக்குச் சேர்க்கும் நீயோ*
*உடல்கதித்த கதிரவனைத் தீண்டல் ஏது?*

இப்பாடல்களில் காணப்பெறும் வானக் காட்சிகளை மனத்திரையில் எழச் செய்து அனுபவிக்கின்றோம்.

*மத்தாப்பு மழைபொழிய வைக்கும் போதோ*
*வைரஒளி மின்னலெனும் தோர ணத்தைக்*
*கித்தாப்பாய்க் காட்டுகின்றாய் ! ஆனால் எங்கோ*
*கிழச்சிங்கம் கத்துதல்போல் இடியைப் போட்டு*
*எத்தனைபேர் விழிகளினைப் பறித்தாய்? மேலும்*
*ஏனிங்கே புயலாகச் சீறு கின்றாய்?*
*கொத்துகொத்தாய் உயிர்களினைப் பறிக்கும் உன்றன்*
*கூற்றுக்கும் தாய்மைக்கும் தொடர்பா உண்டு?*

இது மழை, மின்னல், இடி, ஆகியவற்றைக் காட்டுகின்றது. கூற்றுக்கும் தாய்மைக்கும் உறவு ஏதாவது இருக்குமா என்று வினவுகின்றார்.

*மின்னலெனும் வால்விளக்கே ! மழைப்பி றப்பை*
*விளம்புகின்ற ஒளித்தூதே ! மேகச் சேலை*
*பின்னிநிற்கும் தங்கவண்ணக் கரையே ! நல்ல*
*பேரிரைச்சல் வெடிஇடியின் திரியே ! வாடும்*
*அன்னைமண்ணின் உயிரெல்லாம் சிரிக்க வைக்க*
*ஆடிவரும் பேரொளியே கவிஞர் உன்னை*

'மின்ன'லென்றா அழைத்தார்கள்? உழவர் மான
விதிஎழுத்தே ! நீயன்றோ? மறுப்பும் உண்டா?

எண்ணெய்இன்றி எரிகின்ற கயிறே ! ஓடும்
எலும்பில்லா முகிலுக்கே உணர்ச்சி யூட்டி
மண்ணெல்லாம் பொன்னாக்கும் 'காந்தப் பெண்'ணே!
மழைப்பெண்ணின் திருமணத்து 'மத்தாப் பூ' வே!
கண்சிமிட்டிக் கண்சிமிட்டி மறைவ தேனோ?
கருவுற்ற திருமங்கை மேக மென்னும்
பெண்ணங்கின் உடல்வடிவை முழுதும் காட்டல்
பிழையென்றா மறைக்கின்றாய்? விளக்கம் தேவை !

விடியாதா எனஏங்கும் பயிருக் கெல்லாம்
விடிவெள்ளி நீயன்றோ? ஊசி' யைப்போல்
வடிவத்தை ஏன்பெற்றாய்? வான்மு கட்டின்
வயிற்றினிலே துளையிட்டா மழைக்கொ ணர்ந்தாய்!
பொடியாலே போடுகின்ற கோலம் போலே
பொற்கொடியை யார்வரைந்தார் உன்னை? தேரின்
கடிவாளம் போன்றவளே ! தட்டி விட்டால்
கடும்பஞ்சம் எனும்பகைவர் வீழ்ந்தி டாரா?

எட்டாத தூரத்தில் மயங்கித் தாங்கும்
எருமைகளாம் மேகத்தை எழுப்பு தற்கே
நெட்டிழைபோல் வந்ததொரு 'சூட்டுக் கோலே' !
நெடும்இடிபெண் காற்சதங்கை 'ஒளிப்பி ழம்பே !
கட்டணமே இல்லாமல் வெளிய ரங்கின்
கடைவீதி எரிகின்ற 'சரவி ளக்'கே !
வெட்டவெளிச் சிறகினிலே அடைந்தி ருக்கும்
விண்மழைப்பெண் விடுதலைக்கே 'திறவு கோல்'நீ !

இந்த நான்கு பாடல்களையும் ஆர அமரப் படிக்கும்போது பல்வேறு படிமங்கள் மின்னலைப் போலவே எழுந்தும் மறைந்தும் நம்மை மகிழ்விப்பதை அறியலாம்.

வானம் பற்றிய அற்புதமான பாடல்களில், கவிஞரின் சிந்தனை யோட்டத்தைசிறப்பாகக் காணலாம்.

வானகமே ! வெளியரங்கே ! கட்ட ணத்தை
வாங்காமல் காட்சிகள் ஏன் காட்டு கின்றாய்?
கூனலிளம் பிறைக்காட்சி அளிப்பாய், ஓர்நாள்
குளிர்உமிழும் முழுநிலவை அனுப்பி வைப்பாய் !
கீழ்வான முலையிலே இருள்கி ழித்துக்
கிளம்புகின்ற நெருப்புருண்டைப் பரிதி யாலே
சூழ்ந்துள்ள பனிப்பஞ்சும் எரியும்: உன்றன்
சுடர்த்திரையும் எரிந்திடுமோ? அஞ்சு கின்றோம் !

ஆழ்கடலின் கண்ணாடி மேகந் தன்னை
அருவமென்றே ஏன்சொன்னார்? நிறமே இல்லாச்
சூழ்கடலின் நீருக்கே நீல வண்ணம்
தொகுத்தளித்த உன்றனுக்கா உருவம் இல்லை?

எத்தனைஎத் தனைவடிவில் மேகந் தன்னை
எழுதாத தூரிகையால் எழுது கின்றாய்?
பொத்தலுள்ள குடையாநீ? தூற்ற லாலே
பூமண்ணைக் குளிரவைத்தச் சிரிக்க வைத்தாய்?
கத்துகின்ற இடியெங்கே ஒளித்து வைத்தாய்?
கண்வெட்டும் மின்னலெங்கே மறைத்து வைத்தாய்?
இத்தனையும் மழைப்பெண்ணின் திரும ணத்தில்
எழில்கூட்டும் வாணவெடிக் காட்சி யாமே?

மென்மையுள்ள மாரியினால் பயிரை யெல்லாம்
விழிமூடி அழியாமல் காக்கின் றாயே?
வன்செயல்கள் நிகழ்த்துகின்ற புயலை நீயேன்
வழிகூட்டி அனுப்புகின்றாய்? நீதி தானா?
இன்மணத்துத் தாழையுடன் பூநா கத்தை
இணைத்ததுபோல் இரண்டினையும் இணைத்த தேன்?ஏன்

கண்சிமிட்டும் விண்மீன்கள் எரிந்து வீழும்
காதையினை அடிக்கடிஏன் காட்டு கின்றாய்?
உண்டான இவ்வுடலம் உடுக்க ளைப்போல்
ஓர்நாளில் வீழுமென்றா உணர்த்து கின்றாய்?

பாடல்களில் அற்புதமான படிமங்கள் தென்படுகின்றன. சொல்நயமும் பொருள் நயமும் கைகோத்து ஆடுகின்றன. தமிழ்க் குழைவும் நெஞ்சைக் குழைவிக்கின்றது.

இதுகாறும் விண்ணில் சில காட்சிகளைக் கண்டோம். இனி மண்ணிலும் கவிஞர் காட்டும் சில காட்சிகளைக் காண்போம்.

இதோஇங்கே நீங்கள்நிற்கும் பூமிக் கோளம்
எப்போதும் ஓய்வின்றிச் சுழலா விட்டால்
அதோ அங்கே இரவேது? பகல்தான் ஏது?
அண்டத்தின் உயிர்களுக்கே வாழ்க்கை ஏது?
இதோஇங்கே மலையருவி ஆறாய் மாறி
இளைப்பாற நேரமின்றி நடக்கா விட்டால்
அதோஅங்கே வயற்பயிர்கள் சிரிப்ப தேது?
அன்றாடம் நம்வயிறு நிறைவ தேது?

கவிஞரும் நாமும் இந்தச் சுழலும் உருண்டையான பூமியில்தான் இருக்கின்றோம். பூமி சுழலுவதால் இரவு பகல் உண்டாகின்றன என்பதை விளக்குகின்றார். அருவி ஆறாய் மாறி நடப்பதால் தான் வயல் சிரிக்கின்றது. நம் வயிறும் நிறைகின்றது என்கின்றார்.

அ) பூக்கள் - இயற்கையின் வசீகரமாக இருப்பவை பூக்கள். பூக்களில் எத்தனை வண்ணங்கள் ! ஆண்டுதோறும் உதகமண்டலம், பெங்களூர் போன்ற இடங்களில் ' பூக்கண்காட்சி' நடைபெறுவதைக் கேட்டுள்ளோம், பார்த்தும் மகிழ்ந்துள்ளோம். பூக்களைப் பற்றி ஏழு பாடல்கள் உள்ளன, அனைத்தும் அற்புதமானவை. கவிஞருடைய கற்பனை செறிந்த திறனையெல்லாம் ஒருங்கே காட்டுகின்றன.

பூக்களே ! 'சோலை' எனும் கவிதை ஊரின்
புன்னகைக்கும் 'திருமுகங்கள்' நீங்கள் அன்றோ ?
மூக்குக்கே மணவிருந்து வைப்பீர் : மேலும்
மொய்க்கின்ற ஈக்களெனும் பணியாள் மூலம்
நாக்குக்கும் விருந்துவைக்கத் தேன்ச மைத்து
நல்லுணர்வோ டனுப்புகின்ற பெண்கள் நீங்கள் !
ஆக்கத்தின் 'அரிச்சுவடி' நீங்கள் தானே !
ஆம்குழவி மென்மையினை எங்குப் பெற்றீர் ?

இங்கு மலர்கள் நம் மூக்குக்கும் நாக்குக்கும் விருந்து வைக்கும் அற்புதத்தைக் காண்கின்றோம்.

இந்தப் பூக்கள் பருவத்தின் மாற்றமெல்லாம் காட்டுகின்ற 'பல வண்ணக் கண்ணாடி' ; உருவத்தால் வண்டென்னும் காதலர்க்கு ஒய்யாரத் தூ தனுப்பி அழைக்கின்றன. பல நிறத்தில் 'சாயம்' தோய்த்தே அற்புதமாய் நெய்யப் பெற்றவை. மகளிர் தலையில் 'கிரீடம்' போல் அமைபவை என்று கூறுவார்.

ஒருநாளே வாழ்கின்ற உயிர்கள் நீங்கள்;
ஒப்பற்ற பெருவாழ்வால் உயர்ந்து நிற்பீர் !
திருமணங்கள் முடிக்கின்றீர் பெண்ணும் ஆணும்
திருப்பிஉமைக் கழுத்தணிந்தால் 'மன்றல்' என்பார்;
'பெரும்பயணம்' மனிதஉடல் போகும் போதும்
பிணவாடை தனைமாற்றி மணக்கச் செய்வீர் !

காய்பிறந்து கனிகுலுங்கும் காட்சிக் கெல்லாம்
கவின் மொட்டுச் சாட்சிகளோ நீங்கள் ? காவல்
வாய்விட்டு நீங்களெலாம் நகைக்குத் போது
வரும் 'எழுச்சிக் கற்பனை'யே 'கவிதை' அன்றோ ?
சேய்போன்ற உம்சிரிப்பைத் கண்டு தானே
செழும் 'பாரி' தேர்ந்து நடந்தே போனான்

மனிதர்களின் நரம்போடும் 'குருதி' யெல்லாம்
மணம்வீசி நிற்பதுண்டோ ? ஆனால் உள்ள
பனிமலரின் குருதிஎனும் 'அத்தர்' தானே
பலவகையில் மணக்கிறது ! பிழியும் போதும்

*தனிமணத்தைத் தந்தன்றே மாள்கின் றீர்கள் !*
*தத்துவத்தின் 'பதவுரை'யாய் இருக்கின் றீர்கள் !*
*'அல்லி' என்றும் 'தாமரைகள்' என்று மிங்கே*
*அகிலத்தில் பலபெயரில் தோற்றம் பெற்றீர் !*
*துல்லியநல் 'நிலவோ' னை மணக்கும் அல்லி*
*சுடர்உமிழும் ' கதிரோ' னைக் கண்டு விட்டால்,*
*மெல்லிதழின் முகம்மூடி கற்பைக் காப்பாள்;*
*மிகஉயர்ந்த இப்பண்பை மறப்ப துண்டோ ?*
*எல்லோர்க்கும் மகிழ்வூட்டும் மலர்க ளே ! ஏன்,*
*இறப்பினையும் உடன் சேர்த்தே பிறக்கின் றீர்கள் ?*

அற்புதமான கற்பனைகள். முல்லைக்குத் தேர் தந்த பாரியின் வரலாறு பொருத்தப் பெற்றிருப்பது அற்புதம்! அல்லியின் கற்பு நகைச்சுவையினை நல்கும் கற்பனை.

(ஆ) **மாங்கனிகள் :** முக்கனிகளில் ஒன்று மாங்கனி. இனிப்போடு புளிப்பினையும் இழைத்தே வந்த ஒரு கனி. பழுக்கும்போதே அது தனித்தங்க நிறமெடுத்துத் தகதகக்கும். அதனைத் தொலைவில் கண்டாலும் நுனி நாக்கில் சுவை நீரை ஓட வைக்கும். கவிஞர் கூறுவார்:

*எத்தனையோ பழங்களிங்கே விளைந்த போதும்*
*ஏக்கமுடன் மேல்நாட்டார் ஆண்டுக் காண்டு*
*மெத்தஉனை விரும்புவதேன்? பெருமை யோடு*
*விமானத்தில் பறக்கின்ற மேன்மை பெற்றாய் !*
*தித்திக்கும் மழலையதன் பிஞ்சுக் கன்னம்*
*தீங்கனியே உன்னைப்போல் மென்மை' என்றே*
*முத்திரையைப் பதிக்கின்றார் கவிஞர் எல்லாம்*
*மொத்தத்தில் வசந்தபெண் 'சீ' ரே நீதான் !*

பாட்டை மீண்டும் மீண்டும் படித்தால் மாம்பழத்தை உண்பது போல் இனிக்கின்றது.

(இ) **கோடை :** ஆங்கில முறைப்டி காலப்பிரிவில் நான்கில் ஒன்று, தமிழ் முறைப்படி காலப்பிரிவில் ஆறில் ஒன்று. குளிர் நாட்டிலிருந்து வந்த ஆங்கிலேயர்கள் வெயில் தாங்காமல் கோடையில் தங்குமிடங்களாக ஆக்கப் பெற்றவை. உதகமண்டலமும் கொடைக் கானலுமாகும். கோடையைப் பற்றி எட்டுக் கவிகள், சிலவற்றைக் காட்டுவேன்.

*கோடையே ! மண்ணின் மீது*
*கொதிப்பேற்றும் காலப் பெண்ணே !*

வாடையாம் பனியை நீயோ
வதைக்கின்றாய் வந்த பின்னால்!
காடெலாம் சோலை யெல்லாம்
காய் கனி குலுங்கி நிற்க
வேடிக்கைக் காட்சி காட்டும்
வியப்பான பருவம் நீயே!

பருவத்தைப் பாராட்டுகின்றார். இயல்பான வருணணை.

முத்தனின் மார்பில் மட்டும்
முகிழ்த்திடும் வியர்வை யோட்டம்
மெத்தையில் புரளு கின்ற
வேடப்பர் உடலில் கூட
முத்தாக அரும்பு தற்கே
முழுமுதற் கார ணம்நீ!
தத்துவச் சமத்து வத்தைச்
சரியாகத் தந்தாய்: நன்றி

இந்தக் கிண்டல் கவிதை நளினமான நகைச்சுவையையும் நல்குகின்றது.

உயரத்தே வானில் செல்லும்
ஒளிக்கதிர்க் கரங்க ளாலே
துயரத்து வெப்ப மூட்டிச்
சுடுகிறாய்! ஆனால் குன்றின்
உயரத்தில் உதகை வந்தே
உட்கார்ந்தால் குளிர்ச்சி ஏனோ?
வெயிலிலே கூட இந்த
வேற்றுமை தேவை தானா?

இயல்பான கிண்டல் இது!

காலமும் பனியில் மூழ்கும்
கவின் 'கொடைக் கானல்' தன்னில்
ஏலக்காய் 'ஏர்க்கா'ட் டூரில்
எழில்பூத்த உதகை மண்ணில்
கோலங்கள் மிளிர வைப்பாய்!
கூட்டத்தை ஈர்க்க வைப்பாய்!
சேலத்து மாம்ப ழத்தின்
சீர்ப்பாடும் தூ தும் நீநீ!

விசிறிக்குப் பெருமை சேர்க்கும்
விசிறிநீ! கருமி கூட
தசைவேகா திருப்ப தற்குத்
தன்காலில் செருப்பைப் போட

இசைகின்றான்! காலை ஓரம்
இருக்கின்ற தொழிலா ளிக்கே
அவைபோட வருமா னத்தை
ஆம்நீயே தருவாய் தாயே!

எளிமையான அருமையான பாடல்கள். வருணனையோடு சில செய்திகளையும் சேர்த்துக் கவிதைகட்குப் புதுமெரு கூட்டுகின்றார் கவிஞர்.

ஈ) வானம்பாடி: அழகான பறவையல்ல. இதற்கு மயில் போன்ற எழில்தோகை இல்லை, அன்னத்தின் நடையும் இல்லை, கிள்ளையின் கனிப் பேச்சுமில்லை, மனிதனையே தூக்கிச் செல்லும் பருந்துடலும் இல்லை. ஆனால் இது மக்கள் மனத்தில், எண்ணத்தில், பாராட்டில் நிலையான இடம் பெற்றிருப்பதற்குக் காரணம் என்ன? இதன் சிறு தொண்டையினின்றும் வெளிவரும் ' இதயம் கவரும் பாட்டு ' தான். கவிஞர் கூறுவார்,

முகிலரங்கில் மேடையினை அமைத்துக் கொண்டு
மோகஇசை பாடுகின்ற வானம் பாடிக்
ககனத்துக் கவியரசே! வான கத்தில்
கட்டணம்ஏன் வைக்காமல் பாடு கின்றாய்?
அகில்மணத்தால் மூக்கெல்லாம் மகிழும், உன்றன்
அற்புதத்துப் பாட்டுக்கோ செவிகள் ஏங்கும்,
முகம்சிரித்த மகிழம்பூ சிறிதென் றாலும்
முழுமனத்தைத் தருவதுபோல் இசைக்கின் றாயோ!

கவிஞர் அங்கு வானம்பாடியைக் 'ககனத்துக் கவியரசாகக்' காண்கின்றார். காசு வாங்காத கச்சேரியைக் காண்கின்றார்.

நலம்பாடும் எழிலூற்றே! நீயோ பாட்டால்
நாட்டோரின் நெஞ்சையன்றோ பறித்துச் சென்றாய்?
பலகவிஞர் கற்பனைக்கே விதைநீ யன்றோ?
பறவையெலாம் உன்சிறப்பைப் பெற்ற துண்டா?

கவிஞரின் கற்பனைக்கு வானம்பாடி தான் வித்து என்றதாகக் கவிஞர் கூறுவது அற்புதம். தொடர்ந்து,

நெடுங்காத தூரத்தில் பறக்கும் உன்றன்
நேர்மூச்சோ எங்களுக்கே கவிதை மூச்சு!

என்று முத்தாய்பாகப் பேசுவது மேலும் அற்புதம்.

## 3. சொல் - சிந்தனை விளையாட்டு

ஒரு சில சமயங்ளில் கவிஞர் ஒரு சொல்லை எடுத்துக் கொள்வார், அதில் தம் சிந்தனையைப் பாய்ச்சிக் கற்பனை உலகுகட்கே சென்று விடுவார். சிலவற்றை ஈண்டுக் காட்டுவேன்.

1. வாயில் : இத்தலைப்பில் வரும் ஐந்து பாடல்களும் மிக அற்புதமானவை. சில சிந்தனைத் தெறிப்புக்களைக் காட்டுவேன்.

*சிந்தனைக்கோ உயர்முளை வாயில் மண்ணின்*
*செழுமைக்கோ மழையேதான் வாயில் நல்ல*
*சிந்துநடைப் பேச்சுக்கோ எடுப்பே வாயில்*
*சிங்காரப் பாட்டுக்கோ குரலே வாயில்*

*துடிப்பான கவிதைக்கோ கருவே வாயில்*
*தொல்லையிலா முகத்துக்கோ சிரிப்பே வாயில்*
*நடிப்புக்கோ முகபாவம் வாயில் நல்ல*
*நடனத்தின் வெற்றிக்கோ அடியே வாயில்*
*படிப்புக்கோ அரிச்சுவடி வாயில் உள்ள*
*பசிதானே உழைப்பூரின் முதலாம் வாயில்*

*நூலுக்கோ முகப்புரைதான் நுழைவு வாயில்*
*நுரையருவி ஆற்றுக்கே தொடக்க வாயில்*
*வாலறிவன் முயற்சிக்கோ கேள்வி வாயில்*
*வணக்கந்தான் அடக்கமெனும் பண்பின் வாயில்*
*வேல்வீரர் வெற்றிக்கோ உறுதி வாயில்*
*விஞ்ஞானம் உலகத்தை மாற்றும் வாயில்*

*நடிகைக்கோ விளம்பரமே வாயில் இல்ல*
*நங்கைக்கோ நாணந்தான் பெண்மை வாயில்*
*கடிகார மணிச்சத்தம் கால வாயில்*
*கனிமழலை அன்னைக்கோ இன்ப வாயில்*

*நடுநிலைமை ஒன்றேதான் நீதி வாயில்*
*நாநயம்தான் வாணிகத்தின் வருவாய் வாயில்*
*எடுப்பான ஓழியத்தில் வண்ணம் வாயில்*
*என்றென்றும் வெற்றிக்கோ உழைப்பே வாயில்*

இந்தக் கவிதைகளில் சிந்தனையும் கற்பனையும் கவிஞரின் கூரிய அறிவும் கை கோத்து ஆடுவதைக் கண்டு மகிழலாம்.

2. முகப்பு: இத்தலைப்பின் கீழ் மூன்று பாடல்கள் உள்ளன. மூன்றும் முத்தான மணிகள். மூன்றையும் காட்டுவேன்.

*மின்னல்களே மழைமேக முகப்பு துள்ளும்*
*வெள்ளலைகள் கடற்கிழவன் முகப்பு வீட்டின்*

சன்னல்களே வெளிச்சத்தின் முகப்பு கீழைச்
செவ்வானம் பகலவனின் முகப்பு மங்கைக்
கன்னத்து முத்திரைகள் காதல் வாழ்வுக்
கற்கண்டுக் காவியத்தின் முகப்பு சோழப்
பொன்மகளின் காவியமாம் சிலம்போ தூய
புகழ்பாடும் நெறிக்கற்பின் முகப்பே யன்றோ

கல்வெட்டே வரலாற்றின் முகப்பு ஓடும்
கடிகாரம் காலத்தின் முகப்பு நல்ல
நெல்விளைச்சல் வளவாழ்வின் முகப்பு ஓயா
நேர்உழைப்பே வெற்றிக்கு முகப்பு ஆழ்ந்த
கல்வியொன்றே அறிவுக்கு முகப்பு பாழும்
கர்வந்தான் வீழ்ச்சிக்கே முகப்பு நீண்ட
தொல்காப்பி யப்பெருநூல் தமிழர் வாழ்வின்
சுடர்க்கொள்கை முகப்பென்றால் தவறா உண்டு.

மாம்பூக்கள் இளவேனில் முகப்பு சூடும்
மங்கலநாண் இல்வாழ்வின் முகப்பு நின்று
கூம்பும்கை அடக்கத்தின் முகப்பு வீழும்
குளிர்அருகி மலைப்பெண்ணின் முகப்பு வந்து
தேம்புகின்ற விழிநீரோ நெஞ்சத் துள்ளே
தேக்கிவைத்த துயரத்தின் முகப்பு நாளும்
நாம்போற்றும் திருக்குறளோ அகிலத் திற்கே
நமைக்காட்டும் எழிற்சட்ட முகப்பே என்பேன்

இந்தப் பாடல்களைப் படைக்கும போது கவிஞன் சிந்தனை நிகழ்ச்சிகளைத் திரட்டுவதற்கு என்ன பாடு பட்டிருக்க வேண்டும் என்பதை நினைத்தால் கவிஞரின் சிந்தனை கொடு முடியை எட்டுவதைக் காணலாம்.

3. **பொங்கல் :** இச்சொல் பொங்கல் பண்டிகையைக் குறிக்க்வில்லை எனத் தோன்றுகின்றது. கவிதையில் குறிப்பிடப் பெறும் ஒவ்வொரு நபருக்கும் அல்லது பொருளுக்கும் பொங்கிவரும் எழுச்சியையே குறிப்பதாகத் தோன்றுகின்றது. பாடல்கள் நயச்செறிவுடன் திகழ்பவை. இங்கு மூன்று பாடலையும் காட்டுவேன்.

ஏடெடுத்த கவிஞருக்கோ கற்பனையே பொங்கல்
இசையெடுத்த குயிலுக்கோ இளவேனில் பொங்கல்
பாடெடுத்த உழவனுக்கோ பயிர்ச்சிரிப்பே பொங்கல்
பசியெடுத்த வறிஞனுக்கோ சிறுகவளம் பொங்கல்
நாடெடுத்த சோழனுக்கோ புகழ்ப்பரணி பொங்கல்

நரம்பெடுத்த யாழோசை செவியருந்தும் பொங்கல்
காடெடுத்த அருவியெலாம் ஓவியனின் பொங்கல்
கண்ணெடுத்த காதலுக்கோ கனவுகளே பொங்கல்

செங்கதிரின் ஊர்வலமே தாமரைக்குப் பொங்கல்
சீதளனத்து நிலவுவழி அல்லிக்கே பொங்கல்
நுங்கிதழோ அவனுக்கே அவள்வைத்த பொங்கல்
நுண்ணிடையாள் அவளுக்கோ குழவிமொழி பொங்கல்
தெங்கிளநீர் கோடைதரும் தெவிட்டாத பொங்கல்
தேனடையோ ஈக்கூட்டம் ஆக்கிவைத்த பொங்கல்
மங்காத குறளமும் சான்றோர்க்குப் பொங்கல்
மழைமேக அழகின்உலா கழனிகட்குப் பொங்கல்

இப்பாடல்களைப் படிக்கும் நாம் கவிஞரின் திறனை எண்ணி வியக்கின்றாம்.

## 4. கல்வி

கல்வியைப் பற்றிய கவிஞரின் கருத்து சிறப்பாக அமைகின்றது. அவர் கூறுவார்

எந்நாடு கல்வியிலே ஏற்றம் பெறுகிறதோ
அந்நாடே முன்னேற்றம் அடையும் வளம்பெற்றே

என்று. இந்தக் கல்வி யாருக்கு? மனிதனுக்கு, காரணம் கூறுவார்,

மனிதன் ஒன்றே சிந்திக்கும் விலங்கு, வாழும்
மாடுகட்கும் ஆடுகட்கும் அதுதான் உண்டா?

இல்லை. இந்த இயல்பு கொண்டே மண்ணகத்து விலங்குகளை அடிமை கொண்டான். மனிதன் மட்டிலும் தன் மூதாதையரின் அநுபவங் களையெல்லாம் நூல்கள் மூலம் சேமித்து வைத்துள்ளான். அதனைப் பின்வருவோர் அறிந்து கொள்வதுதான் கல்வியென்பது. மனிதனது மூளையொன்றே இதனை அறிந்து கொள்ளும் திறனையுடையது. அதுவொன்றே சிந்திக்கும் ஆற்றலையும் உடையது. இதனை விளக்கும் போக்கில் கவிஞர் .

வானகத்தில் மின்னல்ஒளி மழையைச் சேர்க்கும்
வையகத்துப் புன்னகையோ மகிழ்ச்சி சேர்க்கும்
தேனிதழாள் காதல்விழி மயக்கம் சேர்க்கும்
தினைக்காட்சி கிளிகளுக்கோ களிப்பைச் சேர்க்கும்
கானகத்தின் அகில்தோப்பு மணத்தைச் சேர்க்கும்
காவிரியின் நடைப்போக்கோ வளமை சேர்க்கும்
சேனைகளின் மானவெறி வெற்றி சேர்க்கும்
சிந்தனையே மனிதனுக்குப் பெருமை சேர்க்கும்

என்ற கவிதையில் தமக்கே உரிய முறையில் விளக்குவார். இன்னம் அவர் கூறுவது, படிப்பறிவே மூலதனம். பட்டறிவும் சேர்ந்தால் அந்த அறிவு மேலும் வளரும். இருபதாம் நூற்றாண்டில் எழுத்தறிவு இல்லாமல் இருப்பது வெட்கம்.

*கல்லாமை எனும்ஆமை காலூன்றி அகம்புகுந்தால்*
*இல்லாமை எனும்ஆமை இல்லத்தில் உடன்நுழையும்*

என்ற உணர்வுடன் விளக்குவார்.

கல்விக்குக் கருவியாக இருப்பவை நூல்கள்.

*புத்தகம் என்றால்என்ன எத்தனையோ புதுப்பொருளை*
*நித்தம் காட்டுகின்ற நெடுமாயக் கண்ணாடி*

என்ற நூலின் தன்மையை விளக்குவார்.

*கால்கள் இலையெனினும் கண்ணால் உலகறிவோம்*
*நூல்கள் இலையென்றால் நுட்பமிகும் அறிவேது?*

என்று மேலும் விளக்குவார்., சிறு வயதில் கல்வி கற்க வாய்ப்பில்லாது போயினும் அறுபதிலும் படிப்பதற்கு ஆயிரம் வழிகள் உள்ளன. எடுத்துக்காட்டாக முதியோர் கல்வித் திட்டம், தொலைதூரக் கல்வித் திட்டம் என்பவற்றைச் சொல்லலாம். கல்விக்கு வயதேது? கற்பதற்கும் நாளேது?

*பொதுஅறிவை நாட்டுதற்கே புத்த கங்கள்*
*மதிவளர்ச்சி நாம்பெற்றால் நிதிவந்து குவியாதா?*

அறிவியல் கல்வியினால் அற்புதங்களைப் படைக்கலாம் என்று அடித்துச் சொல்லுவார்.

"நூல்களே நூல்களே" என்ற தலைப்பில் ஒரு கவிதை நூல்களைப் பற்றி அற்புதமாகப் பேசுகின்றது.

*நூல்களெனும் நண்பர்களே! உலகைக் காட்டும்*
*நுணுக்கமிகு சன்னல்களே காலத் தேரின்*
*கால்வழியின் சுவடுகளைப் படமாய் ஆக்கிக்*
*கண்முன்னால் திரையிட்டுக் காட்டு கின்றீர்*
*வால்அறிவு பெறவேண்டின் நூல்க ளேஉம்*
*மடியினிலே நாங்களெலாம் மூழ்க வேண்டும்.*

நூல்கள் சேமித்து வைக்கப்பெறும் இடம் நூலகம். பள்ளிக்கும் கல்லூரிக்கும் இதயம் போன்றது. இதிலுள்ள நூல்கள் இருப்பவரையும் அறிமுகம் செய்யும், இல்லாத வரையும் அறிமுகம் செய்யும். கவிஞர் வேழ வேந்தன்,

என்றைக்கோ செத்தவரை எங்கள் முன்னாள்
எழுப்பிவந்து நிறுத்திவைத்துப் பேச வைப்பீர்
என்றைக்கோ நிலவினில்யாம் உலவப் போகும்
எழிற்கதையைச் சுவையுடனே எடுத்துச் சொல்வீர்
என்றென்றும் அறிவுமணம் வீசு கின்ற
ஏடுகளே உங்களுக்கு மரணம் உண்டா?

என்று கூறுவர்.

நூலகமே உமைத்திரும்பிப் பார்த்து விட்டால்
நொடிப்போதில் திமிர்வாதம் அடங்கிப் போகும்
காலமெலாம் அழியாத கவிதைக் காட்டைக்
கண்முன்னே வளர்க்கின்ற கழனி நீங்கள்

என்பதாக நூலும் நூலகமும் கல்வியை வளர்க்கும் கழனியாகும் என்பது கவிஞர் வலியுறுத்தும் உண்மை ஆகும்.

தந்தை பெரியார் வழி நடக்கும் பாவேந்தர் வழிவந்தவராதலால் கவிஞர் மூட நம்பிக்கைகளை அகற்ற வேண்டும் என்று பல இடங்களில் பேசுகின்றார். அறியாமையால் சாதிக் கொடுமை நிலவுகின்றது. பகுத்தறிவுச் சமுதாயம் உருவாகும் நாளை எதிர் நோக்குகின்றார்.

செட்டிமகள் செட்டியையே மணக்க வேண்டும்
தேவருக்கும் பிள்ளைக்கும் உறவா என்றே
கொட்டிவரும் சாதித்தேள் கொடுக்கை எல்லாம்
கூறிட்டு நெருப்புவைத்தே சாம்ப லாக்கிப்
பொட்டுக்கும் சாதிஎன்ற சொல்லே இல்லை
பொல்லாத தமிழினம் தான் ஒன்றே என்றும்
பட்டான கருத்திங்கே நிலைத்தி டாதா?

என்ற கவிதையில் இந்த எதிர்பார்ப்பைக் காணலாம்.

இந்த உலகைப் படைத்தவன் ஒருவன் உண்டு, அவன்தான் கடவுள் என்ற கொள்கை அனைவருக்கும் பொதுவானது. சமயம் கண்ட பெரியோர்கள் அனைவருடைய கொள்கைகளும் பின் வந்த குருக்கள்மார்களால் கெட்டு விட்டது. கொள்கை வேறாகவும் நடைமுறை வேறாகவும் உள்ளது.

தாயின்றி ஏழ்மையிலே நீந்தும் பிள்ளை
தவளையைப்போல் பாலுக்குக் கதறும் போது
வாய்பேசாச் சிலைக்குப்போய் தவலைப் பாலால்
மறவாமல் அபிடேகம் செய்யும் முட்டாள்!
தீயசெயல் ஓயாதா? மைல்கல் லுக்கும்
திருநீறும் குங்குமமும் பூசிப்பூசி விட்டால்

போய்த்தேங்காய்ச் சூறையிடும் மடமை மாறிப்
புதுமலர்ச்சி தோன்றாதா?..... .....

இப்படிப் பல்வேறு பட்ட மூடநம்பிக்கை பற்றிமேலும் பேசுகின்றார்.

நல்லோரின் அறிவுரைக்கே மதிப்பில் லாமல்
நடுவீதிக் கழுதையொன்று கத்தும் போதும்
பல்லியொன்று பூச்சிகண்டு முனகும் போதும்
பசியெடுத்த காக்கையொன்று அலறும் போதும்
இல்லாத வியாக்கியானம் பேசிப் பேசி
இருக்கின்ற நேரமெல்லாம் வீண டிக்கும்
பொல்லாத பஞ்சாங்கப் பழமைப் புத்தி
போயொழிந்து மறையாதா? ,, ,,

என்ற கவிதைகளில் கவிஞரின் மூடநம்பிக்கை ஏக்கங்களைக் காணலாம்.

## 6. குறள்நெறியைப் போற்றல்

திருக்குறள் உலகப் பொதுறை, எல்லோரும் ஒப்புக் கொள்ளும் முறைகள் அதில் அடங்கியுள்ளன. சந்தர்ப்பம் வாய்க்கும் போதெல்லாம் அந்த நெறிமுறைகளை வலியுறுத்துகின்றார், வற்புறுத்துகின்றார்

**1. குறள் தரும் குரல் :** இந்தத் தலைப்பில் ஆறு பாடல்கள் உள்ளன. அதில் சிலவற்றைத் தருவேன்.

தனித்தன்மை பெற்ற தாலே
தாரணி மொழியோ ரெல்லாம்
இனியநூல் வள்ளு வத்திற்
கீடுண்டோ என்றே கேட்டார்.

புனித நூல் என்பதால் இவ்வாறு கேட்டார்கள். தவிர, ஈராயிரம் ஆண்டுகளாக எவ்வித விளம்பரமுமின்றி நிலைத்து நிற்கின்றது என்பதும் ஒரு காரணம். சில நூல்கள் அவை தோன்றிய காலத்திற்கு மட்டிலும் பொருந்தும். திருக்குறளோ எல்லாக் காலத்திற்கும் பொருந்துவதாக அமைந்துள்ளது.

வாய்மையின் நன்மை ,தீய
வறுமையின் கொடுமை, பெற்ற
தாயினைப் பெருமை, ஈகை
தருகின்ற சீர்மை, உற்ற
சேயதன் கடமை, கற்கும்
செழுங்கல்விக் கேண்மை, பற்றும்
நோய்க்கான அருமை கூறும்
நுட்பங்கள் ஒன்றி ரண்டா?

என்ற பாடலால் திருக்குறள் நுவலும் பொருளைச் சுருக்கமாக அறியலாம்.

திருக்குறள் நெஞ்சில் ஏறின்
சிறைச்சாலை குறையும் தூய
திருக்குறள் பரவு மானால்
செறுபகை உணர்வு மாயும்
இருக்கின்ற நூல்க ளுக்குள்
இஃதொன்றே பொதுமைச் சட்டம்

என்ற பாடலால் இது பொதுறை என்பதை வற்புறுத்தினார்.

**2. இன்னும் எத்தனை நாட்களோ?:** இத் தலைப்பில் குறள் அறம் காட்டப் பெறுகின்றது.

உள்ளுவவெ லாம்உயர்வாய் இருத்தல் வேண்டும்
ஒழுக்கந்தான் மனிதனுக்கே உயிராம் என்றே
வள்ளுவரும் பலகுறளில் குரல்கொ டுத்தார்
வாய்வலிக்கக் கூறுகின்றோம் ... ...

இக்காலத்தில் திருக்குறள் விளம்பரப் பொருள் ஆகி விட்டது. ஓரளவாவது ஒரு சிறிது அறத்தையாவது பின்பற்றுபவர் அரியராகவே காணப்படுகின்றனர்.

**3. இளந்தளிரே:** இத் தலைப்பில் சிறுவர்கட்கு அறிவுரை கூறும் பாங்கில் கருத்து மொழியப்பட்டுள்ளது.

படிப்பறிவே மூலதனம் குறள்நூல் கூறும்
பண்புகளே உமைக்காக்கும் கேட யங்கள்
துடிப்புமிகு சிந்தனைதான் வாழ்க்கை ஓடத்
துடுப்பாகும், அன்பொன்றே கடவுள், பாழும்
குடி, சூது பொய், களவு பொறாமை என்னும்
கொடும்பேய்கள் உமைநாட விடக்கூ டாது.

நல்ல அறவுரைதான். பிஞ்சு உள்ளம் கட்டாயம் பின்பற்றும்.

4. எங்கே அந்த நாள்? : இத்தலைப்பில் வரும் இறுதிப் பாடல்

பலநூறாம் ஆண்டுகட்கு முன்னே தோன்றிப்
பண்பாளர் போற்றுகின்ற குறள்தான் இந்தத்
தொல்லுலகில் பொதுச்சட்டம் ஆயிற் றென்ற
சுவைச் செய்தி வாராதா? எங்கே அந்நாள்?

என்ற கவிஞரின் ஏக்கம் காணலாம்.

5. வள்ளுவர் வெறுத்த ஒவாப் பிணி: இத்தலைப்பில்

சாகாத முப்பாலால் சட்டம் செய்து
சரித்திரத்தில் தமிழினத்தை உயர்த்தி விட்ட

*பாகான வள்ளுவரை உலகோர் கூடிப்*
*பாராட்டும் காலமிங்கே தூர மில்லை*
*ஏகஇந்தி யாமாந்தர் மனுவை மிஞ்சும்*
*எழிற்குறளைப் போற்றுகின்ற திருநாள் தோன்றும்*
*வேகாத சோறெல்லாம் குதிக்கும் போது*
*வெந்திருக்கும் பானைகளாய் நாம்பொ றுப்போம்.*

எனக் குறளைத் தேசியமாக்கும் அவாவை வெளிப்படுத்துகிறார்.

முடிவாக இந்தக் கவிஞரின் பாடல்களில் அளவு மீறிய தமிழ்ப்பற்று, சொல் நயம், பொருள் நயம் கற்பனை வளம், பொருட் செறிவு நிறைந்த உரைகள், பல்வேறுவகை உள்ளங் கவரும் படிமங்கள் ஆகியவை நிறைந்து திகழ்கின்றன என்று கூறி இவர் புற்றிய கவிதையை நிறைவு செய்கின்றேன்.

# 12. டாக்டர். அர. சிங்காரவடிவேலன்

இவர் சிவகங்கை மாவட்டம், காரைக்குடி வட்டம் கண்டனூரில் 1937இல் பிறந்தார். உயர்நிலைப் பள்ளிப் படிப்பைக் கண்டனூரில் முடித்துக்கொண்டு, அழகப்பர் கல்லூரியில் பயின்று, பி.ஏ. (1858 - பொருளாதாரம்) எம்.ஏ (தமிழ் - 1960) பட்டம் பெற்று, அழகப்பா ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் பயின்று பி.டி பட்டம் (1961) பெற்றார். அழகப்பா ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் மூன்றாண்டுகள் (1961-64) விரிவுரையாளராகவும் அழகப்பா கல்லூரியில் ஒன்பது ஆண்டுகள் (1964-72) தமிழ் விரிவுரையாளராகவும், தேவகோட்டைச் சேவுகன் அண்ணாமலைக் கல்லூரியில் இருபத்து ஆறு ஆண்டுகள் (72-96)தமிழ்த் துறை தலைவராகவும் பணியாற்றி 1996 மே மாதம் ஓய்வு பெற்றவர். இவருடைய நேர்மையையும், திறமையையும் பாராட்டித் தேவகோட்டைக் கல்லூரி நிர்வாகம் இவரை (1974-1991) இக்கல்லூரித் துணை முதல்வராக்கியது.

நான் (1950-60) வரை டாக்டர் அழகப்பர் பயிற்சிக் கல்லூரியில் தமிழ்த் துறைத் தலைவராகப் பணியாற்றிய காலம். 1960 ஆகஸ்டு திருப்பதி திருவேங்கடவன் பல்கலைக் கழகத்தில் தமிழ்த் துறையில் பணியேற்க வேண்டிய நிலை. திரு. சிங்கார வடிவேலன் ஆகஸ்டு முதல்வாரத்தில் பயிற்சிக் கல்லூரியில் மாணவராகச் சேர்ந்தார். 20 நாட்கள்தாம் என் மாணவர். மாணவர்கள் ஒவ்வொருவரையும் தனித்தனியாக அறிந்து கொள்ள முடியாத நிலை, இந்நிலையில் அவர் குறுகிய காலத்தில் என்னைப் பற்றிச் சில பாடல்களைப் பாடி, அச்சிட்டு சூலை 28ல் ஒரு சிற்றுண்டி விருந்துடன் அப்பிரிவு உபசாரப் பாடல்களைப் பாடி வழியனுப்பிவைத்த நிகழ்ச்சி இன்னும் என் உள்ளத்தில் பசுமையாக உள்ளது. அக்காலத்தில் மாணவப் பருவத்திலேயே விரைந்து கவிபாடும் வேந்தாகத் திகழ்ந்தவர் அர.சிங்கார வடிவேலன். அந்தப் பாடல்கள் 20 ஆண்டுக் காலம் என்னிடம் இருந்தன. (1980 வரை) சென்னையில் குடியேறிய போது எப்படியோ தொலைந்து விட்டன. கல்லூரியில் இன்னும் உள்ளன.

பொதுவாகச் செட்டிநாட்டுப் பகுதியில் தமிழுக்கு எக்காலத்திலும் ஏற்றமே. பலர் கவி பாடுவதில் தம் திறமையை வளர்த்துக் கொண்டு

திகழ்பவர்கள். இன்று அவரிடம் பல நிகழ்ச்சிகளில் பாடிய பாடிய பாடல்கள் சுமார் பத்தாயிரம் உள்ளன. அவை வணக்கம் வாழ்த்து, அரங்கம். மழலை. மலர்கள், அஞ்சலி, பிற என்ற தலைப்புகளில் வெளியிடத் திட்டமிட்டுள்ளார்.

'நகரத்தார்' என்ற தலைப்பில் நால்வர் பாடல்கள் நூலாக வெளிவந்துள்ளது. அந்நால்வர்களில் இவர் ஒருவர். தவிர வடவேங்கடமும் திருவேங்கடமும் என்ற ஒரு நூலை (மே,1992) வெளியிட்டு அதனைச் சீர்திருத்தச் செம்மல், அமரர். சொ. முருகப்பாவுக்கு அன்புப் படையலாக்கினேன். வெளியீட்டு விழாவில் அவர்தம் துணைவியார் திருமதி மரகதவல்லி அம்மையார் பெற்றுக் கொண்டார். அந்நூலுக்கு டாக்டர். அர. சிங்கார வடிவேலன் சிறப்புப் பாயிர மாலையாகப் பதினொரு பாடல்கள் பாடியுள்ளார். இவற்றைக் கொண்டு இப்பெருமகனாரைச் சிறந்த கவிஞர் என்பதைக் காட்ட முயல்வேன். ஒரு பானை சோற்றுக்கு ஓரிரு பருக்கைகளைக் கொண்டு பதம் காட்ட முடியுமல்லவா?

'நகரத்தார் குடும்பம்' என்ற தலைப்பில் கவியரசர் கண்ணதாசன் தலைமையில் நடைபெற்ற கவியரங்கத்தில் பேராசிரியர், டாக்டர்.அர.சிங்கார வடிவேலனார் மகளாக நின்று பாடியதில் சில பகுதிகள்.

*தேவகோட்டை என்னும் தெய்வத் திருநகரில்*
*சேவுகனார் கல்லூரித் தினைப்புனத்தில் கவிவிரட்டும்*
*கல்வியென்னும் வள்ளி கைபிடித்த வடிவேலன்*
*புள்ளி மயிலின்றிப் புறப்பட்டு வந்துள்ளேன்*
*சிங்கார வடிவேலன் தேவைக்குத் தக்கபடி*
*சிங்காரி ஆவேன் சிறிது.*

அற்புதமான இந்த அறிமுகம் சிறிய கலிவெண்பாவால் அமைந்து கவியரங்கத்தில் கூடி இருப்போருக்கு மிக்க மகிழ்ச்சியூட்டியிருக்கும்.

சிங்காரி(மகள்)கவியரங்கத் தலைவர் மீதே கண்வலை வீசுகின்றாள்.

*மாப்பிள்ளை விலையேறிப் போன தாலும்*
*மகளாகிக் கவிபாட வந்த தாலும்*
*பூப்படைந்து மாமாங்கம் ஆன தாலும்*
*புதுமனையில் வாழ்வுபெறத் துடிப்ப தாலும்*
*மாப்பிள்ளை போலிருக்கும் தலைவர் ஐயா*
*மனைவியரை விட்டிங்கே தனியாய் வந்தீர்*

வாய்ப்பிருந்தால் இம்மகள்மேல் இரக்கம் காட்டி
மறுதாரம் கொள்கஎன வணங்கு கின்றேன்.

இதில் கண்வீச்சுத் தொடங்குகின்றது. அடுத்த பாடலில் கொஞ்சும் தமிழில் கெஞ்சும் பாவனையில் வேண்டல் விண்ணப்பம் விடுகின்றார்.

வயதாகி விட்டதென நினைக்க வேண்டா
மாநிறமாய் இருப்பதனால் மறுக்க வேண்டா
வயதாகிப் போனாலும் தமிழை நீங்கள்
வாழ்க்கைக்குத் துணையாகக் கொண்டாற் போலப்
புயலாலே சிதறுண்ட பூவைப் போலப்
பொலிவிழந்த அடியேனைச் சாந்தி செய்யும்
வயதாகி விடுமுன்னே மணந்து கொண்டு
மனத்துக்குச் சாந்திதர வேண்டு கின்றேன்.

பலே மகள்தான். வாயுள்ள பெண்தான்., பிழைத்துக் கொள்வாள் போல் தோன்றுகின்றது. சிங்காரி பழங்காலத்துப் பத்தாம் பசலிப் பெண்ணல்ல. மேலும் ஒட்டுகின்றாள் மகள்.

பட்டாலே வையத்தைப் பாலிக்க வந்தவரே
வீட்டாளாய் ஏற்கவென வெட்கமின்றிக் கேட்கின்றேன்
திரண்டிருக்கும் உறுப்பழகில் தினவடக்க ஆளின்றி
இரண்டோடு மூன்றாக ஏற்கவெனக் கெஞ்சுகின்றேன்
மங்கை எனக்கு வயசதிகம் என்பீரா?
அங்கென்ன வாழ்கிறதாம் ஐம்பதுதான் ஆகிறதே
என்நிறத்தை வெறுக்காதீர் எம்பெருமான் நீர்வணங்கும்
கண்ணன் நிறமென்ன? காக்கை நிறந்தானே
ஆடி முடித்த அரசர்நீர் என்றாலும்
பாடிச் சுகந்தருவீர் படுக்கைச் சுகம்வேண்டா!

அற்புதமான கற்பனை. சந்தர்பத்திற்கு ஏற்றவாறு பேசும் மகளின் திறனை வியக்கின்றோம். தொடர்ந்து அவன் தன் அவலத்தைக் கூறுகிறாள்.

நீதி சரியில்லை நினைப்புத் தவறெனினும்
சாதி சரிதானே சமர்த்தேநீ இசைந்திடுக
கரையும் மனமுடையாய் கைகொடுக்க இசைந்தாலும்
முறைகேட்கும் ஆச்சியர்கள் முடிக்க விடமாட்டார்
எவரே தடுத்தாலும் என்வாழ்வில் பொங்கிவரும்
அவலம் உரைப்பேன் அடுத்து.

பார்ப்பனர் வீட்டு மகள் பெறும் துன்பத்திலும் மிகுதியாகவே செட்டிமகள் துன்புறுகின்றாள். திருமணச் செலவு சொல்லி மாளாது. செல்வமில்லாதார்

வீட்டுக் குலமகள் 'முதிர் கன்னி' யாகவே இருக்கும் பரிதாப நிலையைக், கவிஞர்அவலந் தோன்றக் கூறுவார்.

*பாட்டு மகளின்றிப் பாவிநான் நம்குலத்தில்*
*வீட்டு மகளானால் வேதனைக்குத் தாயாவேன்*
*கற்பனையில் ஆகாமல் காட்சி மகளானால்*
*விற்பனைக்கே ஆளாகும் வீதிப் பொருளாவேன்*
*உள்ளத்தால் மகளன்றி உருவத்தால் மகளானால்*
*தள்ளிவிட நாள்பார்க்கும் தாய்தந்தை சுமையாவேன்*

இந்நிலைக்குக் காரணம் கூறிக் கவிஞரே வினா எழுப்பி விடையும் தருகின்றார்.

*மாளாதா செல்வ மனையிற் பிறந்தவர்கள்*
*ஆளாகி மணக்காமல் அலைதற்குக் காரணமென்?*
*நகரத்தார் திருக்குலத்தில் நாலைந்த பெண்பிறந்தால்*
*தகரத் கதவும் தங்காது போய்த்தொலையும்*
*பட்டம் பலவெனினும் பதவி பெரிதெனினும்*
*கட்டுதற்குப் பெண்கள் காத்திருந்தால் நிலைகுறையும்,*
*அடுத்தடுத்துப் பெண்பிறந்தால் அலுமினியக் குவளையில்தான்*
*எடுத்துப் பருக இல்லாள் இசைந்திடுவாள்..............*
*செட்டிக் குலத்தில் செலவென்று சொன்னாலும்*
*பெட்டையெனச் சொன்னாலும் பெயரிரண்டு பொருளொன்றே*

திருமணம் பொருளாதாரத்தில் மாட்டிக் கொண்டு தவிக்கின்றது என்ற நிலையை அற்புதமாகக் காட்டுவார் சிங்கார வடிவேலனார். பொருளாதாரச் சீர்கேட்டிற்குக் காரணம் பர்மாக் கடையெல்லாம் பாய்விரித்துப் படுத்ததேயாகும், இதனையும் கூட்டி உரைக்கின்றார். இளைஞர் சமுதாயமும் இந்நிலைக்கு காரணமாகின்றது என்றும் கூறுவார்.

*இக்கால இளைஞரெல்லாம் இனக்கவர்ச்சிச் சுகத்துக்குப்*
*பக்காவில் பொன்னைப் படியளக்க வேண்டுகின்றார்*
*துடிப்புக்குத் தக்கபடி தோளழகு பாராமல்*
*படிப்புக்குத் தக்கபடி பணத்தளவு பார்க்கின்றார்*
*தன்வீட்டில் ஆச்சிகளைத் தள்ளிவிடும் நெருக்கடியால்*
*பெண்வீட்டில் வாங்குகிற பேரங்கள் பேசுகின்றார்*
*கால அறிவின்றிக் கல்யாணம் செய்வதனால்*
*ஏலப் பொருளாகி இளைஞர்விலை ஏறுகிறார்*
*காளை விலையேற்றம் கன்னியர்க்குக் கல்யாண*
*வேளைவர ஒட்டாமல் வேலியிட்டுத் தடுக்கிறது*

என்று கூறி இரக்கப்படும் கவிஞர் முத்தாய்ப்பாகச் செட்டிக்குலத்துத் திருமகளின் அவலத்தை சுட்டிக் உரைக்கக் கம்பனுக்கும் முடியாது என்று ஒருபோடு போடுகின்றார். மேலும் இந்த அவல நிலைக்கு அழாத நிலையாகக் குறைப்படுகின்றார்., தன்னை மகளாகவே நினைத்துக் கொண்டு பாடுவதால் நாமும் அந்த நிலையை அடைந்து விடுகின்றோம்.

செட்டி குலத்துத் திருமணத்தின் முறையாலே
துட்டுக்கும் கேடாகித் திட்டுக்கும் ஆளானோம்
மாட்டுக்குக் கூட மகளாகப் பிறந்திருந்தால்
நாட்டுக் கிடேரியென நல்லவிலை போயிருப்பேன்
ஆட்டுக்கு நானும் அன்பு மகளானால்
வீட்டுக்கு வந்து விலைகொடுத்துப் பெற்றிருப்பார்
மேட்டுக் குடியென்று மேலான குடியென்றும்
நாட்டார்கள் போற்றும் நகரத்தார் திருக்குடியில்
பெண்ணாக நானும் பிறப்பெடுத்த காரணத்தால்
மண்ணாகி நித்தம் மாளாமல் சாகின்றேன்

இந்த நிலைக்குக் காரணம் என்ன? காலத்திற்கேற்ற முறையை மேற்கொள்ளாமை. "கவிகளாகுவர் காண்குவர் மெய்ப்பொருள்"என்று கம்பன் கூறுவான், டாக்டர் சிங்கார வடிவேலனார் ஒரு கவிஞர் ஆதலால் உண்மையைக் காணுகின்றார், கூறுகின்றார்,

நம்குலம் வாழ வேண்டின்
நம்மனம் மாற வேண்டும்
பெண்குலம் வாழ வேண்டின்
பிள்ளைகள் மாற வேண்டும்
தம்குலம் வாழ வேண்டின்
தம்பியர் திருந்த வேண்டும்
எம்குலம் வாழ வேண்டி
இறைவனை வணங்கு கின்றேன்.

நாம் என்ன முயன்றாலும் நம் உள்ளிருக்கும் இறைவன், பரந்தாமன் பாதை காட்டியது போல் நமக்கு வழிகாட்ட வேண்டும். இதுதான் கவிஞர் காட்டும் நேர்வழி.

**நகரத்தார் பண்பாடு:** என்ற தலைப்பில் திரு ஆவினன் குடியில் அன்னதானச் சத்திரத்தில் 6-2-74 அன்று இரவு 10 மணிக்குக் கவிஞர் டாக்டர்., அர.சிங்கார வடிவேலனார் தலைமையில், பழநிக் கோயில் அருளாடியார், திரு. சுப. பழநியப்பர் முன்னிலை வகிக்க, பாடப் பெற்ற தலைமைக் கவிதையிலிருந்து சில பகுதிகள்.

செல்வர் பலபேரால் செழித்தோங்கி வளர்ந்தவன்நான்
கல்வி மலையின் கழுத்தேறி நிற்பவன்நான்
கையில் ஒருசட்டி காலில் செருப்பில்லை
மெய்யில் கிழிசட்டை மிதிவண்டி எனக்கில்லை
கால்நடைகள் மேய்ந்துவரும் காட்டுவழிப் பாதையிலே
கால்நடையாய் வந்து கல்லூரி கண்டவன்நான்
நடையை வெறுக்காமல் நானன்று கற்றதனால்
நடையில் உயர்தமிழை நாள்தோறும் பாடுகின்றேன்

என்பது கவிஞர் தன்னை அறிமுகம் செய்து கொள்ளும் பகுதி.

நடையுடை பாவனையில் நடத்தும் தொழில்வகையில்
அடையாளம் தெரியாமல் ஆடவர்கள் மாறிடினும்
மாறாமல் செட்டிகளால் மாற்ற முடியாமல்
யாரும் இனத்தியல்பை அறியும் வகைவாழும்
ஆச்சிகளை வணங்குகின்றேன் அவரிடத்தில் சிக்குண்ட
பூச்சிகளாய் வாழ்ந்தவரும் புள்ளிகளை வணங்குகின்றேன்

என்று கூறியவர் தம் நிலையையும் விளக்குகிறார்.

அழகம்மை என்மனைவி அகத்தில் இருந்தாலும்
பழகிப் போய் விட்டதனால் பணிவாய் வணங்குகிறேன்
நகரத்தை விற்றாலும் தன்மனைவி சொற்கேட்டல்
நகரத்தார் பண்பாடாம் நான்மட்டும் விதிவிலக்கா?

என்று தம்மைப் பெண்டாட்டிற்கு அடங்கியவன் என்று நாணப் படாமல் கூறிக் கொள்கின்றார். குடும்பம் நடத்துவதில் இருவரும் கலந்தால்தான் குடும்பம் பல்வகையில் சிறப்புறும் என்பது நடைமுறை உண்மை. பெரும்பாலும் குடும்பம் நடத்துவதிலும் சரி, பிற விஷயங்களிலும் சரி பெண்கள் கூரிய அறிவுடையவர்கள். தாரையின் அறிவுரையை மதிக்காது போருக்குச் சென்ற வாலியின் நிலையை நாம் அறிவோம். எல்லாக் கடவுளர்களுக்குமே தத்தம் மனைவியரைத் தூக்கி வைத்திருக்கும் நிலைகளைக் காண்கின்றோம்.

சிக்கனப் பண்பு என்பது செட்டியார்களிடம் காணும் ஒப்பரிய பண்பாடு. சிக்கனம் வேறு, கஞ்சத்தன்மை வேறு. சிக்கனத்திற்கு எதிரான பண்பு ஊதாரித்தனம்.

அளவறிந்து வாழாதான் வாழ்க்கை உளபோல
இல்லாகித் தோன்றாக் கெடும். *(479)*

என்பது வள்ளுவர் வாக்கு. இதுதான் சிக்கனத்தின் அடிப்படை. கவிஞர் கூறுவார்.

*செட்டாக வாழும் சிக்கனமே நம்முதலின்*
*வட்டிக்கு மேலே வளர்ந்த முதலாகும்*
*தனிவாழ்வில் சிக்கனமும் தான தருமத்தில்*
*பனிமலைபோல் உயர்கொடையும் பண்பாட்டின் தனிச்சிறப்பு*

பெரும்பாலும் எல்லா நகரத்தார்களிடமும் இப்பண்பைக் காணலாம். வள்ளல் அழகப்பர் இதற்கோர் எடுத்துக்காட்டாவார். தருமம் செய்வதற்கு இவ்வளவு தொகை என்று பிரகடனம் செய்து விட்டுப் பிறகு அத்தொகையைச் சம்பாதித்து வழங்கும் பெருந்தகை அவர்.

*மன்னருக்குப் பின்னே மாதேவன் ஆலயங்கள்*
*கண்ணாகிப் போற்றிக் காப்பவர்கள் நம்மவரே*

என்ற உண்மையை இன்றையப் பல கோவில்களில் செட்டி மக்கள் செய்த திருப்பணிகளால் உணரலாம்.

பக்திப் பண்பு மிக்க செட்டிமார்கள் சைவ சமயத்தில் ஈடுபாடு மிக்கவர்கள். அத்தி பூத்த மாதிரி வைணவத்திலும் அவர்கட்கு ஈடுபாடுண்டு. அரியக் குடியில் நிறுவப் பெற்றுள்ளதிருமால் ஆலயமே இதற்கொரு கலங்கரை விளக்கம். சிறப்பாகத் திருமுருகன் ஈடுபாடு மிக்கவர்கள்.

*தலைக்கென்றே ஒருமொட்டை தவறாமல் திருமுருகன்*
*மலைக்கென்றே வைத்திருக்கும் மரபுடையார் நகரத்தார்*
*செய்யும் தொழில்யாவும் தெய்வத்தின் பேராலே*
*செய்வதனால் தம்மினத்தார் சிறப்பாக வாழுகின்றார்*
*ஆதாய வரவெல்லாம் ஆண்டவனின் பெயராலே*
*மீதேற்ற வைத்ததனால் மேன்மை நிலையடைந்தோம்*
*வேலுக்குப் பூசையென்று வீதியெலாம் கமகமக்க*
*ஆளுக்குச் சோறளிக்கும் அன்னமடம் செட்டிமனை*
*கட்டிலுக்கும் கீழே காத்திருப்பாள் மீனாட்சி*
*தொட்டிலுக்கும் கீழே துணையிருப்பார் சொக்கரெனப்*
*பாலூட்டும் பருவத்தில் பக்தியினைச் சிறுவருக்குத்*
*தாலாட்டுப் பாட்டாய்த் தந்தஇனம் செட்டிஇனம்*

என்ற கண்ணிகளினால் செட்டி மக்களின் பக்திப் பண்பினைப் பாங்குறக் காட்டுவார் கவிஞர் சிங்கார வடிவேலனார்.

**விருந்தோம்பல் பண்பு:** நகரத்தார்களின் நாகரிக உச்சியாகக் காணப்பெறுவது.

*செல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்திருப்பான்*
*நல்விருந்து வானத்த வர்க்கு (குறள்–86)*

என்பது வள்ளுவர் வாக்கு. இந்தப் பண்பை அசோக வனத்தில் சிறையிருந்த சீதாப் பிராட்டியின் வாக்கில் வைத்துப் பேசுவான் கம்ப நாடன்.

*அருந்து மெல்லடகு ஆரிட அருந்துமென் றழுங்கும்*
*விருந்து கண்டபோது என்னுறுமோ வென்று விம்மும்*

விருந்தாக வருவோரைச் செட்டியார், 'வாங்க, இருங்க' என்று கூறி வரவேற்பதையும் உடனே ஆச்சி" என்ன சாப்பிடுறீங்க – சூடாகவா, குளிர்ச்சியாகவா' என்று கேட்பதை இன்றும் நாம் காணலாம். நகரத்தில் குடியேறினாலும் நகரச் சாயம் ஏறாமல் இன்றும் ஆச்சிமாரிடம் அந்த உபசரிப்பு மிளிர்வதைக் காணலாம்.

*வாங்க வாங்கவென வரவேற்றத் தடுக்கிட்டுத்*
*தாங்கி விருந்தோம்பல் தருமத்திற் சிறந்தகுணம்*
*இருந்து பொருள்தேடி எழுந்திருக்கும் இலைபோட்டு*
*விருந்தோம்பிச் சுவைப்பதிலே வெல்லத்தைச் சுவைப்பவர்கள்*

என்று விருந்தோம்பல் சிறப்பைக் கவிஞர் பாடுவார்.

விருந்தோம்பலில் செட்டி நாட்டுச் சிறப்பாக வெள்ளைப் பணியாரம் என்று ஓர் அற்புதமான பொருள் பரிமாரப்படும். வேறு எங்கும் காண முடியாத பொருள் இது. வீட்டிற்கு வரும் விருந்தாளிக்கும், திருமணம், சாந்தி போன்ற நிகழ்ச்சிகட்கு வரும் விருந்தாளிகளுக்கும் வெள்ளையப்ப உபசரிப்பு சிறப்பாக தனிப்பட்ட பெருமையுடன் திகழும்.

செட்டியார்களின் முக்கியத் தொழில் கொடுக்கல் வாங்கலாகும். இதில் நாணயம் என்ற பண்பில் உயர்ந்து விளங்கியவர்கள். நாணயத்தால் தொழில் சிறக்கும், நாணயத்தால் தனி மனிதப் பெருமை புனிதமாகப் போற்றப்படும், என் இளமைக் காலத்தில் இப்பண்பால் நான் பெற்ற பெருமையை இன்றும் நினைவு கூர்கின்றேன். அதனால் மேலும் மகிழ்கின்றேன். அதனைப் பன்னி உரைக்கில் பாரதமாக விரியும். இனி செட்டி மக்களின் நாணயத்தைக் கவிஞர் வாக்கில் வந்தவண்ணம் காட்டுகின்றேன்.

*நாநயத்தைச் சோற்றினிலும் நாணயத்தைத் தொழில்களிலும்*
*பாநயத்தைப் போலப் பரவி வளர்ப்பவர்கள்*
*இல்லம் இடிந்தாலும் எந்தநிலை வந்தாலும்*
*சொல்நரையா நாணயமே சொத்திற் பெரிதாகும்*

சீட்டாடித் தோற்றாலும் செலவெழுதச் சொல்லாமல்
நோட்டெழுதித் தந்து தோட்டம் இழப்பவர்கள்

என்ற கண்ணிகளில் செட்டி மக்களின் நாணயத்தைப் பார்க்கலாம் அடுத்து ஆச்சி - செட்டி மகன் உரையாடல் பற்றிச் சுவைபடப் பாடிக் காட்டி நம்மை மகிழ்விப்பதைக் காண்வோம்.

கட்டிவந்த ஆச்சியுடன் செட்டிமகன் பேசுகையில்
கட்டித் தயிராகக் காதல் உறைந்திருக்கும்

என்று காட்சி தொங்குகிறது.

காட்சி 1

'ஏங்கிறேன்' என்று இல்லாளை அவரழைப்பார்
'என்னங்கிறேன்' என்றே இனியபதில் மனையுரைப்பாள்
'தாங்கிறேன்' என்றே சமர்த்தாக அவருரைப்பார்
'சரிங்கிறேன்' என்றே சட்டென்று பதிலுரைப்பாள்

காட்சி 2

கப்பலுக்குப் போகக் காத்திருக்கும் கணவரிடம்
ஒப்பரிய காதல் உரைக்கும் ஒருகாட்சி
ஒருகணக்கு முடிந்தவுடன் ஓய்ந்திருக்கும் செட்டிமகன்
மறுகணக்கும் செல்ல மனக்கணக்குப் போட்டபடி
திண்ணையிலே பாய்விரித்துத் திண்டிலே சாய்ந்திருப்பார்
கண்ணாளன் தனைமறந்து கப்பலேறப் போவதனைச்
சொல்லாமல் ஆச்சி சுறுக்காய்ப் புரிந்துகொண்டு
செல்லமகன் சின்னவனைச் சிணுங்கவிட்டுத் தொட்டிலிட்டு
ஆராரோ ஆரிவரோ ஆராரோ ஆரிவரோ
சீராளா கண்ணே சீமான் திருக்குமரா
யாரடித்தார் ஏனழுதாய் அடித்தாரைச் சொல்லியழு
யாரும் அடிக்கவில்லை ஐவிரலும் தீண்டவில்லை
தானாய் அழுகின்றான் தம்பிதுணை வேணுமென்று
மானான கண்ணை மணவாளன் மேல்விரிப்பார்
அந்தரங்க ஆசைதனை ஆராரோ தாலாட்டில்
வந்திறங்கச் செய்த வக்ணையைப் புரிந்துகொண்டு
செட்டியார் தொலைப்பணயம் சிறிதுநாள் தள்ளிடுவார்
தொட்டில் வரிசை தொடரவழி செய்திடுவார்

என்ற இருகாட்சிகளும் காதல் இரகசியத்தைக் கண்டு மகிழலாம்.

'வட வேங்கடமும் திருவேங்கடமும்' என்ற ஆய்வு நூலை எழுதி வெளியிட்டேன். என்னுடைய நூலில் நானறிந்த பெரியவர்கள், நண்பர்கள், வகுப்புத் தோழர்கள், என்மாணவர்கள் இவர்கள் அணிந்துரை பெறுவதை வழக்கமாகக் கொண்டிருப்பவன். மேற்குறிப்பிட்ட இந்த நூலுக்குச் சிறப்புப் பாமாலை வழங்குமாறு வேண்டியதற்கேற்ப சிங்காரவேலர் ஒன்று வழங்கினார். நூல் அமராவதி புதூர் சீர்திருத்தச் செம்மல், அமரர், சொ.முருகப்பனாருக்கு அன்புப் படையலாக்கப் பெற்று, விழாவில் வெளியிடப் பெற்று, அவர்தம் அருமைத் துணைவியார் திருமதி மரகத வல்லி அம்மையார் திருக்கரதல் நேரில் சேர்ப்பிக்கப்பெற்றது (1992). அப்பாமாலையிலிருந்து சில கவிதைகள்.

எப்போதும் ஏதேனும் எழுதிக் கொண்டும்
எழுபத்தா றகவையிலும் படித்துக் கொண்டும்
ஒப்பாய்வும் உறழாய்வும் செய்து கொண்டும்
ஒருநூறு அடையும்வரை உழைத்துக் கொண்டும்
மப்புடைய கார்முகில்போல் கருத்தைக் கொட்ட
மடிதட்டி முந்துகின்ற என்றன் ஆசான்
சுப்புரெட்டி யாரென்று பெயர்சொன் னாலே
சுறுசுறுப்பும் பேருழைப்பும் துள்ளு மாமே.

அம்பதுக்கும் அறுபதுக்கும் இடைப்பட் டாண்டில்
அழகப்பர் பண்ணையிலே தமிழை நட்டார்
நெம்புகோல் விஞ்ஞானம் கற்ற ஆசான்
நெடுமாலின் திருவருளால் தமிழைச் சேர்ந்தார்
அம்பலத்தில் ஆடாமல் அறைக்குள் ஆய்ந்தே
அறிவுலகப் பல்துறையில் நூல்கள் யாத்தார்
சம்பளத்தை நம்பாமல் ரெட்டி யாரும்
தம்பலத்தை நம்பியுயர் செட்டி யாரே.

அன்னைமொழி அவருக்குத் தெலுங்கென் றாலும்
ஆதிமொழி தமிழ்தன்னில் மேதை யானார்
திண்ணைமொழி தேசமொழி உலக மெங்கும்
திகழுமொழி அனைத்திலுமே தேர்ச்சி மிக்கார்
எண்ணம்மொழி செயல்யாவும் பெருமாள் என்றே
இலக்கியத்தில் ஆழங்கால் படுவ தாலே
கன்னமொழி இனிப்பதுபோல் ரெட்டி யாரின்
கையசைவும் நூலாகிய இனிக்கு தம்மா.

வெறுந்தரையில் குப்புறத்தான் படுத்துக் கொள்வார்
விரித்தபடி பலநூல்கள் உடனி ருக்கும்
குறுந்தொகையும் நெடுந்தொகையும் அணியும் யாப்பும்
கோள்நிலையும் வானிலையும் கூறும் நூலும்
மருந்தியலும் உளவியலும் காதற் பாங்கும்
மடைதிறந்த வெள்ளம்போல் தலையில் நின்று
அருந்துகின்ற பாலாகிக் கையில் பாயும்
அத்தனையும் தேனாகி நூலாய் மாறும்.

என்ற பாடல்கள் என்னை அறிமுகம் செய்யும். அடுத்து, நூல்களை அறிமுகம் செய்யும் பாங்கில்,

ஆழ்வார்கள் பாசுரத்தில் மூழ்கி மூழ்கி
ஆழங்கால் படுவதவர் பிறவிப் பேறு
வாழ்விக்கும் கருவிதரும் விஞ்ஞா னத்தில்
வாய்த்திருக்கும் பேரறிவு கல்விப் பேறு
ஆழ்வாரில் தலைமணியாம் நம்மாழ் வாரை
அருகணைய வாய்த்ததுவோ ஆய்வுப் பேறு
பால்வார்க்கும் தாய்போலத் துறைகள் தோறும்
பலநூல்கள் அவர்யாத்தல் தமிழர் பேறே.

என்ற பாடல் பொதுவாக என்னுடைய பல நூல்களை அறிமுகம் செய்யும்.

அணிந்துரை பெறும் வடவேங்கடமும் திருவேங்கடமும் என்ற நூலை அறிமுகம் செய்யும் பாங்கில்,

வேங்கடத்தை நடுவாக வைத்துக் கொண்டு
வெகுகாலப் பட்டறிவை வழங்கு கின்றார்
வேங்கடந்தான் எம்பெருமான் வாழும் வீடு
வேங்கடமே எனநினைக்க வாய்க்கும் வீடு
வேங்கடத்தான் இலக்கியத்தில் காலம் தோறும்
விளங்குவதை அழகாக விரித்துப் பேசி
வேங்கடத்தான் திருவடியில் சார்த்தும் மாலை
வெகுநேர்த்தி யாய்விளங்கும் இந்த நூலே.

இவ்வொருநூல் படித்தாலே என்ன என்ன
எய்திடலாம் என்பதனைச் சுருங்கச் சொல்வேன்
செவ்வையுறு வாழ்வுவரும், வைண வத்தில்
தெளிவுவரும், ஈட்டுரையின் தேன்கி டைக்கும்
திவ்வியமாம் பிரபந்தத் திரட்டுப் பாலும்
திருமாலின் அருளோடு சேர்ந்து கிட்டும்
ஒவ்வொருசொல் பிழையாக அச்சா னாலும்
உயர்திருமால் சௌலப்பியம் இந்த நூலே

வாங்கியகை பூமணக்கும் இந்த நூலை
 வைத்தஇடம் தேன்மணக்கும் படித்து விட்டுத்
தூங்குகையில் திருமலையான் தென்றல் காற்று
 துளபத்தின் நறுமணத்தை நெஞ்சில் தேக்கும்
ஆங்காங்கே அருள்மணக்கும் திவ்விய தேசம்
 அடைந்தபயன் அத்தனையும் நொடியில் கிட்டும்
பூங்குயிலாய் ஆசானின் புகழைப் பாடும்
 பொற்பேறு மாணவன்என் பிறவிப் பேறே.

என்ற பாடல்கள் அமைகின்றன. அத்தனைக்கும் மேலாக என் மீது கவிஞர் வைத்திருக்கும் பேரன்பைப் பிரகடனம் செய்வது போலவும் பாடல்கள் அமைந்துள்ளன.

பொதுவாகக் கவிஞர் சிங்கார வடிவேலனாரின் பாடல்களில் சொல்நயம், பொருள்நயம், கற்பனை வளம், நகைச்சுவைப் பாணி முதலியவை ஆங்காங்கு பளிச்சிடுகின்றன. திருமங்கையாழ்வாரின் திருமடல்கட்குப் பெருமை சேர்த்த கலிவெண்பா யாப்பும், எண்சீர், அறுசீர் விருத்த யாப்புகளும் இவர் கையாண்டுள்ள யாப்பு வகைகள். இவர்தம் பத்தாயிரம் பாடல்களும் பாங்குறப் பாகுபடுத்தப் பெற்று வெளிவந்தால், இவர் கையாண்ட யாப்பு வகைகள் தெளிவாகி இவர் புலமை வெளிப்படும். புகழும் பாராட்டும் மேலும் கிட்டும் என்று கூறி இவர் பற்றிய கவிதையை நிறைவு செய்கின்றேன்.

# 13. டாக்டர். பு.மு. சாந்த மூர்த்தி

இவர் மதுரை மாநகரைத் தாயகமாகக் கொண்டவர். 1939இல் பிறந்தவர். சௌராஷ்டிர மொழியைத் தாய்மொழியாகக் கொண்டவர். எனினும் தொடக்கநிலை கல்வி முதல் பயின்று தமிழில் பெரும்புலமை எய்தியவர். கவிதை இயற்றும் திறனை வளர்த்துக் கொண்டவர். மதுரைத் தியாகராசர் கல்லூரியில் பயின்று தமிழில் எம்.ஏ. பட்டம் பெற்றவர் (1963). நான் திருப்பதியில் பணியாற்றிய போதும் அதன் பின்னரும் (1977-80) தமிழ் மூதறிஞர் குழுவின் தலைவர் என்ற முறையில் என் மேற்பார்வையில் "கம்ப ராமாயணத்தில் உருக்காட்சிகள் (படிமங்கள்) என்ற தலைப்பில் ஆய்வு செய்து டாக்டர் பட்டம் பெற்றவர். தற்சமயம் மதுரை சௌராஷ்டிரக் கல்லூரியில் தமிழ்த் துறைத் தலைவராகவும், துணை முதல்வராகவும் பணியாற்றி வருபவர்.

1977இல் என் மணிவிழா நினைவாக வெளிவந்த மலருக்குக் கவிதையில் வாழ்த்து அனுப்பியதால் இவர் ஒரு கவிஞர்-சிறந்த கவிஞர் என்ற அடையாளம் கண்டேன். கவிதை நூல் ஒன்றும் வெளியிடவில்லை. மலரில் வெளிவந்த கவிதைகளையும், வேறு சில இதழ்களில் வெளிவந்த கவிதைகளையும் நோக்குவோம் :

மணிவிழா மலரில் "சீராளர் பாதை வளர்க" என்ற தலைப்பில் எட்டெழுத்து மந்திர எண்ணிக்கை போல எட்டுக் கவிதைகள் உள்ளன. அவற்றுள் சில,

*வேங்கடவன் திருவருளால் வினைகள் வென்று*
*வீறுதமிழ் நூலார்ந்த வெற்றிச் செல்வர்*
*ஓங்குபுகழ்த் தமிழாய்வில் உயர்ந்த செம்மல்*
*உள்ளத்தின் நற்பண்பை உணர்த்தும் ஆசான்*
*பாங்கறிந்து செயலாற்றிப் பழகும் நெஞ்சம்*
*பல்லாண்டு வாழ்கவெனப் பாடும் பாட்டில்*
*தாங்குமுளம் தாம்பெற்ற தமிழர் வாழ்க*
*தமிழ்சுப்பு ரெட்டியார்தம் தொண்டு வாழ்க*

*தொண்டுள்ளம் மறவாமல் துலங்கும் பாதை*
*தூயமனச் செம்மலெனத் தோன்றும் வாழ்க்கை*
*கண்டுயர்ந்த ஆராய்ச்சிக் களத்தின் வேந்தர்*
*கனிதமிழின் சாறளிக்கும் குறிஞ்சிக் கோமான்*
*பண்பிற்கோர் காட்டாகப் பழகும் பண்பர்*
*பயன்கூறி ஊக்குவிக்கும் ஆய்வுக் கண்ணர்*

*தண்டமிழின் இனிமையெனத் தழைத்து வாழ்க*
*தனிப்பார்வைப் பேராசான் நெஞ்சம் வாழ்க.*

அருமையான எண்சீர் விருத்தங்கள், கம்பீரமான நடை, இத்தகைய நடையை இராமலிங்க வள்ளலிடம் காணலாம். பாவேந்தரிடமும் கண்டு மகிழலாம். புரட்சி உணர்வைக் காட்டுதற்கு ஏற்றவை.

## 1. சில பொருள்கள்

சந்தர்ப்பங்களுக்கேற்ப வாய்ப்புக் கிடைத்த போது சில பொருள்களின் மீது கவிதைகள் தொடுத்துள்ளார். அவை பற்றி ஈண்டுக் காண்போம்.

நான்கு. இந்த எண் பற்றி ஓர் அற்புதமான கவிதை. முதற் கவிதையில் கூட்டல், கழித்தல், பெருக்கல் என்ற நான்கும் கூறப்பெறுகின்றன.

கொள்ளையெனக் கொடுமையெனக் கொலையும் என்னக்
  கொள்கையெனக் குறியென்னக் கொள்வார் தாமும்
உள்ளமெலாம் ஒன்றாகி உணர்வொன் றாகி
  ஊருக்கும் தெரியாத உறவைக் கண்டு
மெள்ளவரும் மனச்சொல்லை மேலாய்க் கொண்டு
  வேண்டுகின்ற செயலறியத் தருவ தெல்லாம்
உள்ளபடி நான்குசுவர் அறைகள் அன்றோ
  உள்நடக்கும் செயலெல்லாம் உணர்வார் உண்டோ?.

நன்றாக ஓடுகின்ற நலத்தைக் கண்டால்
  'நான்குகால்' பாய்ச்சல்தான் எனச்சொல் கின்றோம்
நன்மைபல காண்பதற்கு நாடி நின்றால்
  'நான்குபேர்' சொல்லக்கேள் எனச்சொல் கின்றோம்
நன்றிமிகு நினைவோடு நாமும் நின்றால்
  'நாலுவார்த்தை' சொல்லீரோ எனக்சொல் கின்றோம்
தவறான வாழ்வதனை முடித்த பின்னர்
  'நாலுபேர்க்கும்' நன்றிபல எனச்சொல் கின்றோம்.

5ஆவது கவிதையில் நான்கு கணங்கள்(வல்லினம், மெல்லினம், இடையினம், உயிரினம்) தேவகதி, மக்கட்கதி, நரககதி, விலங்குகதி நான்கும், ஆசுகவி, சித்திரகவி, வித்தாரகவி, மதுரகவி, நான்கும்

6ஆவது கவிதையில் ஆண்மகனுக்கு அறிவு, நிறை, ஓர்ப்பு, கடைப்பிடி நான்கும்; பெண்மகளுக்கு நாண், மடம், அச்சம், பயிர்ப்பு ஆகிய நான்கும்.

7ஆவது கவிதையில் ஆடகம், கிளிச்சிறை, சாதரூபம், சாம்பூநதம் ஆகிய பொன்வகை நான்கும், கிழக்கு ,மேற்கு, தெற்கு, வடக்கு ஆகிய திசைகள் நான்கும்

8ஆவது பாடலில் கல்லாலின் புடையமர்ந்து தென்முகக் கடவுளிடமிருந்து சனகன், சனந்தரன், சனாதனன் சனற்குமாரன் என்ற பிரமபுத்திரர் நால்வரும், அப்பர், சம்பந்தர், சுந்தரர், மாணிக்க வாசகர் என்ற சமயக் குரவர் நால்வரும், சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற சவமுறை நான்கும் கூறியவர்.,

*நான்கிலே பழமறைகள் காண்ப தாலே*
*நான்குதான் அறிவுக்கு விளக்க மாகும்*
*நான்கினிலே அடியாரைக் காண்ப தாலே*
*நான்குதான் தொண்டிற்கு விளக்க மாகும்*
*நான்கினிலே உலகத்தைக் காண்ப தாலே*
*நான்குதான் வாழ்விற்கும் விளக்க மாகும்*
*நான்கினிலே இறையருளைக் காண்ப தாலே*
*நான்குதான் இறைபயனில் விளக்க மாகும் !*

என்ற கவிதையில் நான்கின் சிறப்பையும் பெருமையையும் காட்டுவர். இதில் கவிஞரின் சிந்தனை கொடுமுடியை எட்டி விடுகின்றது.

**வாசல்:-**' நான் பேசினால்' என்ற பொதுத் தலைப்பில், தெ.பொ.மீ. அவர்கள் தலைமையில் நடைபெற்ற கருத்தரங்கில் இத்தலைப்பில் பாடியது.

*வரலாற்றைப் படைப்பதுதான் கோட்டை வாசல்*
*வளர்மதுரைக் கோர்எல்லை கீழ வாசல்*
*அரசியலில் கட்சிகளே நுழைவு வாயில்*
*ஆடவரும் மயங்குமிடம் விழியின் வாசல்*
*உரங்கொண்ட பேரறிஞர் சமுதா யத்தில்*
*உருவாக்கித் தந்ததுதான் சொர்க்க வாசல்*
*வரவேற்கும் இவ்வாசல் வாழ்க்கை இன்றி*
*வரும்நானோ கல்லூரி வாசல் ஆவேன்.*

இங்கு கவிஞர் காட்டும் பல்வேறு வாசல்களைக் கண்டு மகிழ்கின்றோம்.

*மூன்று;* மூன்றெழுத்துப் பாடல்களில் ஆசான், கல்வி, வாழ்வு, தேர்வு, கடுமை, தெளிவு, வெற்றி, தோல்வி, அழகு, வீரம், காதல், பாசம், அருள், அன்பு, உறவு, தந்தை, அன்னை, அண்ணா, தாத்தா, பாட்டி, தம்பி, அக்கா, தங்கை, மனைவி. மகன் என்ற சொற்களைப் பொருத்தமாகக்

கையாண்டு நகைச் சுவையுடன் கவிதைகளைப் படைத்துள்ளார். விரிவஞ்சி அவற்றை ஈண்டு நான் காட்டவில்லை., இறுதியாக.

தமிழென்னும் முன்றெழுத்துச் சீரணங்கை நல்ல
  தாய்போலக் காத்திருந்த வேந்தர்கள் மூன்றே
தமிழ்தந்த நல்லிசையும் நாடகமும் இயலும்
  தாங்குபுகழ் பெருஞ்செல்வ நற்கலைகள் மூன்றே
தமிழ்வேதம் எனவமைந்த திருக்குறளில் அமைப்பில்
  தவறின்றிக் கொண்டுள்ள பிரிவுகளும் மூன்றே
தமிழ்தழைக்கத் தழைத்திருந்த சங்கங்கள் மூன்றே
  தமிழன்னை புகழ்வென்ற காலங்கள் மூன்றே

'மூன்று' என்ற எண் விளையாட்டும் அற்புதம். எண்தானே எழுத்தை விடச் சிறப்பு?' எண்ணென்ப ஏனை எழுத்தென்ப' என்ற குறளில் எண்தானே முதலில் வைக்கப் பெற்றுள்ளது? மக்கள் மனதில் பதிவதற்குப் பேருந்து, வீட்டு எண், காவலர் பெயர், அணு முதலியவற்றில் எண் குறிக்கப் பெற்றிருத்தல் நினைவு கூர்தற் பாலது.

வேம்பு:- – வேம்பு பற்றி ஆறு பாடல்கள் அற்புதமாக அமைந்துள்ளன. இயன்றவரை பாடல், பாடற்பகுதிகளை ஈண்டுத் தருகின்றேன். பெரும்பாலும் அவை வேம்பு தரும் பயன்களாகவே அமையும்.

சலசலக்கும் காற்றாடிக் கைக ளாலே
  சாலையிலே நிழல்விரிக்கும் நல்லோர் நாமே
உலகத்துக் கண்களிலே தெரியும் பேய்மை
  உள்ளங்கள் தஞ்சமுறும் இல்லம் நாமே
பலர்வாழ எமையளித்து வாழு கின்றோம்
  பயனதனால் வளர்மெழுகு வத்தி நாமே

வெம்புகின்ற உள்ளத்தின் நன்மை காட்டி
  விரைகின்ற நோய்போக்கும் விருப்பத் தாலே
நம்பிக்கைச் சின்னங்கள் தாமும் நாமே
  நாடெல்லாம் மாரியம்மை விசிறி நாமே

இல்லங்கள், சாலைகள், தோட்டங்கள், தோப்புகளில் அணி செய்யும் வேப்ப மரங்களின் பயன் சொல்லி முடியாது. மக்கள் பெருவாரியாகப் பயன்படுத்தும் 'நீம்சோப்பு' வேப்பெண்ணய்யால் தயாரிக்கப்பட்டது. வேப்பம் பிண்ணாக்கு செடிகளுக்கு நல்ல உரமாகும். இத்தகைய வேம்புக்கு முக்கியத்துவம் தந்து இலக்கியமாக்குகின்றார்,

டாக்டர் சாந்த மூர்த்தி.

உலை:-- இது கவிதையில் பல பொருளில் இடம்பெற்றுப் படிப்போருக்கு மகிழ்ச்சியைத் தருகின்றது.

செய்தமைத்த யந்திரத்தின் உலையெல்லாம் சிலநாளே
பொய்யான உலையாகிப் பொசுங்கிவிடும் சிலபோதில்
வெய்யமன உலையொன்றின் விளைவெல்லாம் பலநாளே
எய்தகணைப் பயனாக்கி எழுந்துவரும் எப்போதில்

பொருள்பெற்ற இருள்நெஞ்சம் பொறாமைத்தீப் புகைச்சலாலே
திருவுற்றார் தமைக்கெடுத்தல் உலைவைக்கும் திமிராகும்
இருளுக்குள் இருளாகி உலையேந்திச் செல்கின்றார்
வருநாளில் உலைக்குள்ளே மாய்ந்திடுவார் வரலாறு

ஊர்வாயும் உலைவாயும் தந்தகதை ஏராளம்
யார்வரிலும் இருவாயும் சொல்லுமொழி ஏராளம்
சீர்மையெலாம் சிறகடித்து மாய்ந்தெங்கோ செல்லுமென்றால்
ஊர்வாயும் உலைவாயும் உடன்தோன்றும் அவ்விடத்தில்

உலைகூறும் வரலாற்றின் உண்மைகளில் பொய்யில்லை
உலைபாடும் பண்களிலே பொய்யான இசையில்லை
உலைநடத்தும் சமுதாயம் உருவாகும் திருநாளில்
உலைவைப்பார் இலையாவர் அந்நாளும் உடன்வருக

கண்ணீர்:-- ' ஏழை உகுத்த கண்ணீர் கூரிய வாளொக்கும்' என்ற பழமொழியைக் கேட்டுள்ளோம். நீலி வடித்திட்ட கண்ணீர், முதலை வடித்த கண்ணீர் என்றெல்லாம் கேள்வியுற்றோம். பேராசிரியர் சாந்த மூர்த்தி அவர்கள் செல்வக் கண்ணீர், குழந்தைக் கண்ணீர், இளமைக் கண்ணீர் முதுமைக் கண்ணீர், வறுமைக் கண்ணீர், காதற் கண்ணீர், உதவாக் கண்ணீர், உழைப்புக் கண்ணீர், மருட்கைக் கண்ணீர், உவகைக் கண்ணீர், உயிர்ப்புக் கண்ணீர், அன்பின் கண்ணீர், தாய்மைக் கண்ணீர், உணர்வுக் கண்ணீர், வாழ்த்துக் கண்ணீர் என்று பல்வேறு கண்ணீர் வகைகளைத் தம் பாடல்களில் காட்டுகின்றார்.

தாலாட்டும் பாட்டுக்குத் தலைய சைத்துத்
　　தவழ்கின்ற சிறுநாளில் குழந்தைக் கண்ணீர்
காலத்தின் புத்துணர்வைக் காணும் போது
　　காளையர்க்குத் தோன்றுவதோ இளமைக் கண்ணீர்
தோலெல்லாம் சுருங்கிடவே தோன்றும் போது
　　துளித்துளியாய் விழுவதெல்லாம் முதுமைக் கண்ணீர்
ஓலமிட்டுப் பிறரழுது துடித்துப் போக
　　உருவாதல் உயிர்சாவுக் கண்ணீ ரன்றோ !

*மண்ணுலகில் பிறந்தபயன் காணா வண்ணம்*
*மடிந்துபோகும் நாள்மட்டும் உழைத்து ழைத்துப்*
*பன்னலமும் நலஞ்சான்ற பயனும் இன்றிப்*
*பாட்டாளி சிந்துவதோ இரத்தக் கண்ணீர்*
*குன்றுகின்ற வயதினராய்க் கூன டைந்து*
*குறைபட்ட உளத்தினராய் வாழ்வோர் தாமும்*
*என்றென்றும் நிலைகலங்கி இருக்கும் போதோ*
*எழுத்தாகும் அவர்சிந்தும் உழைப்புக் கண்ணீர் !*

*உருவாகும் கண்ணீர்கள் பலவென் றாலும்*
*உண்மையதன் கண்ணீரே வெற்றி காணும்*
*திருநாட்டின் உயிர்காப்போர் கண்ணீர் யாவும்*
*தெளிவான வரலாற்றுக் கடலாய் ஓடும்*
*அரும்நூல்கள் விடுகின்ற காலக் கண்ணீர்*
*அன்றாடம் படித்தறியும் பாடம் என்றால்*
*ஒருநாளும் அதைக்கொள்ளத் தயக்கம் இல்லை*
*ஒளிமிக்க எதிர்காலம் வாழ்த்தும் அன்றோ !*

இவை யாவும் அற்புதப் பாடல்கள், படிப்போர் கண்களைக் குளமாக்கும் பான்மையுடையவை, இன்னும் காலம் இடம் கருதி ஆறு பாடல்களைக் கூறாமல் விட்டோமே என்று என் கண்ணீர் ஆறாகப் பெருகுகின்றது. நீலிக் கண்ணீர் வடிக்க முடியாதவர்களையும் இப்பாடல்கள் கண்ணீர் வடிக்கச் செய்துவிடும்.

## 2. சான்றோர்கள்

சுந்தர மூர்த்தியின் திருத்தொண்டத் தொகை கலங்கரை விளக்கமாய் நின்று பின் வருவோரெல்லோரையும் ஆற்றுப் படுத்தும் பான்மையுடையவை. ஆதலால் கவிஞர் சாந்த மூர்த்தி சில சான்றோர்களைத் தம் கவிதைகளில் நினைவு கூர்கிறார். அவர்களைக் காண்போம்.

காந்தி அண்ணல்:- இந்த நாட்டுத் தந்தை பற்றி ஐந்து பாடல்கள் 'அண்ணல்' என்ற தலைப்பில் உள்ளன. அவற்றில் ஈண்டு ஒன்று தருவேன்.

*வாய்மைக்கோர் வடிவாகி வாழ்ந்த அண்ணல்*
*வரலாற்றில் அமைதிக்கோர் எடுத்துக் காட்டு*
*நோய்கண்ட திருநாட்டின் அவலம் நீக்க*
*நொடிப்போதும் தளராமல் உழைத்த செம்மல்*
*தாய்ப்பாச அன்பாலே மக்கள் நெஞ்சில்*
*தமிழ்போல என்றுமுள உண்மைச் செல்வர்*

வாய்த்திட்ட இந்நாட்டின் நினைவுத் தந்தை
வழிதந்த இவரன்றோ காந்தி அண்ணல் !

இராஜாஜி:- - இப் பெருமகனாரைப் பற்றி ஐந்து பாடல்கள் பாடியுள்ளார் கவிஞர் சாந்த மூர்த்தி. இவையும் எண்சீர் ஆசிரிய விருத்தங்களே. இவை மூதறிஞர் என்ற தலைப்பில் வெளிவந்துள்ளன.

உரங்கொண்ட துணிவுடனே உயர்ந்த பண்பர்
உளமார்ந்த பேரன்பில் வாழ்ந்த நெஞ்சர்
சுரந்திட்ட காப்பியங்கள் இரண்டின் இன்பம்
சுவைத்தமிழில் அமுதாக்கித் தந்த சொல்லர்
கரவறியாத் திருக்கோயில் இறையைக் கண்டு
கைகூப்ப அரிசனங்கள் தம்மை அன்பில்
புரவலராய் உடனழைத்துச் சென்ற தூயர்
புகழ்பாடும் மூதறிஞர் இவரே யாவார்

சென்னைநகர் தமிழ்நகராய்ச் சிறப்ப தற்குச்
செம்மாந்த இராஜாஜி துணிவே சான்று
தொன்மைக்குள் வாழ்கின்ற நினைவிற் கெல்லாம்
தூயமன இராஜாஜி வழியே சான்று
நன்மைமிகு ஆங்கிலத்தின் இருப்பிற் கிங்கே
நாளென்றும் இவர்பெயரே சான்றாய் நிற்கும்
நன்றன்றால் தம்கருத்தை மாற்றிக் கொண்டு
நடந்தவர்தாம் மூதறிஞர் என்ப துண்மை !

இராஜாஜி அரசியல் ஞானி. அவர் அரசியல், கல்வியில், இலக்கியம் முதலிய பல துறைகளில் ஆர்வமுடனும் பெருமிதத்துடனும் நேர்மையுடனும் பணியாற்றித் 'தம் புகழ் நிறீஇத் தாம் மாய்ந்த' பெரியார்களுள் ஒருவராய்த் திகழ்கின்றார். முரண்பாடுகளைக் களைந்து ஒருமைப்பாட்டை நிலை நிறுத்த வல்ல ஒப்பற்ற செயல்வீரர் என்று தமிழர் நெஞ்சில் நினைவுச் சின்னமாகத் திகழ்கின்றார். என்னுடைய 'அணுக்கரு பௌதிகம்' என்ற மொழியாக்க நூலுக்கு அணிந்துரை அருளி ஆசி கூறியவர் இப் பெருமகனார்(1958)

வெண்தாடி வேந்தர்:- - இத்தலைப்பில் தந்தை பெரியாரைக் குறிக்கும் ஐந்து பாடல்கள் உள்ளன. ஐந்தும் எண்சீர் ஆசிரியப் பாக்கள்.

செங்கதிரோன் ஒளிகாட்டும் முகத்தின் செம்மை
சீர்குலைவை நீக்கவரும் அகத்தின் செம்மை
பொங்கிவரும் பகுத்தறிவில் பொன்னி வெள்ளம்
போற்றுகின்ற நெறிகளிலே இமய உள்ளம்

எங்குமுள இயற்கைபோல் மழலைப் பேச்சால்
எம்மருங்கும் நடமாடி உழைத்த நல்லார்
இங்கிவரே வெண்தாடி வேந்தர் என்றால்
இவர்தானே பெரியாரென் றுரைக்கும் நாடும்

உழைக்காமல் கதைபேசும் மாந்தர் போக்கை
உளமார வெறுத்ததினால் பெரியார் ஆனார்
தழைக்கின்ற நாடாகக் காண வேண்டித்
தம்முழைப்பைத் தந்ததனால் பெரியார் ஆனார்
இழைக்கின்ற நம்பிக்கைக் கொடுமை மாற்ற
எவ்விடத்தும் உரைத்ததனால் பெரியார் ஆனார்
அழைத்திட்ட பகுத்தறிவில் உள்ளம் தந்தால்
அகங்களிக்கும் நல்வாழ்வே மலர்ந்து தோன்றும்.

மூதறிஞர் இராஜாஜியும் தந்தை பெரியாரும் - வடதுருவம்-தென்துருவம் போல் கொள்கை வேறுபாட்டால் இருந்த இவர்கள்-உயிர்மெய் எழுத்துப்போல இணைந்திருந்ததை நாடு நன்கு அறியும்.

காமராசர் :- 'பெருந்தலைவர்' என்ற தலைப்பில் ஐந்து பாடல்கள் உள்ளன. அனைத்தும் எண்சீர் ஆசிரியவிருத்தப் பாடல்கள்.

எல்லார்க்கும் கல்விநலம் காண வேண்டி
எவ்விடத்தும் எழிற்கல்விக் கூடம் கண்டார்
எல்லையிலா மகிழ்ச்சிக்குள் இதயம் தந்தார்
எப்பூசல் என்றாலும் தீர்க்கும் நெஞ்ச
வல்லமைக்குள் சிறந்ததால் மக்கள் நெஞ்சில்
வாழ்த்தாகப் பெருந்தலைவர் என்றே வாழ்ந்தார்
நல்லாரின் நாயகராய்க் காம ராசர்
நாடெங்கும் வாழ்கின்ற தலைவர் ஆனார்.

மன்னவரை உருவாக்கும் மன்னர் என்றே
மாநிலத்தார் போற்றுகின்ற போதும் வாழ்வில்
என்றென்றும் பற்றின்றி வாழ்ந்த நெஞ்சால்
எல்லார்க்கும் மன்னர்ஆனார் காம ராசர்
கன்னலெனும் தமிழின்பம் மழலை யாகக்
காண்பதன்றோ காமராசர் மொழியும் பேச்சும்
அன்பிற்குள் வெளிச்சமாய்க் காம ராசர்
அளித்தவெலாம் தொண்டன்றி வேறென் னென்போம்!

இந்த இரண்டு பாடல்களும் பெருந்தலைவர் காமராசரையும் அவர் ஆற்றிய நற்றொண்டுகளையும் செல்லோவியமாய்ப் படம் பிடித்துக் காட்டுகின்றன.

காயிதே மில்லத் இசுமாயில்:-- இவரைப் பற்றிப் பண்பாளர் என்ற தலைப்பில் ஐந்து பாடல்கள் வெளிவந்துள்ளன.

உருவத்தில் எளிமைதரும் பண்புத் தோற்றம்
உள்ளத்தால் உரங்கொண்ட நினைவுச் செம்மை
திருமறையின் வழிபேணும் அறத்தின் வேந்தர்
தென்னாட்டில் இசுலாத்தின் முழுமைச் செல்வர்
அருட்பார்வை கொழிக்கின்ற அன்புப் பாதை
ஆண்டவனின் வழியென்றே கூறும் கோமான்
திருவாளர் காயிதே மில்லத் என்றால்
தெரிகின்ற இசுமாயில் வடிவே தோன்றும்

இன்றையப் பேச்சுக்குரிய எந்தக் கவிஞர் கவனத்திற்கும் வராத இசுலாமியப் பெருமகன் கவிஞர் சாந்த மூர்த்தியின் கவனத்திற்கு வந்து பாடல் பெறுகின்றார். சென்னை அரசு பெண்கள் கல்லூரியின் பெயரை, "காயிதே மில்லத் அரசு பெண்கள் கல்லூரி" என்று பெயரிட்டுப் பெருமைப் படுத்தியுள்ளது தமிழக அரசு. செத்தும் கொடுத்த சீதக்காதிக்குப் பின்னர் இவர் திருநாமம் வரலாற்றில் இடம் பெறுகின்றது.

பேரறிஞர் அண்ணா:-- 'பேரறிஞர்' என்ற தலைப்பில் அண்ணாவைப் பற்றி ஐந்து பாடல்கள் உள்ளன. ஐந்தும் எண்சீர் விருத்தங்களேயாகும்.

தம்பிக்கு மடலெழுதித் தமிழின் போக்கில்
தனித்தன்மை தந்தவரே அறிஞர் என்று
செம்மாந்து சொல்கின்ற சிறப்பின் தூயர்
செந்தமிழர் மேடையிலே பொலிவு தந்து
நம்பிக்கைச் சின்னமென வாழ்ந்த நல்லார்
நடைமெலிந்த சமுதாயக் குலைவை எண்ணி
வெம்பித்தான் திருத்துதற்கு விழைந்த வீரர்
வீறுமொழிப் பேரறிஞர் அண்ணா ஆவார்

தென்னாட்டுப் பெர்னாட்ஷா என்றே கல்கி
தேர்ந்துரைத்த மொழிக்குள்ளே ஆற்றல் தந்தார்
அன்பாகத் தமிழ்நாடு பெயரைக் காண
ஆருயிரின் துயர்மறந்து வாழ்ந்த செம்மல்
நன்றான குறளின்பம் மேலை நாட்டார்
நன்குணரப் பல்கலையில் கழகம் தன்னில்
சென்றுரைத்த சிறப்பெல்லாம் அமெரிக் காவின்
சிறந்த 'ஏல்' கழகம்தான் சொல்லு மன்றோ !

இந்த இரண்டு பாடல்களால் அறிஞர் அண்ணா தமிழ் மக்கள் மனத்திரையில் நிலையாக அமர்கின்றார்.

பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர்:-- தென்பாண்டிச் சிங்கம் என்ற தலைப்பில் ஐந்து பாடல்கள் உள்ளன. அவற்றில் மூன்றைத் தருகிறேன்.

*தென்பாண்டிச் சிங்கமெனச் சிலிர்க்கும் நெஞ்சம்*
*தெய்வீக வளமுரைக்கும் இமயத் தோற்றம்*
*குன்றுடைக்கும் ஆற்றலினைக் கொடுக்கும் சொல்லால்*
*குற்றத்தின் பரம்பரைதான் என்ற பொய்யை*
*முன்மறுத்து வென்றிட்ட வாகைச் செம்மல்*
*முத்துராம லிங்கமெனும் மறவச் செல்வம்*
*அன்பாகத் தேவரென அழைக்கப் பெற்ற*
*ஆன்மீகர் பசும்பொன்னின் தேவ ராவார்*

*சிங்கமெனச் சிலிர்ப்பூட்டும் பேச்சுத் தந்தால்*
*சிறுகுழந்தை உளம்கூட வீரம் கொள்ளும்*
*அங்கமெலாம் துண்டித்து நின்ற போதும்*
*அயர்வடையாப் போர்வீரர் நெஞ்சே கொண்டார்*
*பொங்கிவரும் காவிரியாய் வீரம் கொண்டு*
*புறப்பட்டால் இவராற்றல் வெல்வா ரில்லை*
*மங்காத புகழ்கண்ட மறவர் கோமான்*
*மாவட்டப் பெயர்தாங்கும் நீர்மை கண்டார்*

அற்புதமான எண்சீர் ஆசிரிய விருத்தங்கள். உண்மையிலே தென்பாண்டிச் சிங்கத்தை இவை சொல்லோவியமாகக் காட்டுகின்றன. தென்னாட்டில் 'தேவர்' என்றால் முதல் தேவர் 'திருவள்ளுவர்' (தேவர் குறளும்) இரண்டாவது தேவர் சிந்தாமணி தந்த திருத்தக்க தேவர். மூன்றாவது தேவர் முத்துராமலிங்கத் தேவரைக் குறிக்கும். அண்மையில் ஒரு மாவட்டமே (இராமநாதபுரத்தைப் பிரித்து) இவர் பெயரால் ஏற்பட்டுள்ளது. அவ்வளவு ஏன்? நான் இன்று நின்று பேசுவது பசும்பொன் தேவர் மாவட்டத்தில்தான். 'பசும்பொன்' என்பது தேவர் பிறந்து வளர்ந்த ஊர். இவரைப் பற்றி இரண்டு நிகழ்ச்சிகள் நினைவிற்கு வருகின்றன.

நிகழ்ச்சி 1:-- 1950 களில் நான் அழகப்பர் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் பேராசிரியனாக பணியாற்றிய பொழுது அண்மையிலுள்ள அழகப்பா கலைக் கல்லூரியில் பசும்பொன் தேவர் தாயுமானவர் பற்றிச்

சொற்பொழிவாற்றுகின்றார். நெற்றியில் திரு நீற்றுப்பட்டை. கடல்மடை திறந்தது போல் சொற்பெருக்கு, மேட்டூர் அணையில் நீர் வழிவது போல், சொற்பிரவாகம் அவர் திருவாயினின்றும் புறப்பட்டு வழிகின்றது. தாயுமான அடிகள இங்கு நின்று பேசுவது போன்ற தோற்றம். எதிரில் மாணாக்கர்களும், ஊர்ப்பெரு மக்களும் கடல்போல் திரண்டிருக்கும் காட்சி. பேச்சின் இறுதிக் கட்டத்தில் மழை எதிர் பாராதா வண்ணம் கொட்டோ கொட்டு என்று கொட்டுகிறது. மழையைக் கண்டு அஞ்சாமல், மக்கள் கலையாமல் மழைப்பெருக்கில் நனைந்து கொண்டே சொற்பெருக்கில்-தாயுமானவர் தத்துவத்தில் ஆழ்ந்து செவிமடுக்கின்றனர். தேவரும் மழை காரணமாகப் பேச்சை நிறுத்தவில்லை. திறந்த வெளிக் கூட்டமாதலால் மழைப்பெருக்கில் நனைந்து கொண்டே சொற்பெருக்கு அவருடைய திருவாயினின்றும் வழிந்து கொண்டிருக்கின்றது.

நிகழ்ச்சி:- 2 - இராமநாதபுர மாவட்டத்தில் இரு சாதியாரிடையே போர். தேவர் கைது செய்யப்பட்டு புதுக்கோட்டைச் சிறையில் அடைக்கப் பெறுகின்றார். சில வீரர்கள் அவரைச் சிறையில் சந்தித்து, "உத்தரவு கொடுங்கள், நாங்கள் கதராடையினை அணிந்து, " அந்த மூவரையும்" தலைமைச் செயலகத்தில் தீர்த்துக் கட்டி நாங்கள் மரண தண்டனையை ஏற்கின்றோம்" என்று கூறி அவர்களைத் தடுத்து நிறுத்திய வள்ளல் பெருமான், கனவிலும் பயங்கர வாதத்தை விரும்பாத உத்தமர்.

## 3. கவிஞர்கள்

கவிஞர் சாந்த மூர்த்தி இரண்டு கவிஞர்களைப் பற்றியும் பாடியுள்ளார்.

பாரதியார்:- - 'மக்கள் கவிஞர்' என்ற தலைப்பில் ஐந்து பாடல்கள். அவற்றில் ஈண்டு இரண்டைத் தருகின்றேன்.

சிந்துக்குத் தந்தையெனப் பாடும் தேனீ
  செந்தமிழின் புதுமைக்குள் வாழும் பாடல்
சந்தங்கள் பாட்டிசைத்த கவிதை மன்னர்
  சங்கத்து மொழிச்சுவையில் திளைத்த நெஞ்சர்
வெந்துயரின் கொடுமைகளைக் கண்டு கண்ணீர்
  விடும்பாடல் குவித்திட்ட பாட்டுக் குன்றம்
சிந்தைக்குள் தமிழெண்ணிக் கனிந்த வேந்தர்
  சீர்பரவும் பாரதியார் மக்கள் செல்வம்

சிறைக்குள்ளே துன்புற்றோர் கொடியோர் நாளில்
செக்கிழுத்துத் துயருற்றோர், சேய்மை நாட்டில்
குறைவளர இன்னலுற்றோர், கரும்புத் தோட்டக்
கூலிகளாய் இடருற்றோர் நிலைகள் எண்ணி
முறையிட்ட பாரதியின் கண்ணீர்ப் பாக்கள்
முன்வைத்துத் தருவவெலாம் நெஞ்சப் பூக்கள்
நிறைகின்ற விடுதலையை எண்ணிப் பள்ளு
நிலைமொழிகள் தந்தவெலாம் உரிமைப் பாக்கள் !

.இந்த இரண்டும் தேசியக் கவியைப் படம் பிடித்துக் காட்டி இவரை மக்கள் கவிஞராக்குகின்றன. இவர் எழுதிக் குவித்த சக்தி வழிபாட்டுப் பாடல்கள், இவரைச் 'சக்தி தாசராக்குகின்றன. நாட்டு விடுதலைக்குப் பாட்டுத் திறத்தாலே பணி செய்த பாங்கு நெஞ்சில் நிறைந்து நிற்கும் பான்மையது. இவரது நூற்றாண்டு விழா நினைவாக இவரைப் பற்றி நான்கு நூல்களை வெளியிட்டு இவர் பெருமையைப் போற்றினேன்.

பாரதிதாசனைப் பற்றி இந்தத் தலைப்பில் ஐந்து பாடல்கள்

விடுதலைக்குப் பண்ணெழுப்பிப் பாட்டில் வாழும்
வீறுதமிழ்ப் பாரதியார் தாச னாகிக்
கெடுதலிலாத் தமிழ்நாட்டைக் காண வேண்டிக்
கிளர்ந்தெழுந்து புரட்சிமிகு பாட்டுத் தோற்றம்
விடுதலைகள் சமுதாயம் தனிலும் காண
விரைந்திசைத்த செந்தமிழர் பாட்டு நெஞ்சர்
நெடுங்கால நினைவுகளைக் காண நின்ற
நிறைபாரதி தாசனிவர் புரட்சிச் சின்னம் !

செந்தமிழை நெஞ்சார நினைந்து பாடிச்
சீரான நற்குடும்ப விளக்கும் ஏற்றிச்
சந்தமுறும் இசையமுது சாற்றி நின்றார்
சங்கத்துக் காட்சிகளைப் புதுக்கித் தந்தார்
சிந்தைக்குள் தமிழினத்தின் சீர்மை எண்ணிச்
சிலிர்ப்பூட்டும் பாவேந்தர் என்றே ஆனார்
விந்தைமிகு நல்லழகின் சிரிப்புப் பாடல்
விதைத்தவரும் நம்புரட்சிக் கவிஞ ரன்றோ?

இவை பாவேந்தரை ஓவியம் போல் சொல்லோவியங்களாக்கிக் காட்டுபவை. அறிஞர் அண்ணா இவருடைய அழகின் சிரிப்பிலுள்ள பாடல்களை மேடைதோறும் விளக்கிப் பேசி இவருக்குப் 'புரட்சிக் கவிஞர்' என்று பெயர் சூட்டி அதனை நிலைக்கச் செய்தார். புரட்சிக் கவிஞரும் அண்ணாவின் அருங்கருத்துக்களைத் தாம் பேசும் மேடை

தோறும் எடுத்துக் கூறி 'அறிஞர் அண்ணா' என்று சுட்டிக் காட்டி அப்பெயர் நிலைக்கச் செய்தார். கவிஞர் தம் பணியினின்னும் ஓய்வு பெற்ற பிறகு நாடெங்கும் சுற்றி வந்தார். நான் துறையூர் உயர்நிலைப் பள்ளியில் தலைமையாசிரியராக இருந்த போதுஇரண்டு நாட்கள் என் இல்லத்தில் விருந்தினராகத் தங்கும் பேறு பெற்றேன். பள்ளியில் கூட்டம் அமைத்துப் பேசச் செய்தேன். ஊரே திரண்டு வந்தது. ஊருக்குள் இரண்டு கூட்டங்களுக்கு ஏற்பாடு செய்து பேச வைத்தேன். துறையூரில் பெரும்பாலோர் திராவிடக் கழகச் சார்புடையவர்கள். ஆகையால் இவர் பேசும் கூட்டங்களில் மக்கள் திரண்டு வந்து கேட்டு மகிழ்வர்.

டாக்டர் சாந்தமூர்த்தி 'கவிதை நூல்' என்று தம் கவிதைகளைத் தொகுத்து வெளியிடவில்லை. எனினும் கணிசமான அளவுக்குப் பாடித் தம்மை ஓர் மரபுக் கவிஞர் என்று இனங்காட்டியுள்ளார். சில புதுக்கவிதைகளும் அச்சாகியுள்ளன. இத்துடன் இவர் பற்றிய கவிதைச்சிறப்பை நிறைவு செய்கின்றேன்.

---

# 14. கவிஞர் (டாக்டர்) தா.ஜெய்புன்னிஸா

கவிமணி, இறைநகர் மறைமணி என்ற பெயராலும் வழங்கப் படுபவர். இவர்தஞ்சை மாவட்டம் நன்னிலம் வட்டம் நன்னிலத்திற்கருகிலுள்ள 'இரவாஞ்சேரி' என்ற ஊரில் (1944) பிறந்தவர்.இரவாஞ்சேரியை இறவாஞ்சேரியாக்கி மீண்டும் இறைநகர் என்றாக்கித் தம் பெயருடன் இறைநகரைச் சேர்த்து, 'இறைநகர் மறைமணி' என்று வழங்குமாறு செய்து கொண்டவர். 'மறைமணி' என்பது அவர்தம் புனைபெயர். 1969 முதல் இப்பெயரிலேயே கவிதை படைத்து வருகின்றார். இவர் கணவர் எம்.ஏ. முகம்மது தாஜுதீன் என்பார், மிகு புகழ் வாய்ந்த ஓய்வு பெற்ற பேராசிரியர். 1961இல் அம்மையாரின் வாழ்க்கைத் துணைவரானார்.

அம்மையார் மரபுக் கவிதைகளையே படைத்து வருபவர். புதுமுறைப் பாடல்களும் இவர் தம் படைப்புக்களே., இவர்தம் படைப்புக்களின் முதல்தொகுப்பு "சாந்தி வயல்" (அக்டோபர்1975) என்ற பெயரில் வெளிவந்துள்ளது.

'சாந்தி வயலில்' காணப் பெறும் கவிதைகள் யாவும் சுமார் பத்தாண்டுக் காலங்களில் நன்னிலம் தந்த பெண்மணியின் உள்ளத்தில் மலர்ந்தவை. பல்வேறு ஏடுகளில் பல்வேறு காலங்களில் மணம் பரப்பியவை. இவை நாடு, தமிழ், பெண்மை, தலைவர்கள், மனம், பந்த பாசங்கள் போன்ற பல்பொருள்கள்மேல் எழுந்தவை. இவ்வாறு மணம் பரப்பியவை சுமார் இரண்டாயிரத்திற்கு மேற்பட்டவை. அவற்றின் பொறுக்கு மணிகளாக நூறு கவிதைகளைத் தேர்ந்தெடுத்து அழகியதொரு மாலையாகக் கட்டிச் சாந்திவயலில் வைத்துள்ளார்.

சங்கப் பாடல்கள் பல்வேறு அரசர்கள், பல்வேறு புலவர்களின் துணை கொண்டு தொகுக்கப் பெற்றவை. இவ்வற்றைத் தொகுத்த முறையின் சிறப்பையும் நாம் அறிவோம். அவை யாவும் பல்வேறு காலங்களில் பல்வேறு புலவர்களின் சிந்தனை வெளிப்பாடாக மலர்ந்தவை.

சாந்தி வயலில் காணும் மலர் மாலையின் வனப்பே தனி, பாமலர்களைப் படைத்த கவிஞரே மாலையாகக் கட்டியதால் தம் கலையுணர்வைப் புலப்படுத்துகின்றார். இந்த மலர்மாலை கருவிலே உரு, உருவிலே தரு தருவிலே, திரு திருவிலே கரு என்ற நான்கு பெரும் பகுதிகளைக் கொண்டவை. ஒவ்வொரு பகுதிகளிலும் மூன்று சிறு பகுதிகள் அடக்கம். நான்காவது பகுதியில் மட்டும் இரண்டு சிறு பகுதிகளே உள்ளன.

'கருவிலே உரு' என்ற பெரும் பகுதியில் விதை, வேலி, வெப்பம் என்ற மூன்று சிறு பகுதிகளும், உருவிலே திரு ' என்ற பகுதியில் நிலம், நீர், எரு என்ற மூன்று சிறு பகுதிகளும், 'தருவிலே திரு' என்ற பகுதியில் காற்று, கதிரொளி, விசும்பு என்ற மூன்று சிறு பகுதிகளும், திருவிலே கரு' என்ற பகுதியில் உழைப்பு, உறுபயன், என்ற இரண்டு சிறு பகுதிகளும் அடங்கியுள்ளன. ஒவ்வொரு சிறு பகுதியிலும் பல்வேறு வண்ண மலர்கள் பாங்குடன் அமைந்து மாலையைப்பெரு வனப்புடையதாக்குகின்றது. இது தவிர ஒவ்வொரு சிறு பகுதியின் கீழ் உள்ள மலர்களையும் ஒரு சில சொற்றொடர்களால் சுட்டவும் செய்தல் அற்புதமாக மிளிர்கின்றது.

இந்த மாலையில் அமைந்துள்ள வண்ண மலர்களில் அங்கொன்றும் இங்கொன்றுமாகச் சுட்டி மலர்களின மாண்பை விளக்கும் போக்கில் கவிதைகளின் சொல் நயம், பொருள் நயம், கற்பனை வளம் முதலியவற்றைக் காண்போம்.

நாடுஎன்ற ஒன்றுஇன்றேல்
  நமக்குஏது வீடு? – நல்ல
ஏடுநின்ற இலக்கியங்கள்
  இன்மொழிப் பூக்காடு
சொல்விளைக்கச் சொந்தமொழி
  இருக்கு மாயின் – அதைச்
சீர்சான்ற சொல்வயலாய்
  நினைப்ப துண்டு

நம்நாடு என்ற மலரின் ஓர் இதழ் முன்னது. பின்னது சொல்வயலின் கீழ் வருவது.

நாடுஎன்ற ஒன்று இங்கு என்றும் – நிரை
  நல்ல இரத்தம் ஓடும்உடல் மன்றம்
மாடுமனை மக்கள்சுற்றம் என்றும் – குறை
  மனதுடையார் குறுவட்டம் அன்றோ?
தேடுசெல்வம் தனக்கெனவே என்றும் – கறை
  தொலைத்தலிலா தன்மைகொண்டு இன்றும்
நாடுஎன்ற ஒன்றில்நாடு கின்ற – நிறை
  நஞ்சுமனத் தாரழிவர் அன்றோ?

என்று கூறும் கவிஞர்

இந்தியாநம் அனைவருக்கும் சொந்தம் – இங்கு
  ஏற்றிடுவோம் ஒருமைவழி பந்தம்

என்று முத்தாய்ப்பாக ஒருமைப் பாட்டை வற்புறுத்துவார். தாய்மொழியின் பெருமையை உணர்த்தும் போக்கில்

*அவரவர்க்குத் தாய்மொழியே கருப்பஞ் சாறு*
*அகமுறையும் அன்னைமொழி விரும்பும் சோறு*

என்றும்

*பெறற்கரிய பொருள்வளம்தான் மொழியே உண்மை*
*பேணிடும்நற் பணியதனைப் புரக்கும் தன்மை*
*உறற்குரிய உறவெல்லாம் உய்தல் அண்மை*
*உடன்பட்டார் நெஞ்சத்தே நிலைக்கும் தன்மை*

என்றும் கூறுவார். தொடர்ந்து

*தாயின்றி நாம்இல்லை தரணி இல்லை*
*தாயுணர்த்தும் மொழியின்றித் தகைவே றில்லை*

என்று மொழிவார். இந்த நாட்டின் ஆட்சி

*ஏழையர் சிரிப்பினில்*
*இறைவனைக் கண்டிடும்*

என்ற பாங்கில் அமைந்திடல் வேண்டும் என்கின்றார்.

வேலி என்ற சிறு தலைப்பின் கீழ் ' யார் அடிமை?' என்பதைப் புரட்சிகரமாகப் பேசுகின்றார் - பெண்களுக்கு அறிவியலில் ஏற்றம், அரசியலிலே பங்கு, சமூக இயலில் சமத்துவம், எல்லா வகை உரிமைகளும் பெற்றுப் பெருவாழ்வு வாழ வேண்டும் என்று சொல்லுக்குச் சொல் அழகேறும் அடிகளில் மேற்கோள் நயத்துடன் இடித்துரைக்கின்றார் கவிஞர் ஜெய்புன்னிஸா.

*அன்னை வயிற்றில் அடிமைநீர்*
*அதன்பின் மடியில் அடிமைநீர்*
*கண்ணை மூடும் தாலாட்டின்*
*கான மழைக்கும் அடிமைநீர்*
*மண்ணை மிதித்து நடமாடின்*
*மண்ணின் மாதா அடிமைநீர்*
*எண்ணை எழுத்தைக் கற்கும்நாள்*
*இதனை யளிப்பார்க் கடிமைநீர்*

யார் யாருக்கு அடிமை என்பது போல் கூறிய கவிஞர்.

*முதலுதவிப் பெட்டியடா மனைவி – மேவும்*
*முதல்முடிவாய் ஆகிடும்நல் துணைவி*
*எதிலெதுவோ உதவுகின்ற நினைவில் – ஏவும்*
*எழில்மனத்தை இயக்குபவள் மனைவி*

என்ற கவிதைப் பகுதியில் பெண்மையின் முழுமையை மனைவி வழி கூறுகிறார்.

இல்லையென ஏங்குகின்ற ஏழை யர்க்கே
இயன்றவரை உதவுகின்ற இரக்கம் வேண்டும்
தொல்லையிலா நல்வாழ்வு வேண்டும் என்றால்
தொடர்ந்திந்த நல்லாட்சி தன்னை ஏற்போம்

தன்மதிப்புத் தன்மானம் தகைசி றந்த
தாயகத்தில் புகழ்காக்க உரிமை யுண்டு
அன்றாடம் ஆற்றுகின்ற அருங்க டன்கள்
அருந்தமிழர் வாழ்வுயர உரிமை யுண்டு

பிறருக்குச் சேவைகளைச் செய்வ தற்கே
பிறப்பெடுத்தோம் பேருண்மை துறந்த துண்டோ
திறனாய்ந்த தொண்டர்களைத் தேர்ந் தெடுத்தே
தினந்தினமும் உழைப்பதைநாம் வெறுத்த துண்டா?

மறனாய்ந்த மாத்தமிழர் மானங் காக்க
மாநிலத்தே தொடர்ந்திந்த ஆட்சி ஏற்போம்.

இதில் நல்லாட்சியை ஏற்படுத்த உறுதி கொண்ட மாத்தமிழர் மனநிலையைக் காட்டுகின்றார். "உருவிலே தரு" என்ற பகுதியில் கவிஞர் 'சாந்தி வயலைக் காட்டுவார்.

நெல்விளைக்க நமக்குவயல் இருக்கு மாயின் – அதை
நெல்வயலாய்ப் பெயர்சூட்டி அழைப்ப துண்டு
நெஞ்சமெலாம் சாந்திவயல் ஆகி விட்டால் – நல்ல
தேசமெலாம் பாசமெலாம் நிலைத்து வாழும்

நெஞ்சத்தில் சாந்தி வழி நிறைந்து விட்டால் அது சொர்க்க வழியாகத் திகழ்தல் கூடும் என்கின்றார். சாந்தி வழியைக் கண்டறிந்தவர் நபிகள் நாயகம். இதனை,

சத்தியத்தின் நித்தியமே எத்திசையும் ஏற்றமுற
சன்மார்க்கம் தோற்றுவித்த மேதை – தரும்
சாந்திவழி ஏந்திவரும் பாதை.
கல்லடிகள் கண்டபோதும் பல்லுடைந்து நின்றபோதும்
எல்லையற்ற தொல்லையேற்ற இனியர் – இந்த
இஸ்லாத்தைக் காக்கவந்த புனிதர் – சொந்த
சுயநலத்தை விட்டொழித்துப் பொதுவாழ்வில் ஈடுபட்டு
இனியமதம் நமக்களித்த ஏந்தல் – மக்கள்
ஏற்றமுறச் சாற்றுகின்ற வேந்தர்

என்ற கவிதைகளில் கண்டு மகிழலாம். இந்தத் தீன் நெறியை (இஸ்லாம் மார்க்கத்தை) நுவல்வது குர்ஆன்.

*அன்பொடு ஆர்வமும் அறநெறி ஆற்றலும்*
*அளித்திடும் அருமறை குர்ஆன்*
*பண்பொடு பஃறிகர் பாசமும் கொண்டிடப்*
*பகர்ந்திடும் தூமறை குர்ஆன்*

என்ற பாடல் பாசத்துடன் இதைப் பகரும். இது பகர்வதைச் சுருக்கமாகக் கூறினால் சாந்தி, சமாதானம், சகோதரத்துவம் என்பவையாகும்.
கவிஞர் 'காவடிச் சிந்து' பாணியிலும் பாடுகின்றர்.

*வகையொடு வாழ்ந்திட வளமெலாம் சூழ்ந்திட*
*வாழ்நெறி தொலைந்திடக் கண்டு – பழி*
*தாழ்நெறி தொலைந்திடக் கண்டு – பழி*
*பகையொடு பாவமும் பஞ்சமா தீமையும்*

*நீக்கெனக் காட்டுவதால் – நல்ல*
*நோக்கமே காட்டுவதால் – வல்ல*
*புருகான் மறைதனைப் போற்று கின்றேன் – தீனில்*

*செறிவாம் நிறையெனச் சாற்று கின்றேன்*
*(புருகான் –குர்ஆன், தீன்–இஸ்லாம் நெறி)*

இந்தக் காவடிச் சிந்து கவிதை வேதமாய் வந்து விளக்கென நின்று ஞான நெறியைக் காட்டுகின்றது.

'எரு' என்ற சிறு தலைப்பின் கீழ் இந்துக்கள் போலவே இஸ்லாமியர்கள் திருத்தலப் பயணம் என்ற புனித யாத்திரையை ஆண்டு தோறும் தொடங்குகின்றனர், மெக்காவுக்குச் செல்லுகின்றனர் எனப் பாடுகிறார்.

*இனியதோர் இஸ்லாம் ஏந்தெழிற் கடமையில்*
*நனிசிறந் ததுவே புனிதமார் யாத்திரை*
*அணியொடு ஆட்பொருள் ஆண்டிடும் தீனோர்*
*மணிநிகர் மக்கமா நகர்செலல் நன்மையே*

மேலும், இஸ்லாமியர்கட்கு நோன்பு மிக முக்கியமானது. இஃது உடலையும் ஆன்மாவையும் தூய்மையாக்குகிறது. இது அவர்களது நம்பிக்கை. பிறை கண்டு நோன்பினைத் துவக்குவது அவர்தம் கடைபிடிப்பு என்பதையும் கூறுகிறார்.

*உயிரோட்டம் பெற்றவொரு உடலென்னும் கருவிதனைப்*
*பரிசுத்தம் செய்து கொள்வோம்*
*உவப்பொடுநாம் விரதத்தை ஏற்றுக் கொள்வோம்*

என்ற கவிதை இதனைத் தெளிவுறுத்துகின்றது.

தொழுகையும் இஸ்லாமியர்கட்கு இன்றியமையாத

கடமையாகும். சமயம் வாழ்க்கையொடு ஐக்கியப்படும். அப்போதுதான் மனிதன் முழுமை பெறுகிறான். ஓர் இஸ்லாமியன் நாளொன்றுக்கு ஐந்துமுறை தொழுகையை மேற்கொள்ளுகின்றான்.

தூயதோர் உள்ளமே தரணிவாழ் மாந்தர்தம்
தரமெலாம் உயர்த்திடும் சித்து
தரமிகு சித்தினில் முளைவிடும் வித்தென
வெளிவரும் வலம்புரி முத்து
வெளிவரும் முத்தினில் ஒளிவிடும் சுடரென
விளங்கிடும் வனமலர்க் கொத்து
வனமலர்க் கொத்தினில் வாசனை வீசிடும்
வணக்கமே நம்மவர் சொத்து

என்ற கவிதை முத்தாய்ப்பாக இதனைச் சுட்டுகின்றது. இறைநகர் மறைமாமணியின் கவிதைகளில் அன்பு தவழ்கின்றது.

பெற்றஅன்னை பிள்ளைதன்னைப்
பேணும்மாட்சி அன்பினால்
பற்றுகொண்ட தந்தை காணும்
பாசக்காட்சி அன்பினால்
உற்றவர்கள் உறவுகொண்டு
ஒழுகும்காட்சி அன்பினால்
கற்றவர்கள் மற்றவரைக்
காணும்காட்சி அன்பினால்

சான்றோர்கள் பற்றிப் பல கவிதைகள் யாத்துள்ளார் நன்னிலம் கண்ட கவிஞர் ஜெய்புன்னிஸா. இவை 'விசும்பு' என்ற சிறு தலைப்பின் கீழ்க் காணப் பெறுகின்றன.

1. தந்தை பெரியார் :-

தன்மானத் தமிழரினம் தலைநிமிர்ந்து நிற்பதற்குத்
தயங்காது உழைத்த தெவர்?
சன்மானங் கருதாமல் சகமூடப் பழக்கங்கள்
சலியாது எதிர்த்த தெவர்?
கண்தானம் செய்தேனும் தன்மானம் பெறும்எண்ணம்
கலங்காது கொடுத்த தெவர்?
மண்மானம் காத்திடவே மயங்காமல் உழைத்தவொரு
மாமேதை பெரியாரவர்.

2. அறிஞர் அண்ணா :-

உலகோர்க்கு ஒண்தமிழின் ஒழுக்கங் காட்டி
உத்தமராய்த் தானியங்கி உயர்ந்தார் அண்ணா
நலிவுற்ற ஏழையர்கள் வாழ்வைப் பேண
நாள்தோறும் ஆர்வமுடன் உழைத்தார் அண்ணா

சிலகற்ற சிறுமதியர் தூற்றக் காணில்
சிரிப்பொன்றை உதிர்த்தவர்தம் சிந்தை வென்றார்
பலகற்ற நூலறிவை எழுத்தில் பேச்சில்
பாரவர்க்கு உணர்த்திய நம் அண்ணா போற்றி

3. கலைஞர் கருணாநிதி:--

நீதிக்கும் நேர்மைக்கும் பெயரைப் பெற்ற
நல்லதொரு நற்சாட்சி கலைஞர் ஆட்சி
சாதிக்கும் திறன்ஒன்றே நெஞ்சிற் கொண்டு
சமுதாய நல்வாழ்வு பேணும் ஆட்சி
வாதிட்டுத் தோற்றோடும் மாற்றார் தம்மின்
வளமான வாழ்வுக்கும் இதுவே சாட்சி
ஆதிநாள் பொற்காலத் தமிழர் ஆட்சி
அமைந்திட்ட மாட்சிக்கும் மேல்இவ் வாட்சி

4.அப்துல் சமது:- - இப்பெரு மகனாரைப் பற்றி மூன்று பாடல்கள் உள்ளன. அவற்றுள் ஒன்று,

வல்லுநர் உருவம் வயங்கிடு புருவம்
உதட்டினில் புன்னகை மருவும்
துல்லிய நெஞ்சம் நுவள்பவர் தஞ்சம்
தீன்குலப் பண்புசேர் மஞ்சம்
மெல்லிய மனமும் மிகையுறாச் சினமும்
மேம்படு இனியநற் குணமும்
நல்லவர் 'ஸமத்' வர் நமக்குறு தலைவராம்
நயமொடு நீடுநாள் வாழி
(தீன் குலம் – இஸ்லாமிய நெறியில் வாழும் குலம்)

5. ஹானிமம்:- - இந்த மாபெரும் மருத்துவரைப் பற்றி,

தேங்குபுகழ் செல்வமெலாம் தீர்ந்தே போகும்
திடமான நல்லுடம்பு பேணாக் காலை
தீங்குபல சேர்ந்திடவே நோய்கள் சூழும்
திகைத்திடில்நம் சுகம்ஏகும் உயிரே போகும்
ஈங்குலகோர் நோய்கள்தனை அறவே போக்கி
இணையில்லா ஓமியோ பதியால் சாலும்
ஓங்குபுகழ் மருத்துவநல் வழியைத் தந்த
உத்தமராம் ஹானிமனை வாழ்த்து வோம்நாம்.

ஒரு சமயம் சென்னை நகர் மழையின்றி வறட்சியால் துன்புற்றது. காய்கதிர்ச் செல்வன் தன் ஆற்றலால் தானே மூலம்-ஆதி மூலம் என்பதையும், அந்த விரிகதிர்ச் செல்வனே மழைக் கடவுள் என்பதனையும் நாம் அறிவோம். அவனை நோக்கி விண்ணப்பிக்கும் பாடல்கள் புதுமையானவை.

விரிகதிர்ச் செல்வனே உன்னை யல்லால்
வியனுலகு வாழ்வதிலை உணரு கின்றோம்
எரிதணலை எம்மீது கொட்டி னாற்போல்
எல்லையிலா வெப்பமதைக் கூட்டி எம்மைப்
பொரிகடலை வறுத்தாற்போல் பொசுக்கி னாலும்
பொறுமையொடு நாமதனைப் பொறுத்துக் கொள்வோம்
உரிமையொடு உன்னையின்று வேண்டு கின்றோம்
உன்தோழன் மழைமேகம் அனுப்பி வைப்பாய்

என்றதும் மதியை நோக்கி "கருமுகிலாம் உன்தம்பிஅனுப்பி வைப்பாய்" என விண்ணப்பித்துத் தென்றலை நோக்கி " சூல்மேகச் சோதரியை அனுப்பி வைப்பாய்" என்றும் வேண்டுகோள் விடுப்பதானவை படித்தின்புறத்தக்கவையாகும்.

'சமதர்மம்' என்ற தலைப்பில் பாடும் வரிசையில்

இடும்பினை வளைத்தொ டித்து
இன்றுயாம் உழைப்ப தெல்லாம்
அடுப்பினில் உலையைப் போட்டு
அன்னமாய் உண்ப தற்கே
படிப்பினில் சிறந்த செல்வர்
பசிதனை உணர்ந்த பின்னும்
அடித்திடல் வயிற்றில் ஏனோ?
அழலவா! தூது செல்வாய்.

என்ற ஒரு கவிதைவெய்யோனிடம் தூது செல்லுமாறு அமைந்து பொதுவுடைமையை நெருடுகிறது.

இந்த அவசர யுகத்தில் எல்லோருடைய மனமும் அமைதியை நாடுகின்றது. அதனை அடைய முடியாமல் பரிதவிக்கின்றது. காரணம்? பொருளைக் குவிக்க வேண்டும் என்ற பேராசை, அது வேண்டும், இது வேண்டும் என்று ஆசைப்படும் மனம் அது கிடைக்கப் பெறாமல் ஏமாற்றம், இதனால் நேரிடும் மனமுறிவு போன்றவையே. இதனைக் கவிஞர் இரத்தினச் சுருக்கமாக,

பாசத்தின் பிள்ளையடா நாசம் — பந்த
பாசத்தின் பெயரனடா மோசம்

என்று கூறுவார். அறிவுக் கூர்மையினால், அறிவியலின் துணையால் எத்தனையோ கண்டு பிடிப்புகள், புதுப்புனைவுகள் வந்துவிட்டன ஆனால் உலகில் அமைதி இல்லைஎன ஏங்குகிறார் பெண்மைக் கவிஞர். ...யுள்ளம் அல்லவா?

விண்மீன்கள் விளங்குமெழில் மண்ட லத்தை
வலம்வரவே ஒரேமு வினாடி போதும்
கண்மூடித் திறப்பதற்குள் ககன மீது
காட்டினீர் அதிசயங்கள் அளவில் லாது
இத்தனையும் போதாதென்று உணர்ந்த பின்னே
இளைப்பாற இடம்தேடித் திங்கள் செல்வீர்
மெத்தஉயர் மேகத்து மீது முள்ள
மோனவெளி கோள்களிலும் ஆய்வு செய்வீர்

என்று கூறி மனிதன் கண்டறிந்த அறிவியல் நுட்பங்களையெல்லாம் பாராட்டிவிட்டு

நித்தமுமே ஆராய்ச்சி செய்துயிரின் நித்தியத்தை
நும்மாலே அறியக் காணீர்
அத்தனையும் வீண்போகா வெற்றி கொள்வீர்
ஆயினும்நும் மனத்திலொரு அமைதி யுண்டோ?

என்று ஒரு வினாவை நம்முன் வைக்கின்றார். 'இல்லை' என்ற விடை அதில் தொனிக்கின்றது.

அம்மையாரின் மற்றொரு தொகுப்பு (திசம்பர் 1986) 'சமாதானப் பயிர்' என்பது. இத்தொகுப்பும் 'சாந்தி வயலைப்' போல் கலையுணர்வுடன் கண்டவர் மெச்சும் பாங்கில் அமைந்துள்ளது., அனைத்துலக அமைதி ஆண்டின் நினைவாக வெளிவந்துள்ளது. இதிலுள்ள கவிதைகளும் சாந்தி, சமாதான சமரச நன்னோக்குடையவை.

கவிஞரின் கவிதைத் தொகுதியில் பிறிதொன்று 'சகோதரத்துவ விளைச்சல்' என்பது. கலையுணர்வு இயல்பாக அமைந்த இறைநகர் மாமணி இந்த நூலில் உள்ள கவிதைகளை. இயல்பு, இணைப்பு, பொறுப்பு, சிறப்பு என்ற 'நான்கு' பெரும்பகுதிகளாகவும் ஒவ்வொன்றும் 'மூன்று' சிறு பகுதிகளாகவும் அமையும்படிப் பாடியுள்ளார்.

பொதுவாக இறைநகர் மறைமணி பாடாத பொருளில்லை. இவர்தம் மூன்று நூல்களின் பொருளமைப்பு அற்புதமாக அமைந்துள்ளது. அரசியல், அறிவியல் ஆகிய அனைத்தும் அடங்கியுள்ளன. நாட்டுப்பற்று, மொழிப் பற்று, உரிமை வேட்கை, நீதி குன்றாமனம், இறைப்பற்று முதலிய அத்தனையும் இந்தக் கலைமாமணி கொண்டிருப்பதால் இவர்தம் கவிதைகள் உள்ளத்தைத் தொடுவதாக அமைந்துள்ளன. இவர்தம் தமிழ்ப்பற்று சங்ககாலப் பெண்புலவர்களின் பற்றினை நிகர்த்ததாக உள்ளது.

அவரவர்க்குத் தாய்மொழியே கருப்பஞ் சாறு
அகமுறையும் அன்னைமொழி விரும்பும் சோறு

என்ற இவர்தம் வாக்கு பாவேந்தரின் தமிழ் உணர்வுகளை நினைவு கூர்வதாக அமைந்து படிப்போரை மகிழ்விக்கின்றது என்று கூறி இவரின் கவிச்சிறப்பைத் தலைக் கட்டுகின்றேன்.

# 15. கவிஞர் குழ. கதிரேசன்

இவர் குழந்தைக் கவிஞர். குழந்தை இலக்கிய வானில் ஒரு துருவ மீன் போல் நிலைத்து வாழும் அழ. வள்ளியப்பாவின் வாரிசு போல் செட்டிநாடு தந்த குழந்தைக் கவிஞர் இவர், இவர் வளர்ந்தவர்கட்கும் கவிதைகள் இயற்றியுள்ளார். இவர் புதுக்கோட்டை மாவட்டம் இராயவரம் என்ற ஊரில் பிறந்தவர் (1949). இராயவரம் காந்தி உயர்நிலைப் பள்ளியில் தொடக்கம் முதல் பயின்று பள்ளி இறுதிப்படிப்பை முடித்துக் கொண்டு மதுரை, தியாகராசர் கல்லூரியில் பயின்று தமிழ் இலக்கியத்தில் (1971) இளங்கலை (பி.ஏ) பட்டம் பெற்றவர். தற்சமயம் ஐந்திணைப் பதிப்பகம் என்ற நிறுவனத்தின் அதிபர். இவர் ஆசிரியராக வெளியிட்ட நூல் பதினைந்து. நிறுவனத்தின் மூலம் முந்நூறுக்கு மேற்பட்ட நூல்களை வெளியிட்டுள்ளார்.

'நெருப்புக் கொப்பளம் ' என்ற சமுதாய இலக்கியப் பாடல்கள் வளர்த்தவர்கட்கு ஏற்றவை. இதில் உள்ள பாடல்களில் சில பேச்சுத் தமிழிலும், மற்றவை இலக்கியத் தமிழிலும் அமைந்தவை. நூல்,

**உலகம் போற்றும் உயர்ந்த தமிழே**
**உனக்கு என்றன் வணக்கம் – அதைச்**
**சொன்னால் வாயும் மணக்கும்**
**இலக்கண இலக்கிய ஆடை யணிந்து**
**என்தமிழ் மொழியே திரிகின்றாய் – நீ**
**எத்துணை அழகாய் இருக்கின்றாய்**
**தமிழே நீஎன் நாவில் புகுந்து**
**தடபுட லாக ஒலிக்கின்றாய் – செந்**
**தமிழை ஒன்றாய் இணைக்கின்றாய்**
**ஐம்பெருங் காப்பிய அணிகலன் பூண்டு**
**அன்னைத் தமிழ்நீ நடந்தாயே – பல்**
**ஆயிரம் ஆண்டையும் கடந்தாயே**

என்ற தமிழ் வணக்கப் பாடலுடன் தொடங்குகின்றது. 'தமிழ் இவர் நாவில் புகுந்து ஒலிக்கின்றது' என்ற கருத்து நம்மாழ்வாரின்

நாமுதல் வந்து புகுந்துநல் இன்கவி
தூமுதல் பத்தர்க்குத் தான்தன்னைச் சொன்னஎன்
வாய்முதல் அப்பன்... (திருவாய 7–9–3)

என்ற பாசுரமும்

என்நெஞ்சத்து உள்ளிருந் திங்கு
இருந்தமிழ்நூல் இவைமொழிந்து (திருவாய் 10–6–4)

என்ற பாசுரமும் நினைவில் எழுகின்றன. இறைவனே தன்னுள் இருந்து கொண்டு பாசுரங்களைப் பாடுகின்றான் என்பது ஆழ்வார் கருத்து.

'தேடல்' என்ற தலைப்பில் உள்ள,

நதிகள் எல்லாம் இணைந்தால் நாட்டில்
நெல்மணி வயிறை முட்டாதோ?
தலைவர் எல்லாம் இணைந்தால் நாட்டில்
தவறுகள் ஓடி ஒளியாதோ?
தனியாய் ஓடும் நதிகளைப் போலே
தலைவர் எல்லாம் ஓடுகிறார்
உண்மைத் தலைவர் எங்கே எங்கே
ஒவ்வொரு மனிதனும் தேடுகின்றான்

என்ற கவிதைகள் இன்று தடுமாற்றத்துடன் இயங்கும் அரசியலைப் பற்றி ஒவ்வொரு மனிதனும் சிந்திக்கின்றான் என்பதைக் காட்டுகின்றார் கவிஞர்.

உள்ளம் என்பது கோயில் – அதில்
உண்மை என்பது தெய்வம்
பள்ளம் மேடு வழியில் – நன்கு
பார்த்தால் தானே தெரியும்?

கள்ளம் கபடும் நெஞ்சில் – நிலை
கொள்ளா திருந்தால் தெய்வம்
நெஞ்சில் இருப்பது தெரியும் – அது
நினைவில் வருவது புரியும்

இறைவன் உண்டு என்பதும் – உலகில்
இல்லை என்பதும் பழமை
இறைவன் பெயரால் இழைக்கும் – தீங்கை
எதிர்த்து நிற்பது புதுமை.
பழமை மூலம் புதுமை காண்பது
பண்டைய உலகின் நிலைமை
புதுமை மூலம் பழமை பார்ப்பது
இன்றைய உலகின் கொடுமை

என்ற பாடல்கள் 'பழமையும் புதுமையும்' என்ற தலைப்பில் காணப் பெறுபவை. இவற்றில் முதற் பாடல் 'ஊன் உடம்பு ஆலயம்' என்ற திருமூலர் கருத்தை நினைவு கூரச் செய்கின்றது. 'பெருமை சேர்ப்போம்' என்ற தலைப்பில் வரும்,

பெண்ணைக் கொடுத்தது போதாமல்
பெரும்பொருளும் பேசிக் கொடுக்கின்றார்
அள்ளிக் கொடுத்த பின்னாலும்
அதிகம் ஆசைப்படு கின்றார்.
பின்முறை கேட்டு வாவென்றே
பிறந்த வீட்டுக்கு அனுப்புகின்றார்
கண்ணுக் கழகாய்ப் பெண்ணிருந்தும்
காசைத் தானே பார்க்கின்றார்.
ஆணும் பெண்ணும் பெற்றவர்க்கு
அடிமை யின்மை காணுங்கள்
பேரம் பேச விலைப்பொருளா
வெட்க மில்லை கூறுங்கள்
வரதட் சிணைக்கு விலங்கிட்டு
வழிய னுப்பப் பாருங்கள்
வரலாற் றில்இதை எழுதிவைத்தே
வாழ்த்துப் பாவும் பாடுங்கள்

என்பவை காலத்துக்கேற்ற தேவையான கவிதைகள்.

'போதையைப் பொசுக்குவோம்' என்பது இன்றையத் தேவைக்கு ஏற்ற பாடல்களைக் கொண்டது.

புகையே நமக்குப் பகையாகும் – அது
புற்றுநோய்ப் பிறப்புக்கு இடமாகும்
காற்றைக் கெடுக்கும் வெண்புகையும் – நம்
கடமையைக் காற்றில் பறக்கவிடும்

கொள்ளியை வாயில் பற்றவைத்து – அதைக்
குழந்தையின் முகத்தில் ஊதுவதா?
வெண்சுருட் டாலே அடுத்தவர்க்குத் – தினம்
வேதனை உண்டு பண்ணுவதா?

போதைப் பொருளை இதில்வைத்து
புகைப்பதும் உடலுக்கு நன்றாமோ?
அடிக்கடி தேநீர் குடிப்பதுபோலே – நாம்
அடிக்கடி புகையைப் பிடிப்பதுவோ?
மதுவையும் புகையையும் இனிமேல்நம்
மனத்தை விட்டே அகற்றிடுவோம் – இவை

உயிரைக் குடிக்கும் ஒருநாளில்
என்பதை அனைவரும் உணர்ந்திடுவோம்

இந்தப் பாடல்களின் கருத்துக்கள் இளைஞர் உலகத்துக்கு மிகவும் இன்றியமையாதவை.

எந்தக் கட்சி ஆட்சிக்கு வந்தாலும் சட்டம்-ஒழுங்கு சரிந்து கொண்டே வருவதைக் காண்கின்றோம். 'அவலங்கள்' என்ற தலைப்பில் இதனைக் காட்டுகின்றார் கவிஞர்.

சட்டம் இந்த நாட்டினிலே
சரிஞ்சு போச்சுங்க – அதைச்
சரிப்படுத்த முயலவேணும்
தெரிஞ்சு போச்சுங்க
நீதி நேர்மை இந்த நாட்டில்
குறைஞ்சு போச்சுங்க – அதை
விலைகொடுத்து வாங்குவது
மலிஞ்சு போச்சுங்க

என்று நடப்பு நிலையைக் காட்டுகின்றார். நமக்குச் சிந்தனைத் திறன் இருப்பினும், செயல் திறன்தான் இல்லை என்பதை

சிந்தனைக்கு இந்த நாட்டில்
பஞ்சம் இல்லிங்க – அதைச்
செயல்படுத்த ஒருவருக்கும்
நெஞ்சம் இல்லிங்க.

என்பதாகச் சுட்டிக் காட்டிக் சூடும் தருகின்றார்.

கவிஞனோ, எழுத்தாளனோ தன்னைப் பெற்றெடுத்த நாட்டைக் கை தூக்கிவிட்டுக் காப்பாற்ற வேண்டும் என்ற கொள்கையை உடையவர்கள். இதனால் இவர்தம் கவிதைகள் பெரும்பாலும் சமுதாய நோக்கிலே அமைந்தவை.

'அசலும் நகலும்' என்ற தலைப்பில் ஒரு பாடல்
போலிகள் தாலிகள் கட்டிக் கொண்டதால்
அசல்கள் கீழே விழுந்து போயின.
போலியைக் கண்டு அசலு மிரளுது
அசலைப் போலிகள் அடக்கி ஆளுது.
போலிக்குத் தானே வேலிகள் இப்போ
பேருக்குத் தானே அசல்கள் இப்போ
போலியை அசல்கள் பிடித்து விழுங்கணும்
பொல்லாத போலிகள் பயந்து நடுங்கணும்

இவை அற்புதமான கவிதைகள். போலி, தாலி, அசலு, வேலி என்ற சில சொற்களைக் கொண்டு- அதாவது 'குறியீடுகளாகக்' கொண்டு- இன்றைய உலகில் அன்றாட வாழ்வில் நடைபெறும் பல அடாத செயல்களை விளக்குகின்றார் கவிஞர்.

'தடை மீறல்':--- இது சாலை விதிகள் சரியாகச் செயற்படவில்லை என்பதை விளக்கும் தலைப்பிலான கவிதை.

*காரு வண்டி சாலையிலே*
*ஓட்டப் பந்தயம் வைக்குது*
*நீயா நானா போட்டியிங்கே*
*நித்த நித்தம் நடக்குது*
*வேகத் தடையை மீறுகின்ற*
*விளையாட் டெல்லாம் நடக்குது*
*உயிர்கள் வாழத் துடிப்பதையே*
*உற்சா கத்தில் மறக்குது.*
*வேகத்துக்கு ஆசைப் பட்டால்*
*உயிரு போகும் நிச்சயம்*
*வேகத் தடைக்கு மனசிருந்தால்*
*விபத்து இல்லை சத்தியம்*

இன்றைய நிலையை விளக்குவன இக்கவிதைகள், சில சமயம் நின்று பயணிகள் இறங்கும் போது அவ்வழியே மிதிவண்டி, மோட்டார்(மிதிவண்டி) ஸ்கூட்டர் விடப்படுகின்றன. இறங்கும் பயணிகளுக்கு விபத்து நேர இவை வாய்ப்பாக அமைகின்றன என்ற எச்சரிக்கையை இவைகள் காட்டுகின்றன.

'பொங்கி எழும்' என்ற தலைப்பில் வரும் கவிதைகளில் பாரதி படைத்த புதுமைப் பெண் போல் பெண் காட்டப் பெறுகின்றாள்.

*பெண்ணே நீயும் பொங்கியெழு*
*பயந்தது போதும் துள்ளிஎழு*
*தீமை வந்துனைத் தாக்குகையில்*
*தீயின் பிழம்பாய் மாறிவிடு*
*ஈரம் நெஞ்சில் இருந்தாலும்*
*இதயத்தை இரும்பாய் ஆக்கிக்கொள்*
*கணவனும் கொடியவன் ஆகையிலே*
*கழற்றி விடவும் கற்றுக்கொள்*
*திருந்தா உயிர்கள் உலகத்தில்*
*தேவையே இல்லை ஒப்புக்கொள்*

இவற்றின் மூலம் பெண்களுக்கு எழுச்சியூட்டுகின்றார், வீர மகளிராக மாற வேண்டும் என்பதனை வற்புறுத்துகின்றார்.

'சுற்றுப்புறத் தூய்மைக்காக' இரண்டு தலைப்பில் உள்ள கவிதைகளைக் காண்போம் 'சபதம் செய்வோம்' என்ற தலைப்பில் வருவன,

*பெருநகர்த் தெருஉடல் நலத்துக்குக் கேடு*
*தெருவெங்கும் கிடக்குது எச்சில் காடு*
*வெண்புகைச் சுருளும் வளையம் போடும்*
*வருவோர் போவோர் மூக்கில் ஏறும்*
*எரியும் நெருப்பு அணைக்கா திருக்கும்*
*எச்சில் பீடி சிதறிக் கிடக்கும்*
*வாழைப் பழத்தோல் வழியில் கிடக்கும்*
*வழுக்கி விழுந்தால் உடலை முறிக்கும்*

எனப்பாடிக் கொண்டே வருபவர் இறுதியாக

*இந்நிலை மாற அனைவரும் கூடி*
*எடுக்கணும் சபதம் ஒருமன தாக*
*நோய்வரும் முன்அதை விழிப்புடன் இருந்தே*
*தடுத்திட வேணும் பெருந்திர ளாக!*

என முடிக்கின்றார். 'நம்மால் முடியும்' என்ற தலைப்பும் மேற்கண்டவாறே

*சுற்றுப்புறத் தூய்மை காக்க வேணுங்க – அதுக்குச்*
*சுறுசுறுப்பாய்ப் பாடுபட வேணுங்க*

என்று கூறியதோடு பேருந்து நிலையத்தில் காணும் சிறுநீர்ப் பெருக்கு, சில இடங்களில் தடைப்பட்டு நின்று போன சாக் கடையின் ஓட்டம், ஈயும் கொசுவும் இணைகோத்துப் பாடும் நிலை, ஊர்திகள் கக்கும் புகை போன்ற நிலைமைகளையும் கவிதையாக்கித் தீர்வு கூறுகிறார் கவிஞர்.

கவிஞர் குழ. கதிரேசன் கவிதைகள் புதுக்கவிதை பாணியும், மரபுக் கவிதை பாணியும் கலந்த பேச்சு வழக்கில் புழங்கும் சொற்களைக் கொண்டு தென்காசி வழக்குப் போல் ஒரு வகைப் புதுப்பாணியில் அமைந்து படிப்போருக்குத் தெம்பை ஊட்டுவனவாகத் திகழ்கின்றன.

# கவியரசு. இரா. வைரமுத்து

திரை உலகில் கவிஞர் கண்ணதாசனுக்குப் பிறகு, கவிஞர் வைரமுத்துவும் கவிஞர் வாலியும் சிறந்த பாடலாசிரியர்களாகத் திகழ்வதை நாம் அறிவோம். இவர்களைத் தொடர்ந்து கவிஞர் மேத்தாவும் திரைப்பாடலாசிரியராகச் சேர்ந்துள்ளது நமக்குத் தெரியும்.

கவிஞர் வைரமுத்து மதுரை மாவட்டம், பெரியகுளம் வட்டம் வடுகப் பட்டியில் பிறந்தவர் (1953). ஊர்ப் பக்கத்திலுள்ள உயர்நிலைப் பள்ளியொன்றில் பள்ளிப் படிப்பை முடித்துக் கொண்டு சென்னை வந்து பச்சையப்பன் கல்லூரி என்னும் கல்விப் பாசறையில் புகுந்து ஆறாண்டுகள் பயின்று தமிழில், எம்,ஏ. பட்டம் பெற்றவர். தமிழ் இவரை ஆட்கொண்டதா? இவர் தமிழை ஆட்கொண்டாரா? என்று புரியாத நிலையில் ஜீராவில் ஊறிக் கிடக்கும் குலோப்ஜான் போல் இனிப்பு நீரில் நீந்திக் கிடக்கும் கல்கத்தா ரசகுல்லா போல்-தான் வேறு தமிழ் வேறு என்றில்லாமல் தமிழோடு ஒன்றி, உயிர் வாழ்ந்து கொண்டிருப்பவர். திரைப்படப் பாடலாசிரியரின் பணி சுதர்மமாக அமைந்தது இறைவனின் திருக்குறிப்பு.

பச்சையப்பன் கல்லூரியில் பயின்ற ஆறாண்டு மாணவப் பருவத்தில் மூன்று ஆண்டுகள் (17ஆவது முதல் 21 ஆவது அகவை வரை) தாமும் யாப்பும் ஒருவருக்கொருவர் அடிமையாயிருந்ததற்குச் சான்று,"என் பழைய பனை ஓலைகள்" என்ற கவிதைத் தொகுதி. "பல மாதங்களாகப் பட்டாளத்தில் இருந்து வந்த ஒருவன், தன் பருவ மனைவியின் கட்டுக்குலையாத அழகினைக்கண்டு இரசிப்பது போல் இரசித்து ருசித்தேன்" என்ற கவிஞரின் சுவையான குறிப்பு நம்மை மகிழ்விக்கிறது. இத் தொகுப்பைத் தன் வாலிப ரத்தமாக கூறுவது தன்மை நவிற்சியாக உள்ளது இதில் இவர்தம் இளமைத் துடிப்புப் பளிச்சிடுவதைக் காணலாம்." இந்தக் கவிதையில் இருக்கும் சில கருத்துக்களுக்காக நான் வெட்கப்படுகின்றேன், ஆனால் ஒரு போதும் வருத்தப்பட மாட்டேன்" என்று கூறுவது உண்மையை விளம்புவதாக இருந்தாலும், "மகிழ்ச்சி அடைவதாகக் கூறவதே சிறப்பு". ' விளையும் பயிர் முளையிலேதெரியும்' என்ற பொன்மொழிக்குச் சான்று பகர்ந்து கொண்டிருப்பது இக்கவிதை தொகுப்பு. பல கவிதைகளில் ' இளமைத் துடிப்பு' தெரிந்தாலும் சில கவிதைகளில் அறிவு முதிர்ச்சியும் பளிச்சிடுகின்றது. பல கவிதைகள்

நகைச்சுவைக்கும், சிந்தனைக்கும் விருந்தாக அமைகின்றன. சில கவிதைகளில் புதிய கற்பனைக் கூறுகள் பளிச்சிட்டுப் பரிமளிக்கின்றன. கவிஞரின் தமிழ்ப் பற்றும் தெரிவாகப் புலனாகின்றது.

சிலவற்றை ஈண்டுக் காட்டுவேன். 'விடுதலை வீரன்' என்ற தலைப்பில் '9.7.71'ல் சென்னை மாவட்ட நூலகத்தில் அரங்கேற்றப் பெற்ற கவிதை.

*பாட்டெழுதிப் பாட்டெழுதிப் பாரதத்தின் விடுதலையைத்*
*தீட்டிவைத்த நாயகனைத் தேனமுதப் பாவலனை*
*எலுமிச்சைப் பழமிரண்டை இருத்தும் அளவுக்குக்*
*கொழுத்த மீசையொடு கொள்கை வளர்த்தவனைப்*
*பாடிக் களிக்கின்றோம், பாட்டாலே புகழ்மாலை*
*சூடிக் கொடுத்துச் சுகக்கவிதை சொல்கின்றோம்.*

இப்படி முன்னுரையாகப் பாடிய கவிஞர்

*சந்தயிலே தவித்தமிழ்க் கவியை நாட்டில்*
*சரஞ்சரமாய்த் தொகுத்திங்கே தமிழைக் காத்த*
*செந்தமிழன் பாரதியைப் போல நாட்டில்*
*தேனமுதப் பாவலன்யார் ..................*

*காசுக்குச் சிலகவிதை புனைவர் மாயக்*
*கண்ணாலே கதைசொல்லித் தன்னை விற்கும்*
*வேசைக்குச் சிலர்கவிதை புனைவார் நாட்டு*
*விடுதலைக்குக் கவிபுனைந்த புலவன் யார் யார்?*

பாரதியை அருமையான எண் சீரால் அடையாளம் காட்டினார்.

அடுத்துக் காவடிச் சிந்து மெட்டில்

*சொல்லெல்லாம் கவியாகப் பெய்தான் பாட்டுச்*
*சுடராலே பகைவர்தலை கொய்தான் நாட்டில்*
*வல்லவர்க்கே உணர்வூட்டி*
*வாள் கொண்டு பகையறுக்கச் செய்தான்*
*எல்லாம் மெய்தான்*

என்று கவிதைகளை கொட்டிக் குவித்துப் பாரதி பற்றிய கவிதையை நிறைவு செய்தார்.

விடுதலை வீரன் என்ற தலைப்பில் உள்ள கவிதை சென்னை அனைத்துக் கல்லூரி மாணவர் கவிதைப் போட்டியில் இலயோலாக் கல்லூரியில் அரங்கேற்றப் பெற்று முதற் பரிசு பெற்றதாகும். இதில் சில பகுதிகள்.

என்னாடு பொன்னாடு பகைவர் கையில்
இப்போது பலியாடு இருட்டு வீடு
கண்ணோடு நரம்போடு கலந்த நாடு
கருவாடு போலிங்கே இளைத்த தோடு
பொன்னோடு பொருளோடு புகழி னோடு
போக்கிவிட்டு ஏந்தியதே கையில் ஓடு
உன்னோடு முன்பாடு முடிந்தி டாது
உதைத்தாடு துண்டாடு பகையைச் சாடு.

இல்லாமை, கல்லாமை, கொடுமை, ஏழ்மை
இந்நாட்டில் சூர்கயமை எங்கே வாய்மை
கல்லாமை, கருத்தின்மை இவற்றிற் கெல்லாம்
காலமெலாம் நாமடிமை இவற்றை மீண்டும்
சொல்லாமை வேண்டுமதில் தூய்மை வேண்டும்
சூழ்கின்ற சமுதாய ஆமை தன்னை
வெல்லாமல் விடமாட்டோம் அவற்றி லின்றும்
விடுதலையை நாம்பெறுவோம் என்றார் நேரு.

எழுதியநாள் தெரியாத 'எதிர்காலம்' பற்றிய கவிதைகள் அருமையானவை

முக்கால மவற்றுள் என்றும்
முக்கிய மான காலம்
எக்காலம் என்று கேட்டால்
எதிர்காலம் என்று சொல்வோம்
அக்காலம் நாடித் தானே
அவனியே வாழும்? ஈது
முக்காலும் உண்மை, கால்கள்
மூன்றுதாம் முக்கா லிக்கு.

எதிர்காலம் என்ற பேரை
எப்படி இட்டார்? இன்பம்
எதிர்கொண்டு அழைப்ப தாலா?
இல்லையேல் துன்பம் தன்னை
எதிர்த்தாடச் சொல்வ தாலா?
இரண்டினுள் எதுவந் தாலும்
எதிர்பார்த்து வாழ்ப வர்க்கே
எதிர்காலம் அமைவ தாலா?

தற்காலப் போக்கைப் பார்த்தால்
தரணியில் எதிர்கா லத்தில்
கற்கால வாழ்க்கை மீண்டும்
கண்டிட வேண்டும் போலும்

பொற்காலம் எதிர்கா லத்தில்
பூத்திட வேண்டு மானால்
தற்கால வாழ்வை நாமும்
தத்துவம் ஆக்க வேண்டும்

இக்கவிதைகளில் கவிஞரின் அறிவு முதிர்ச்சியும். சிந்தனைத் தெளிவும் மின்வெட்டுப் போன்ற கருத்துச் செறிவும் தென்படுகின்றன.

அமைதி என்ற தலைப்பில் அமைதி எங்கே இருக்கிறது. எதைத் தேடியபோது அது தன்னுள்ளே இருக்கிறது. எனத் தெரிந்துகொண்டதாகப்பாடுவது அவரவர் அனுபவத்திற்கும் பொருந்துவதாகும்.

அன்பினைத் தேடிச் சென்றேன்
அன்னையால் கண்டு கொண்டேன்
பொன்னினைத் தேடிச் சென்றேன்
புதையலால் பெற்றேன் கொஞ்சம்
இன்பமும் வேண்டும் என்றேன்
ஏந்திழை அவளால் பெற்றேன்
என்னுளே அமைதி தேடி
இருக்கின்றேன் அறிந்தே னில்லை

மீண்டும் அமைதியைக் கவிஞர் தேட முயற்சிக்கிறார்.

எதிலுள அமைதி என்றே
இன்றுதான் கண்டேன் வாழ்வுக்
கதையினை முடித்து நல்ல
கனவுல கடையும் மேனி
சிதையினில் எரிந்த போது
சிரிப்பதில் அமைதி கண்டேன்
அதனையே அமைதி என்பேன்
அங்குதான் அமைதி தேக்கம்

தொல்லைகள் வெறுத்தே இந்தத்
துயரும் கறுத்த மேனி
கல்லறைக் குள்ளே பாடும்
கவிதையில் அமைதி தேக்கம்
வல்லமை பெற்றும் வாழ்வில்
வளம்பல பெற்றும் நெஞ்சில்
இல்லையே இல்லை என்போர்
இறப்பிலே புரிந்த கொள்வர்.

இக்கவிதையில் அமைதியின் இருப்பிடத்தைக் கண்டு விடுகின்றார். இறப்பிலே அதைக் காணலாம் என்று, கூறும் கவிஞரின் கருத்தில் அவர்

மனம் தத்துவத்தை நோக்கிச் செல்கின்றது. என்பதை அறிய முடிகிறது. வாமனமாக இருந்த அவர் கவிதைப் பாங்கு திரிவிக்கிரமமாக வளரத் தொடங்குவதைக் காண்கிறோம்.

இவர்தம் மரபுக் கவிதைகள் புதுக் கவிதைகளைப் போல் அதிகம் இல்லை என்றாலும் இருக்கும் வரை பிறருடைய கவிதைகளை விடச் சற்று வேறுபட்ட போக்காக அமைந்துள்ளன என்பதைக் காண்கின்றோம். இவர்தம் கவிதை பற்றிப் பொன்மணி வைரமுத்துவின் வாக்கால் உணரலாம் மதுரைக் கோயில் சுற்றுப் பிராகாரங்களில் காணப் பெறும் விமான வேலைப்பாடுகளைப் போன்றதொரு தெய்வீகச் சிங்காரம் இவருடைய மரபுக் கவிதைகளில் கலைப் பொலிவோடு நின்று கவிதை நெஞ்சங்களை ஆட்கொண்டு விடுகின்றது. பழங்காலத்துச் சிற்பங்களின் திட்பம் இவர்தம் சொற்களுக்குண்டு. படித்தவுடன் வாய்பாடாய் மனத்திற்குள் குடியேறிவிடும் எளிமையும் தேர்ந்தெடுத்த அரிய சொற்களோடு அமைந்தோர் அருமையும் இவர்தம் கவிதைகளின் உயிர்ப் பண்பு.

காதல் என்பது இறைவனால் ஆண் பெண் இருவருக்கும் வழங்கப் பெற்று ஓர் அற்புதமான தெய்வீகப் பண்பு இது எல்லா உயிர்களிடத்தும் காணப் பெறும் பண்புமாகும். ஓல்காப் பெரும்புகழ் தொல்காப்பியரின்

*எல்லா உயிர்க்கும் இன்பம் என்பது*
*தான் அமர்ந்து வருஉம் மேவற் றாகும்*

என்ற நூற்பா இக்கருத்தினையே உணர்த்துவதாகக் கொள்ளுதல் தவறாகாது, குமரப் பருவத்தில் முகிழ்ந்த இக்காதல் உணர்வு கட்டைக்குப் போகும் வரை கட்டவிழ்த்துக் கொண்டு நிற்கிறது. கவியரசு வைரமுத்து துறவி அல்லர், ஆதலால் காதலைப் பற்றிப் பாடுகின்றார்., துறவியர் கூடப் பெண்ணை நாக்காலும் உதட்டாலும் உச்சரித்து வெறுப்பதாகத் தோன்றினாலும், அவர்கள் பெண்ணை நினைந்து மனப்பால் குடித்துக் கொண்டுதானே உள்ளனர்? சிலர் உண்மைப்பால் குடிப்பதையும் கேள்வியுறுகின்றோம், தீயிலே கருகிய தேன்மலர், என்ற தலைப்பில்

*மோகச் சிலையொன்று மூடிய காதலெனும்*
*வேகத்தில் சிக்கி விழியிழந்து – சோகத்தில்*
*வீழ்ந்த துயரத்தால் வெம்பித் துடிக்குமது*
*பாழ்பட்ட நெஞ்சத்தின் பாட்டு.*

எனக்காதல், வெண்பாவில் வெடிக்கிறது. பின்னர் கலிவெண்பாவில்

விறுவிறுப்படைகிறது.

*பாலாடைப் பூமேனி பாவையவள் கண்ணிரண்டில்*
*சேலாடும் கோலம் சிரிக்கும் பருவமகள்*
*கோமளப்பூப் போன்ற குளிர்சோலைச் செல்வியவள்*
*மாமதுரைத் தேன்தமிழ்தான் மஞ்சத்தில் மல்லிகைதான்*
*நாணிக்கண் முடுகையில் நங்கையவள் கன்னம்செவ்*
*வானிருக்கும் வண்ணமென வார்த்தெடுத்த பொன்னாகும்*
*கொண்டுவந்த நல்முத்து கொஞ்சும் இளஞ்சோலை*
*வண்டுதந்த பூங்கண்கள் வானத் திரைமீது*
*கண்டுவந்த வெண்ணிலவு காதில் தமிழ்கூட்டி*
*வண்டுவந்த தேன்கவிதை வெண்ணிலவுக் கன்னி*

அடுத்து அந்தக்காதல் எண்சீரில் ஏக்கத்தைத் தருகிறது.

*அன்றொருநாள் ஏடொன்று வேண்டும் என்றே*
*அழகுமயில் நடமிட்டு வந்தாள் தேனைக்*
*கண்டவன்போல் களித்தேன்பின் பேசி விட்டேன்*
*கண்ணாலே சொலும்பேச்சு காதல் பேச்சு*
*பெண்ணழகி தனைநெருங்கி ஏடைத் தந்து*
*பெயரென்ன எனக்கேட்டேன் பெயரைச் சொன்னாள்.*
*மின்வெட்டுச் சிரிப்பொன்றைத் தந்தாள் வீணை*
*மீட்டிவிட்ட தொனியென்றேன் பறந்தே போனாள்.*

மறுநாள் நாயகன் மரிக்கின்றான். வெண்ணிலாச் சிரிப்புக்காரி விதவைக்காரி ஆகின்றாள். நிலை என்ன?

**துடிக்கின்றேன் துன்பத் தாலே**
**துவள்கின்றேன் சோகக் கண்ணீர்**
**வடிக்கின்றேன், உயிர்பி ரிந்தும்**
**வாழ்கின்றேன், சோகப் பாட்டுப்**
**படிக்கின்றேன், அவளை நெஞ்சில்**
**பார்க்கின்றேன், அவளைப் பாட்டில்**
**வடிக்கின்றேன், அவளை எண்ணி**
**வாழ்வதால் இளைத்துப் போனேன்.**

என அறுசீரில் அழுங்கும் காதல் உணர்வுகளை உண்மையில் அநுபவம் பெற்றவர் எழுதியது போல் கவிதையைப் படைத்திருப்பது வைரமுத்துவை வைரமுத்துக் கவிஞராக அடையாளப்படுத்துகிறது எனலாம். 'பெயர் சொல்ல மாட்டேன்' என்ற தலைப்பில் உள்ள கவிதை ஓர் ஊமைப்பெண்ணுடன் காதல் கொள்வதாக அமைந்த கற்பனையில் முகிழ்த்த உயிரூட்டமுள்ள கவிதை.

செவ்வாயில் ஜீவராசி உண்டா என்றே – அடி
விஞ்ஞானம் தினந்தோறும் தேடல் கொள்ளும் – உன்
செவ்வாயில் உள்ளதடி எனது ஜீவன் – அது
தெரியாமல் விஞ்ஞானம் எதனை வெல்லும்?

இவ்வாறு தனிமையிலே பேசிக் கொண்டே – என்
இரவுகளைக் கவிதைகளாய் மொழிபெ யர்த்தேன்

கண்ணிமையின் சாமரங்கள் வீசும் காற்றில் – என்
காதல்மனம் துண்டுதுண்டாய் உடையக் கண்டேன்
துண்டுதுண்டாய் உடைந்தமனத் துகள்கள் எல்லாம் – அடி
தூயவளே உனக்குள்ளே தொலைத்து விட்டேன்
கோடிகோடி ஜீவன்கள் சுகித்த பின்னும் – இன்னும்
குறையாமல் வீசுதடி காற்றின் கூட்டம்
கோடிகோடி ஜீவன்கள் தாகம் தீர்த்தும் – துளி
குறைந்தொன்றும் போகவில்லை காதல் தீர்த்தம்
மூடிமூடி வைத்தாலும் விதைகள் எல்லாம் – மண்
முட்டிமுட்டி முளைப்பதுதான் உயிரின் சாட்சி
ஓடிஓடிப் போகாதே ஊமைப் பெண்ணே – நாம்
உயிரோடு வாழ்வதற்குக் காதல் சாட்சி

இவை கற்பனை செறிந்த அற்புதமான பாடல்கள். கற்பனையும் கருத்துவளமும் பின்னிப்பின்னி படிப்போருக்குச் சுவையூட்டி மகிழ்விக்கின்றன.

'வா' என்ற தலைப்பில் உள்ள கவிதையிலும் காதல் மணம் வீசுகிறது. கவிஞரின் கற்பனைக் காதலி முதலில் உற்சாகம் காட்டிப் பின்னர் பின்வாங்குகின்றாள். கவிஞரின் 'வா' என்ற அறைகூவலைக் கவிதை பேசுகின்றது.

இனிமேலும் இளமைக்குப் பொறுமை இல்லை
இற்றுவிட்ட இதயத்தில் வலிமை இல்லை
தனிமைக்கு எனைமட்டும் பிடிக்க வில்லை
தவறென்ன தர்மமென்ன விளங்க வில்லை.

என்று கவிதை தொடங்கி

மனிதர்க்கு நிலையான சட்டம் இல்லை
மாறுவதால் பூமிக்கு நட்டம் இல்லை.

என்று வழியமைத்துக் காட்டுவார்.

கண்ணுக்குள் நீயிருந்தும் உறக்க மென்ன?
கற்பூர தேகந்தான் கரைவ தென்ன?
பின்நோக்கி உன்கால்கள் நடப்ப தென்ன?
பிரியத்தைப் புடவைக்குள் மறைப்ப தென்ன?

என்று கேள்விக் கணைகளை வைக்கின்றார். மேலும்

விரித்துவைத்த சிறகைஏன் சுருக்கிக் கொண்டாய்?
வீதிவரை வந்தபின்ஏன் விலகிச் சென்றாய்?
சிரித்துவந்த மழையேஏன் நிறுத்திக் கொண்டாய்?
தீண்டவந்த விரல்களைஏன் எரித்துக் கொண்டாய்?
புரிந்துகொள்ள முடியாத புனிதப் பெண்ணே
புன்னகையால் கண்ணீரைக் கழித்த விட்டாய்

என்று பேசுகின்றார். இறுதியாக,

நித்தியத்தில் இருபேரும் கலந்து போவோம்
நீயாரோ நான்யாரோ மறந்து போவோம்
புத்துலகம் நாம்தேடிப் பறந்து போவோம்
புவியீர்ப்பு மையத்தைக் கடந்து போவோம்
பித்தத்தில் இருவருமே பின்னிப் போவோம்
பிரபஞ்சம் அழிகையிலே பிரிந்து போவோம்
முத்தத்தின் சத்தத்தில் உடைந்து போவோம்
மோகத்தால் முக்திநிலை அடைந்து போவோம்

என்று காதல் கவிதையை முத்தாய்ப்பாக நிறைவு செய்கிறார் கவிஞர். நிறைவுப் பாடலில் சங்கப் பாடலின் தொனி கேட்கிறது. மேலும் இதன் அடி

தாம்வீழ்வார் மென்றோள் துயிலின் இனிதுகொல்
தாமரைக் கண்ணான் உலகு (குறள்–1102)

என்ற பொய்யா மொழியையும் நினைவு கூரச் செய்கின்றது.

காதல் உணர்வுகளைத் தவிர வேறு உணர்வுகளும் கவியரசு வைரமுத்துவின் கவிதைகளில் புலனாகின்றன.

'மௌனம் பேசுகின்றது' என்ற தலைப்பில்,

கடமைகள் மறந்து விட்ட
கனவுகள் பிடிக்க வில்லை
அடிக்கடி உயிரைக் கிள்ளும்
அவசரம் பிடிக்க வில்லை
குடம்குட மாகப் பொய்யில்
குளிப்பதில் விருப்ப மில்லை
சடங்குகள் பெரிய தொல்லை
சத்தங்கள் பிடிக்க வில்லை

எனக்கவிஞர் விரும்பாதவை பற்றிக் கூறினாலும், அடுத்து அவர் விரும்புபவை எவை? என்பதையும் கூறுகிறார்.

நதிக்கரை ஓரம் பார்த்து
நாணலால் கூரை வேய்ந்து
புதுப்புதுத் தென்றல் வந்து
புகுந்திட வாசல் வைத்து
அதிசய மானத் தைநான்
அண்ணாந்து பார்த்துக் கொண்டே
ஒதுங்கவே பிரியம், புல்லில்
உறங்கவே பிரியம் உண்மை

இக்கவிதையில் அவர் மௌனத்தை நாடவில்லை. அமைதியை நாடுகின்றார். எளிய வாழ்க்கையை நாடுகின்றார் எனப் புலனாகின்றன. 'நெஞ்சொடு கிளத்தல்' என்ற தலைப்பில் காணப்பெறும் பாடல்கள் சிந்தனைக்கு நல்விருந்தாக அமைகின்றன. அகப்பொருள் துறையான இதனைப் புறத்துறையாக மாற்றி அமைத்தது அற்புதம். ஆறு கவிதைகள் உள்ளன. அவற்றுள் நெஞ்சை ஈர்க்கும் சில கவிதைகள்.

இரவும் பகலும் கதிருக் கில்லை
இயற்கையாய் அறிந்தாய் என்மனமே
வரவும் செலவும் காற்றுக் கில்லை
வாசித் தறிந்தாய் என்மனமே
துறவும் துய்ப்பும் மரங்களுக் கில்லை
சொல்லி அறிந்தாய் என்மனமே
இறப்பும் பிறப்பும் கவிஞர்க் கில்லை
எப்பொழு தறிவாய் என்மனமே?

தேங்காய் தின்றால் ஓடுகள் மிச்சம்
தின்று தெளிந்தாய் என்மனமே
மாங்காய் தின்றால் கொட்டை மிச்சம்
உண்டு தெளிந்தாய் என்மனமே
தீங்குகள் செய்தால் தீங்கே மிச்சம்
செய்து தெளிந்தாய் என்மனமே
ஓங்கி எழுந்தால் உலகே மிச்சம்
உணர்ந்திடு வாயா என்மனமே?

என்ற கவிதைகள் படிப்போரைச் சிந்திக்கச் செய்பவை. 'இலக்கணக் காதல்' என்ற தலைப்பில் உள்ளவை நம்மைச் சிந்திக்க வைக்கின்றன. வியப்பு கலந்த மகிழ்ச்சியையும் தருகின்றன.

காதலன்-காதலிக்கிடையே நடைபெறும் காதல் உரையாடலாக நடைபெறுகின்றது. 'என் கவியைப் பற்றி அவள் கூறுவாள்.,

தேனத்தான் கனியத்தான் தேனைச் சேர்த்த
தினையத்தான் உம்கவிதை என்றாள், என்னை

ஆணழகே என்றாள்நான் கரும்பே என்றேன்
அடி(க்) கரும்பு தான்மிகவும் இனிக்கும் என்றேன்

என இலக்கணக் காதல் தொடர்கின்றது. பொறுமையாகப் படித்துச் சுவைக்க வேண்டும்.

பழுத்தசையும் கனிக்குன்று நடனம் ஆடிப்
பச்சைநிறத் தாடைகட்டி வருதல் போல
எழுந்தசைந்து சீர்பாடி என்னி டத்தில்
இன்னமுதே அடியெடுத்து வந்தாய் நானும்
செழுந்தேனே உனைத்தொட்டுச் சுவைக்கு முன்னே
சீராகத் தொடைகாட்டித் தளைத்தாய் என்னை
விழுந்தேனே கவிக்கடலில் நீயில் லாமல்
வினைத்தொகையில் சந்தியென வாழேன் என்றேன்.

பண்பென்னும் தொகைவிகுதி தன்னைக் கண்ணில்
பக்குவமாய்த் தீட்டியெனை இழுத்தாய் பின்னால்
வெண்பாவில் கனிச்சீர்போல் விலகிச் சென்றாய்
விடுவேனோ குற்றியலின் உகரத் தோடு
தன்போக்கில் சேருகின்ற உயிர்போல் நானும்
தங்கமயில் உனைச்சேர வந்தேன் என்றன்
கண்பாவை போன்றவளே கனகப் பூவே
கலிப்பாவின் ஓசையை உன் நடையில் கண்டேன்.

முடிந்தாலும் பொருள்தொடரும் முற்றெச் சம்போல்
மோகனமே நீதந்த இன்பம் நெஞ்சில்
விடிந்தாலும் இனிக்கிறதே தேனே உன்றன்
விழிப்பூவின் இமைஇதழை விலக்கி ஆங்கே
படிந்தாடும் உன்னுருவைப் பார்த்தேன் உன்றன்
பனிமுகத்தை ஒளிக்கரத்தால் தொட்டேன் என்றும்
முடியாத வெண்பாநீ என்றன் மூச்சை
முச்சீராய்க் கொண்டேநீ முடிவாய் என்பேன்.

பாகுநிகர் மொழியாளே இலக்க ணத்தில்
படித்துள்ளேன் உருபுக்கு மயக்கம் உண்டு
மோகமலர் போன்றவளே கண்டேன் உன்றன்
முதிராத உறுப்புக்கும் மயக்கம் உண்டு
மேகமழைக் குழலாளே நெஞ்சக் காவில்
மிதந்தாடும் மலர்க்காற்றே பவளப் பூவே
ஆகுபெயர் போலெனக்கே ஆகி விட்டாய்
அடிபிறழா வஞ்சிப்பா நீதான் கண்ணே.

சரஞ்சரமாய் நான்கவிதை பாடப் பாடச்
சந்தங்கள் தத்துவங்கள் சேர்த்துத் தந்தாய்

வரந்தருவாய் ஓசையினை நிறைப்ப தற்கு
வருகின்ற அளபெடைபோல் எனக்கே உன்றன்
கரந்தருவாய் கண்ணாடிப் பெண்ணே பூத்த
கனிநிலவே நாமிரட்டைக் கிளவி என்பேன்
இரட்டையெனும் கிளவிதனைப் பிரித்தல் இங்கே
இசைவான பொருளுண்டோ? இன்னும் வாவா!

முற்றெதுகை போலினிக்கும் மோகப் பாட்டே
முத்தாரச் சிரிப்பழகே இலக்க ணத்தைக்
கற்றவர்கள் சொன்னார்கள் தம்பீ நல்ல
காரிகையைப் புரட்டிப்பார் என்று நானும்
சிற்றறிவால் சிந்தித்தேன் இனிக்கும் என்றன்
செழுந்தேனே உனைப்புரட்டிப் பார்த்தேன் பின்னால்
பொற்றொடியே பூங்கிளியே இலக்க ணத்தில்
புரியாத பகுதியெலாம் புரிந்து கொண்டேன்.

இவை மாணவப் பருவத்தில் பாடியவை. பாடல்களை ஊன்றி நோக்கும் போது பாப்புனையும் பண்பைப் பெறுவதற்கு உள்ள பயிற்சியை ஆர்வத்தைப் பாடுபட்டுப் பெற்றிருக்க வேண்டும் என்று தோன்றுகின்றது. ஆசனம் செய்து உடல்திறனை வளர்ப்பது போல் ஒருவித வெறியோடு பயிற்சி பெற்றிருக்க வேண்டும் என்று தோன்றுகின்றது. ஆசனம் செய்து உடல்திறனை வளர்ப்பது போல் ஒருவித வெறியோடு பயிற்சி பெற்றிருக்க வேண்டும் எனக் கருதவும் இடம் உண்டு. இளமைத் துடுக்கு அடிதோறும் பளிச்சிடுகின்றது.

'அறிஞர் அண்ணா திருத்தசாங்கம்' பற்றிய யாவும் நேரிசை வெண்பாக்கள், கிளியை நோக்கி பேசுவதாக அமைந்தவை சிறப்பாக உள்ளன.

பெயர் :– மழலை மொழிக்கிளியே மன்னவனின் தூய
அழகுப் பெயரை அறிவி – பழச்சாறாய்ச்
சொன்னாலும் தேனின் சுவையொழுகும் அப்பப்பா
அண்ணா துரையென்றே ஆடு.

கொடி :– சுற்றும் பகையைச் சுழன்றாடி ஏற்றிடுவான்
வெற்றிக் கொடிதான் விளம்பு.

ஆசிரியர் என்ற தலைப்பில் வருபவை. 4.9.72 ல் பச்சையப்பன் கல்லூரி ஆசிரியர் கழகம் நடத்திய அனைத்துக் கல்லூரிக் கவிதைப் போட்டியில் முதற் பரிசு பெற்றவை. இவற்றுள் சில,

சமுதாயக் கோட்டைக்குச் சரித்திரத்துக் கதவுகளாய்ச்
சார்ந்திருப்ப தாசிரியர் கூட்டம் – அது
அமுதான கவிகாட்டும் அந்திவண்ணப் பூந்தோட்டம்
அறிவுமணம் நின்றகலைக் கோட்டம்.

ஏணியென மாணவரை ஏற்றிவிட்டுத் தாம்கீழே
இருப்பாரே இதுவன்றோ புதுமை – அந்த
மேனிநலம் பாராத மேதையரைப் பாடாமல்
மேதினியில் இருக்கிறதா கவிதை?

அன்னவரின் நெஞ்சினிலே ஆனந்தம் நின்றால்தான்
அறிவுநதி தேனாக ஓடும்
கண்ணீரின் கரையோரம் கதைகேட்டு நின்றாலா
கவிதைமயில் அங்கெழுந்து ஆடும்?

தத்துவமே ஆசிரியர் தந்ததுதான் ஆமிஃது
சமுதாயம் போடுகின்ற கணக்கு – ஆனால்
புத்தகத்தைச் சுமக்கின்ற போக்கற்றோர் எனமீண்டும்
புகழ்கிறதே புரியவில்லை எனக்கு

தம்குருதி எண்ணெயிட்டுத் தம்நரம்பைத் திரியாக்கித்
தருகின்றார் அறிவொளியை நாளும் – இங்கே
இன்மையிலே வழிகாட்டி இருளோட்டும் அவரிலையேல்
எந்தவிதம் மனிதகுலம் வாழும்?

ஆசிரியர் பணியொன்றே அறப்பணிஎன் றேதம்மை
அர்ப்பணித்துக் கொண்டவரைத் தொழுது – தென்றல்
வீசிவரும் வேளைகளில் வித்தாரக் கவிதையெனும்
விதையிடுவோம் அறிவுநிலம் உழுது

அடுத்தவொரு புவிபடைத்தால் ஆண்டவனே ஆளுகின்றோம்
ஆசிரியராயி ருக்க வேண்டும் – அறிவு
கொடுத்தவரை மதிக்காத கோணல்மதிச் சமுதாயக்
கொள்கைக்கே உயிர்வரவோ மீண்டும்

இங்ஙனம் சந்த நயத்துடன் மரபு வழியில் புதுவகைப் பாடல்கள் பாடியுள்ளார் – கவிஞர்

கவியரசரின் ஒரு கருத்து:– மரபுக் கவிதை மறைந்துவிடும் என்று சிலர் அஞ்சுகின்றனர். இவ்வச்சம் புதுக்கவிதை பரவிவரும் வேகத்தால் ஏற்பட்டது.. இது தவறான கருத்து. மரபுக் கவிதை சாகும் சங்கதி அன்று. அது மார்க்கண்டேய வரம் பெற்ற பெருமை கொண்டது. ஈராயிரம் ஆண்டுகளாய் விழுதிறங்கிய ஆலமரம். அதுவோ கரையான்கள் அரிக்க முடியாத ஆழத்தில் உள்ளது.

ஆயிரமாயிரம் ஆண்டுகளாய் அசையாதிருக்கும் மரபு மாளிகையைப் புதுக்கவிதை என்னும் ஐம்பதாண்டு ஆற்றலா அழித்து விட முடியும்? கவியரசும் பிறரும் புதுக்கவிதைக்கு அங்கீகாரம் பெறவே போராட்டம் நடத்தியதாகவும், மரபை மாய்த்து விட அன்று எனவும் தம் நிலையை விளக்குகின்றார்.

புதுக்கவிதையின் மின்சார அலைகள் மரபுக் கவிதைக்குள் பாய்ச்சப் படவேண்டும்,· புதுக்கவிதையின் புதுக்குருதி மரபுக் கவிதைக்குள் பீச்சப்பட வேண்டும். மரபுக்காக உயிர் விடுவதாக மார்தட்டும் கவிஞர்களில் பலர் கற்பனையிலும், சிந்தனையிலும் பாலை வனமாகி விட்டனர். இலக்கணத் தெளிவும், கற்பனை வளமும் உள்ள பலர் மரபைக் கைவிட்டு விட்டது மிகவும் பரிதாபம். கோளாறு மரபில் இல்லை. அதனைக் கையாளும் முறையில்தான் அஃது உள்ளது.

மரபுத் தந்தியில் புதிய சுரங்கள் புக வேண்டும். தமிழ்க் கவிதை இனி ஒரு புதிய தொனியில் பேசுமாறு அமைக்க வேண்டும். மரபுக்கவிதை ஒரு பூவனமாய்த் திகழ வழிவகுக்க வேண்டும். இளங்கவிஞர்கள் இக்களத்தில் இறங்க வேண்டும். இனிமேல் தளிர்க்க இருக்கும் மரபுக் கவிதைகளை மொழி பெயர்த்தால் சமகால இந்திய மொழிகளின் எந்த கவிதைக்கும் கருத்திலும், கருத்துப் போக்கிலும் தாழாததாய் அமைதல் வேண்டும். 'பத்தாம் பசலியைப்' பாடுதற்கு ஒரு முற்றுப் புள்ளி வைத்துக் கவிதையின் உள்ளடக்கம் புதியதாய் அமையுமாறு செய்ய வேண்டும். கவிஞர்களும்,, திறனாய்வாளர்களாக இருந்தால் அவர்தம் படைப்புப் புதிய பதத்தில் அமையும். இவற்றையெலாம் ஒரு மனிதத் தவத்தால் வரம்பெற்றுச் சீர்படுத்த நினைப்பது முயற்கொம்பு. ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு, இளங்கவிஞர்கள் ஒன்று திரண்டு தேர் இழுத்தால் நிலையான முடிவைப் பெறலாம், மரபுக் கவிதை இனிச் சூடாய்ச் சூல் கொள்ளும் என்பதை எதிர் பார்ப்போம். மரபும் புதுமையும் மாலை மாற்றிக் கொள்ளட்டும்- இவை வைரமுத்துவின் அதிவேத் தூண்டல். இந்த அளவில் வைரமுத்துவின் கவிதை பற்றிய சிறப்பை நிறைவு செய்கிறேன்.

# பின்னிணைப்பு

## வாழும் கவிஞர்கள்
## (மரபுக் கவிஞர்கள்)

### இந்நூலுக்குப் பயன்பட்ட முதன்மை நூல்கள்

| | | |
|---|---|---|
| 1. இராமராசன், எஸ்.கே | - | திருவேங்கடமுடையான் அலங்காரம் (வேங்கடம் பதிப்பகம்) |
| 2. கதிரேசன், குழ | - | நெருப்புக்கொப்புளம் (ஐந்திணைப் பதிப்பகம், சென்னை - 5) |
| 3. குழந்தைசாமி, வா.செ. | - | 1. விண்சமைப்போர் வருக<br>2. வளர்க தமிழ்<br>3. விதியே விதியே தமிழ்ச் சாதியை..<br>4. வாயில் திறக்கட்டும்<br>5. கதவுகள் காப்பதில்லை<br>(பாரதி பதிப்பகம், தி.நகர், சென்னை-17) |
| 4. சவகர்லால்.ச | - | எண்ணச்சிறகுகள் மற்றும் பல இதழ்களில் வெளிவந்தவை. |
| 5. சாந்தமூர்த்தி, பு.மு. | - | பல இதழ்களில் வந்த கவிதைகள் |
| 6. சிங்காரவடிவேலன்.அர. | - | நகரத்தார் மற்றும் நூல்வடிவம் பெறாத கவிதைகள் |
| 7. சௌந்திராகைலாசம் | - | சௌந்திரா கைலாசம் கவிதைகள் (வானதி பதிப்பகம், தி.நகர்-சென்னை-17) |
| 8. திருமுருகன். இரா. | - | 1. ஓட்டைப் புல்லாங்குழல்<br>2. பன்னீர்மழை<br>(பாவலர் பண்ணை புதுச்சேரி-1) |

9. நாச்சியப்பன், நாரா. - நாச்சியப்பன் பாடல்கள்
(தமிழாலயம், சென்னை -14)

10. பழநி.ஆ. - களங்கண்ட கவிதைகள்

11. முடியரசன் - 1. முடியரசன் கவிதைகள்
(பாரிநிலையம், சென்னை 108)

2. கவியரங்கில் முடியரசன்
(முடியரசன் பதிப்பகம், காரைக்குடி 1)

12. முத்துக்கணேசன்.ரெ. - 1. முத்துமாலை
2. இந்திய ஞானச்சுடர்கள்
3. மரகதக்கோவை
4. நல்லுரைவெண்பா
( செல்விபதிப்பகம் - காரைக்குடி)

13. வேழவேந்தன். கா. - ஏக்கங்களின் தாக்கங்கள்
(வேந்தர்பதிப்பகம் - மயிலாப்பூர் சென்னை-4)

14. வைரமுத்து. இரா. - என்பழையபனை ஓலைகள்
(சூரியா லிட்டரேச்சர் (பி) லிமிடெட்,
டிரஸ்டு, சென்னை - 24)

15. ஜகந்நாதராஜா, மு.கு. - தரிசனம் (விசுவ சாந்திப் பதிப்பகம்,
இராஜபாளையம்.)

16. ஜெய்புன்னிஸா. தா. - 1. சாந்திவயல், 2. சமாதானப்பயிர்
3. சகோதரவிளைச்சல்

# இந்நூலுக்குப் பயன்பட்ட துணை நூல்கள்

1. நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம்
2. கம்பராமாயணம்
3. மலரும் மாலையும்
4. மீனாட்சி அம்மைகுறம்
5. மீனாட்சி சுந்தரம்பிள்ளை சரித்திரம்
6. திருவேங்கடமும் தமிழ் இலக்கியமும்
7. வைணவச் செல்வங்கள்
8. சீவகசிந்தாமணி
9. திருக்குறள்
10. தொல்காப்பியம்
11. நன்னூல்
12. பாரதியார் கவிதைகள்
13. முமுட்சுப்படி
14. திருமுறைகள்
15. செந்தமிழ் - (பருவ இதழ்) தொகுதி 7.

# எமது வெளியீடுகள்

1. மறைமலை அடிகள் பிள்ளைத்தமிழ் - ரூ. 6.00
கவிஞர். சி. அன்பானந்தம்

2. அபிராமி அந்தாதி (விளக்கவுரையுடன்)
பேராசிரியர் ந. இராமநாதன். எம்.ஏ.பி.ஓ.எல்., - ரூ. 6.00

3. மதுராபுரி அம்பிகை மாலை - ரூ. 1.00

4. இராமசாமி செட்டியார் ஆயிரம் பிறைவிழா மலர்

*5. கம்பன் இலக்கிய உத்திகள்
டாக்டர் ச.வே. சுப்பிரமணியன் - ரூ. 32.00

6. வேலாபுரி கறுப்பண்ணசாமி சதகம் - ரூ. 6.00

7. விராலிமலை வேலவர் குறவஞ்சி - ரூ. 6.00

*8. சிலேடை இலக்கியம் - ரூ. 25.00
டாக்டர் கரு. நாகராசன்

*9. சிலப்பதிகாரம் ஒருபுதிய பார்வை - ரூ 15.00
பொற்கிழிக்கவிஞர் அரு. சோமசுந்தரம் எம்.ஏ.,பி.டி.

10 காரைக்குடி கொப்புடையம்மன் பிள்ளைத்தமிழ் - ரூ. 6.00
கவிஞர் சொ. தேவராயன்

* மீனாட்சி ஆச்சி நினைவு அறக்கட்டளைப் பொழிவு நூல்கள்.

---


## மெய்யம்மை பதிப்பகம்

திரு.வி.க. இல்லம்
49, ஆறு. ஆ. இராம. வீதி,
காரைக்குடி - 630 001
தொலைபேசி - 38311

41-மாசிலாமணி வீதி
பாலாஜி நகர்
இராயப்பேட்டை
சென்னை - 600 014
தொலைபேசி - 8267972.

மதராஸ் ரிப்பன் பிரஸ், புதுக்கோட்டை - 622 001.